உ

கடவுள்துணை.

# சேந்தன்திவாகரம்

## மூலபாடம்.

இஃது
சென்னைக்கல்விச்சங்கத்துத்
தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய
**தாண்டவராயமுதலியார்**
அவர்களால்பதிப்பித்த
பத்துத்தொகுதிகளின் மூலத்தோடு
ஷை சங்கத்துவித்துவான்களாற்
பதிப்பித்த
மற்றவிரண்டுதொகுதிகளின் மூலத்தையும்
ஒன்றாகச்சேர்த்து,

சுத்தப் பதிப்பு.

29, VITHIYANATHA MUDALY ST. MADRAS

கொ-லோகநாதமுதலியாரவர்களால்
தமது
மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1917.

சென்னை:

இதன் விலை அணா—12.

# புத்தகவிளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| ஞானவாசிட்ட வசனம் | 1 | 8 | 0 |
| கட்டளைக்கொத்து | 0 | 8 | 0 |
| பிரபுலிங்கலீலை மூலம் | 0 | 8 | 0 |
| திருமந்திரம் மூவாயிரம் | 1 | 8 | 0 |
| விஷ்ணுஸ்தல மான்மியம் | 0 | 8 | 0 |
| வள்ளலார் 20-சாஸ்திரம் | 1 | 8 | 0 |
| ஜாதகாலங்காரம் மூலம் | 0 | 8 | 0 |
| ஷை திக்கு கிளேஸ் கடிதம் | 0 | 12 | 0 |
| ஜீவரக்ஷாமிர்தம் | 4 | 0 | 0 |
| சேதுபுராண வசனம் (படம்) | 2 | 0 | 0 |
| சாணந்தகணேசர்புராணஉரை | 0 | 12 | 0 |
| கந்தபுராணச் சுருக்கம் | 0 | 12 | 0 |
| (தஞ்சை)பகவற்கீதை வசனம் | 1 | 4 | 0 |
| மனோல்லாச கதை | 0 | 8 | 0 |
| அகஸ்தியர் 5000-பாடல் | 2 | 0 | 0 |
| ,, மாந்திரீயகாவியம் 1000 | 0 | 12 | 0 |
| சப்தரிஷிவாக்யம் 5500பாடல் | 4 | 0 | 0 |
| நந்தனார்சரித்திரக்கீர்த்தனை படத்துடன் | 0 | 6 | 0 |
| சத்தப்பிரகரணம் | 0 | 6 | 0 |
| தாயுமானசுவாமிகள் பாடல் | 1 | 0 | 0 |
| அருட்பா-திருவாசகம் | 1 | 4 | 0 |
| திருப்புகழ் 150-பாடல் | 0 | 4 | 0 |
| சப்தஸ்தல தேவாரம் | 0 | 8 | 0 |
| ஆரவல்லி நாடகம் | 0 | 4 | 0 |
| சுந்தரி நாடகம் | 0 | 4 | 0 |
| ஸ்ரீகிருஷ்ணவிலாசம் | 0 | 4 | 0 |
| அருணகிரியந்தாதி | 0 | 1 | 0 |
| அபிராமியந்தாதி | 0 | 1 | 0 |
| சோணசைலமாலை | 0 | 1 | 0 |
| திருவேங்கடமாலை | 0 | 0 | 9 |
| நால்வர்நான்மணிமாலை | 0 | 1 | 0 |
| அண்ணுமலைவெண்பா | 0 | 1 | 0 |
| காலச்சக்கரம் | 0 | 1 | 0 |
| அவிவேக பூரணகுரு கதை | 0 | 1 | 6 |
| புட்பவிதி | 0 | 0 | 9 |
| வேதாந்த சூடாமணி மூலம் | 0 | 2 | 0 |
| த்ருவசரித்திரக் கீர்த்தனை | 0 | 4 | 0 |
| துரோபதைதோத்திரம் | 0 | 2 | 0 |
| கைவல்லியநவநீத வசனம் | 0 | 4 | 0 |
| ஷை டீக்கு | 0 | 8 | 0 |
| கைவல்லியநவநீதமூலம் | 0 | 2 | 0 |
| சிவஞான தீபம் | 0 | 2 | 0 |
| சிவானந்தபோதம் | 0 | 2 | 0 |
| சொரூபசாரம் | 0 | 1 | 0 |
| சின்னசாமிசாஸ்திரிகீர்த்தனை | 1 | 0 | 0 |
| ஷை ரப்பு ஆப்பவுண்டு | 0 | 12 | 0 |
| திருக்கடந்தைப் புராண உரை | 0 | 8 | 0 |
| நூதனவிசித்திரகோலம் | 0 | 2 | 0 |
| கோலபொக்கிஷம்எல்லாம் புதுக்கோலங்கள் | 0 | 2 | 0 |
| ஸ்ரீமத் ராமாயணம் பால காண்டம் வசனம் | 0 | 3 | 0 |
| சீறுவசனகாவியம் | 2 | 8 | 0 |
| கருணீகர்புராணம் | 0 | 2 | 0 |
| பருவதராஜபுராணம் | 0 | 2 | 0 |
| சோதிடபாலசிக்ஷை | 0 | 6 | 0 |
| விஷ்ணு திருஆசிரிய விருத்தம் | 0 | 1 | 0 |
| ஸ்ரீகுமாரதேவர் 16சாஸ்திரம் | 0 | 10 | 0 |
| அரிச்சந்திரபுராண மூலம் | 0 | 8 | 0 |
| அற்புத தேவாரத்திரட்டு | 0 | 3 | 0 |
| திருவள்ளுவர் குறள்-மூலம் | 0 | 4 | 0 |
| சகாதேவசாஸ்திரம்-108 | 0 | 4 | 0 |
| வால்மீகர் ஆரூடம் | 0 | 0 | 6 |
| நூதன பத்மினிசபா | 0 | 4 | 0 |
| பார்ஸீ சுந்தரிநாடகம் | 0 | 4 | 0 |
| கீசகநாடகம் | 0 | 3 | 0 |
| காத்தவராய நாடகம் | 0 | 4 | 0 |
| திருவருசு நாடகம் | 0 | 4 | 0 |
| உடலறி விளக்கம் | 0 | 1 | 0 |
| தண்டலையார்சதகம் | 0 | 1 | 0 |
| குமரேசசதகம் | 0 | 2 | 0 |
| ஜெயமுனிசோதிடம் | 0 | 2 | 0 |
| பஞ்சதந்திரக்கதை-பாட்டு | 0 | 4 | 0 |
| ஷை கதை | 0 | 4 | 0 |
| கதாமஞ்சரி | 0 | 4 | 0 |
| காமாக்ஷியம்மன் தபசுமாலை | 0 | 4 | 0 |
| ஆத்திச்சூடி வெண்பா | 0 | 1 | 0 |

வேறுவேண்டும் புத்தகங்கள் வி. பி. போஸ்டில் அனுப்பப்படும். அரை அணு ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு 2 - கேட்லாக்கு அனுப்பப்படும்.

கொ. லோகநாத முதலியார்,
மநோன்மணிவிலாச சென்ட்ரல் புக்டிபோ,
29-நெ த்தியநாத முதலியார் வீதி, சென்னை.

உ

கணபதி துணை.

# சேந்தன் திவாகரம்.

## முதலாவது

## தெய்வப்பெயர்த்தொகுதி.

### மூலபாடம்.

காப்பு.

தந்திமுகத் தெந்தை சதங்கைப் பதம்போற்றிச்
சிந்தை விளக்காந் திவாகரத்துள்—வந்த
தொகுதியொரு பன்னிரண்டுஞ் சோராம னேரே
பகுதியுற மனமே பற்று.

சிவன்பெயர்:—சங்கரனிறையோன் - காமதகனன், கங்காதரனே - கறைமிடற்றண்ணல், கூற்றையுதைத்தோன் - குன்றவில்லி, ஏற்றுவாகனன் - திரியம்பகன் சோதி, நக்கன்சடையோன் - நாரிபாகன், முக்கட்பகவன் - பசுபதிபரமன், கொன்றைசூடி-கொலைமழுவாளி, ஈமத்தாடி-பிஞ்சகன்பித்தன், ஆனையுரித்தோன்-அரன் சிவனுருத்திரன், காலகாலன் - கபாலமூர்த்தி, நீலகண்டன் - நீறணிகடவுள், அரவாபரணன் - ஆரழலாடி, பிறையதுசூடி - பெருமானுமாபதி, அழலதுவேந்தி - அமலனநந்தன், பரசுபாணி - சுடலையாடி, மானிடமேந்தி - மறைமுதல்யோகி, புலித்தோலுடையோன் - புரமூன்றெரித்தோன், பினாகபாணி - பேயோடாடி, பூதநாதன் - புணர்கங்காளன், ஞானமூர்த்தி - ஈசனாதி, ஐம்முகன்பகவன் - ஆதிபாண்டரங்கன், அந்திவண்ணன் - ஆலமர்கடவுள், நந்திநம்பன் - நாதன்றற்பரன், கண்ணுதன்மூர்த்தி - கைலையாளியென், றெண்ணிய நாமம் - இன்னமும்பலவே. ஆ-௬௪.

திருமால்பெயர்:—மாயோன்மாதவன் - நாரணன் கேசவன், சீதரன்றிருமகன் - பூமிகொழுநன், விண்டு விறலரி - திரிவிக்கிரமன், உந்திபூத்தோன் - உவணமுயர்த்தோன், வாமனன்கண்ணன் - கோவிந்தனச்சுதன், ஆழ்கடற்றுயின்றோன் - அரவணைச்செல்வன்,

சக்கராயுதனே - சங்கமேந்தி, கருங்கடலவண்ணன் - கமலக்கண்ணன், சாரங்கபாணி-தருபஞ்சாயுதன், உலகமுண்டோன் - உலகினையளந்தோன், நாரசிங்கன் - ஆதிவராகன், பதுமநாபன்-மதுசூதனனொடு,தாமோதரனே-தருபீதாம்பரன், காவற்கடவுள்-முராரிமுகுந்தன், பெருமான்பிரமன்-தந்தையென்றிவைமுதல், திருமாற்கனந்தம் - சிறந்ததொல்பெயரே. ஆ-ஙஅ.

பிரமன்பெயர் :—உந்தியிலுதித்தோன் - ஒளிமலர் மிசையோன், அன்னவூர்தி - அன்னமுயர்த்தோன், நான்முகன்மான்மகன்-நலங்கேழெண்கணன், வானவர் முதல்வன் - மண்பொதுத்தந்தை, இறைவன்குரவன் - மறையோன்விரிஞ்சன், அந்தணன்ஞானன் - அயன் வரன்றிசைமுகன், பிதாமகன்விதாதா - கமலயோனி, வேதாப்போதன் - விதிபரமேட்டி, [இ]ரணியகருப்பன்-படைப்போனிவைமுதல், அரணியல [பிர]மற்-கனந்தம் பெயரே. ஆ-உஎ.

இந்திரன்பெயர் :—புரந்தரன்புனிதன் - பொன்னகர்க்கிறைவன், வாசவனமரர்கோன் - மான்முகிலூர்தி, வேள்விநாயகன் - விண்முழுதாளி, ஆயிரங்கண்ணன் - அயிராணிகேள்வன், மருத்துவன்மகவான் - வலாரி விருத்திராரி, வெள்ளைவாரணன்-இமையவர்வேந்தன், பாகசாதனன் - ஆகண்டலனே, வச்சிரபாணி-சதக்கிருதென்றிவை, எச்சமிலிந்திரற் - கியன்றதொல்பெயரே. ஆ-உக.

கணபதியின்பெயர் :—ஒற்றைக்கொம்பன் - விநாயகனைங்கரன்-வெற்றியானை - முகவன்கணபதி, பாசாங்குசதரன்-ஆகுவாகனனே. ஆ-சா.

முருகன்பெயர் :—முருகன்சூர்ப்பகை - செட்டிகுமரன், அறுமீன்காதலன்-சேவலங்கொடியோன், கார்த்திகேயன் - கடம்பன்சுவாமி, வேலுடைக்கடவுள் - மேலவர்க்கிறைவன், வரைபகவெறிந்தோன் - வள்ளிமணாளன், அரன்மகன்குறிஞ்சிமன்-சரவணத்துதித்தோன், அறுமுகன்விசாகன் - குகன்சேய்செவ்வேள், தேவர்சேனாபதி - மயிலாளிச்சேந்தன், கந்தன்காங்கேயன் - வேளெனச்செப்புவர். ஆ-உசா.

காமன்பெயர் :—வேனிலாளி-வேண்மதனனங்கன், மாரன்பூவாளி - மன்மதன்கந்தர்ப்பன், பஞ்சபாணன் - கருப்புவில்லி, இரதிகாதலன்-மகரமுயர்த்தோன், திரு

மால்புதல்வன் - வசந்தனென்றிவை, வருமால்காமற் - கியன்றவன்பெயரே. ஆ-௰சு.

வைரவன்பெயர் :—வைரவன்காரி-வடுகக்கடவுள். ஆ-உ.

ஐயனார்பெயர் :—கோழிக்கொடியோன் - சாதவாகனன், காரிசாத்தன் - கடனிறவையன். ஆ-சு.

வச்சிரவண்ணன்பெயர் :—மந்திரிகுபேரன்-நிதிக்கோனியக்கன், பிங்கலனரற்குப்-பிரியாத்தோழன், வடதிசைத்தலைவன்-இயக்கர்வேந்தன், அளகையாளி-ஆய்முற்காவலன், புட்பகவூர்தி-த்னதன்மரகதனென,வைப்பர்நாமம் - வச்சிரவணற்கே. ஆ-௰ங.

அருகன்பெயர் :—அநகனசலன் - அதிகுணனபயன், அமையவனறிவன் - அதிசயனமலன், பூரணன்புங்கவன் - புணர்முக்குடையோன், அசோகுடைச்செல்வன் - அண்ணறத்துவன், ஆதியங்கடவுள்-அறவாழியந்தணன், அரியணைச்செல்வன் - அருளாழிவேந்தன், பண்ணவன்பகவன்-எண்குணன்மாசேனன், விண்ணவன்றேவன்-விறலோன்விளங்கொளி, பொன்னெயிறுதன் - பூமிசைநடந்தோன், முனைவன்வீரன் - முதல்வன்புனிதன், காமற்காய்ந்தோன் - கமலவூர்தி, சிநேந்திரன்திகம்பரன் - சாந்தன்புண்ணியன், மூர்த்தியாசான் - முழுதொருங்குணர்ந்தோன், வரதன்சினன்வரன்- என்றிவைமுதலா, அருகற்கின்னும் - அனந்தம்பெயரே. ஆ-சங.

புத்தன்பெயர் :—அண்ணல்வாமன் - அருங்கலைநாயகன், புண்ணியமுதல்வன் - ஆதிபுங்கவன், பாரின்மிசையோன் - சாந்தன்புனிதன், பகவன்சைனன்-அறவன்மூர்த்தி, போதிவேந்தன்-சினன்வரன்புத்தன், ஏகதேவன் - முக்குற்றங்கடிந்தோன், அருணெறிசுரக்கும்-செல்வனனந்த, லோசனன்வளர்ந்த - பூமிசைநடந்தோன், அகளங்கன்முத்தன் - புண்ணியமூர்த்தி, பஞ்சதாரைவிட்-டவுணர்கூட்டிய, எஞ்சலில்பெருமாற்-கின்னவும்பலவே. ஆ-உரு.

நமன்பெயர் :—அந்தகன்றருமன் - தென்றிசைமுதல்வன், சண்டன்மறலி - கூற்றுச்சமன்ஞமன், செங்கோற்கடவுள் - இயமனென்றிவை, தங்கியநமன்மேற் - றரும்பெயராகும். ஆ-௰.

காலன்பெயர்:—சண்டனுமறலியும்-கூற்றுச்சமனு மென்,றிந்தவகைப்பேர்-காலற்குமாகும். ஆ-சு.

உமையவள்பெயர் :—காமக்கோட்டி - அம்பிகை கௌரி, ஆரியைசத்தி - அபிராமிபார்வதி, இமய வல்லி - உமையவள்பேரே. ஆ-அ.

கங்கையின்பெயர் :—பகீரதிசானவி - வரநதிசுர நதி, திரிபதகைமந்தா - கினியிவைகங்கை. ஆ-சா.

காடுகாள்பெயர் :—காடுகாண்மோடி - காரிதாய் கொற்றி, மாரிசூரி-வடுகிழுதணங்கே. ஆ-எ.

திருமகள்பெயர் :—பொறிமாவாக்கம் - செல்வி பொன்பூமகள், செய்யாளிந்திரை - திருமகள்பெயரே, கமலைபதுமை - விமலைகோகனகை, அனையவுமவள் பெயர் - ஆகுமென்ப. ஆ-௰உ.

சரஸ்வதியின்பெயர் :—பாரதிவாணி - பனுவலா ட்டி, வெண்டாமரையாள் - வெள்ளைமேனியாள், நான் முகன்கிழத்தி - நாமகள்கலைமகள், உலகமாதா - ஊர் பூரவாகனி, ஞானமூர்த்தி - நற்பாமடந்தை, சாவித்திரி யே - காயத்திரியென, வாக்கின்செல்வியை - நோக்கிய பெயரே. ஆ-௰சு.

சேட்டையின்பெயர் :—முகடிதௌவை - கலதிமூ தேவி, காக்கைக்கொடியாள் - கழுதைவாகனி, கேட்டை கெடலணங்கு - சேட்டைப்பெயரே. ஆ-அ.

இந்திராணியின்பெயர் :—சுந்தரிசசியே - அயிரா ணிபுலோமிசை, இந்திரன்றேவிக் - கெய்தும்பெயரே. ஆ-சு.

காளியின்பெயர் :—சூலியெண்டோளி-தாருகவிநா சனி, மாதரிவீரி - கௌரிமுக்கண்ணி, பைரவிகுமாரி - சாமுண்டிசண்டிகை, யோகினிவேதாளி - யாமளைமா காளி. ஆ-௰சு.

பகவதியின்பெயர் :—கொற்றவையையை - கார்த்தி கைகௌரி, துர்க்கைசூலி - மகிடற்காய்ந்தாள், நீலியெ ண்டோளி-விந்தைசயமகள், இருங்கலையூர்தி - எழிலரி யேறி, மேதித்தலைமிசை - விசயையந்தரி, மாலுக்கிளை யாள்-சக்கராயுதியே, பாலைக்கிழத்தி-பண்ணம்பணத்தி, நாராயணியே - கன்னிகுமரி, சீர்சால்பகவதி - சிறந்த தொல்பெயரே. ஆ-உஉ.

இடாகினியின்பெயர் :—வஞ்சனிமாயவள் - வல வையிடாகினி, ஆ-ங.

புனற்கரசன்பெயர் :—மற்றப்புனற்கரசன் - வருண
னாகும். ஆடூ-௨.

அருக்கன்பெயர் :—வெய்யோனிருள்வலி - பதங்
கன்சூரியன், சுடரவன்றரணி - உதயனுதவன், எல்லைமா
ர்த்தாண்டன் - தினகரன்பனிப்பகை, பரிதிசெங்கதிர் -
அலரிபானு, வெஞ்சுடர்க்கிரணன் - பகலவன்வேந்தன்,
ஆயிரங்கதிரோன் - அழலவன்றிவாகரன், இரவிபாற்
கரன் - என்றூழருணன், ஆதித்தன்கனலி - ஞாயிறுவி
ரிச்சிகன், சான்றோனரியே - தபனனென்றினையவும்,
ஆன்றவருக்கற் - கனந்தம்பெயரே. ஆடூ-௩௩.

சந்திரன்பெயர் :—அம்புலிதிங்கள் - குபேரனருச்
சிகன், நிசாகரனிமகரன் - ஆலோன்களங்கன், தண்
சுடர்க்கலையோன் - இராக்கதிர்தானவன், வியோமத்துடு
பதி-அமுதகிரணன், இந்து:சோமன்-பிறைமதிசசிவிது
வென, வந்தனபிறவும் - நிலவுஞ்சந்திரன். ஆடூ-௨௰.

செவ்வாயின்பெயர் :—அங்காரகன்குசன் - ஆரல்
வக்கிரன், மங்கலனறிவன்-செந்தீவண்ணன், பூமகனில
மகன்-குருதிசேய்செவ்வாய், நாமமென்று - நவின்றனர்
புலவர். ஆடூ-௰௧.

புதன்பெயர் :—அருணன்றாதுவன் - அனுவழி
மேதை, மதிமகன்பாகன்-மாலவன்கணக்கன், புந்திபுல
வன் - பண்டிதன்சௌமியன், சிந்தைகூரியோன்-அறி
வன்புதனென, வந்தநாமம்-மற்றவற்காகும். ஆடூ-௰௪.

வியாழத்தின்பெயர் :—மந்திரியாசான்-பீதகன்சுர
குரு, அந்தணனரசன்-ஆண்டளப்பான்பிரகற்பதி, சுந்
தரப்பொன்குரு-மறையோன்வியாழம். ஆடூ-௰௧.

சுக்கிரன்பெயர் :—பளிங்குபார்க்கவன் - புகர்புயல்
மழைக்கோள், விளங்குதிங்கள் - பிரசுரன்சல்லியன்,
ஒள்ளியோன்சுங்கன் - அசுரமந்திரியென, வெள்ளி
சிதன்பிருகு - சுக்கிரன்பெயரே. ஆடூ-௰௪.

சனியின்பெயர் :—மந்தன்காரி-கரியோன்முடவன்,
அந்தனீலன் - கதிர்மகன்கீழ்மகன், பங்குமேற்கோள் -
சௌரிமுதுமகன், சந்தில்சாவகன் - சனியின்பெயரே.
ஆடூ-௧௩.

இராகுவின்பெயர்:— இராகுக்கோள் கரும்பாம்பு.
ஆடூ-௧.

கேதுவின்பெயர் : — கேதுக்கோள் செம்பாம்பு.
ஆடூ-௧.

அனந்தன்பெயர் :—அனந்தன்பெயரே - சேடனாகும். ஆ-உ.

மேடவிராசியின்பெயர் :—வருடையுதடகர் - மறிமைகொறியென, விரியுமாட்டின்பெயர் - மேடவிராசி. ஆ-ச.

இடபவிராசியின்பெயர் :— பாறல்புல்லம் - பாண்டில்பசுமூரி, ஏறுமுதல்வந்தன - இடபவிராசி. ஆ-ச.

மிதுனத்தின்பெயர் :—பாடவையாடவை - இரட்டைசயமகள், மேவுமியாழ்ப்பல்பெயர் - தண்டேமிதுனம். ஆ-ச.

கர்க்கடகத்தின்பெயர் :—அலவனள்ளி - குளிர்ஞெண்டார்மதி, கள்வனென்றிவை - கர்க்கடகப்பெயரே. ஆ-ச.

சிங்கத்தின்பெயர்:—அரிமாபுலிஎைப-ஆனனம்யாளி, தெரியிற்புலிசீயப்-பல்பெயர்சிங்கம். ஆ-ச.

கன்னியின்பெயர் :—பெண்மைப்பெயரே-கன்னிக்குமாகும். ஆ-உ.

துலாத்தின்பெயர் :—நிறையேகட்டளை - வாணிகனிறுப்பான், துலையேகோலெனத்-துலாப்பெயர்பெறுமே. ஆ-ச.

விருச்சிகத்தின்பெயர் :—தெருக்கால்பறப்பன்-தேளேவிருச்சிகம், நலமென்பெயரும் - தேளின்மேற்றே. ஆ-ச.

தனுவின்பெயர் :— சாபங்காண்டீபந் - தனுவின்பெயரே. ஆ-உ.

மகரத்தின்பெயர் :—மானேகலைசுறு - மகரப்பெயரே. ஆ-உ.

கும்பத்தின்பெயர் :—குடமேசாடி - பெயரேகும்பம். ஆ-உ.

மீனத்தின்பெயர் :—மீனமீனின்-பலபெயர்பெறுமே. ஆ-உ.

அச்சுவினியின்பெயர்:—இரலைப்பிசியாழ்-ஏறுதலையினுள், புரவிமருத்துவநாள் - அச்சுவினியென்ப. ஆ-ச.

பரணிநாளின்பெயர் :—காடுகிழவோன் - பூதமடுப்பே, தாழிபெறுஞ்சோறு-தருமனுள்போதமென, பாகுபட்டது - பரணிநாட்பெயரே. ஆ-அ.

கார்த்திகையின்பெயர் :—அங்கியாரல்-அளக்கரளகிருல், பொங்கியநாடன்-நாவிதன்வாணன், தங்கொளியறுமீன் - தழனுள்கார்த்திகை. ஆ-சு.

உரோகிணியின்பெயர் :—பண்டிபார்சகடு - சாகாடு வையம், ஒண்டிற லுருடோர்-அயனுளுரோகிணி. ஆ-ச.

மிருகசீரிடத்தின்பெயர்:—மாழ்குபேராளன்-மான் றலையிந்திரன், மார்கழிநரிப்புறம் - மதிநாண் மும்மீன், பாலைவெய்யோன்-மிருகசீரிடப்பெயர். ஆ-கா.

திருவாதிரையின்பெயர் :—மூதிரைசெங்கையாழ் - ஈசர்தினமென, ஆதிரைதன்பெயர்-ஆகுமென்ப.ஆ-ச.

புனர்பூசத்தின்பெயர் :—அதிதிநாள்மூங்கில்-கரும் பாவணம்பாலை, புனிதம்பிண்டி - புநர்தம்புனர்பூசம். ஆ-அ.

பூசநாளின்பெயர் :—கொடிறுகாற்குளம் - சுரர்குரு நாள்வண்டு, புணர்வதாகும்-பூசநாட்பெயரே. ஆ-ச.

ஆயிலியத்தின்பெயர் :—அரவினுள்கௌவை-ஆயி லியப்பெயர். ஆ-உ.

மகத்தின்பெயர் :—வேட்டுவன்கொடுநுகம்-மெழு வாயெழுஞ்சனி, வாய்க்கால்பிதிர்நாள்-மாசிமகமாகும். ஆ-ச.

பூரத்தின்பெயர் :—இடையெழுஞ்சனி - எலிபே ழார்க்கை, பகவதிநாளுவிதன் - கணையேபூரம். ஆ-ய.

உத்தரத்தின்பெயர் :—பங்குனியுத்தர-தெழுஞ்சநி- பாற்குநி, மானேறுகதிர்நாள்-உத்திரமாகும். ஆ-ரு.

அத்தத்தின்பெயர் :— கைம்மீன்காமரம் - களிறு கௌத்துவம், நவ்விகன்னி - ஐவிரலத்தம். ஆ-எ.

சித்திரைநாளின்பெயர் :— நெய்வான்மீன்சுவை - பயற்றுடுநேர்வான், செவ்விதிற்றுவட்டாநாள்-சித்தி ரையென்ப. ஆ-கா.

சோதிநாளின்பெயர்:—விளக்கேவீழ்க்கை - வெறு நுகமரக்கால், துளக்கமிலநிலநாள் - சோதிநாளாகும். ஆ-ரு.

விசாகநாளின்பெயர் :—முறமேமுற்றில்-வைகாசிய னிலநாள், பெறுமேசுளகு-விசாகநாட்பெயரே.ஆ-ரு.

அநுடத்தின்பெயர் :—பனைதேள்பெண்ணை-புற்ருளி போந்தை, மித்திரநாளிவை-அநுடப்பெயரே. ஆ-எ.

கேட்டையின்பெயர் :— துளங்கொளிவல்லாரை - வேதியெரிதழல், கிளர்ந்தவிந்திரநாள் - பின்றுக்கேட் டை. ஆ-ரு.

மூலத்தின்பெயர் :—கொக்கேதேட்கடை-குருகுவில் லன்றில், முற்றுமானி-அசுரநாண்மூலம். ஆ-எ.

பூராடத்தின்பெயர்:— உடைகுளமுற்குளம் - நீர்நாள்பூராடம். ஆ-௩.

உத்தராடநாளின்பெயர் :—ஆடியானி-கடைக்குளம்விச்சுவநாள், நாடிலுத்திராட-நாளாகும்மே.ஆ-௪.

திருவோணத்தின்பெயர் :—நலத்தகுவயிரம் - நள்ளேசிரவணம், உலக்கைசோனை - மாயோனுளோணம். ஆ-௬.

அவிட்டத்தின்பெயர்:—ஆவணிகாக்கை - பறவைபுள்வசுநாள், மேவியவவிட்ட-மீனின்பெயரே. ஆ-௫.

சதயநாளின்பெயர்:—குன்றுபோரே-சுண்டன்பெருஞ்செக்கு, தங்குவருணனுள்-சதயநாளாகும். ஆ-௫.

பூரட்டாதியின்பெயர் :— புரட்டாதிமுற்கொழுங்-கோல்பூரட்டாதி, உரைப்பர்நாழியும் - அந்நாளுடனே. ஆ-௩.

உத்திரட்டாதியின்பெயர் :—முரசுபிற்கொழுங்கோன்-மன்னனிம்மூன்றீனே, டுரைசெய்பறிவனுள்-உத்திரட்டாதி. ஆ-௪.

இரேவதியின்பெயர்:—தொழுவேநாவாய்-தோணிசூலம், பஃறிபுருடநாள்-கடைமீனிரேவதி. ஆ-எ.

அருந்ததியின்பெயர் :— அருந்ததிசாலி-வடமீனுகும். ஆ-உ.

வான்மீனின்பெயர் :—உடுதாராகணம் - ஒளிவான்மீனே. ஆ-உ.

காலநுட்பத்தின்பெயர் :— துடியுங்கலையும் - தொடர்காலநுட்பம். ஆ-உ.

நாழிகையின்பெயர் :— கன்னலுமிருத்தையும்-கடிகையும்பதமும், சொன்னவிகலையும் - நாழிகைத்தொல்பெயர். ஆ-௫.

பொழுதின்பெயர் :—வேலையுமமையமும்-காலையும்பதமும், எல்லையுங்காலமும் - பொழுதெனப்படுமே. ஆ-௬.

முன்னைநாளின்பெயர் :— நென்னலுநெருநலும் - முன்னைநாளாகும். ஆ-உ.

பின்னைநாளின்பெயர் : — பிற்றையும்பின்றையும் - பின்னைநாளாகும். ஆ-உ.

உச்சியின்பெயர் :—நண்பகலுச்சி. ஆ-க.

சந்தியின்பெயர் :—அந்திசந்தி. ஆ-க.

சாமத்தின்பெயர் :—யாமஞ்சாமம். ஆ-க.

பகலின்பெயர் :—எல்லேபகலாம். ஆ-க.

வெயிலின்பெயர் :—என்றூழாதபம்-வெயிலெனப் படுமே. ஆ-உ.

சந்திரிகையின்பெயர் :— நிலவுசந்திரிகை - ஆகு மென்ப. ஆ-க.

இரவின்பெயர் :—எல்லியுங்கங்குலும் - யாமமுமா லையும், அல்லுமங்குலும்-இரசனியுமல்கலும், யாமினியு நிசியும் - எல்லுமிரவே. ஆ-கக.

இருளின்பெயர் :—நிசியேநத்தம் - நீலமதனொடு, திமிரமுந்தமமும் - இருளாகும்மே. ஆ-ரு.

நாளின்பெயர் :—பகலும்வைகலும்-திவசமுந்தின மும், ஆனியமுந்திவாவும்-நாளாகும்மே. ஆ-சா.

அருணோதயத்தின்பெயர் :— வைகறைவிடியல் - புலரியருணோதயம். ஆ-ந.

திதியின்பெயர் :—திதியேபக்கம். ஆ-க.

மாதத்தின்பெயர் :—மதியேதிங்கள் - மாதமாகும். ஆ-உ.

முதற்பக்கத்தின்பெயர் :—பக்கமுதலது-நந்தையா [கும். ஆ-க.

இரண்டாம்பக்கத்தின்பெயர் :—பத்திரையென்ப-திரண்டாம்பக்கம். ஆ-க.

மூன்றாம்பக்கத்தின்பெயர் :— மூன்றேசயைபக்கம். ஆ-க.

நான்காம்பக்கத்தின்பெயர் :— நான்கேயிரித்தை. [ஆ-க.

ஐந்தாம்பக்கத்தின்பெயர் :—ஐந்தாம்பக்கம் - பூர ணையாகும். ஆ-க.

பாதிநாளின்பெயர் :— அரைநாளும்பானாளும் - அத்தநாளும்பாதிநாள். ஆ-ந.

மாத்திரையின்பெயர் :—கணமேமாத்திரை. ஆ-உ.

நிகழ்காலத்தின்பெயர் :—வேலையென்பது - நிக ழுங்காலம். ஆ-க.

வெப்பத்தின்பெயர் :—உருப்பம்வெப்பம்-ஆகுமெ ன்ப. ஆ-க.

கோடையின்பெயர் :—வேனில்கோடை - மிசைப் பேராகும். ஆ-க.

சிறுபொழுதின்பெயர் :— ஒல்லைசிறுவரை - சிறு பொழுதாகும். ஆ-உ.

அறுவகைப்பருவமாவன :—காரேகூதிர்-முன்பனிபி ன்பனி, சீரிளவேனில்-முதுவேனிலென்றாங், கிருமூன்

றுவகைய-பருவமவைதாம், ஆவணிமுதலா - இரண்டிர ண்டாக,மேவின திங்கள்-எண்ணினர் கொளலே.ஆ-௬.

பனியின்பெயர் :—இமமுந்துகினமும்-மஞ்சுநீகார மும்; பனியின்பெயரென - பகரப்படுமே. ஆ-௪.

கார்காலத்தின் பெயர் :—காரெனுங்காலப்-பெயர்ச ரற்காலம். ஆ-௧.

கூதிர்காலத்துக்கும், பனிக்காலத்துக்கும்பெயர்:— கூதிர்காலமும் - குளிர்பனிக்காலமும், ஆகுமென்ப - சிசி ரநாளே. ஆ-௧.

பருவத்தின்பெயர்:—ஆனியமுமிருதுவும் - பருவ மாகும். ஆ-௨.

காலமாவன :—பருவமும்யாண்டும் - காலமாகும். ஆ-௨.

யுகத்தின்பெயர் :—ஊழியுமுறையுளும் - உகமாகும் மே. ஆ-௨.

யுகமுடிவின்பெயர்:—ஊழியுமடங்கலும் - உகமுடி வாகும். ஆ-௨.

நான்முகன்வாழ்நாளின்பெயர்:—நான்முகன்வாழ் நாள் - கற்பமாகும். ஆ-௧.

வாழ்நாளின்பெயர்:—ஆயுளாயுகம் - வாழ்நாளெ ன்ப. ஆ-௨.

மேலின்பெயர்:—மேற்குவலமீ - உம்பர்மேலாகும். ஆ-௨.

கீழின்பெயர் :—கிழக்குக்கீழே. ஆ-௧.

வருடத்தின்பெயர் :— துவலைபெயலை - துளியே மாரி, உறைபெயலாலி - உதகஞ்சிதறி, தூவல்சீகரம்- தூறல்வருடம். ஆ-௧௨.

மேகத்தின்பெயர்:— மேகஞ்சீதம் - விசும்புவான் விண்முகில், கொண்மூமஞ்சு - கொண்டன்மைம்மழை, எழிலிகார்குயின்-கந்தரம்விண்டு, மங்குன்மால்செல்-கன மும்வரையார். ஆ-௧௯.

இடியேற்றின்பெயர் :—உருமுஞ்செல்லும்- அசனி யுமுருமேறும், இடியும்வானேறும் - இடியேற்றின்பெ யரே. ஆ-௬.

மழைபெய்துவிடுதலின் பெயர் :—தலையலென்பது- மழைபெய்து விடுதல். ஆ-௧.

விடாதுசொரிதலின்பெயர் : — சோனையும்பனித்த லும்-விடாதுசொரிதல். ஆ-௨.

பெருமழையின்பெயர்:—ஆசாரமென்பது - பெருமழையாகும். ஆ-க.

துளியின்பெயர்:—துளிபெயலாலி - உறைதுளியாகும். ஆ-ச.

ஆலங்கட்டியின்பெயர்:—ஆலியாலம் - கட்டியாகும். ஆ-க.

துவலையின்பெயர்:—சீகரம்பிதிரே - சிதரரிசிகரம், தூவலென்றிவை-துவலையாகும். ஆ-ரு.

மின்னின்பெயர்:—தடித்துத்தடிமின். ஆ-க.

இடியின்பெயர்:—இடிப்பெயரிகுளே. ஆ-க.

பரிவேடத்தின்பெயர்:—ஊர்கோள்வட்டம் - பரிவேடப்பெயரே. ஆ-உ.

இந்திரவில்லின்பெயர்:—வானவில்லிந்திர - வில்லெனவறைவர். ஆ-உ.

காமன்காண்டீபத்தின்பெயர்:—காமன்காண்டீபம்-கருப்புவில்லாகும். ஆ-உ.

## திவாகரவரலாறு.

வடநூற் கரசன் தென்றமிழ்க் கவிஞன்
கவியரங் கேற்று முபயகவிப் புலவன்
செறிகுணத் தம்பற் கிழவோன் சேந்தன்
அறிவு கரியாகத் தெரிசொற் றிவாகரத்துள்

முதலாவது

தெய்வப்பெயர்த்தொகுதி

முற்றிற்று.

௳

கடவுள் துணை.

# இரண்டாவது

# மக்கட்பெயர்த்தொகுதி.

## மூலபாடம்.

அருந்தவர்பெயர்:—துறவோரையர்-மாதவர்முனி வர், அறவோர்நீத்தோர்-அறிஞருயர்ந்தோர், தாபதர் மெய்யர்-தவத்தர்தபோதனர், முனிவரிருடிகள்-படிவர் பண்ணவர், யோகிகள்கடிந்தோர் - பெரியோருறுவ ரென், ருகியவந்தணர் - அருந்தவர்பெயரே. ஆறு-உக.

சைவதவப்பாலோர்பெயர்:—மாவிரதியரும்-காளா முகரும், பாசுபதரும்-சைதவப்பாலோர். ஆறு-௩.

நாராயணசமயத்தோர்பெயர் :— நாராயணசமயத் தோர்-பாகவதரே. ஆறு-க.

சமணர்பெயர்:—சாவகரருகர்-சமணராகும், ஆசீவ கரும்-அத்தவத்தோரே. ஆறு-௩.

புத்தர்பெயர்:—புத்தர்சாக்கியர் - தேரர்பௌத்தர், வைத்தசிவகரும்-அத்தவத்தோரே. ஆறு-ரு.

சமணமுனிவர்பெயர்:—சாரணர்சமண - முனிவரா கும். ஆறு-க.

சடைமுடியோர்பெயர் :— தாபதர்சடைமுடியோர். ஆறு-க.

பார்ப்பார்பெயர்:— ஐயர்வேதியர் - இருபிறப்பா ளர், மெய்யர் மிக்கவர்-மறையோர்பூசுரர், அந்தணர்நூ லோர்-அறுதொழிலாளர், செந்தீவளர்ப்போர்-உயர்ந் தோராய்ந்தோர், ஆதிவருணர்-வேதபாரகர், விப்பிரர் தொழுகுலத் - தோர்வேள்வியாளர், முப்புரிநூலோர் முனிவரென்றிவை - தப்பில்பார்ப்பார், தம்பெயராகும். ஆறு-உ௰.

நூலுரைப்போர்பெயர்:—கணக்காயர்-நூலுரைப் போர். ஆறு-க.

கலைவல்லோர்பெயர்:—கவிஞர்கலைவல்லோர். ஆறு-க.

அறிவுடையோர்பெயர்:—சான்றோர்மிக்கோர்-நல் லவர்மேலவர், ஆய்ந்தோருயர்ந்தோர்-ஆரியருலகெ்என, வாய்ந்தவான்றோர்-அறிவுடையோரே. ஆறு-கூ.

புலவர்பெயர் :—கவிஞர்கலைஞர் - கற்றவர்மேதை யர், சவையேசங்கம் - முதுவோர்மூத்தோர், அவையே யறிஞர் - புதரேபுலவர். ஆடு-கூ.

மிகவல்லோர்பெயர் :—விபுதர்நிபுணர் - குசலர் மிகவல்லோர். ஆடு-உ.

மூத்தோன்பெயர் :—அடிகளத்தன் - ஐயனுசான், குரவன்சாமி - கோமான்பெருமான், உரவோனீசன் - இறைவன்றலைவன், விறவுபதிநாதன் - மூத்தோன்பெய ரே. ஆடு-அ.

பெருமையிற்சிறந்தோன் பெயர் :— அண்ணலுங் குரிசிலும் - ஏந்தலுந்தோன்றலும், செம்மலும்பெரு மையிற் - சிறந்தோன்பெயரே. ஆடு-ரு.

எப்பொருட்குமிறைவன்பெயர் : — நாதனுயகன் - அதிபன்காந்தன், பதிகோனீசன்-செம்மலிறையே, தலை வன்மன்னவன் - பிரானேகொழுநன், அரசனுதி-எனப் பதினைந்தும், உரைசெயெப்பொருட்கும் - இறைவன் மேற்றே. ஆடு-கரு.

உயர்ந்தோர்பெயர் :—உலகமென்ப - துயர்ந்தோர் மாட்டே. ஆடு-க.

திரண்டோர்பெயர் :—சங்கமுங்குழுவும் - கூட்ட முங்கணமும், தங்கியதொகுதியும் - சவையுமவையும், இங்கிவைதிரண்டோர் - யாவர்க்குமுரிய. ஆடு-எ.

அரசன்பெயர் :—புரவலன்கொற்றவன்-பெருமான் காவலன், அரையனேந்தல் - கோவேகுரிசில், தலைவன் மன்னவன்-வேந்தன்முதல்வன், நிருபன்பூபாலன்-நர பதிபார்த்திவன், இறைவனண்ணல் - எனப்பதினெட் டும், அரசன்ற்றேல்பெயர் - ஆகுமென்ப. ஆடு-கஅ.

குருகுலத்தரசர்பெயர் :—பாரதர்கௌரவர் - குருகு லத்தரசர். ஆடு-உ.

கோச்சேரன்பெயர் :—பூழியனுதியன் - கொங்கன் பொறையன், வானவன்குட்டுவன் - வானவரம்பன், வில்லவன்குடநாடன்-வஞ்சிவேந்தன், கொல்லிச்சிலம் பன் - கோதைகேரளன், போந்தின்கண்ணிக்கோன் - பொருநைத்துறைவன், சேரலன்மலயமான் - கோச்சே ரன்பெயரே. ஆடு-கஎ.

கோச்சோழன்பெயர் :—சென்னிவளவன் - கிள்ளி செம்பியன், பொன்னித்துறைவன் - புலிக்கொடிப்புர வலன், நேரியனுர்த்தார்க்கோன் - நேரிறையபயன்,

நேரிவெற்பன் - கோழிவேந்தன், சூரியன்புனனுடன் -
கோச்சோழன்பெயரே. ஆறு-கச.
கோப்பாண்டியன்பெயர்:—செழியன்றமிழ்நாடன்-
கூடற்கோதென்னவன், வழுதிமீனவன் - பஞ்சவன்மா
றன், கௌரியன்வேம்பின் - கண்ணிக்கோகைதவன்,
பொதியப் பொருப்பன் - புனல்வையைத் துறைவன்,
குமரிச்சேர்ப்பன் - கோப்பாண்டியனே. ஆறு-கச.
சளுக்குவேந்தர்பெயர் :—வேள்புலவரசர்-சளுக்கு
வேந்தர். ஆறு-க.
குறுநிலவேந்தர்பெயர் :—வேளிரும்புரோசரும் -
குறுநிலவேந்தர், அரட்டருங்குறும்பரும்-ஆகுமென்ப.
ஆறு-ச.
மந்திரிக்கிழவர்பெயர்:—முதுவர்குரவர்-மூத்தோர்
முன்னோர், உழையோர்சூழ்வோர் - நூல்வல்லோரே,
அமைச்சர்தேர்ச்சித் - துணைவரென்றுங், கிசைத்தமந்
திரிக் - கிழவர்க்கெய்தும். ஆறு-கூ.
நட்பாளர்பெயர் :— இனப்பெயர்தன்னட்-பாளர்க்
கெய்தும். ஆறு-க.
மந்திரித்தந்திரிக்குப்பெயர் : — ஏனாதிகர்விதியர் -
ஆமாத்தியரெனும்பெயர், ஆனுமந்திரித் - தந்திரிக்
கெய்தும். ஆறு-ரு.
கருமத்தலைவர்பெயர் :—வள்ளுவன்சாக்கை - ஏனு
ம்பெயர்மன்னர்க், குள்படுகருமத் - தலைவர்க்கொன்றும்.
ஆறு-உ.
போர்த்தலைவர்பெயர் :—பொரும்போர்த்தலைவர் -
பொருநரெனப்படும். ஆறு-க.
பரிவாரத்தின்பெயர் :—பரியாளமென்பது - பரி
வாரமாகும். ஆறு-க.
செட்டிகள்பெயர் :—இப்பர்பரதர் - வைசியர்கவிப்
பர், எட்டியரிளங்கோக்கள் - ஏர்த்தொழிலர்பசுக்காவ
லர், ஒப்பினாய்கர் - வினைஞர்வணிகரென், றத்தகுசிலேட்
டிகள்-செட்டிகள்பெயரே. ஆறு-மஉ.
காராளர்பெயர் :— வினைஞர்சூத்திரர் - பின்னவர்
சதுத்தர், வளமையர்வேளாலர் - மண்மகள்புதல்வர்,
வார்த்தைதொழிலோர் - வண்களமருழவர், சீர்த்தவே
ரின் -வாழ்நர்காராளர். ஆறு-கக.
கைக்கோளர்பெயர் : — செங்குந்தப்படையர் - சே
னைத்தலைவர், தந்துவாயர்-காருகர்கைக்கோளர். ஆறு-ச.

மருத்துவர்பெயர் :—ஆயுள்வேதியர் - மாமருத்து வநூலோர், மாமாத்திரரே-பிடகர்மருத்துவர். ஆ-ச.

குயவர்பெயர் —கும்பகாரர் - குலாலர்வேட்கோவ ரென், றிங்கிவை நயவர் - மட்பகைஞரென்ப. ஆ-ச.

உப்பமைப்போர்பெயர் :—உமணரளவர்-உப்பமைப் போரே. ஆ-உ.

சித்திரக்காரர்பெயர் :—ஓவியர்சித்திரக் - காரரா கும். ஆ-உ.

கம்மாளர்பெயர் :—கம்மியர்யவனர் - கொல்லர்தப தியர், அக்கசாலையர் - சிப்பியரதனொடு, வித்தகர்வித்தி யர் - புனைவரறிவரென், றத்தகுகம்மாளர் - பெயரெனவ றைவர். ஆ-ம.

தச்சர்பெயர் :—தபதியர்மரவினையர் - தச்சராகும். ஆ-உ.

கன்னார்பெயர் :—கன்னுவர்கஞ்சக் - காரர்கன்னார். ஆ-உ.

தட்டார்பெயர் :—செங்கொல்லர்தட்டார் - பொன் வினைசெய்வோர். ஆ-உ.

வண்ணார்பெயர் :—ஏகாலியர் தூசர் - ஈரங்கோலியர், காழியர் வண்ணார் - ஆகக்கருதுவர். ஆ-ச.

உறைகாரர்பெயர் :—காரோடருறைகாரர். ஆ-க.

ஊன்விலைஞர்பெயர் :—சூனரூன்வினைஞர். ஆ-க.

தோல்வினைஞர்பெயர் :—பறம்பர்தோல்வினைஞர். ஆ-க.

நாவிதர்பெயர் :—பெருமஞ்சிகரே - மயிர்வினைஞர் நாவிதர். ஆ-உ.

செக்கார்பெயர் :—சக்கிரிநந்திகள் - செக்காராகும் [ஆ-உ.

கள்விலைஞர்பெயர் :—பழையர்துவசர் - படுவர்கள் விலைஞர். ஆ-ந.

மிலேச்சர்பெயர் :—மிலேச்சராரியர். ஆ-க.

சோனகர்பெயர் :—யவனர்சோனகர். ஆ-க.

சண்டாளர்பெயர் :—குணுங்கர்வங்கர் - கவுண்டர் கனகதர், இழிஞர்கொலைஞர் - புலைஞரென்றுங், கிளை யும்பெயர்சண் - டாளர்க்கெய்தும். ஆ-எ.

பாணர்பெயர் :—சென்னியர்வைரியர் - சூதர்மாகதர், இன்னிசைகாரர் - மதங்கர்பாணர். ஆ-சு.

பாடற்கீழ்மக்கள்பெயர் :—பண்டருமோவரும் - பா டற்கீழ்மக்கள். ஆ-உ.

தமிழ்க்கூத்தர் பெயர் : — வாயிலோர்தமிழ்க்கூத்தர். ஆூ-க. [ஆூ-க.
கழைக்கூத்தர்பெயர் :— வேழம்பர்கழைக்கூத்தர்.
தோற்கருவியிசைப்போர்பெயர் :—இயவர்தோற்கருவி - இசைக்குமாக்கள். ஆூ-க.
நரப்புக்கருவிகொளற்குரியோர்பெயர் :—குயிலுவர் நரப்புக் - கருவிகொளற்குரியோர். ஆூ-க.
தொழில்செய்வோர்பெயர் :— தொழுவர்கம்மியர் - தொழில்செய்வோரே. ஆூ-உ.
புதியோர்பெயர் :—அதிதியர்வம்பலர் - புதியோராகும். ஆூ-உ.
மீகாமன்பெயர் :—நீகான்மரக்கலன் - மீகாமனாகும். ஆூ-உ.
அயலோர்பெயர் : — நொதுமலர்வம்பலர் - அயலோராகும். ஆூ-உ.
வழிச்செல்வோர்பெயர் :— பதிகரென்ப - வழிச்செல்வோரே. ஆூ-க.
அடிமையின்பெயர் :—ஆளுந்தொழும்பும் - அடிமையாகும். ஆூ-உ.
மடையர்பெயர் :—சூாலுவர்கூவியர் - மடையராகும். ஆூ-உ.
ஏவல்செய்வோர்பெயர் :—சிலதர்சிலதியர் - சேடர் சேடியர், பரிசனமுறையோர் - ஏவல்செயற்பாலோர். ஆூ-சு.
தூதர்பெயர் :—வினையுரைப்பாரும்-வழியுரைப்பாரும், அனையபண்புரைப் - பாருந்தூதர். ஆூ-ங.
ஒற்றர்பெயர் :—சாரணருசாவே - ஒற்றெனச்சாற்றுவர். ஆூ-உ.
வெறியாட்டாளன்பெயர் :—வேலன்முருகன் - வெறியாட்டாளன், தேவராளன் - படிமத்தோனே. ஆூ-ச.
செவிடர்பெயர் :—செவிடர்வதியர். ஆூ-க.
முடவன்பெயர் :—முடவன்பங்கு. ஆூ-க.
அலியின்பெயர் :— பேடர்பேடியர் - பெண்டகர் பெண்டரென், றுரியநான்கும் - அலிப்பெயராகும். ஆூ-ச.
ஊமையின்பெயர் :—மூகையுமூங்கையும்-ஊமையாகும். ஆூ-உ.
குருடர்பெயர் :—ஆதரந்தர்-அந்தகர்குருடர். ஆூ-ங.

கூனின்பெயர் :—கூனேகோணல் - ஆமெனக்கூறு
வர். ஆ-க. [ஆ-ரு.
குறளின்பெயர் :—சிந்தேகுஞ்சம்-நூறளேவாமனம்.
கீழ்மக்கள்பெயர் :—கயவர்கனிட்டர்-பூரியர்நீசயர், சுமடர்பேதையர் - தீயோர்மூடர், புல்லர்தேரார் - கலர் பொறியற்றோர், சித்தையர்சிறுமையர் - கையர்கண்டகர், மூக்கர்தீம்பர் - மூகர்முசுண்டரென், முக்கியபெயர்கீழ் - மக்கட்காகும். ஆ-உ௰.
அறிவிலான்பெயர் :—முழுமகன்சிதடன்-இழுதை மூடன், மண்ணேமடன்பேதை-குதலையுஞ்ஞை, அஞரே யாதன் - ஏழையறிவிலான். ஆ-௰உ.
தரித்திரர்பெயர் :—ஆதுலர்வறியோர் - இல்லோ ரெளியர், உறுகணுளர்-நல்கூர்ந்தோர்தரித்திரர். ஆ-சு.
துயருறுவோர்பெயர் : — ஆர்த்தர்துயருறுவோர். ஆ-க.
திருடர்பெயர் : — கரவடர்சோரர் - கள்வர்பட்டி கள், கேணர்புரையோர்-திருடராகும். ஆ-சு.
உரியோர்பெயர் :—கிழ்வருரியோர். ஆ-க.
மூதுணர்ந்தோர் பெயர் : — முதுவர்மூதுணர்ந் தோர். ஆ-க.
வல்லாளன்பெயர் :—வயவன்மீளி - வல்லாளன் னே. ஆ-உ.
திறலோன்பெயர் :—விற[illegible]ன்விடலை-திறலோன் பெயரே. ஆ-உ. [ரர்நாகரீகர். ஆ-உ.
நகரப்பதிவாழ்நர்பெயர் :—நகரப்பதிவாழ்நர்-சது
தூர்த்தர்பெயர் :—விடரேகாமுகர் - மிகுபோகம்வி ழையுனர், படிற்றொழுகர்காமத்துப்-பாலோர்தூர்த்தர். ஆ-ரு.
கட்டிளமையோன்பெயர் :—குமரன்காளை - மழவன் சேடன், முருகன்கட்டிளமை - யோனெனமொழிப. ஆ-ரு.
ஏவுவான்பெயர் :—வியவனேவுவான். ஆ-க.
புகழாளன்பெயர் :—இயவுள்புகழாளன். ஆ-க.
கரியோன்பெயர் :—கள்வனென்கிளவி - கரியோ னென்ப. ஆ-க.
கொண்டோற் பிழைத்துப் பெறும்புதல்வன் பெ யர் :—கொண்டோற்பிழைத்து - பெறும்புதல்வன்குண் டகன். ஆ-க.

கைம்மையிற்பெறும்புதல்வன் பெயர் :— கோளில் கைம்மையிற் - பெறும்புதல்வன்கோளகன். ஆ௨-க.
கன்னியிற்பெறும்புதல்வன்பெயர் :—கன்னியிற்பெறும்புதல்வன் - கானீனனுகும். ஆ௨-க.
குலமுள்ளோர்பெயர் :—குலீனரென்ப - குலமுள்ளோரே. ஆ௨-க.
வல்லோன்பெயர் :—வலவைவல்லுநன் - வல்லோன்பெயரே. ஆ௨-உ.
வல்லுனரல்லோர்பெயர் :—வல்லார்மாட்டாதார் - வல்லுநரல்லோர். ஆ௨-உ.
கூவநூலோர்பெயர் :—உல்லியர்கூவ - நூலுரையுணர்வோர். ஆ௨-க.
கவிகள்பெயர் :— நாவலர்கற்ருேர் - பாவலர்கவிகள். ஆ௨-ரு.
கடிகைமாக்கள்பெயர் :—மங்கலப்பாடகர் - எட்டர்கடிகைமாக்கள். ஆ௨-உ.
கூத்தர்பெயர் :—கோடியர்பொருநர் - நாடகீயர் நிருத்தர், கண்ணுளர்வயிரியர் - விறலியர் நடரென், றெண்ணியபெயர்கள் - கூத்தர்க்கெய்தும். ஆ௨-அ.
புகழ்வோர்பெயர் :— மாகதர்வந்தியர்-சூதர்வேதாளியர், பூகதர்பப்புவர் - புகழ்வோர்பெயரே. ஆ௨-சு.
தேர்ப்பாகர்பெயர் :— சூதரும்வலவரும் - தேர்த்தொழிற்பாகர். ஆ௨-உ
யானைப்பாகர்பெயர் :—ஆதோரணர்வாதுவர் - யானைப்பாகர். ஆ௨-உ.
குதிரைவடிப்போர்பெயர் :—வாதுவர்பரிமா-வடிப்போருமாகும். ஆ௨-க.
இரப்போர்பெயர் :— இரவலரிரவோர் - பரிசிலாளர், யாசகரென்றிவை - இரப்போர்பெயரே. ஆ௨-சு.
வரையாதுகொடுப்போர்பெயர் :—வரையாதுகொடுப்போர் - வள்ளியோராகும். ஆ௨-க.
தானைத்தலைவர்பெயர் :— மானவர்வீரர் - மறவர்பொருநர், ஆளகலியர் - மண்டர்மள்ளர், ஏனைவாளுழவர் - ஏருளர்கூளியர், தானைத்தறுகண் - ணாளர்தம்பெயரே. ஆ௨-௰.
பகைஞர்பெயர் :— தரியலர்தெவ்வர் - மேவலர்செறுநர், கருதலர்சேரலர் - இரிஞரொன்னர், ஒல்லாரரிகள் - நள்ளாரமரார், ஒட்டார்புல்லார் - நேரார்நிகரார்,

ஒட்டலர்நேரலர் - இகலோரெதிர்ந்தோர், விட்டவர் மாற்றலர் - முனைந்தோரென்றுஞ், கொட்டியபிறவும் - பகைஞரென்றுரைப்பர். ஆடூ-உகூ.

மேவினர்பெயர் :— ஒல்லுநர்துன்னுநர் - ஒட்டுந ரொன்றுநர், நள்ளுநர்தொடர்ந்தோர் - மேவினர்நாமம். ஆடூ-சா.

உறவின்பெயர் :—ஒக்கல்சுற்றம் - உறவுகிளைகேள், நட்புமேவினர் - சார்ந்தவருற்றார், பந்தங்கூளி - கடும்பு குடும்பம், நந்தமர்சிறந்தோர் - நட்டோர்பரிசனம், அந்தமிலுறவென் - றறைந்தனர்புலவர். ஆடூ-யௌ.

ஆண்பாலின்பெயர் :—ஆடவர்மைந்தர் - காளைகுமரர், ஆடூஉமாந்தர்-மகன்புமான்மணாளன், கூடியவாண்பெயர் - ஆகக்கூறுவர். ஆடூ-கூ.

பெண்பாலின்பெயர் :—பேதையங்கனை - வனிதையிளம்பிடி, மாதுமடவாள்-மகடூஉமங்கை, மடந்தைகாரிகை - மானினிமஞ்சனி, மாயோளாட்டி - பாவைதெரிவை, தையலரிவை - பெதும்பைபிணாமகள், நையுநுண்ணிடை - நாரியென்றுங், கிருபதுமிரண்டும்-பெண்பாற்கெய்தும். ஆடூ-உஉ.

எழுவகைப்பருவப் பெண்பாலாவன :— பேதை பெதும்பை - மங்கைமடந்தை, அரிவைதெரிவை-பேரிளம்பெண்ணென, எழுவகைப்பருவப் - பெண்பாற்கெய்தும். ஆடூ-எ.

தலைவிபெயர் :—கோமாள்பெருமாட்டி - குரத்தியையை, ஆசாள்சாமி - இறைமையாட்டி, அடிகளத்தை - தலைவிபெயரே. ஆடூ-ய.

அருந்தவப்பெண்பெயர் :— பைம்மையுங்கௌந்தியும் - அருந்தவப்பெண்பெயர். ஆடூ-உ.

கலன்கழிமகளிர்பெயர் :— கைம்மையுங்கைனியும் - கலன்கழிமகளிர். ஆடூ-உ.

மலடிப்பெயர் :—மைம்மைவந்தி - மலடிப்பெயரே. ஆடூ-உ.

பொதுப்பெண்பெயர் :— பரத்தையுங்கணிகையும் - சூளையும் பொதுப்பெண். ஆடூ-ங.

நாடகக்கணிகைபெயர் :— நடியேகூத்தி - நாடகக்கணிகை. ஆடூ-உ.

பாண்மகள்பெயர் :—பாடினிவிறலி - பாட்டிமதங்கி, பாடன்மகடூஉ - பாண்மகளாகும். ஆடூ-ரு.

அணியிற்பண்பில்உவமையொடேற்றன :— வரைவிலாடூஉ - மகடூஉப்பலபெயர், வரலாற்றுமுறைமையின்- வந்தனகொளலே. ஆூ-உ.

உடனிகழ்வான்பெயர் :—எமியுடனிகழ்வான். ஆூ-க.

தனியின்பெயர் :—தமிதனியாகும். ஆூ-க.

குறிஞ்சிநிலமக்கள்பெயர் :—குறவர்கானவர் - குன்றவர்புனவர், இறவுளர்குறிஞ்சி - நிலமக்கட்பெயரே. ஆூ-ரு.

குறிஞ்சிநிலப்பெண்கள்பெயர்:—கொடிச்சியர்குறத்தியர் - குறிஞ்சிநிலப்பெண்பெயர். ஆூ-உ.

குறிஞ்சிக்கிறைவன்பெயர் :—கானகநாடன் - பொருப்பன்பொருநன், ஆனமலையன் - வெற்பன்சிலம்பன், சிறந்தநண்பனென் - றிவைமுதலாக், குறிஞ்சிக்கிறைவன் - பெயரெனக்கூறுவர். ஆூ-எ

பாலைநிலமக்கள்பெயர்:—மறவரெயினர் - பாலைநிலமக்கள். ஆூ-உ.

பாலைநிலப்பெண்கள்பெயர் :— மறத்தியரெயிற்றியர்-வன்கட்பிணாக்கள், அனைத்துமன்னிலத்-தரிவையர்பெயரே. ஆூ-ந.

பாலைக்கிறைவன்பெயர்:—மீளியுங்காளையும் - விடலையுமென்றிவை, பாலைக்கிறைவன் - பெயரெனக்கூறுவர். ஆூ-ந.

பாலைநிலமக்கட்கு மந்நிலத்தலைவர்க்கும் பொதுப்பெயர்:—கொலைஞரெயினர்-வனசரர்சவரர்,சிலவர்கானவர்-மாகுலவர்கிராதர், புளினர்மறவர் - வேடரென்றுங், கனையவர்பொதுப்பெயர் - ஆதல்வேண்டும். ஆூ-௰க.

முல்லைநிலமக்கள்பெயர் :—முல்லையாளர் - கோவலரிடையர், சொல்லியவண்டர் - பொதுவரான்வல்லோர், குடவர்பாலர் - தொறுவர்கோவிந்தர், அண்டர்கோபாலர் - ஆயரமுதர், ஒன்றியமுல்லை - நிலத்தவர்பெயரே. ஆூ-௰ச.

முல்லைநிலமகளிர் பெயர் : — ஆயச்சியர்தொறுவியர் - பொதுவியர்குடத்தியர், வாய்த்தவிடைச்சியர் - முல்லைநிலமகளிர். ஆூ-ரு.

முல்லைநிலத்தலைமகன் பெயர் : — அண்ணலேருன்றல் - குறும்பொறைநாடன், கானகநாடன் - முல்லைத்தலைமகன். ஆூ-ச.

நெய்தநிலமாக்கள்பெயர் :—பரதவர்நுளையர் - கடலர்வலையர், சலவர்திமிலர் - நெய்தநிலமாக்கள். ஆ-சு.

நெய்தநிலப்பெண்பெயர்:—நுளைச்சியர்பரத்தியர் - நுளைகடற்பிணுக்கள். ஆ-ங.

நெய்தநிலத்துப்பமைப்போர்பெயர் :—அளவரந்நிலத் - துப்பமைப்போர்பெயரே. ஆ-க.

நெய்தற்றலைமகன்பெயர் :—கொண்கன்றுறைவன் - மெல்லன்புலம்பன், தண்கடற்சேர்ப்பன் - நெய்தற்றலைமகன். ஆ-ரு.

மருதநிலமக்கள்பெயர் :— களமர்தொழுவர் - மள்ளர்கம்பளர், வினைஞருழவர் - கடைஞர்கிளைஞரென், றனையவைகழனிக் - கடைத்தவர்பெயரே. ஆ-அ.

மருதநிலப்பெண்பெயர் :—உழத்தியர்கடைச்சியர் - ஆற்றுக்காலாட்டியர், அடுத்தகழனிக்-கடைத்தமகளிர். ஆ-ங.

மருதநிலத்தலைவன்பெயர் :— ஊரன்மகிழ்நன்-கிழவனென்றிவை, சாலிமருதத்-தலைவன்பெயரே. ஆ-ங.

மருதநிலத்தலைவிபெயர் :— மனைவிகிழத்தி-இல்லாளில்லென், றனையவைமருதத்-தலைவிக்காகும். ஆ-ச.

முல்லைத்தலைவிபெயர் :—அனையவைமுல்லைத்-தலைவிக்குமாகும். ஆ-உ.

முன்றோன்றலின்பெயர் :—முன்னைமுன்னிளவல் - முன்றோன்றலாகும். ஆ-உ.

பின்றோன்றலின்பெயர் :— பின்னைபின்னிளவல் - பின்றோன்றலாகும். ஆ-உ.

சேட்டையின்பெயர் :—தௌவைமுன்பிறந்தாள் - சேட்டையாகும். ஆ-உ.

தங்கையின்பெயர் :—தங்கைபின்னை-எங்கையாகும். ஆ-உ.

வழித்தோன்றலின்பெயர் :—மருமான் பிறங்கடையும்-புல்வழித்தோன்றல். ஆ-உ.

இளம்பிள்ளைகள்பெயர் :— குழவியுமகவும் - குட்டனும்பிள்ளையும், மழவுஞ்சேயும் - இளமைக்குவகுத்தனர். ஆ-சு.

பிள்ளைப்பன்மையின் பெயர் : — மகாருஞ்சிறுருமவர் - பன்மைமவழக்கே. ஆ-ங.

தோழன்பெயர் :— நண்பன்பாங்கன்-எலுவன்கிளைஞன், தங்கியகேள்வன்-தோழன்பெயரே. ஆ-ரு.

தோழன்முன்னிலையின்பெயர் :—ஏடாவென்பது - தோழன்முன்னிலைப்பெயர். ஆ-க.

பாங்கியின்பெயர் :— ஓரைபொய்தல் - இகுளையாய்ந்த, தோழிசேடி - இணங்கியபாங்கி. ஆ-ரு.

தோழிமுன்னிலையின் பெயர் :— ஏலாவுமேடியும் - தோழிமுன்னிலைப்பெயர். ஆ-உ.

காதலனென்னும்பெயர் :—கணவனுந்தோழனும்-புதல்வனுங்காதலன். ஆ-ங.

• காதலியென்னும்பெயர் :— மனைவியுந்தோழியும் - புதல்வியுங்காதலி. ஆ-ங.

துணைவனென்னும் பெயர் : — தோழனுங் கணவனும்-துணைவனென்றுகும். ஆ-உ.

படையின்பெயர் :—தாரே தண்டம் - அனீகம்வருதினி, தானைபதாதி-பதாகினியூகம், வானியதிகம் - பாடிபகுதி, சேனை நிதானம்-திரள்படையென்ப. ஆ-௰௪.

கொடிப்படையின்பெயர்:—தார்நிரையாக்கம்-தூசிகொடிப்படை. ஆ-௪.

கடைக்கூழையின்பெயர் :— கூழைசூழ்தல்-கடைக்கூழையாகும். ஆ-உ.

படைவகுப்பின்பெயர்:—உண்டையுங்கையும்-ஒட்டும்யூகமும், வந்தவணியும்-படைவகுப்பின்பெயர். ஆ-ரு.

• மானிடர்பொதுப் பெயர் :— மக்கண் மண்ணவர் - மனிதர் நரரென், ஒருத்தமாக்கள் - மானிடர்பொதுப்பெயர். ஆ-ரு.

மக்களாண்பொதுப்பெயர் :— மாந்தர்மைந்தர்-மக்களாண்பொதுப்பெயர். ஆ-உ.

மக்கட்பரப்பின்பெயர் :—மன்பதை பைஞ்ஞீன்-மக்கட்பரப்பே-ஆ-உ.

மக்கட்கூட்டத்தின்பெயர் :—ஓரையும்பண்ணையும்-ஆயமுங்குழுவும்,கூறுபமாதோ-மக்கட்கூட்டம்.ஆ-௪.

உடலின்பெயர் :— சட்டகமெய்யே-தாவரம்பூட்சி, அங்கங்காயம் - புதையுறுப்பியாக்கை, ஆதாரந்தேகம்-உருவம்படிவமென், ஒருதினர்நூலோர் - உடலின்பெயரே. ஆ-௰ங.

பிணத்தின்பெயர் :— அழுகுகுணபம்-களேபரஞ்சவம், பிணமெனவைத்துப்-பேசினர்புலவர். ஆ-௪.

உடற்குறையின்பெயர் :— யூபங்கவந்தம் - மட்டையுடற்குறை. ஆ-ங.

பாதத்தின்பெயர் :—சரண்பதங்காலடி-கழருள் பாதம். ஆஉ-கா. [டே. ஆஉ-ரு.
கரட்டின்பெயர் :—பரடேகாலடி - மிசைத்திரள்கர
கணைக்காலின்பெயர் :—சங்கங்கணைக்கால். ஆஉ-க.
முழங்காலின்பெயர் :—சானுமுழந்தாள். ஆஉ-க.
தொடைப்பற்றின்பெயர் :— வாமமூரு-கவான்றொடைப்பற்றே. ஆஉ-ரு.
குறங்கின்பெயர் :— ஊருவுங்கவானும் - சோகமுங்குறங்கே. ஆஉ-ரு. [குல். ஆஉ-உ.
அல்குலின்பெயர் :—கடிதடநிதம்பம் - வடிவகலல்
இடையின்பெயர் :— நுசுப்புமருங்குல் - நுண்ணிடையாகும். ஆஉ-உ.
மருங்குற்பக்கத்தின்பெயர் :—ஒக்கன்மருங்குல்-பக்கமாகும். ஆஉ-க.
வயிற்றின்பெயர் :—குக்கிதுத்தம்-உதரஞ்சடரமென், றொத்தமடிவயின்-அகடொன்றியவயிற்றே. ஆஉ-சு.
ஆண்குறியின் பெயர் :— இலிங்கமுங் கோசமும் - ஆண்குறியாகும். ஆஉ-உ.
பெண்குறியின்பெயர் :—யோனியும்பகமும்-பெண்குறியாகும். ஆஉ-உ.
கொப்பூழியின்பெயர் :—உந்திபோகில் - இலஞ்சியிதலை, வந்தநாபி - கொப்பூழாகும். ஆஉ-ரு.
மார்பின்பெயர் :—அகலம்[illegible]நிறம் - உரமாகமார்பே. ஆஉ-ரு.
முலையின்பெயர் :—கொங்கைசுவர்க்கம் - குயந்தனநகிலம், தங்கியகுருக்க - ணம்மம்பயோதரம், இங்கிவை மாதர் - முலையெனவிளம்புவர். ஆஉ-அ.
முலைக்கண்ணின்பெயர் :—சூசுகஞ்சிலீமுகம்-முலைக்கண்சொல்லும். ஆஉ-உ.
தேமலின்பெயர் :—சுணங்குதேமல்-பொறியுத்திதிதலை * நுணங்குதிதனி-வசந்திகைதுத்தி. ஆஉ-கூ.
கைத்தலத்தின்பெயர் :—அத்தம்பாணி - கரந்தோள்கைத்தலம். ஆஉ-சு.
அகங்கையின்பெயர் :— அங்கைகுடங்கை - அகங்கையாகும். ஆஉ-உ.

---

* நுணங்கு என்பது தொடைச்சுவைப் பயன்கருதிய அடைமொழி யென்றறியாது சிலர் மயங்கிப் பரியாயமெனக்கொண்டனர். மற்றுமவ ரிவ்வாறுகொள்வன சிலவுறிக.

விரலின்பெயர் :—அங்குலிவிரலாம். ஆ௳-க.
நகத்தின்பெயர் :—உகிர் நகமாகும். ஆ௳-க.
தோளின்பெயர் :—புயமுமொய்ப்பும்-வாகுவுந்தோளே. ஆ௳-௩.
முதுகின்பெயர் :— வெரினும்வென்னும் - புறமுமுதுகே. ஆ௳-௩.
தோண்மேலின்பெயர் :— சுவலுஞ்செகிலும்- நிகலமுந்தோண்மேல். ஆ௳-௩.
கழுத்தின்பெயர் :— கண்டமுங்கிரீவமும்-களனுமிடறும், கந்தரமைந்தும்-கழுத்தெனக்கழறுவர். ஆ௳-௫.
பிடரின்பெயர் :—கயிலேசிறுபுரம்-எருத்தஞ் சுவல்பிடர். ஆ௳-ச. [கே. ஆ௳-௩.
பிறகின்பெயர் :—பிறமும்பிறக்கும் - அபரமும்பிற
முகத்தின் பெயர் :—வதனமானனம் - வத்திரமுகமே. ஆ௳-௩.
உதட்டின்பெயர் :—அதரம்பாலிகை-இதழேயோட்டம், முத்தமுதடென-மொழிந்தனர்புலவர். ஆ௳-௫.
பல்லின்பெயர் :— தந்தமுந்தசனமும் - தட்டமும்பல்லாம். ஆ௳-௩. [ரும். ஆ௳-௩.
எயிற்றின்பெயர் :—முறுவலு நகையும்-மூரலுமெயி
நகுதலின்பெயர் :—நகுதற்குமவையே-நாமமாகும். ஆ௳-உ.
அண்ணத்தின்பெயர் :—அணரியண்ணம். ஆ௳-க.
கீழ்வாய்ப்புறத்தின் பெயர் : — அணல்கீழ்வாய்ப்புறம். ஆ௳-க.
உண்ணாவின்பெயர் :—அண்ணமுண்ணா - ஆகலுமுரித்தே. ஆ௳-க. [வர். ஆ௳-உ.
நாவின்பெயர் :—தாலந்தாலு - நாவெனச்சாற்று
மூக்கின்பெயர் :—துண்டமுநாசியும் - கிராணமுமூக்கே. ஆ௳-௩. [கதுப்பே. ஆ௳-ச.
கதுப்பின்பெயர் :— கபோலங்கவுளும் - கொடிறு
கண்ணின்பெயர் :—நாட்டநயனம் - நேத்திரம் விலோசனம், நோக்கந்தாரை - அம்பகம்பார்வை, அக்கம்விழிக்கோ - கண்ணுகும்மே. ஆ௳-௰க.
நெற்றியின்பெயர் :—மத்தகமிலாடம் - முண்டகநுதல்குளம், நெற்றிபாலம்-என நிகழ்த்தினரே. ஆ௳-எ.
புருவத்தின்பெயர் :— புரூரம்பிருகுடி-நுதலேபுருவம். ஆ௳-௩.

காதின்பெயர் :— கன்னமுஞ்செவியும்-காதின்பெயரே. ஆ-உ.
தலையின்பெயர் :—சிரமேசென்னி - உச்சிமுடி நவிரம், கம்மேயுவ்வி - சேகரந்தலையாம். ஆ-அ.
ஆண்மயிரின்பெயர் :— குஞ்சி நவிருளை-குடுமிதொங்கல், பங்கிபித்தை - ஓரிசிகையென், றிங்கிவையெல்லாம் - ஆண்மயிரென்ப. ஆ-கூ.
பெண்மயிரின்பெயர் :—கோதைநெடுமை-கூந்தலைம்பால், ஓதிகூழை-பரிசாரங்கதுப்பு, கேசமளகம்-குழல்குரல்சுரியல், பேசின்மராட்டம் - பெண்மயிரென்ப. ஆ-௰சு.
மைந்தர்மயிரின்பெயர் :—கதுப்பேகேசம் - சுரியன்மைந்தர், மயிர்க்குமொருவழி - வருதற்குமுரிய.ஆ-ரு.
பிறமயிரின்பெயர் :— ஓரிபங்கி - உளையேயுரோமம், கேசமராட்டம் - பிறமயிராகும். ஆ-சா.
மயிர்ப்பரப்பின்பெயர் :— சிரோந்தமுரோமமும்-செறிமயிர்ப்பரப்பே. ஆ-உ.
மயிர்க்குழற்சியின்பெயர் :—கொந்தமளகம்-விலோதமயிர்க்குழற்சி. ஆ-ரு.
மயிர்முடியின்பெயர் :—பின்னகம்பந்தம்-முடிமுச்சிகொண்டை, மன்னுசிகழிகை - குழல்சுடிகைமௌலி, இன்னவைமயிர்முடி-ஆகுமென்ப. ஆ-கூ.
சடையின்பெயர் :—பின்னல்சடிலம் - கோடீரம்வேணி, மன்னுமயிர்ச்சடை - எனவகுத்தனரே. ஆ-சு.
உறுப்பின் பெயர் :— அவயவங்காத்திரம் - அங்கமுறுப்பே, சினையென்றுரைத்தலும்-ஒருவழிச்சிவணும். ஆ-சு.　　[சந்தாம். ஆ-ரு.
சந்தின்பெயர் :—கந்துங்கொளுத்தும் - கமூத்துஞ்
இறையின்பெயர் :— மெய்த்தகுமிறையே-பிறங்கெனப்படுமே. ஆ-க.
உட்றற்றழும்பின்பெயர் :— செதுகையங்கிதம்-செறியுடற்றழும்பே. ஆ-உ.
கழலையின்பெயர் :—அரலைகழலை-யாகுமென்ப. ஆ-க.
நரம்பின்பெயர் :—நாடியுஞ்சிரையும் - நரம்பினமம். ஆ-உ.
எலும்பின்பெயர் :—என்பத்தியங்கம் - எலும்பாகும்மே. ஆ-ரு.　　[லமாகும். ஆ-க.
தலையோட்டின்பெயர் :— வெண்டலையோடே-கபா

கழியுடன்முழுவெலும்பின்பெயர் :— கழியுடன்மு
முவென்பு - கங்காளமாகும். ஆூ-க.

குடுமியின்பெயர் :—சிமிசிகைசிமிலி - சிக்கங்குடுமி.
ஆூ-௪. [மம். ஆூ-௩.

உச்சியின் பெயர் :— நவிரஞ்சுடிகை - சுழியுச்சிநா

இந்திரியத்தின் பெயர் :— கரணம்பொறிவாயில் -
கந்தமிந்திரியம். ஆூ-௪.

அன்றியும் சுவைபொளியூறோசை - நாற்றமறியும்,
கருவிநாக்கண் - மெய்செவிமூக்கே. ஆூ-௫.

சீவன் பெயர் :— சீவனுயிராதன் - சேதனன்புற்க
லன், அணுவொடுபசுவிய - மானனுன்மா. ஆூ-அ.

கற்ற நாவினன் கேட்ட செவியினன்
முற்ற வுணர்ந்த மூதறி வாளன்
நாகரிக நாட்டத் தாரிய னருவந்தை
தேறுங் காட்சிச் சேந்தன் திவாகரத்

திரண்டாவது
மக்கட்பெயர்த்தொகுதி
முற்றிற்று.

மூன்றுவது

## விலங்கின்பெயர்த்தொகுதி.

மூலபாடம்.

சிங்கத்தின்பெயர் :—ஆளிமடங்கல் - அரிகண்டீர
வம், கேசரிமிருக - பதிவயப்போத்து, சீயம்வயப்புலி -
பஞ்சானனம்வயமா, மேவியசிங்கம் - எனவிளம்பின
ரே. ஆூ-௰க.

புலியின்பெயர்:—கொடுவரியுழுவை - குயவரிவேங்
கை, வல்லியம்வயமா-சார்த்தூலம்வியாக்கிரம், புல்புண்
டரீகம் - வயவரியென்றிவை, பல்பொறிப்புலியின்-பெ
யரெனப்பகர்வர். ஆூ-௰க.

யானையாளிப்பெயர் :— அறுகுபூட்கை-ஆளியென
வே, பெறுமேயானை - ஆளிப்பெயரே. ஆூ-௩.

யானையின்பெயர்:—தும்பிகடிவை-புகர்முகந்தோல்
கரி, உம்பல்வயமா - பகடுநால்வாய், கரிணிகுஞ்சரம் -
கயமேகளபம், மருண்மாதந்தி - மாதங்கமொருத்தல்,

களிறுசிந்துரம் - கறையடியெறும்பி, வழுவைவாரணம்-வேழம்வல்விலங்கு, நாகமதகயம் - அத்தியிபங்கும்பி, போதகமுவாவே - தூங்கன்மாதிரம், மறமலிகைம்மா - ஆம்பல்கோட்டுமா, பிறவும்புழைக்கையோ - டியானைப் பெயரே. ஆ-௩அ. [றியானை. ஆ-௨.

களிற்றியானையின்பெயர் :— மதகரிதந்தி-வன்களிற்

பெண்யானையின்பெயர் :—கரேணுபிடிபெண் - யானைப்பெயரே. ஆ-௨.

யானைக்கன்றின்பெயர் :—போதகந்துடியடி - கயமுனிகன்றும். ஆ-௩.

பிறந்தநிலப்பெயரையடுத்தி யானைபெறும்பெயராவன :— கிரிசரம்வனசரம் - நதிசரமடுத்து, பெறுமேயானை - பிறந்தநிலப்பெயர். ஆ-௩.

குதிரையின்பெயர் :— துரகதந்துரங்கம்-வாசிபாய்மா, குரகதங்கிள்ளை-கந்தருவங்கற்கி, மண்டிலந்துரகம்-மாவேயிவுளி, ஒண்டிறலுன்னி-உத்தரிகோணம், குந்தங்கொய்யுளை-கொக்குப்பரியம், அச்சுவம்வயமா-புரவியரியோ, டித்திறமத்திரி-குதிரையினியற்பெயர். ஆ-௨௫.

கநவட்டம்பாடலம் - கோரங்கந்துகம், எனவும்பண்படுத் - தெண்ணப்படுமே. ஆ-௪.

இப்பெயர்களுள் கனவட்டமென்பது - வழுதியூர்மா, பாடலமென்பது - சேரனூர்மா, கோரமென்பது - சோழனூர்மா.

குறுநிலமன்னர்குதிரையின்பெயர் :—கந்துகங்குறுநில-மன்னரூர்மா. ஆ-க.

குதிரைக்குளம்பின்பெயர் :—குரமேயவற்றின்-குளம்பாகும்மே. ஆ-க.

குதிரைமார்கத்தின்பெயர் :— மாதிகமவற்றின்-மார்க்கமாகும். ஆ-க.

பசுவின்பொதுப்பெயர் :—ஆவும்பெற்றமும் - பசுவுமானும், கோவுங்குரால்தேனும் - பசுச்சாதிப் பொதுப்பெயர். ஆ-௬.

பெண்பசுவின்பெயர் :—சுரபிதேனு-சுரைகபிலைசேதா, குரமேகோமளம் - பெண்பான்மேன. ஆ-எ.

ஆண்பசுவின்பெயர் :— பாறல்புல்லம் - பாண்டில்பசுமுரி, ஏறுபூணி-இருலேபெற்றம், எருதுசேவிடை-இடபமென்றிவை, கருதிற்போத்தின் - பெயரெனக்கறுதுவர். ஆ-௰௩.

எருமையெனும்பெயர் :—எருமைச்சாதி-இருபாற் குமுரித்தே. ஆ-௨.

எருமைப்பொதுப்பெயர்:—மேதிகாரான்-மகிடங்கவ ரியென், ரூேதியநான்கும் * எருமைப்பெயரே. ஆ-௫.

எருமையாணின்பெயர் :—பகடுங்கடாவும் - அவற் றின்போத்தாம். ஆ-௨.

மலட்டெருமையின்பெயர் :—மைம்மையென்பது- மலட்டின்கிளவி. ஆ-க. [கும். ஆ-௨.

காட்டாவின்பெயர் :—ஆமாகவயம் - காட்டாவா

ஆட்டின்பொதுப்பெயர் :—மறியுதண்மோத்தை - மேழகம்வருடை, கொறியேதகர்கடா-கொச்சைமேடம், துருவைசெம்மறி - பள்ளைவெள்ளை, புருவைவற்காலி மை - ஆடெனப்புகல்வர். ஆ-௰௭.

துருவாட்டின்பெயர் :—துருவைகொறிமை - துரு வாடாகும். ஆ-௩.

வெள்ளாட்டின்பெயர் :—வெள்ளைவெற்காலிமை - கொச்சைவெள்ளாடே. ஆ-௪.

துருவாடேற்றின்பெயர் :—ஏழகந்தகரே - மேழகங் கடாவென, ஆகுந்துருவாட்-டேற்றின்பெயரே. ஆ-௪.

வெள்ளாட்டேற்றின்பெயர் :— உதளேசெச்சை - மோத்தைவெள்ளாட்டின், நிகரிலேறென - நிகழ்த்த வும்படுமே. ஆ-௩

துருவாடாது : துருவைசெம்மறி - ஆடென்ச் சொல்லுவர். ஆ-௨.

ஆட்டுக்குட்டியின்பெயர் :—குட்டன்சோரன்-மணங்கு மறிபறழ், குட்டிப்பெயரெனக்-கூறினர்புலவர். ஆ-௫.

வரையாட்டின்பெயர் :—வருடைசரபம் - வரையா டாகும். ஆ-௨.

கவரிமாவின்பெயர் :—மானமாபட்டம் - எகினமன் னம், ஊனமில்கவரி - மாவெனவுரைப்பர். ஆ-௪.

கழுதையின்பெயர் :—கத்தபங்கோகு - வேசரிகழு தை, அத்திரிகரம்வா - லேபமுமாகும். ஆ-௬.

பன்றியின்பெயர் :—இருளிகனலி-ஏனஞ்சூகரம், கரு மாமோழல்-வல்லுளிகேழல், வன்றிறல்வராகம் - எறுழி கோலம், ஒன்றியகளிறிவை-பன்றியாகும். ஆ-௰௨.

---

* முன்சூத்திரத்தில் எருமையென்ப திருபாற்கு முரித்தென் றமையால், இச்சூத்திரத்தில் எருமையென்ப திருபாற் பொதுவா யிற்று.

மருட்டுப்பன்றியின் பெயர் :— கிருட்டிபோத்து - கோலங்கிரிகிரி, மருட்டுப்பன்றிக்கு - மாட்சிப்பெயரே. ஆ-௩.

முட்பன்றியின்பெயர் :—எய்யேமுண்மா - சல்லிய முட்பன்றி. ஆ-௩.

மானின்பெயர் :—சாரங்கநவ்வி-மறிபிணையரிணம், உழையெனச்சொல்லிய - ஆறுமானின்பெயர். ஆ-௬.

மானேற்றின்பெயர் :—இரலையுங்கலையும் - அவற்றினேறும். ஆ-௨.

புல்வாயின் பெயர் :—இரலைபுல்வாய்-ஆகலுமுரித்தே. ஆ-க.

பூனையின்பெயர் :—விலாளம்பவனம் - வெருகுவிடருகம், பூசைபாக்கன் - மார்ச்சாலம்பூனை. ஆ-எ.

ஆண்பூனையின் பெயர் :— விலாளமுங்கடுவனும் - வெருகுமாண்பெயர். ஆ-௩.

கரடியின்பெயர் :—உளியமெண்கு - பல்லங்கரடி, குடாவடியென்றும் - கூறவும்படுமே. ஆ-௫.

நரியின்பெயர் :— இகல்ன்சம்பு - கோமாயுநரியே. ஆ-௩.

ஓரியின்பெயர் :—இகலேரி-என்றுமாகும்.ஆ-க.

கீரியின்பெயர் :—நகுலங்காத்திரம் - தீர்வைகீரி.ஆ-௩.

முயலின்பெயர் :—சசமுயலென்று-சாற்றப்படுமே. ஆ-க.

கத்தூரியின்பெயர் :—மறுவநாவி - மான்மதந்துருக்கம், நரந்தநானம் - மறுவல்கத்தூரி. ஆ-எ.

குரங்கின்பெயர் :—அரியேகோகுலம் - கடுவன்கோடரம், கவியேயூகம் - மந்திமர்க்கடம், நிரந்தரம்வானரம் - என்றிவைபத்தும், குரங்கின்பெயரெனக் - கூறல்வேண்டும். ஆ-ய.

பெண்குரங்கின் பெயர் :— மந்தியூகம் - மற்றதன் பெண்பெயர். ஆ-௨.

கருங்குரங்கின்பெயர் :—காருகம்யூகம் - கருங்குரங்காகும். ஆ-௨. [வே. ஆ-௩.]

முசுவின்பெயர் : — ஓரியுங்கலையும் - கடுவனுமுசு

நாயின்பெயர் :— ஏகினன்சூரன் - முடுவல்சுணங்கன், ஞமலிகுக்கன் - ஞாளிசுவாநாய். ஆ-அ.

பெண்ணாயின்பெயர் :—முடுவல்பெண்ணாய் - ஆகலுமுரித்தே. ஆ-க.

உடும்பின்பெயர் :—உடும்பேமுசலிகை - கோதாவா கும். ஆ-உ.

அணிலின் பெயர் :— வெளிலேயணிலாம் - என விளம்பினரே. ஆ-க.

ஓந்தியின்பெயர் :—அண்டசமோதி - சரடம்சாயா தனம், ஓமான்தண்டு - ஓந்தியென்றிசைப்பர். ஆ-ரு.

பச்சோந்தியின் பெயர் :—பச்சோந்திகாம - ரூபிப் பெயரே. ஆ-க.

மூஞ்சூறின்பெயர் :—சுண்டன்சூரன்-சுசுந்தரிமூஞ் சூறு. ஆ-௩.

எலியின்பெயர் :—சிகரியிரும்பன் - எலியெனப்ப டுமே. ஆ-உ.

காரெலியின்பெயர் :—கருப்பைகாரெலி. ஆ-க.

பெருச்சாளியின்பெயர் :— ஆகுமூடிகம் - ஆம்பெ ருச்சாளி. ஆ-உ.

ஒருசார்விலங்கேற்றின்பெயர் :—களிறுமாவும்-ஒரு த்தலுமேறும், போத்தும்பகடும் - கலையுமும்பலும், கடு வனுஞ்சேவலும் - தகருமேட்டையும், ஒருசார்விலங் கின் - எற்றிற்குரிய. ஆ-கஉ.

இவற்றுள்களிறெனும் பெயர் : — வேழமுங் கேழ லும் - விதந்துகளிறென்ப.

மாவெனும்பெயர் :— குதிரையும் யானையும்-பன் றியுமாவே.

ஒருத்தலெனும் பெயர் : — புலியுழைப் புல்வாய் - மரையேயெருமை, கவரியானை - பன்றிகரடி, உரியவா கும் - ஒருத்தற்பெயர்க்கே.

ஏறெனும்பெயர் :— கவரிபன்றி - மரையுழைபுல் வாய், எருமையெருதுசுற - வேறெனப்படுமே, துருவா டேறு - என்னவும்படுமே.

போத்தெனும்பெயர் :— புலியேமரையே-புல்வாய் பெற்றம், எருமையென்றிவற்றின் - ஏறுபோத்தே, பூ ஞையுநீர்வாழ்-சாதியும்போத்தே, குதிரையானும்-போ த்தெனப்படுமே, வெருகுபோத்து-என்னவும்படுமே.

பகடெனும்பெயர் :—யானைபெற்றம் - எருமையேற் றை, தானேபகட்டென்-றுரைக்கத்தகுமே.

கலையெனும்பெயர் :—மானேமுசுவே-கடுவொடுவ ருமே.

உம்பலெனும்பெயர் :—யானையும்யாட்டின்-ஏற்றை யுமும்பல்.

கடுவனெனும்பெயர் :-குரங்கும்வெருகும்-கடுவனென்ப.

சேவலெனும்பெயர் :—கோழியுமன்னமும்-சேவலாகும்.

தகரெனும்பெயர் :— சுருகளிருளி-துருவாட்டேற் றை, தகரெனு நாமம் - தக்கதென்ப.

ஏட்டையெனும்பெயர் :—எருமைப்பகடையும்-வெ ருகினேற்றையும், வருபவேட்டை-எனவகுத்தனரே.

அன்றியும், சேவெனும்பெயர் :—எருமைபுல்வாய்- ஏறுசேவே.

ஒருசார்விலங்கின் பெண்பெயர் :—பெட்டையும்பி ணையும்-பிணாவுமானும், நாகுமூடும் - கடமையும்பாட்டி யும், மந்தியுமொருசார்-விலங்கின்பெண்பெயர். ஆ௳-௯.

இவற்றுள் பெட்டையெனும் பெயர் : — ஒட்டகங் குதிரை - கழுதைமரையிவை, பெட்டையெனும்பெ யர்க் - கெண்ணப்பெறுமே.

பிணையெனும்பெயர் :—புலியுழைபுல்வாய் - கவரி யென்றிவை, பிணையெனும்பெயரிற் - பேசப்படுமே, யானைகுதிரை - ஒட்டகங்கழுதை, ஆனபிணையென் - றறைதற்குரிய.

பிணாவெனும்பெயர் :—பன்றிபுல்வாய் - நாயென மூன்றும், பின்றுக்காட்சி -•பிணாவொடுவருமே.

ஆனெனும்பெயர் :—எருமையும்பசுவும் - மரையு மென்ன, வருபவைமூன்றும் - ஆனெனப்படுமே.

நாகெனும்பெயர் :— மரையும்பெற்றமும்-எருமை யுநாகே, நீர்வாழ்சாதி - பெண்ணின நாகே.

மூடு-கடமை-எனும் பெயர் : — மூடுங்கடமையும் - ஆடல்பெறூஉ.

பாட்டியெனும்பெயர் :—பாட்டியென்ப - பன்றியு நாயும், நரியிற்பாட்டி - நடைபெற்றியலும், ஒருசார் பிலங்கின் - பெண்பெயர்க்குரைப்பர்.

மந்தியெனும்பெயர் :—குரங்குமூகமும் - முசுவுமெ ன்றிவை, வருங்காற்பெண்பெயர் - மந்தியென்றாகும்.

பெண்ணெனும் பெயர் : — பெண்பாலெவையும் - பெண்ணெனப்படுமே. அன்றியும் பெண்பாலெவை யும் - பிணாவென்பவொருசார். [ணெனப்படுமே.]

ஆணெனும்பெயர் :— ஆண்பாலெவையும் - ஆ

போதகமெனும் பெயர் :— அரிமாயானை - புலியே யனைய, இனையவேற்றை - போதகமென்ப.

விலங்கின்பிள்ளைப்பெறும்பெயர் :—குருளையுங்குட் டியும்-பறழும்பார்ப்பும், பிள்ளையுமறியும் - கன்றுங்குழ வியும், பெறுமேவிலங்கின் - பிள்ளைப்பெயரே.

இவற்றுள்குருளை-பறழ்-என்னும்பெயர் :— புலியே பன்றி - முயனாய்நரியிவை, குருளைபறழெனக் - கூறினர் புலவர்.

பிள்ளையென்னும்பெயர் :— பிள்ளைப்பெயரே-நாய ன்றிப்பெறுமே.

மறியெனும்பெயர் :—ஆடுமான்குதிரை - அழுங்கு மறியென்ப.

கன்றெனும்பெயர் :—கடமையும்யானையும்-குதிரை யுங்கழுதையும், மரையுமெருமையும் - மானுமொட்டக மும், கவரியுங்கராமும்-கன்றெனப்படுமே.

குழவியெனும்பெயர் :—யானையுங்கடமையும் - எரு மையுமரையும், ஆனுங்குழவிப் - பெயரோடடையும்.

பறழ்-குட்டி-எனும்பெயர் :—வெருகேபன்றி-அணி லெனமூன்றும், பறழேகுட்டிப் - பாலவாகும்.

குருளை-கன்று-குழவி-குருளை-எனும்பெயர் :—குருளை யுங்கன்றும் - ஆனிற்கொளலும், குழவியுங்குருளையும் - முசுவிற்பெறலும், ஒருசார்விலங்கின்-பிள்ளைப்பெயரே.

பிள்ளை-பார்ப்பு-எனும்பெயர் : — பிள்ளையும்பார்ப் பும் - தவழ்சாதிபெறுமே.

ஏற்றை-குருளை-எனும்பெயர் :—நந்திஏனேற்றையும்-அரவிற்குருளையும்,வந்துழியொருசார்-வழங்குதற்குரிய.

குரங்குமுதலிய கோடுவாழ்விலங்கிற்குரிய பிள்ளைப் பெயர் :—குழவியுமகவும் - குட்டியும்பிள்ளையும், பறழும் பார்ப்பும் - பகரப்படுமே.

கோடுவாழ்விலங்காவன : — குரங்கு முதலாயின - கோடுவாழ்விலங்கே.

விலங்கின்பொதுப்பெயர் :—மாவுமானும் - விலங் கின்பொதுப்பெயர்.

காலியினம்-அல்லது - பசுக்கூட்டத்தின்பெயர் :— காலியினநிரை - தொழுவுமாகும். ஆ-உ.

விலங்கின்கூட்டத்தின்பெயர் :- கணமுஞ்சாலமும்-வியூகமும்குலமும், விருந்தமுங்கூட்டமும்-எனப்பெயர் பெறுமே, வந்துழிபெறுதற் - குரியவென்ப. ஆ-௩.

வாலுறுப்பின்பெயர் :— வாலதிதோகை-கூலமிலா ங்கூலம், வாலுறுப்பாக - மதித்தனர்புலவர். ஆ-௪.

வாற்கீழிடத்தின்பெயர் :— வெருகமென்பது-வாற் கீழிடமாம். ஆ-க.

யானைச்செவியின்பெயர் :—யானைச்செவியே - கன்னம்தாலம். ஆகு-உ.
யானைமுதுகின் பெயர் :— மஞ்சுமுதுகென - வகுத்தனர்புலவர். ஆகு-க.
யானைவாலின்பெயர் :— வாலதிதால - வட்டமாகும். ஆகு-உ.
யானைமதத்தின்பெயர் :—கடமுந்தானமும் - மதமாகும்மே. ஆகு-உ.
மதம்பாய்கவுட்சுவட்டின்பெயர் :—கரடமதம்பாய்-கவுட்சுவடாகும். ஆகு-க.
மும்மதமாவன :— கன்னமதங்கோசமதம்-கைம்மதமூவகையே. ஆகு-௩.
தாளின்பெயர் :— காத்திரமபரம் - தாளாகும்மே. ஆகு-உ.
குதிரைவாயினும் யானைக்கையினுமுமிழ்நீரின்பெயர் :—இவுளிவாயினும் - யானைக்கையினும், உமிழ்நீர்விலாழியென் - றுரைக்கத்தகுமே. ஆகு-க.
எருத்தின்முரிப்பின் பெயர் :— இமிலேயேற்றின் - திரண்முரிப்பாகும். ஆகு-க.
முலைமேற்றிரள்சுரப்புவடிவின் பெயர் : — செருத்தன்முலைமேல்-திரள்சுரப்புவடிவே. ஆகு-க.
முலையின்பெயர் :—சுரையென் பெயரே - முலையிற்காகும். ஆகு-க.
கொம்பின்பெயர் :—கோடுமருப்பும் - உலவையுங்கொம்பே. ஆகு-௩.
தோலின்பெயர் :—வடகங்கிருத்திமம் - சருமந்துவக்கு, பச்சைபுறணி-உரிபோர்வையதள், ஒத்ததுருத்தியொடு - பத்துந்தோலே. ஆகு-ம.
ஊனின்பெயர் :— தசைதடிவிடக்கு-துாவள்ளூரம், பிசிதம்புலால்புண் - புலவுமூனே. ஆகு-கூ.
ஆவினிறைச்சியின்பெயர் :—ஆவினிறைச்சி - வள்ளூரமாகும். ஆகு-க.
உதிரத்தின்பெயர் :—எருவைசெந்நீர் - இரத்தம்புண்ணீர், குருதிசோரி - நெய்த்தோர்சுடுவல, கறைசோணிதமென-ஈரைங்கிளவியும், உதிரமென்ப-உணர்ந்திசினோரே. ஆகு-ம.
நிணத்தின்பெயர் : — நெய்யுமிழுதும் - விழுக்குநிணப்பெயர். ஆகு-௩.

முடையின்பெயர் :— பூதியூழ்த்தல் - தசைபுலவு முடையே. ஆ-ச.

சூலின்பெயர் : — பீளுஞ்சினையும் - கருவுஞ்சூலே. ஆ-௩.

பாம்பின்பெயர் :— அரவேநாகம் - அங்கதம்புயங்கம், உரகம்பாந்தள்-அரியகிபோகி, பன்னகங்கட்செவி-பணிவியாளம்பாம்பே. ஆ-௰௩.

பெரும்பாம்பின்பெயர் :—பாந்தண்மாசுணம்-பெரும்பாம்பாகும். ஆ-உ.

பாம்பின்படத்தின்பெயர் :—பையும்பணமும்-பாம்பின்படமே. ஆ-உ.

பாம்பின்படப்பொறியின்பெயர் :—உத்தியுந்துத்தியும் - உரகபடப்பொறி. ஆ-உ.

நஞ்சின்பெயர்:—கடுவேயாலம்-காளகூடம், விடங்காளங்கரளம் - காரிநஞ்சே. ஆ-எ.

கருடன்பெயர் :— வைனதேயனுவணன் - பன்னகவைரி, கலுழன்புள்ளரசு - கருடனாகும். ஆ-ரு.

கழுகின்பெயர் :— எருவையுமுவணப்-புள்ளுங்கழுகே. ஆ-௨.

சரபத்தின்பெயர்:—சிம்புள்வர்ருண்டகம்-சம்பரந்துரோணம், எண்காற்சரபத்-தின்பெயராகும். ஆ-ச.

பருந்தின்பெயர் :— பாறுஞ்சேனமும்-கங்கமும்பருந்தே. ஆ-௩.

சாதகப்புள்ளின்பெயர் :—வானம்பாடி-சாதகப்புள்ளே. ஆ-க.

கேகயப்புள்ளின்பெயர் :—அசுணமாவே - கேகயப்புள்ளே. ஆ-க.

குயிலின்பெயர் :—கோகிலங்களகண்டம் - பிகங்குயிலாகும். ஆ-௩.

செம்போத்தின் பெயர் : — குக்கில்செம்போத்து - சகோரமுமதற்கே. ஆ-உ.

கோழியின்பெயர் :— குக்குடஞ்சேவல் - வாரணங்கோழி. ஆ-௩.

கூகையின்பெயர் :— கூகைகுடிஞை-குராலேகோட்டான். ஆ-௩.

மயிலின்பெயர் :— கேகயஞ்சிகண்டி-சிகியேமயூரம், தோகைகேதாரம் - மஞ்ஞைபிணிமுகம், ஆயினவெல்லாம் - மயிலெனவறைவர். ஆ-அ.

மயிற்பீலியின் பெயர் :— தொங்கலுங் கலாபமும் - இறகுங்கூழையும், இங்கிவைமயிலின்-பீலியென்ப, *தங்கியவொருவழி - கூந்தலெனத்தகும். ஆ-௫.

இறகினடிமுள்ளின்பெயர் : — முருந்தேயிறகின் - முதன்முள்ளாகும். ஆ-௧.

மயிற்சிகையின்பெயர் :— அனந்தமயூரம் - விரிசிகையாகும். ஆ-௧.

காக்கையின்பெயர் :— காரிவாயசம் - கொடிகரும்பிள்ளை, தேறினன்கும் - காக்கையாகும். ஆ-௪.

வலியன்பெயர் :—வலியன்பாரத்து - வாசன்வயவன். ஆ-௨.

கரிக்குருவியின்பெயர் :—கஞ்சனம்வலியன்-கயவாய்கரிக்குரீஇ. ஆ-௩.

கிளியின்பெயர் :—வன்னிதத்தை-சுகமரிசுவாகதம், கிள்ளையவந்திகை - கீரங்கிளியே. ஆ-அ.

கருங்கிளியின்பெயர் :— கீரங்கிள்ளை - கருங்கிளியாகும். ஆ-௨.

புறாவின்பெயர் :—தூதுணங்களரவம் - பாராவதத்தொடு, சீர்சால்கபோதமும்-புறவெனப்படுமே. ஆ-௪.

மாடப்புறாவின்பெயர் :— காளபதமே - மாடப்புறவாம். ஆ-௧.

கரும்புறாவின்பெயர் :—கபோதம்பாராவதம்-கரும்புறவாகும். ஆ-௨.

கவுதாரியின்பெயர் :—இதலேபூழான் - சிவல்கவுதாரி. ஆ-௩.

அன்றிலின்பெயர் :—கிரவுஞ்சமன்றில். ஆ-௧.

ஊர்க்குருவியின்பெயர் :—சகடமூர்க்குருவி. ஆ-௧.

சிவலின்பெயர் :—இதலேபகண்டை - சிவலாகும்மே. ஆ-௨.

பகண்டையின்பெயர் :—சில்லைபகண்டை - ஆமெனச்செப்புவர். ஆ-௧.

நாகணவாய்ப்புள்ளின்பெயர் : — பூவைசாரிகை - நாகணவாய்ப்புள். ஆ-௨.

காடையின்பெயர் :— குறும்பூழ்காடையின் - பெயரெனக்கூறுவர். ஆ-௧.

மீனெறிசிறுபறவையின்பெயர் :—சிரலேசிச்சிலி - மீனெறிசிறுபறவை. ஆ-௨.

பறவைப்பொதுப்பெயர் :—புள்ளும்போகில் - சகுணம்பிணிமுகம், ஒள்ளியபறவைக் - கெல்லாம்பொதுப் பெயர், பதங்கமுங்ககடும்-விகங்கமுமாகும். ஆ-எ.

அன்னத்தின்பெய :—ஓதிமமஞ்சம் - எகினமன்னம், நீதியினுன்னமும் - அவ்வினப்பறவை. ஆ-ச.

அன்னச்சிறகின்பெயர் :—தூவியன்னச் - சிறகெனச்சொல்லுவர். ஆ-க.

சக்கரவாகத்தின்பெயர் :—நேமிப்புள்ளும் - சகோரமுமென்றிவை, ஆகுஞ்சக்கர-வாகப்பெயரே. ஆ-உ.

பெருங்குருகின்பெயர் :— யானையுண்குருகு-பெருங்குருகாகும். ஆ-க.

கொய்யடிநாரையின்பெயர் :—குருகுவெண்டானம்-கொய்யடிநாரை. ஆ-உ.

பெருநாரையின் பெயர் : — பெருநாரைபோதா - பிதாவுமாகும். ஆ-உ. [சம்-ஆ-க.

வெண்ணாரையின் பெயர் : — வெண்ணாரைசாரஸ்

கருநாரையின்பெயர் :—கருநாரைசிகரி. ஆ-க.

நிலாமுகியின்பெயர் :— சகோரம்பேராந்தை-தண்ணிலாமுகியே. ஆ-உ.

நீர்க்காக்கையின்பெயர்:—காரண்டநீர்காக்கை. ஆ-க.

சம்பங்கோழியின்பெயர் : — கம்புள்சம்பங்கோழி. ஆ-க.

கொக்கின்பெயர் :—குரண்டமும்பகமும் - கொக்கின்பெயரே. ஆ-உ.

வண்டின்பெயர் :— அளியேகேசரம் - அறுபதங்கழுதொடு, வரியேசுரும்பு - கீதன்சூதம், அரிமாபிரமரம்-அராபதம்வரிக்கடை, பிரசந்தும்பி-மதுகரமிஞிறு, விரவியதேனி - வண்டெனப்படுமே. ஆ-மக.

ஆண்வண்டின்பெயர் :—சுரும்பவற்றுணென-சொல்லவும்படுமே. ஆ-க.

தும்பியின்பெயர் :—மதுகரந்தும்பி- ஆகவும்வைப்பர். ஆ-க.

இந்திரகோபத்தின்பெயர் :—முனியன்மூதா - இந்திரகோபம். ஆ-உ.

விட்டிற்பறவையின் பெயர் : — பதங்கமுஞ் சலபமும் - விட்டிற்பறவை. ஆ-உ.

சிள்வீட்டின்பெயர் :— சிதடிநெடிசில்லிகை - சில்வீடாகும். ஆ-ங.

நுளம்பின் பெயர் :— அளுலமுளுல்வலு - நொள்ளலுநுளம்பே. ஆ-௪.

கொசுகின்பெயர் :— மசகங்கொசுகென-வகுத்தனர் புலவர். ஆ-க.

துருஞ்சிலின்பெயர் :— துருஞ்சிலாலாலம். ஆ-க.

வாவலின்பெயர் :— அஞ்சலிகைவாவல். ஆ-க.

சேவலெனும்பெயர் :— மயிலொழித்தெல்லாப்-பறவையினாண்பெயர், பயிலுஞ்சேவல்-என்மொழிப்பால.

போத்தெனும்பெயர் :— மயிலேயெழாலொடு-போத்தெனப்படுமே. ஆ-௩.

புள்ளின் பெண்பெயர் : — பெட்டைபெடைபேடை - புள்ளின் பெண்பெயர். ஆ-௩.

அளகெனும்பெயர் :— கோழிகூகை - பெண்பெயரல்லன, ஆயுங்காலை - அளகெனவறைவர்.

பார்ப்பு பிள்ளையெனும்பெயர் :— பார்ப்பும்பிள்ளையும் - பறப்பவற்றிளமை.

பறவைமுட்டையின் பெயர் :— அண்டமுஞ்சினையும் - அவற்றின் முட்டை. ஆ-௨.

வாயலகின்பெயர் :— துண்டமுமூக்கும் - வாயலகாகும். ஆ-௨.

இறகின்பெயர் :— பறையுந்தூவியும்-சிறையும்பிச்சமும், குரல்கூழையென்றிவை-இரகின்பெயரே. ஆ-௬.

புள்ளொலிக் கூட்டத்தின் பெயர் : — துழனிபுள்ளொலி - கூட்டமாகும். ஆ-க.

புள்ளீட்டத்தின் பெயர் :— தொழுதிபுள்ளீட்டம். ஆ-க.

முதலையின்பெயர் :— கிஞ்சுமாரமும்-இடங்கருங்காரமும், முசலியும்வன்மீனும்-முதலையாகும். ஆ-டு.

ஆண்முதலையின் பெயர் : — கராமவற்றாணென - கருதல்வேண்டும். ஆ-க.

சுறாமீனின்பெயர் :— மகரஞ்சுறாமீன் - ஆகவைப்பர். ஆ-க.

இறான்மீனின்பெயர் :— இறவேயிறான்மீன். ஆ-க.

கெளிற்றுமீனின் பெயர் :— கெடிறுகெளிற்றுமீன். ஆ-க.

மீனின்பொதுப்பெயர் :— மயிலைமீனம் - மற்சமீன் பொதுப்பெயர். ஆ-௩.

பெருமீனின்பெயர் :— யானைமீன்றிமி-பெருமீனுகும். ஆ-உ.

யானைமீனை விழுங்குமீனின் பெயர் : — யானையை விழிங்குமீன் - திமிங்கிலமென்ப. ஆ-க.

திமிங்கிலத்தைவிழுங்கு மீனின்பெயர் :— அம்மீனைவிழுங்குமீன் திமிங்கிலகிலமே. ஆ-க.

மலங்கின்பெயர் :—ஏனைமலங்கு - நாறையென்றுகும். ஆ-௬.

சங்கின்பெயர் :— நந்துபணிலம் - வளைநாகுசுரிமுகம், கம்புகோடு - சங்கெனப்படுமே. ஆ-எ.

சிறந்தசங்கின்பெயர் :—சங்கிற்சிறந்தது - சாதிவலம்புரி, பொங்கியகொக்கரை-என்றும்புகல்வர். ஆ-உ.

வலம்புரியிற்சிறந்த சங்கின்பெயர் :—அங்கதிற்சிறந்தது - சலஞ்சலமென்ப. ஆ-க.

சலஞ்சலத்திற்சிறந்த சங்கின்பெயர் : — அதிலுஞ்சிறந்தது - பாஞ்சசன்னியம். ஆ-க.

நத்தையின்பெயர் : — கருநந்துநாகு - சுரிமுகங்கூனத்தை. ஆ-ச.

கிளிஞ்சிலின்பெயர் :—இறலெருந்தேரல் - கிளிஞ்சிலென்ப. ஆ-௬.

சிப்பியின்பெயர் :—இப்பிசுத்தி-சிப்பியாகும். ஆ-உ.

பல்லியின் பெயர் : — பள்ளிகௌளி - கோகிலம்பல்லி. ஆ-௬.

தவளையின்பெயர் :—அரிமரைநீகம் - தேரைமண்டூகம், வருபவையைந்தும் - தவளைப்பெயரே. ஆ-௫.

ஆமையின்பெயர் :—கச்சபங்கூர்மம்-கமடமாமை. ஆ-௬.

பெண்ணாமையின்பெயர் :— துளிபெண்ணாமை. [ஆ-க.]

அட்டையின்பெயர் :—சளுகமட்டை. ஆ-க.

நண்டின்பெயர் :—அலவனள்ளி-குளிர்ஞெண்டார்மதி, களவனென்றிவை - கர்க்கடகப்பெயரே. ஆ-௯.

ஆணண்டின்பெயர் :—அலவனுணென்-றறைதற்குமுரித்தே. ஆ-க.

உளுவின்பெயர் :—உளுவுசுவாவே. ஆ-க.

எறும்பின்பெயர் :—உறவியெறும்பே. ஆ-க.

தேளின்பெயர் :—தெறுக்கால்பறப்பன் - தேளேவிருச்சிகம், அலமென்பெயரும் - தேளின்மேற்றே. ஆ-௫.

சிலந்தியின்பெயர் :—சிலம்பியுமூனூதையும்-சிலந்தியென்றாகும். ஆ-உ.

நாகரவண்டின் பெயர் :—நாகரவண்டின்-நாமநெரள்ளை. ஆ-க.

கறையான்பெயர் :—சிதலையாழல் - செல்லேகறையான். ஆ-ரு.

புழுவின்பெயர் :— கிருமியுங்கீடமும்-புழுவின்பெயரே. ஆ-உ.

கோற்றேனின்பெயர் :—கோற்றேன்பிரசம். ஆ-க.

தேன்கூட்டின்பெயர் :—இறுறேன்கூடே. ஆ-க.

கோற்புழுவின்பெயர் :—கோற்புழுவுலண்டு-கீடமுமாகும். ஆ-உ.

காதலி கையிற் போதிப் பெருந்தவன்
தெவ்வடு கால வைவே லெழிலி
அவ்வை பாடிய வம்பற் கிழவன்
றென்றூர்ச் சேந்தன் றெரிசொற் றிவாகரத்துள்

மூன்றாவது
விலங்கின்பெயர்த்தொகுதி
முற்றிற்று.

நான்காவது

# மரப்பெயர்த்தொகுதி.

மூலபாடம்.

தருவின்வருக்கமாவன :—சந்தானம்தேவ - தாருகற்பகம், மந்தாரம்பாரி - சாதமென்ப. ஆ-ரு.

சந்தனத்தின்பெயர் :— சாந்தமலயம் - சந்திரதிலகம், ஏய்ந்தவாரம் - சந்திவைசந்தனம். ஆ-ரு.

அகிலின்பெயர் :—அகருவும்பூழிலும் - அகிலெனவறைவர், பகரிற்காக - துண்டமுமாகும். ஆ-ரு.

ஆச்சாமரத்தின்பெயர் :— சாலமராமரம் - ஆவேயாச்சா. ஆ-ரு.

மகிழ்மரத்தின்பெயர் :—வகுளமிலஞ்சி - மகிழ்மரமென்ப. ஆ-உ.

தேக்கின்பெயர் :—சாதிதேக்கே. ஆ-க.

சண்பகத்தின்பெயர் :—சம்பகஞ்சண்பகம். ஆ-க.

ஆலின்பெயர் :—பூதவங்கான்மரம் - வடமரந்தொன்மரம், ஓதியபழுமரம் - கோளியாலே. ஆூ-௬.
அரசின்பெயர் :— கணவம்பணேயே - மராமரம் போதி, அச்சுவத்தம் - பிப்பிலமரசே. ஆூ-௬.
அசோகின் பெயர் :— பிண்டிசெயலே - காகோளியசோகு. ஆூ-௩.
இரத்தியின்பெயர் :—இரத்தியில்லி. ஆூ-௧.
மருதின்பெயர் :—அருச்சுனமருதே. ஆூ-௧.
கொன்றையின்பெயர் :— இதழிகடுக்கையா-ரக்குவதங்கொன்றை. ஆூ-௩.
குராவின்பெயர் :— கோட்டங்குடிலம் - குராவெனக்கூறுவர். ஆூ-௨.
நாவலின்பெயர் :—சம்புநாவல். ஆூ-௧.
வேம்பின்பெயர் :— நிம்பம்வேம்பே. ஆூ-௧.
அத்தியின்பெயர் :— அதவுதும்பரம் - அத்தியாகும். ஆூ-௨.
புளிமாவின்பெயர் :— ஆம்பிரஞ்சூதம்-மாழைபுளிமா. ஆூ-௩.
தேமாவின்பெயர் :—சூதஞ்சேதாரம் - ஆம்பிரங்கொக்கு; தேர்மாமரத்திவை - தேமாவாகும். ஆூ-௪.
இருப்பையின்பெயர் :— மதூகமிருப்பை - எனவகுத்தனரே. ஆூ-௧.
செருந்தியின்பெயர் :—பஞ்சரஞ்செங்கோடு-செருந்தியாகும். ஆூ-௨.
கோங்கின்பெயர் :—ஞாழல்துருமோற்பலம் - கன்னிகாரம், பவனிபிணரிவ்-வைந்துங்கோங்கே. ஆூ-௫.
பச்சிலைமரத்தின்பெயர் :—பசும்பிடிதமாலம் - பச்சிலையாகும். ஆூ-௨.
வன்னியின்பெயர் :— கலிகஞ்சமியே - குலிசம்வன்னி. ஆூ-௩.
கருங்காலியின்பெயர் :—கதிரங்கருங்காலி. ஆூ-௧.
எட்டியின்பெயர் :—காஞ்சிரையெட்டி. ஆூ-௧.
செங்கருங்காலியின்பெயர் :—சிறுபாரோடம்-செங்கருங்காலி. ஆூ-௧.
புன்னையின்பெயர் :—புன்னைபுன்னாகம். ஆூ-௧.
சுரபுன்னையின்பெயர் :—வழைசுரபுன்னை. ஆூ-௧.
புனமுருங்கையின்பெயர் :—புன்கென்கிளவி - புனமுருங்கைப்பெயர். ஆூ-௧.

ஆத்தியின்பெயர் :— ஆரேதாதகி - ஆத்தியாகும். ஆ-உ.

மஞ்சாடிமரத்தின்பெயர் :—திலகமஞ்சாடி. ஆ-க.

இலவமரத்தின்பெயர் :—இலவம்பொங்கர். ஆ-க.

நெல்லியின்பெயர் :—ஆமலகநெல்லி. ஆ-க.

கடுமரத்தின்பெயர் :—அரிதகிகடுமரம். ஆ-க.

புளியின்பெயர் :—சிந்தஞ்சிந்தூரம் - சிறந்தவாம் பிரம், வந்ததிந்திருணி - எகினம்புளியே. ஆ-ரு.

குருந்தின்பெயர் :—குருந்துகுந்தம். ஆ-க.

வெட்பாலையின்பெயர் :—குடசம்வெட்பாலை. ஆ-க.

குமிழின்பெயர் :— கூம்பல் கடம்பல் - குமிழெனக் கூறுவர். ஆ-உ.

குடைவேலின்பெயர் :—உடைகுடைவேலே. ஆ-க.

பாதிரிமரத்தின்பெயர் :—பாடலம்பாதிரி. ஆ-க.

முருக்கின்பெயர் :— கவிரேகிஞ்சுகம்-முருக்கெனக் கருதுவர். ஆ-உ.

தேற்றின்பெயர் :—இல்லந்தேறும். ஆ-க.

விளாவின்பெயர் :—வெள்ளில்விளாவாம். ஆ-க.

வில்வத்தின்பெயர் :— கூவிளம்வில்வம்-மாலூரங் கூவிளை. ஆ-ங.

வேங்கையின்பெயர் :—திமிசுந்திமிலும் - கணியும் வேங்கை. ஆ-ங.

கடம்பின்பெயர் :—கதம்பம்விசாலம் - நீபங்கடம் பே. ஆ-ங.

வெண்கடம்பின் பெயர் :—மராவெண் கடம்பின் பெயராகும்மே. ஆ-க.

பலாவின்பெயர் :— பனசம்வருக்கை-பலாவெனப் பகர்வர். ஆ-உ.

ஈரப்பலாவின்பெயர் :— ஆசினியீரப் - பலாவா கும்மே. ஆ-க.

அழிஞ்சிலின்பெயர் :—அழிஞ்சில்சேமாம் - அங் கோலமாகும். ஆ-உ.

மாதுளையின்பெயர் :— மாதுளங்கழுமுள்-மாதுளை யாகும். ஆ-உ

தாதுமாதுளையின்பெயர் :—தாடிமந்தாது - மாது ளையென்ப. ஆ-க.

எலுமிச்சையின்பெயர் :—சம்பீரமுருக்கு-எலுமிச சையாகும். ஆ-உ.

நாரத்தையின்பெயர் :— நரந்தநாரத்தை - ஆகு மென்ப. ஆ-க.

குருக்கத்தியின்பெயர் :—குருகேமாதவி - குருக்கத்தியாகும். ஆ-உ.

அகத்தியின்பெயர் :— அச்சங்காரம்-முநிபேயக [த்தி. ஆ-ங.]

எருக்கின்பெயர் :—அருக்கமெருக்கே. ஆ-க.

களாவின்பெயர் :—களவுகளாவே. ஆ-க.

இலந்தையின்பெயர் :—இரத்திவதரி - இலந்தையாகும். ஆ-உ.

காயாவின்பெயர் :—காசைபூவை - காயாவாகும். [ஆ-உ.]

ஞாழலின்பெயர் : — நறவன்சுள்ளி - நாகஞாழல். ஆ-ங.

புன்கின்பெயர் :—நத்தமாலம் - புன்கெனநவில் [வர். ஆ-க.]

குங்குமமரத்தின்பெயர் :—மரவந்துருக்கம் - குங்குமமாகும். ஆ-உ.

சதுரக்கள்ளியின்பெயர் :—வச்சிராங்கம் - கண்டீர்வத்தொடு, வச்சிரஞ்சதுரக்-கள்ளிக்குவைப்பர். ஆ-ங.

அனிச்சத்தின்பெயர் :— நறவஞ்சுள்ளி-அருப்பலமனிச்சம். ஆ-உ.

தணக்கின்பெயர் :—நுணவுதணக்கே. ஆ-க.

ஓடையின்பெயர் :—உலவைபோடை. ஆ-க.

ஒடுவின்பெயர் :—ஒடுவேயுடுப்பை. ஆ-க.

உழிஞ்சிலின்பெயர் :—உன்னமுழிஞ்சில். ஆ-க.

சேமரத்தின்பெயர் :—எகினஞ்சேமரம் - ஆண்மாமென்ப. ஆ-ங.

கமுகின்பெயர் :-கந்திபூகம்-பூக்கங்கமுகே. ஆ-ங.

பனையின்பெயர்:—பெண்ணைதாலம்-புற்றளிபோந்தையென், றெண்ணியநாமம் - பனையென விசைப்பர். ஆ-ச.

இளம்பனையின்பெயர் : — போந்தையிளம்பனை - ஆகவும்புகல்வர். ஆ-க.

தெங்கின்பெயர் :— நாளிகேரம் - இலாங்கலிபேடகம், தாழைகேளி-தெங்கெனச்சாற்றுவர். ஆ-உ.

மூங்கிலின்பெயர் :—கம்பந்திகிரிகண் - வெதிர்ந்ந்தி, தூம்புமூளைவெதிர் - விண்டுவேரல், முந்துழ்தட்டை - கீசகம்வேய்பணை, அம்புவரைவேணு - கழைபமைபோங்கல், பாதிரிகிளையரி-பாண்டிலுள்பட, வருபவைமூங்கில் - எனவகுத்தனரே. ஆ-உரு.

கரும்பின்பெயர் :—கழைவேழமிக்கு-கன்னல்கரும் பே. ஆூ-௪.

தாழையின்பெயர் :—கண்டல்கேதகை-மடிகைதை முடங்கல், வண்டமர்தாழை-எனவகுத்தனரே. ஆூ-௫.

வாழையின்பெயர் :—கதலியுமரம்பையும் - வாழை யாகும். ஆூ-௨.

பூவாதுகாய்க்குமரத்தின்பெயர் :—கோளிபூவாது- காய்க்குங்குளிர்மரம். ஆூ-க.

வண்டுணுமலர்மரமாவன :— சண்பகமும்வேங்கை யும் - வண்டுணுமலர்மரம். ஆூ-௨.

மரப்பொதுப்பெயர் :—பாதவந்தாரு - தருவேதா வரம், ஒதியவிருக்கம்-மரப்பொதுப்பெயரே. ஆூ-௫.

மரச்செறிவின்பெயர் :—பொதும்பர் மரச்செறிவு. ஆூ-க.

மரப்பொதும்பின் பெயர் : — கோடரம் பொதும் பே. ஆூ-க.

நந்தனவனத்தின்பெயர் :—தேம்பொழின்மரக்கா- தோட்ட ந்துடவை, உய்யானஞ்சோலை - வனமுத்தியா னம், தண்டலைகானம் - அடவிபதினொன்றும், ஈண்டிய நந்தன - வனமெனவிசைப்பர். ஆூ-கக.

காட்டின்பெயர் :—கடம்வியல்பழுவம்-கட்சிகுறும் பொறை, கடறுகாந்தாரம் - அடவிகான்வனம், ககனங் காண்டம - கட்டமுளரி, சுரமத்தமரிரணியம் - கானங்க ளரி, சிரணிபொச்சை-விடர்தில்லங்காடே. ஆூ-உ௩.

இலையுதிர்ந்தமுதுகாட்டின்பெயர் :—முதையலிலை யுதிர்வு-பிறங்கியமுதுகாடே. ஆூ-க.

கரிகாட்டின்பெயர் :—பொச்சையுஞ்சுரமும் - பொ திகரிகாடே. ஆூ-௨.

காவற்காட்டின்பெயர் :—அரணிளைகாவல் - காடெ னவறைவர். ஆூ-௨.

ஒருமரமொருபெயர் உரைக்குங்கிளவி :—வரைவி லென்மனார் - வள்ளியோரே. ஆூ-௨.

தூற்றின்பெயர் :—இறும்பேமிடைதூறு. ஆூ-க.

இண்டையின்பெயர் :—இண்டையீங்கை. ஆூ-க.

முள்ளுடை மூலத்தின்பெயர் :— முண்டகமுள்ளு டை - மூலமென்ப. ஆூ-க.

முள்ளின்பெயர் :—கண்டகங்கடுவே - முள்ளெனக் கருதுவர். ஆூ-௨.

மரக்காழின்பெயர் :—ஆசினிகரியே - அரியேவை ரம், சேகமரத்தின் - காழெனச்செப்புவர். ஆூ-ரு.

பிரம்பின்பெயர் :—வேத்திரஞ்சாதி - சூரல்பிரம் மே. ஆூ-ந.

ஆண்மரத்தின்பெயர் :—அகக்காழ்வன்மரம்-ஆண் மரமாகும், அவைகருங்காலி-முதலாயுள்ளன. ஆூ-உ.

பெண்மரத்தின்பெயர் :—புறக்காழ்வன்புல்-பெண் மரமாகும். அவைதாம், தெரிக்கிற்பனைகமுகு - தெங்கு மூங்கில். ஆூ-உ.

அலிமரத்தின்பெயர்:—முருக்குநார்பால் - மரமுத லாயின, வேறலிமரமெனும்-விகற்பம்பெறுமே. ஆூ-க.

சிறிதூற்றின்பெயர்:— அறலேபதுக்கை - சிறுதூ று கும். ஆூ-உ.

மருந்தெனும்பெயர் :—புல்லுமரனும் - புதலும் பூடும், வல்லியும் பெயர்க்கொடை - மருந்தெனப்படு மே. ஆூ-ரு.

அத்திரசத்திரந்தைத்த புண்ணுற்றுமருந்தின் பெ யர் :—தைத்தவத்திரம் - சத்திரந்தணிக்கும், மெய்த்த நன்மருந்தே - சல்லியகரணி. ஆூ-க.

துண்டிபட்டவுறுப்பினைப் பொருத்துமருந்தின்பெ யர் :—துண்டமான - உறுப்புத்துணிவினை, சந்திசெய் மருந்தே - சந்தானகரணி. ஆூ-க.

விரணந்தழும்புகளை நீக்குமருந்தின்பெயர் :—வி ரணமுந்தழும்பும் - நீக்கிமெய்யினை, தகைமைசெய்மருந் தே - சமனியகரணி. ஆூ-க.

உயிர்தருமருந்தின் பெயர் :— உயிர்தருமருந்தே - மிருதசஞ்சீவனி. ஆூ-க.

மரமுதலிளமையின்பெயர் :—பிள்ளைகுழவி-கன்று போத்தென, கொள்பமரமுத - லிளமைப்பெயர்க்கொ டை. ஆூ-ந.

அவ்விளமைப்பெயர்க்குரியவல்லன :—நெல்லும் புல்லும் - நேராவப்பெயர். ஆூ-உ.

மரக்கொம்பின்பெயர் :— பொங்கர்கம்பு - சாகையு றுப்பு, கோடுபிறக்கம் - சினைபணையுலவை, கோடரம் விடபம் - தருமரக்கொம்பே. ஆூ-௰உ.

தழையின்பெயர் :—உலவைதழையே. ஆூ-க.

இளங்கொம்பின் பெயர் : — வளாரிளங் கொம்பே. ஆூ-க.

இலையின்பெயர் :—பத்திரமோலை - பாசடைதண்ணடை, சாகந்தமாலம் - தழைபாசிலையடை, பேசிய பன்னம் - இலையெனப்படுமே. ஆ-௰.

தளிரின்பெயர் :— வல்லரிகுழைமுறி - மஞ்சரிகிசலயம், பல்லவமலங்கல் - கிளைதளிராகும். ஆ-அ.

தளிர்த்தலின் பெயர் : — இலிர்த்தலுஞ் சிலிர்த்தலும்-குழைத்தலுந் தளிர்த்தல். ஆ-௩.

அடிவெண்குருத்தின்பெயர் :—முருந்தேமுதலில்-செறிவெண்குருத்தே. ஆ-௧.

கொத்தின்பெயர்:—தொத்துமிணரும்-துணருமஞ்சரியும், கொத்தின்றொடர்ச்சியை-கூறுங்கிளவி.ஆ-௪

பசுங்காயின்பெயர் :—பசுங்காய்நீயளி. ஆ-௧.

பழத்தின்பெயர் :—பலங்கனிபழமே. ஆ-௨.

பாலினுட்படுகுருத்தின்பெயர் :— பயினேபாலின்-உட்படுகுருத்தே. ஆ-௧.

வெட்டுக்குருத்தின்பெயர் :— பிசினேயாணி-வெட்டுக்குருத்தே. ஆ-௨.

நந்தியாவர்த்தத்தின்பெயர் :—வலம்புரிநந்தியா - வர்த்தமாகும். ஆ-௧.

கஞ்சாவின்பெயர்:—கஞ்சங்குல்லை - கஞ்சாவாகும். ஆ-௨.

நொச்சியின்பெயர் :— சிந்துவாரம் - நீர்க்குண்டி நொச்சி. ஆ-௨.

காந்தளின்பெயர்:—காந்தடோன்றி-பற்றைகோடலென், ருய்ந்தநான்கும்-காந்தளாகும். ஆ-௪.

செங்காந்தளின்பெயர் :— காந்தடோன்றி-பற்றை செங்காந்தள். ஆ-௩.

கோடையென்னும்பெயர் :—வெண்காந்தள் செங்காந்தள் - என்றிருவிகற்பமும், கொண்டேவழங்கும் - கோடைப்பெயரே. ஆ-௪.

ஊமத்தையின்பெயர் :— உன்மத்தமத்தம் - ஊமத்தைப்பெயரே. ஆ-௨.

ஆமணக்கின்பெயர் :—ஏரண்டமாமணக்கு.ஆ-௧.

குறிஞ்சியின்பெயர்:—கோரண்டங்குறிஞ்சி.ஆ-௧.

அலரியின்பெயர் :— கரவீரமலரி-கணவீரமுமாம். ஆ-௨.

வெட்சியின்பெயர் :—செச்சைசிந்தூரம் - வெட்சியாகும். ஆ-௨.

சிறுபீளையின் பெயர் : — உழிஞைசிறுபீளை - எனவுரைத்தனரே. ஆூ-க.

பருத்தியின்பெயர் :—பரியேபன்னல் - காற்பாசம் பருந்தி. ஆூ-ரு. [லம்மே. ஆூ-உ.

திப்பிலியின்பெயர் :—திப்பிலிகாமன் - சிறுமூ

துளசியின்பெயர் :—துளசிகுல்லை - துளபம்வனந்துழாய். ஆூ-ச.

மிளகின்பெயர் :—மரீசிகறியிவை-மிளகெனவைப்பர். ஆூ-உ.

மஞ்சளின்பெயர் :—மஞ்சளரிசனம். ஆூ-க.

கருணையின்பெயர் :—கந்தங்கருணை. ஆூ-க.

சிறுகிழங்கின்பெயர் :—சுரசஞ்சிறுகிழங் - காகுமென்ப. ஆூ-க.

வாசந்தருபலபண்டத்தின்பெயர் :—தகரந்தக்கோலம்-கோட்டஞ்சாதிக்கா, இலவங்கமாஞ்சி-கச்சோலமேலமென, பகரும்வாசந்தரு-பண்டப்பெயரே. ஆூ-அ.

வெட்டிவேரின்பெயர் :—மூலகந்தம்-பீதகத்தோடு, வேரியிருவேலி - வெட்டிவேரென்ப. ஆூ-ச.

இலாமிச்சையின்பெயர் :—வேர்வாசமிலா-மிச்சைமேலாகும். ஆூ-க. [யரே. ஆூ-உ.

கடுகின்பெயர் :—கடிப்பகையையவி - கடுகின்பெ

கொத்துமலியின்பெயர் :— உருளரிசிகொத்து-மலியெனவுரைப்பர். ஆூ-க.

கழங்கு - அல்லது - கழற்காயின்பெயர் :—கழங்கேமூழல். ஆூ-க. [ம். ஆூ-க.

கழங்கின் கொடியின் பெயர் : — கொடிக்கழலாகு

கிலுகிலுப்பையின் பெயர் :—பகன்றை கிலுகிலுப்பை. ஆூ-க.

சேம்பின்பெயர் :—சகுடஞ்சேம்பே. ஆூ-க.

சிறுகீரையின்பெயர் :—சில்லிசாகினி - சிறுகீரைப்பெயரே. ஆூ-உ.

கொத்தான்பெயர் :— நந்தைகொத்தான்-நரந்தையுமாகும். ஆூ-உ.

பாற்சொற்றியின்பெயர் :— பாயசம்பாற்சொற்றி - பனசமுமாகும். ஆூ-உ.

குன்றியின்பெயர் :— குருவிந்தங்குஞ்சம் - குன்றிப்பெயரே. ஆூ-உ.

கொளிஞ்சியின்பெயர் :—கோளிகொளிஞ்சி. ஆூ-க.

நாயுரீஇயின்பெயர் :—கரமஞ்சரி-நாயுரீஇயென்ப. ஆடூ-க. [ன்ப. ஆடூ-உ.]

இஞ்சியின்பெயர் :—இஞ்சிநறுமருப் - பல்லமெ

கற்றாழையின்பெயர் :— குமரிகற்றாழை-ஆகக்கூறுவர். ஆடூ-க. [வழுதலை. ஆடூ-ங.]

வழுதலையின்பெயர் :—வங்கம்பிருகதி-வழுதுணை

மலைச்சாரல்விளை நெல்லின்பெயர் :— ஐவனமலைச்சாரல்-விளைநெல்லாகும். ஆடூ-க.

குளநெல்லின்பெயர் :—நீவாரங்குளநெல். ஆடூ-க.

செய்ந்நெல்லின்பெயர் :-சாலிசெய்ந்நெல்லே. ஆடூ-க.

செந்நெல்லின்பெயர் :—செந்நெல்விரீகி - செஞ்சாலியாகும். ஆடூ-உ.

போரின்பெயர் :—சும்மைகுவால்போர். ஆடூ-உ.

அரிசியின்பெயர் :— அரியேதண்டுலம்-அரிசியாகும். ஆடூ-உ. [யரிசி. ஆடூ-உ.]

வேயரிசியின்பெயர் :—இயவைதோரை-எனும்வே

சோளத்தின்பெயர் :— சொன்னலுமிறுங்கும்-சோளமாகும். ஆடூ-உ.

கருந்தினையின்பெயர் :—இறடிகருந்தினை. ஆடூ-க.

செந்தினையின்பெயர் :—ஏனல்செந்தினை. ஆடூ-க.

உழுந்தின்பெயர் :—மாடமுழுந்தே. ஆடூ-க.

துவரையின்பெயர் :—ஆடகந்துவரை. ஆடூ-க.

காராமணியின்பெயர் :— கூலமிதைகா-ராமணிக்கூற்றும். ஆடூ-உ.

கடலையின்பெயர் :—மஞ்சூரங்கடலை. ஆடூ-க.

பயற்றின்பெயர் :—முற்கம்பயறே. ஆடூ-க. [ஆடூ-ங.]

கம்பின்பெயர் :-கவலைபுல்செந்தினை-கம்பாகும்மே.

கோதுமையின்பெயர் :—கோதிகோதுமை. ஆடூ-க.

கொள்ளின்பெயர் : — குலுத்தங்காணம் - கொள்ளாகும்மே. ஆடூ-உ.

வரகின்பெயர் :—வரகுகோத்திரவம். ஆடூ-உ.

அவரைதுவரை முதலாயினவற்றின் பெயர் :—முதிரையவரை - துவரைமுதலாயின. ஆடூ-க.

விதையின்பெயர் :— பரல்காழ்பீசம் - வித்துவிதையாம். ஆடூ-ச.

எள்ளின் பெயர் : — எண்ணுந்திலமும் - எள்ளெனவிசைப்பர். ஆடூ-உ. [யாகும்மே. ஆடூ-க.]

எள்ளிளங்காயின்பெயர் :—கவ்வையெள்ளிளம்-கா

கதிரின்பெயர் :—குரல்கதிராகும். ஆ-க.
பதரின்பெயர் :—பதடிபதரே. ஆ-க.
திணைத்தாளின்பெயர் :—இருவியுமருவியும்-திணைத்தாளாகும். ஆ-உ.
வைக்கோலின்பெயர் :—வையேபலாலம் - வைக்கோலாகும், வழுதுமொரோவழி-வையும்பெறுமே. ஆ-ரு.
தூற்றுநெற்கூட்டின்பெயர் : —பொங்கழிதூற்று-நெற்கூடாகும். ஆ-உ.
[ம். ஆ-உ.
பயிரின்பெயர் :—பயிரேபசும்புல் - பைங்கூழாகு
புற்பிறப்பின்பெயர் :— புதல்புல்லென்பன-புற்பிறப்பாகும். ஆ-உ.
[கும். ஆ-உ.
பச்சறுகின்பெயர் :—பதமுந்தூர்வையும்-பச்சறுகா
இளம்புல்லின்பெயர் :—சட்டமிளம்புல். ஆ-க.
தெங்கிளர்பாளையின்பெயர் :—நாரிநெய்யரி - தெங்கிளர்ப்பாளை. ஆ-உ.
[ழிப. ஆ-உ.
கிழங்கின்பெயர் :— மூலங்கந்தம் - கிழங்கெனமொ
கோற்கொடியின்பெயர் : — இலதையெனும்பெயர் - கோற்கொடிக்கெய்தும். ஆ-க.
கொடிப்பிறப்பின்பெயர் :— கோற்கொடியென்ப-கொடியின்பிறப்பே. ஆ-க.
கற்பகஞ்சேர்கொடியின்பெயர் :—கற்பகஞ்சேர்கொடி-காமவல்லி. ஆ-க.
கொடியின்பெயர் :— வல்லியுநாழிலும் - வள்ளியுங்கொடியே. ஆ-ரு.
மல்லிகையின்பெயர் :—மல்லிகைமௌவல். ஆ-க.
இருவாட்சியின்பெயர் :—மயிலையிருவாட்சி. ஆ-க.
முல்லையின்பெயர் :—மௌவலுந்தளவமும்-கற்புமுல்லை. ஆ-ரு.
சிறுசண்பகத்தின்பெயர் :—பித்திகைசாதி-கருமுகைமாலதி, ஒத்தசிறுசண் - பகமாகும்மே. ஆ-ச.
மௌவலின்பெயர் :—மாலதிமௌவல் ஆகுமெனப. ஆ-க.
மருக்கொழுந்தின்பெயர் :— தமனகமருக்கொழுந்து. ஆ-க.
[ன்ப. ஆ-உ.
கூதாளியின்பெயர் :— துடிகூதாளம் - கூதாளியெ
கொவ்வையின்பெயர் : — விம்பமுந்தொண்டையும் - கொவ்வைப்பெயரே. ஆ-உ.
வள்ளையின்பெயர் :—வள்ளைநாளிகம். ஆ-க.

காக்கணத்தின்பெயர் :—கன்னிகிகினி - கருவிளைகாக்கணம். ஆ-ங.

முந்திரிகையின் பெயர் : — மதுரசங்கோத்தரிகை - முந்திரிகையாகும். ஆ-உ.

மலைப்பச்சையின்பெயர் :—குளவிமலைப்பச்சை. ஆ-க.

இசங்கின்பெயர் :—குண்டலிமுத்தாபலம் - இசங்கெனக்கூறுவர். ஆ-உ.

வேரின்பெயர் :—சடைதூர் - சிவைவேர். ஆ-ங.

அடம்பின்பெயர் :—அடம்புசோபாலிகை. ஆ-க.

விரிதூற்றின்பெயர் :—அதிரல்விரிதூறு. ஆ-க.

பீர்க்கின்பெயர் :—பீரம்பீர்க்கு. ஆ-க.

பெரும்பீர்க்கின்பெயர் :— பெரும்பீர்க்குப்படலிகை. ஆ-க.

பாகலின்பெயர் :—கூலம்பாகல். ஆ-க.

சிவேதையின்பெயர் :—சிவேதைபகன்றை. ஆ-க.

சீந்திலின்பெயர் :—அமுதவல்லிசீந்தில். ஆ-க.

காஞ்சொறியின்பெயர் :—கண்டேரங்காஞ்சொறி. ஆ-க.

தாளியின்பெயர் :—பஞ்சிகந்தாளி. ஆ-க.

நறையாலின்பெயர் :—பகன்றைநறையால் - என்னப்பகர்வர். ஆ-க.

வெற்றிலையின்பெயர் :—நாகவல்லி - தாம்பூலம்வெற்றிலை. ஆ-உ.

பிரண்டையின்பெயர் :— வச்சிரவல்லி பிரண்டையாகும். ஆ-க.

அவுரியின்பெயர்:—நீலியவுரி. ஆ-க.

குறிஞ்சியின்பெயர் :—குறிஞ்சிசகசரி. ஆ-க.

தும்பையின்பெயர் :—துரோணம்தும்பை - ஆகச்சொல்லுவர். ஆ-க.

தருப்பையின்பெயர் :—குசையேதருப்பை - என்னக்கூறுவர். ஆ-க.

பஞ்சாய்க்கோரையின்பெயர் :— எருவைபஞ்சாய்க்கோரையென்ப. ஆ-க.

• வாட்கோரையின் பெயர் : — செருஞ்சிவாட்கோரை. ஆ-க.

நாணலின்பெயர் :—காசைநாணல். ஆ-க.

விழற்புல்லின்பெயர் :—விரணம்விழற்புல். ஆ-க.

சுரையின்பெயர் :—அலாபுதும்பி-சுரையெனப்புகல்வர். ஆ-உ.

நீர்முள்ளியின்பெயர் :- நீர்முள்ளிமுண்டகம்-ஆகு மென்ப. ஆ-க.

பாசியின்பெயர் :—நாரஞ்செவிரம் - பதியஞ்சைவலம், பாசியென்று - பகரப்படுமே. ஆ-௪.

நீர்க்குளிரியின்பெயர் : — கல்லகாரம் - நீர்க்குளிரியென்ப. ஆ-க.

தாமரையின்பெயர் :—புண்டரீகம்பதுமம் - நளினஞ்சரோருகம், முண்டகமம்போ - ருகமரவிந்தம், பங்கயமம்புயம் - வாரிசஞ்சலசம், கஞ்சம்வனசம் - கோகனக்ங்கமலம், முளரிநீரோருகம்-திருமால்கொப்பூழ், திருமலரிண்டை - சதபத்திரியென, வருபவைதாமரை - வண்பெயராகும். ஆ-உக.

தாமரைக்காயின்பெயர் :— வராடகந்தாமரைக்-காயெனவகுப்பர் ஆ-க.

தாமரைச்சுருளின்பெயர் : — சுருள்பீசம்வளைய } [ம்.ஆ-௨.]

குவளைப்பொதுப்பெயர் :—உற்பலங்குவலயம்-கழுநீர்குவளை ஆ-௩.

* கருங்குவளையின்பெயர் :—நீலோற்பலமிந் - திவரங்குவலயம், நீலம்பானல் - காவிகருங்குவளை, கல்லாரமுமென - கழறலாகும். ஆ-எ.

செங்குவளையின் பெயர் : — செங்குவளையரத்தம் - உற்பலஞ்செங்கழுநீர். ஆ-௩.

குவலயமெனும்பெயர் : — குவலயநெய்தல் - ஆகவுங்கூறுவர். ஆ-க.

செவ்வாம்பலின்பெயர் :— கைரவஞ்செவ்வல்லி - செவ்வாம்பலாகும். ஆ-௨.

குமுதமென்னும்பெயர் :— வெள்ளாம்பல்சேதாம்பல் - என்றிருவிகற்பமும், கொள்பமன்னே - குமுதப்பெயர்க்கொடை. ஆ-௨

குமுதத்தின்பெயர் :—ஆம்பலுநெய்தலும்-அல்லியுங்குமுதம். ஆ-௩.

அகவிதழின்பெயர் :—அல்லியகவிதழ். ஆ-க.

புறவிதழின்பெயர்:—புல்லிபுறவிதழ். ஆ-க.

பூவினுட்கொட்டையின்பெயர்:—பொகுட்டேகன்னிகை-பூவினுட்கொட்டை. ஆ-௨.

---

* பிங்கலந்தைமுதலியவற்றிற் கருங்குவளையைக் கருநெய்தலெனவும், குமுதத்தை வெண்ணெய்தலெனவுங் கூறுவர்.

பூவின்வகையாவன :—கோட்டுப்பூகொடிப்பூ-நீர்ப் பூநிலப்பூ, தோற்றமுடைய-பூவின்றொடர்பே. ஆ-௪.

மொட்டின்பெயர் :— முகைநனைகலிகை - முகிழ்சி னைகோரகம், * நகையொடுகன்னிகை - போகில்மொட் டே. ஆ-௬.

பூவின்பெயர் :— அலர்தாரலரி - போதுசுமம்குசு மம், மலரோடிணர்வீ-மலர்ந்தபூவே. ஆ-௬.

பூங்கொத்தின்பெயர் :—துணரேமஞ்சரி - வல்லரி தொத்தோ, டிணரேகுலேயிவை - பூங்கொத்தென்பு. ஆ-௬.

பழம்பூவின்பெயர் :—செம்மல்பழம்பூ - ஆகச்செப் புவர். ஆ-௧.

மலர்த்தாதின்பெயர் :—மகரந்தங்கேசரம் - கொங் குமலர்த்தாதே. ஆ-௩.

பூவிதழின்பெயர் : — ஏடுந்தோடும் - பூவினிதழே. ஆ-௨.

மாலையின்பெயர் :—தொடையல்வாசிகை - சிகழி கைகோதை, படலையலங்கல்-கத்திகைபிணையல், அணி யல்சுருக்கை-தொடலைதாமம், தொங்கறெரியல்-கண்ணி தார்சூட்டு, மஞ்சரியொலியல்-இலம்பகமாலை. ஆ-உ௰.

பின்னியமாலையின்பெயர் :— பிணையல்பின்னிய-மா லைப்பெயரே. ஆ-௧.

நுதலணிமாலையின்பெயர் :—சூட்டுடனிலம்பகம் - நுதலணிமாலை. ஆ-௨.

வாசிகையின்பெயர் : — மாலைசிகழிகை - வாசிகை தொடையல், ஆகுமென்ப-அறிந்திசினோரே. ஆ-௪.

நாடே பிறர் நாட்டிற் குவமையாறே
காலம் அறிந் துதவுங் காவிரிதானே
ஆடவர் திலகன் அம்பன் மன்னன்
ஈடிசைத் தலைவன் அருவந்தைச் சேந்தன்
ஆய்ந்த திவாகரத் தரும்பொருள் விளங்கும்

நான்காவது
மரப்பெயர்த்தொகுதி,
முற்றிற்று.

---

* நகையென்பது - அடைமொழியெனக் கொளினு மமையும்.

கடவுள்துணை.

ஐந்தாவது

# இடப்பெயர்த்தொகுதி.

## மூலபாடம்.

மோக்கத்தின்பெயர் :—அமுதங்கேவலம் - அபவருக்கம்வீடு, சிவங்கைவல்லியம் - சித்திமீளாக்கதி, பரகதியோடு - முத்திபஞ்சமகதி, நிர்வாணமோக்கம் - என நிகழ்த்தினரே. ஆ-௰உ.

தெய்வலோகத்தின் பெயர் : — தானந்துறக்கம் - பொன்னுலகும்பர், வானகமமருல-குயர்நிலைபுத்தேள், வியனுலகுவிசும்பு-விண்ணுலகுநாகம், பவனமாசுவர்க்கம்-தெய்வலோகப்பெயரே. ஆ-௰௩.

நாகலோகத்தின்பெயர் :—பவனநாக - லோகம்பாதலம். ஆ-௩.

விஞ்சையருலகத்தின்பெயர்:—சேணியுஞ்சேடியும்-விஞ்சையர்சேரிடம். ஆ-உ.

திசையின்பெயர் :—மாதிரமாசை - அம்பரிசைப்பெயர். மற்றுந்திசையின் - பெயர்க்ககுபம்திகை, விசும்புலகங்கோ - காட்டையுமாகும். ஆ-௯.

கீழ்த்திசையின்பெயர்:—குணக்கேபூருவம்-இந்திரியிராசி, கிழக்குக்கீழ்த்திசை-கிளக்குங்காலே. ஆ-௫.

தெற்கின்பெயர் :—அவாசிதக்கணம் - யாமியந்தெக்கு, சிவேதைமற்றிவை-தெற்கெனலாகும். ஆ-௫.

மேற்கின்பெயர் :— மேக்குப்பச்சிமம் - குடக்கிவைமேற்கே, வாருணம்பிரத்-தியக்குமதுவே. ஆ-௫.

வடக்கின்பெயர் :— உதக்கேஉதீசி-உத்தரமென்ன, வடக்கின்பெயரிவை - வைக்குங்காலே. ஆ-௩.

பூமியின்பெயர் :— அவனிகாசினி - மேதினியளக்கர், தரணிதாரணி-தராதலங்குவலயம், புடவிபூதலம் - தரைபடிஞாலம், வையமகிலங்கு - மண்புவிபார் * நா, டுலகுபுவனி-பாரியுகநேமி, அகலிடம்பொறைமகி-மண்டிலம்பூத்திணை, தலம்பொழில்பிருதிவி-வேலாவலயம், நிலஞ்சகந்தாலம்-பூமியெனநிகழ்த்தினர். ஆ-௩அ.

* நாடு-நடுவெனவும் பாடம்.

நரகத்தின்பெயர் :—நிரயந் தூவாந்தம் - பாதாளங் கும்பி, அள்ளலளறே - அருஞ்சிறையிருணிலம், எரியுந்திமிரமும் - இரௌரவமென்றிவை, நரகின்பெயரென - நவிலப்படுமே. ஆ-௰௧.

உலகின்பொதுப்பெயர் :—புவனநாடு-பொழிறலம் புடவி, புவனமுலகின் - பொதுப்பெயர்பால. ஆ-௬.

நாட்டின்பெயர் :—பைதிரமண்டிலம் - பாண்டிறேயம், தண்ணடைசனபதம்-அகலுள்சும்மை, தண்டமேணியுல - கென்றிவைநாடே. ஆ-௰௧.

மலையின்பெயர் :— விலங்கலடுக்கல்-வெற்புப்பருப்பதம், சிலம்புநாகம்-குறும்பொறைசிகரம், வேதண்டம் வீரம் - கிரிதிகிரிசையம், தரணிபூதரம் - ஓங்கல்பிறங்கல், குவடுகுன்றூதி - பறம்புவரைவிண்டு, போதிகோச்சிலை - இறும்புதடமாதிரம், பொச்சைகல்கல்லகம் - பொருப்புநகமசலம், சாரல்சிலோச்சயம் - சைலமலையென்ப. ஆ-௩௮.

மேருவின்பெயர் :—ஏமகூடம் - பரிசன்னியம்பூதரம், மணிமலைபொன்மலை-மகமேருவென்ப. ஆ-௬.

வெள்ளிமலையின்பெயர் :—வெண்மலைவேதண்டம் விசயார்த்தம், கயிலையும்வெள்ளி - மலையெனப்படுமே. ஆ-௪.

பொதியமலையின்பெயர் :—தென்மலைமலயம்-பொதியமலையென்ப. ஆ-௨.

கொல்லிமலையின்பெயர் :—வல்லியம்பொருப்பே - கொல்லிமலையாகும். ஆ-௨.

குன்றின்பெயர் :— இறும்புபொச்சை-குவடுபதலை, பிறங்கல்பொற்றை-குறும்பொறைகுன்றே. ஆ-௭.

மலையுச்சியின்பெயர் :— கோடுகொடிமுடி-குவடுசிகரம், சிமையமைந்தும் - மலையினுச்சி. ஆ-௫.

மலைப்பக்கத்தின்பெயர் :—வாரமுந்தடமும் - சாரலுமலைப்பக்கம். ஆ-௩.

பாறையின்பெயர் :—அறையேபாறை. ஆ-௧.

துறுகல்லின்பெயர் :—பொறையேதுறுகல். ஆ-௧.

மலைமுழையின்பெயர் :—முடுக்கர்கந்தரம் - மலைமுழையென்ப. ஆ-௨.

கீழறையின்பெயர் :—பிலமேகீழறை. ஆ-௧.

குகையின்பெயர் :—நிகுஞ்சங்குகையாம். ஆ-௧.

கற்புழையின்பெயர் :—கண்டறைகற்புழை-என்னப் படுமே, கற்பாழிகாண்டையும்-கருதுவரதற்கே. ஆ-ங.

கல்லின்பெயர் :—சிலேயேகல்லே. ஆ-க.

திரள்கல்லின்பெயர் :—உலமேதிரள்கல். ஆ-க.

நுழைவாயிலின்பெயர் :— நூழையுஞ்சுருங்கையும்-நுழைவாயிலாகும். ஆ-உ.

மலைப்பிளப்பின்பெயர் :—விடர்மலைப்பிளப்பென-விளம்பினர்புலவர். ஆ-க.

வெடிப்பின்பெயர் :—விடருங்கமரும்-வெடிப்பின் பெயரே. ஆ-உ.

திடரின்பெயர் :—திட்டைதிடரே. ஆ-க.

சிறுதிட்டையின் பெயர் :— பதுகைசிறுதிட்டை. ஆ-க.

பரலடுத்துயர்நிலத்தின்பெயர் :— பரலடுத்துயர்நிலம்-முரம்பெனப்படுமே. ஆ-க.

மேட்டின்பெயர் :—திட்டைதிடறு - சுவல்வல்லே வன்பால், மெட்டுத்திடர்படர் - குப்பல்குவால்குவை, ஒட்டியபதினொன்றும்-மேடெனவுரைப்பர். ஆ-யக.

பாதாளத்தின்பெயர் :— அரம்பிலம்பாதலம் - பாதாளப்பெயரே. ஆ-உ.

கடலின்பெயர் :—அத்திபௌவம் - அளக்கரார் கலி, ஆழிபெருநீர் - அம்பரமுந்நீர், உப்புவீரை - சக்கரஞ்சாகரம், வேலேவெள்ளம் - மகராலயநேமி, சலநிதிவாரி-சலதியலேயே, பாராவாரம் - உததிசமுத்திரம், பரவையுவர்நரலே - புணரிவாரிதி, வேலாவலயம்-கார்கோளோதம், வாருணஞ்சிந்து-வாரமம்புராசி, கார்மலியுவரி - கடலெனக்கருதுவர். ஆ-ஙரு.

கடற்றிரையின்பெயர் :—ஓதமும்புணரியும் - கடற்றிரையாகும். ஆ-உ.

புனற்றிரைப் பொதுப்பெயர் : — சீகரந்தரங்கம் - அறல்கல்லோலம், அலேபுனற்றிரைக்கு - வரும்பொதுப்பெயரே. ஆ-ரு.

கடற்கரையின்பெயர் :—வேலேயும்பாரா - வாரமுங் கடற்கரை. ஆ-உ.

புனற்கரைப்பொதுப்பெயர் :— தீரம்பாரம்-வரையணேகோடு, கூலம்வாரம்-புனற்கரைப்பொதுப்பெயர். ஆ-எ.

செய்கரையின்பெயர் :— குலையுஞ்சேதுவும் - குரம்புஞ்செய்கரை. ஆ-ங.
மலைச்சாரல்வரும்யாற்றின்பெயர் :—அருவிமலைச்சார - ரல்வரும்யாறும். ஆ-க.
முல்லைக்கான்யாற்றின்பெயர் : — கலுழியுமுயமை யும்-முல்லைக்கான்யாறு. ஆ-உ.
ஆற்றின்பொதுப்பெயர் :—உந்திநதிதுறை - வருபுனல்குடிஞை, சிந்துவோடொலியல்-ஆறெனச்செப்புவர். ஆ-எ.
கழியின்பெயர் :—கானன்முரம்பு - கழியின்பெயரே. ஆ-உ.
கழிமுகத்தின்பெயர் :—அதோமுகம்புகாரோ-டருவிகூடல், கழிமுகமென்று-கருதல்வேண்டும். ஆ-ங.
உப்பளத்தின்பெயர் :—உப்பளங்காயல் - உவளகமளக்கர். ஆ-ங.
காவிரியின்பெயர் :—பொன்னிகாவிரி. ஆ-க.
பொருநையின்பெயர் :— பொருநைதண்பொருந்தம். ஆ-ங.
கன்னியின்பெயர் :—குமரிகன்னி-ஆகக்கூறுவர். ஆ-க.
வையையின்பெயர் :—வேகவதியே-வையையாகும். ஆ-க.
ஆன்பொருந்தநதியின்பெயர்: — ஆனிவான்யான்-பொருந்தமாகும். ஆ-க.
கௌதமைநதியின்பெயர் :—கோதைகௌதமை - ஆகக்கொள்ளுவர். ஆ-க.
கோதாவிரியின்பெயர் :— விருத்தகங்கை - விமலைகோதாவிரி. ஆ-உ.
பால்யாற்றின் பெயர் : — பாலிகீரநதி - பால்யாறாகும். ஆ-உ.
வாவியின்பெயர் :—அலந்தைபண்ணை - கோட்டங்கிடங்கோ, டிலஞ்சிதாங்கல் - சுனையேல்வையோடை, வட்டந்தடாகம் - மடுக்குளம்வலயம், குட்டங்குண்டம்-பட்டஞ்சூழி, பொய்கைகேணி - ஆவிதடம்படுகர், ஏரிகயம்பயம்-உவளகம்வாவி. ஆ-உஎ.
எந்திரவாவியின்பெயர் :—இலவந்திகையே-எந்திரவாவி. ஆ-க.
ஆற்றிடைக்குறையின்பெயர் :— இலங்கையுந்துருத்தியும்-எனவரும் பெயரோ, டரங்கமுமாற்றிடைக்-குறையெனவறைவர். ஆ-ங.
ஊருணிநீர்ப்பெயர் :—ஊருணும்பொதுநீர்-ஊருணியாகும். ஆ-க.

கிணற்றின்பெயர் :—கூவலுமசும்பும்-கூபமுங்குழியும், பூவலுங்கேணியும்-துரவுங்கிணறே. ஆ-எ.

ஊறலின்பெயர் :—அஃகுமுறவியும்-அசும்புமூறல். ஆ-ரு.

நீர்க்குமிழியின்பெயர் :—புற்புதமொக்குள்-பௌவநீர்க்குமிழி. ஆ-ரு.

நுரையின்பெயர் :— நுரையேபேனம் - ஆகுமென்ப. ஆ-க.

ஆழத்தின்பெயர் :—அழுந்துங்குண்டும்கயமுமாழம். ஆ-ரு.

நிறைபுனலின்பெயர் :—வழாறும்பிராறும் - வாயுநிறைபுனல். ஆ-உ.

நீந்துபுனலின்பெயர் :—அகாதமென்பது - நீந்துபுனலாகும். ஆ-க.

கொழுந்துநீரோட்டத்தின்பெயர் :—கோலமென்பது - கொழுந்துநீரோட்டம். ஆ-க.

தெளிநீரின்பெயர் :—சற்சலமென்பது - தெளிநீராகும். ஆ-க.

கலங்கற்புனலின்பெயர் :— விலங்கல்கலுழி - கலங்கற்புனலே. ஆ-உ.

சேற்றின்பெயர் :— அள்ளற்சகதி - அளக்கரசறு, கொள்ளமளறு - குழம்புகலாழ், தொள்ளிபங்கம்-பூழிகுழைசேறே, தொய்யலுளியே-செதும்புசேதகம்,செய்யலென்றிவையும்-சேறெனத்தகுமே. ஆ-மஎ.

வழுக்குநிலத்தின்பெயர் : — அருப்பமுமழுவும் - வழுக்குநிலமென்ப. ஆ-உ.

பொல்லாநிலத்தின்பெயர் : — அசும்பும் செதும்பும் - அயதுமென்றிவற்றொடு, டங்கணமுஞ்சகதியும் - பொல்லாநிலமே. ஆ-ரு.

வெண்மணலின்பெயர் :—வாலுகம்வெண்மணல். ஆ-க.

மணற்குன்றின்பெயர் :—புளினமணற்குன்றே. ஆ-க.

நுண்மணலின்பெயர் :—அதரயிர்நுண்மணல். ஆ-உ.

புழுதியின்பெயர் :— பொடிபூழ்திபுழுதி - ஆகுமென்ப. ஆ-உ.

அலைகொழுத்த கருநுண்மணலின்பெயர் : — அறலேயலைநுண் - கருமணலாகும். ஆ-க.

ஐந்திணையாவன :—மலைச்சார்புகுறிஞ்சிநிலம்-தடற்சார்புநெய்தநிலம், காடுசார்நிலமுல்லை - நாடுசார்நிலமருதம், நீரின்றிவேணிற் -றோர்நிலம்பாலை. ஆ-ரு.

மருதநிலத்தின்பெயர் :-அகணிபணைபண்ணை-பழனங்கழனி, பானல்கம்பலை-படுகர்வயன்மருதம். ஆ-கூ.

முல்லைநிலத்தின்பெயர் :— புறவம்புறம்பணை-முல்லை நிலப்பெயர். ஆ-௨.

குறிஞ்சிநிலத்தின் பெயர் : — அறைவர்குறிஞ்சிக்கும் - அப்பெயர்தானே. ஆ-க.

வன்பாலெனும்பெயர் :—வன்பால்குறிஞ்சியும்-பாலையுமாகும். ஆ-க.

மென்பாலெனும்பெயர் : — மென்பாலென்பது - மருதமேற்றே. ஆ-க.

சமப்பாலெனும் பெயர் : — முல்லையுநெய்தலும் - மொழிசமப்பாலே. ஆ-க.

கருநிலமென்பது - மலையினீரில் - வனத்தில்வந்த மற், றினையபயன்படா - மிகுதிகருநிலம்.

துருக்கத்தின்பெயர் : — அழுவந்துருக்கம் - ஆகுமென்ப. ஆ-க.

ஊரின்பெயர் :—பாக்கம்பட்டினம் - பதிநகர்சும்மை, பூக்கஞ்சேரி - புரமுட்டம்பூண்டி, அகரங்குடியே-குறிச்சிகோசரம், அகலுளுச்சி-இருக்கைவேலி, குப்பம்பாடி-குறும்புபாழி, சிறுகுடிதண்ணடை-உறையுளெயிலொடு வாழ்க்கையுட்படுத் - திருபத்தேழும்,நாடிலூரென - நவின்றிசினோரே. ஆ-உஎ.

நீரும்வயலுஞ்சூழ்ந்தவூரின்பெயர் :-சுரந்தநீரும்-வயலுஞ்சூழ்ந்தவூர், கிராமமாக-கிளக்கப்படுமே. ஆ-க.

ஐஞ்ஞூறுகுடிநிறைந்தவூரின்பெயர் :— குடியைஞ்ஞூறுக்கு - குறைவறநிறைந்தது, பெருங்கிராமமென - பேசப்படுமே. ஆ-க.

மலைசூழ்ந்தவூரின்பெயர் :—கிரிபலசூழ - அடுத்தவூர்கேடகம். ஆ-க.

மலையுமாறுஞ்சூழ்ந்தவூரின்பெயர் :—மலையுமாறும்-அடுத்தவூர்கர்வடம். ஆ-க.

பலபண்டம்பகருங் கடற்கரையூரின்பெயர் :—பண்டம்பலகொடு-பகருங்கடற்கரை, மன்னும்பதியே - பட்டினமாகும். ஆ-க.

சிற்றூரின்பெயர் :—பட்டிநொச்சியும் - பள்ளியுஞ்சிற்றூர். ஆ-ரு.

குறிஞ்சிநிலத்தூரின்பெயர் :—குறிச்சிசிறூர் - குறிஞ்சிநிலத்தூர். ஆ-உ.

முல்லைநிலத்தூரின்பெயர் :-பாடிமுல்லைப்பதி. ஆ-க.

நெய்தனிலத்தூரின்பெயர் : — பட்டினநெய்தல் - பதியெனப்படுமே. ஆ-க.

பாலைநிலத்தூரின்பெயர் :— முனையிடங்குறும்பு - முதுபாலைநிலத்தூர். ஆூ-உ.

மருதநிலத்தூரின்பெயர் :— பூக்கங்கொடிக்காடு - பூரியமுறையுள், பாக்கமருப்பம் - அகலுள்பதியே, கோட்டம்வசதி - தாவள நியமம், வாழ்க்கைதண்டலை - மருதநிலத்தூர்ப்பெயர். ஆூ-௧௪.

நகரப்பதியின்பெயர் :—பாடியும்புரமும் நகரப்பதியே. ஆூ-உ.

சூழ்கழியிருக்கையின்பெயர் :— சூழ்கழியிருக்கை - கோணமுகமே. ஆூ-க.

மருங்கிலூர் சூழ்பெரும்பதியின்பெயர் .— மருங்கிலூர்சூழ்-பெரும்பதிமடப்பம். ஆூ-க.

கொடுங்குறும்பரணிருக்கையின் பெயர் :— கொடுகுறும்பரணிருக்கை - குறும்பென்றாகும். ஆூ-க.

முனைமேற்சென்றோருறைபதியின்பெயர் :— பாசறைமுனைமேற் சென்றோருறைபதி. ஆூ-க.

உறையூரின்பெயர் :—கோழியுறையூர் ஆூ-க.

மதுரையின்பெயர் :—கூடன்மதுரை ஆூ-க.

சிதம்பரத்தின்பெயர் :—மன்றஞ்சிதம்பரம். ஆூ-க.

திருவாரூரின்பெயர் :—கமலைதிருவாரூர். ஆூ-க.

கருவூரின்பெயர் :—கருவூர்வஞ்சி. ஆூ-க.

காவிரிப்பூம்பட்டினத்தின்பெயர் :— காகநதிபுகார் - காவிரிப்பூம்பட்டினம். ஆூ-உ.

அவந்தியின்பெயர் :—உஞ்சையவந்தி. ஆூ-க.

காசியின்பெயர் :—காசிவாரணாசி. ஆூ-க.

காஞ்சியின்பெயர் :—கச்சிகாஞ்சி. ஆூ-க.

மிதிலையின்பெயர் :—விதேகையென்ப - மிதிலையாகும். ஆூ-க.

அயோத்தியின்பெயர் :—விநிதைசாகேதம்-கோசலையயோத்தி. ஆூ-ங.

புரியெனும்பெயர் :— புரியென்கிளவி - புரமென்றாகும். ஆூ-க.

பாடியெனும் பெயர் :— பாடியென்பது-சேரியாகும். ஆூ-க.

கடாரத்தின்பெயர் :— காழகங்கடாரம் - ஆகக்கருதுவர். ஆூ-க.

சிங்களத்தின்பெயர் :—சிங்களமீளம்-ஆகச்செப்புவர். ஆூ-க.

நெல்லும்புல்லு நிறைந்தமலையூரின்பெயர் :—நெல்லும்புல்லும் - நிறைந்தமத்தகம், புல்லுமலையூர் - சம்வாகமாகும். ஆூ-க.

வீட்டின்பெயர் :— மாடமனையுறையுள்-புக்கில்பதி வசதி, இடமேபாத்தி - அகம்வயினில்லம், இடவகை சேர்வு - வீடென்றிசைப்பர். ஆ௳-௰௩.

சிற்றிலின்பெயர்:—கூரைகுரம்பை - குடில்சிற்றிலாகும். ஆ௳-௩.

பண்டசாலையின்பெயர் :— புனைகலனிருக்கை-பண்டசாலை. ஆ௳-௧.

வீட்டிறப்பின்பெயர் :— வளவியிறையே-வீட்டிறப்பாகும். ஆ௳-௨.

தாழ்வாரத்தின்பெயர் :— சோபானந்தாழ்வாரம் - ஆகுமென்ப. ஆ௳-௧.

முகட்டின்பெயர் :—விடங்கமுகடே. ஆ௳-௧.

வேயுளின்பெயர் :—வேயுள்வேய்தல். ஆ௳-௧.

பல்கணியின்பெயர் :— சாலகஞ்சாளரம்-நூழைசாலேகம், வாதாயனம்பல்-கணியெனப்படுமே. ஆ௳-௫.

மடைப்பள்ளியின் பெயர் : — அட்டிலடுக்களை - மடைப்பள்ளியாகும். ஆ௳-௨.

கல்வியூரி - அன்றிக் கல்விபயிலிடத்தின்பெயர் :— கல்வியூரி - கல்லூரியாகும். ஆ௳-௧.

சுவர்த்தலத்தின்பெயர் :—பித்திகை சுவர்த்தலம். [ஆ௳-௧]

பீடத்தின்பெயர் :—பீடிகைபீடம். ஆ௳-௧.

சலதாரையின்பெயர் :—அங்கணந்தூம்புவாய்-சலதாரையாகும். ஆ௳-௨.

முற்றத்தின்பெயர் :— முன்றிலங்கணம் - முற்றமாகும். ஆ௳-௨.

நிலாமுற்றத்தின்பெயர் :— ஆரமிய நிலாமுற்றம் - ஆகுமென்ப. ஆ௳-௧.

திண்ணையின்பெயர்

வேதிகை, திண்ணையாகு

கற்படிக்கட்டியின்

அரித்துவாரத்தின்பெயர் :— அரித்துவாரம் - மாயாபுரியாம். ஆ-க.
கடையின்பெயர் :— கூலமங்காடி-கடையாகக்கூறுவர், ஆவண நியமம் - ஆகலுமுரித்தே. ஆ-ச.
தெருவின் பெயர் : — ஆவணம்வீதி - ஞெள்ளன் மறுகு, கோசநியமம்-மார்க்கந்தெருளே. சிறகெனவொருவழிச் - செப்பவும்படுமே. ஆ-அ.
நெடுந்தெருவின்பெயர் :—மன்றமார்க்கம் - நியமநெடுந்தெருவே. ஆ-ரு.
குறுந்தெருவின்பெயர் :—குறுந்தெருமறுகே. ஆ-க.
குதிரைவையாளிவீதியின்பெயர் :-செண்டுவெளிவையாளிவீதி, புரவிவட்டந்திரு-முற்றமுமாகும். ஆ-ச.
வேந்தர்வீதியின்பெயர் :—பூரியம்வேந்தர்-வீதியாகும். ஆ-க.
முடுக்குத்தெருவின்பெயர் :—கோணமுடுக்குத்-தெருவாகும்மே. ஆ-க.
முச்சந்தியின்பெயர் :—அந்திமுச்சந்தி. ஆ-க.
சந்தியின்பெயர்:-அந்திகவலை-வரியேசந்தி. ஆ-ரு
நாற்சந்தியின்பெயர் :—முந்தையோர்சதுக்கம்-நாற்சந்தியென்ப. ஆ-க.
சிரேணியின்பெயர்: — சேடியும்வாடையும் - சிரேணியாகும், ஆலிடமெனவும்-அறையப்படுமே. ஆ-க.
அக்கசாலையர்வீதியின்பெயர் :— ஆவேசனமக்க சாலையர்வீதி. ஆ-க.
வேடர்வீதியின்பெயர் :— பக்கணம்வேடர்-வீதி [யாகும். ஆ-க.]
கோயிலின்பெயர் :—சினகரஞ்சேதிமம்-தேவராலய
...ஶ்ரீ நிகேதனம், மந்திரமாலயம் உ
...ரிவானவ - ருறையுள்கோ
...சாலையாகும். ஆ-உ.
...திரஞ்சாலை - அறச்

அரசிருக்கையின்பெயர் :— அரசிருக்கைப்பெயர்-அத்தாணிவேந்தவை. ஆ-உ.

அரங்கமெனும்பெயர் :—போரினிடமும்-வட்டாடிடமும், ஆடலிடமும் - அவையுமரங்கம். ஆ-ந.

ஒருசிறை-அல்லது-ஒதுக்கிடத்தின் பெயர் :—ஒருசிறைதுச்சில். ஆ-க.

ஏகாந்தத்தின்பெயர் :— ஒருவந்தமேகாந்தம்-கொட்டில்வேறிடம். ஆ-ந. [மென்ப. ஆ-க.]

கற்படையின்பெயர் :—சுருங்கைகற்படை - ஆகு}

உறைவிடத்தின்பெயர் :-ஆகரம்பிறப்பிடம்-உறைவிடமாகும். ஆ-உ.

அடுப்பின்பெயர் :—குமுதஞ்சுல்லி - காமரமடுப்பு, உத்தானமெனவும் - ஓதப்படுமே. ஆ-ச.

கூட்டின்பெயர் :—குடம்பைபஞ்சரம் - கட்சிகூடாகும். ஆ-ந.

பண்ணுங்கூட்டின்பெயர் :—குலாயனம்பஞ்சரம்-பண்ணுங்கூடே. ஆ-உ.

குதிரைப்பந்தியின்பெயர் :—மந்திரஞ்சாலை - குதிரைப்பந்தி. ஆ-உ.

யானைசேர்விடத்தின்பெயர் :—ஆலயமும்வாரியும்-சேவகமுந்தண்டமும், கூடமுமோளியும் - யானைசேர்விடம். ஆ-சு.

யானைசெல்வழியின்பெயர் :—தண்டம்யானை-செல்வழியென்ப. ஆ-க. [துயிலிடமாகும். ஆ-க.]

யானைதுயிலிடத்தின் பெயர் :— சேவகம்யானைத்}

மக்கட்கிடப்பிடத்தின்பெயர் :—கட்சியமளி - சேக்கையுறையுள், சட்டகஞ்சேர்விடம்-பள்ளிசயனம், பட்டம்பாழி - பாயலரிதுயிலிடம், ஒட்டியவுயர்திணைக்-கிடப்பிடமாகும். ஆ-யந.

விலங்குதுயிலிடத்தின்பெயர் :—பட்டம்போத்து-பண்ணைசேக்கை, விலங்குதுயிலும் - இடமாகும்மே. ஆ-ச.

வேள்விக்குண்டத்தின்பெயர் : — வேதிய நிமித்தமும் - வேள்விக்குண்டம். ஆ-உ.

முநிவர்வாசத்தின்பெயர் :—தாபதம்பாழி-கரண்டைபள்ளி, முநிவர்வாசமென - மொழியப்படுமே. ஆ-ச.

மட்கலஞ்சுடுமிடத்தின்பெயர் : — சுள்ளையுஞ்சூளையும்-மட்கலஞ் சுடுமிடம். ஆ-உ.

சுடுகாட்டின்பெயர் :-சுடுகாடீமம்-மயானஞ் சுடலை, சுடு நிலம்புறங்கா - டுடுகாடுமுதுகாடு, வனமெரிவனம் பிதிர் - வனம்பிணக்காடே. ஆூ-ωக.

பொருகளத்தின்பெயர் :-களரிபறந்தலை-செம்புலம் படுகளம், பொருகளமென்ன-புகன்றனர்புலவர். ஆூ-ச.

வழுக்குநிலத்தின்பெயர் :—அருப்பமாரிடம்-அளு ரிழுக்குவழுக்குநிலம். ஆூ-ச.

தொழுவத்தின்பெயர் :— தொழுவமாவேலி-தோழ மானிலையே. ஆூ-ங.

மதிலின்பெயர் :—இஞ்சிநொச்சி - எயில்சுற்றுப் புரிசை, பந்தம்வரைப்புக்-காப்பரண்காவல், ஆரலோ தை - பிராகாரம்வேலி, சீர்சாலம்வேணகை - மதிலெ னச்செப்புவர், வன்சிறையுவளகம் - ஆரையும் வரை யார். ஆூ-ωகூ.

மதிலுளுயர்மேடையின் பெயர் :-பரிகமகப்பா-பத ணமூன்றும், உரியமதிலுள்-உயர்மேடைக்கே. ஆூ-ங.

மதிற்சுற்றின்பெயர் :—தொடையுந்தகைப்பும்-வா ரியுஞ்சுற்றே. ஆூ-ங.

மதிலுறுப்பின்பெயர் :—பதப்பாடெந்திரம் - கோ சந்தோணி, விதப்புஞாயில் - நாஞ்சின்மதிலுறுப்பே. ஆூ-எ.

அகழின்பெயர் :—அகழிகிடங்கோடை - பரிகை [யகழ்கேணி. ஆூ-ரு.

குதிரின்பெயர் :—புகல்குதிராகும். ஆூ-க.

வாயிலின்பெயர் :—தோட்டிதுவாரம் - வாரிகடை வாயில். ஆூ-ச.

கோபுரம் அல்லது கோபுரநிலையின்பெயர் :—சிக ரிகோபுரம். ஆூ-க.

பெருவாயிலின்பெயர் :—கோபுரமென்பது - பெ [ருவாயிலாகும். ஆூ-க.

கோபுரவாயிற்புகு புழையின்பெயர் :— புதவுவா யில் - புகுபெரும்புழையே. ஆூ-க.

கோபுரவாயிற்றிண்ணையின்பெயர் :— அளிந்தமவ் வழி-சார் திண்ணையாகும். ஆூ-க.

கோபுரவாயிற்படிச்சுருளின்பெயர் :— அத்தினகம் வாயில்-படிச்சுருளாகும். ஆூ-க.

வயலின்பெயர் :—விளையுளும்பண்ணையும்-செய்யுங் கழனியும், தடியும்பாத்தியும்-செறுவும்வயலே. ஆூ-எ.

சிறுவயலின்பெயர் :— குண்டில்பாத்தி-சிறுவயலா கும். ஆூ-உ.

புனத்தின்பெயர் :—குறிஞ்சிநிலச்சார்பும் - கொல
லையும்புனமே. ஆ-உ.
தினைப்புனத்தின்பெயர் : — ஏனலும்வளாகமும் -
தினைப்புனமென்ப. ஆ-உ.
பழங்கொல்லையின் பெயர் : — முதைப்புனம்பழங்
கொல்லை. ஆ-க.
புதுக்கொல்லையின்பெயர் :— இதைப்புனம் புதுக்
கொல்லை. ஆ-க.
தோட்டத்தின்பெயர் :—தோட்டந்துடவை-படப்
பையிம்மூன்றும், தோட்டப்பெயரெனச் - சொல்லினர்
புலவர். ஆ-ங. [பெயரே. ஆ-உ.
உழவின்பெயர் :—துடவைதொய்யில் - உழவின்
உழுதொழில் வளைப்பின்பெயர் :—தொடுப்பேயுழு
வோர் - தொழில்வளைப்பாகும். ஆ-க.
புதுவரம்பின்பெயர் :—மரிசிபுதுவரம்பு. ஆ-க.
புற்றின்பெயர் :—வன்மீகம்புற்று. ஆ-க.
வரம்பருகின்பெயர் :—கங்குவரம்பருகே. ஆ-க.
பள்ளத்தின்பெயர் :—உவளகம்பயம்பே - அவல்
குழிதாழ்வே, இழிவுகிழக்கு-படுகர்பள்ளம். ஆ-அ.
புற்றஞ்சோற்றின்பெயர் :—குரும்பிபுற்றஞ்சோறே.
ஆ-க. [பாழ்முதுநிலம். ஆ-உ.
முதுநிலத்தின்பெயர் :—களரிகரம்பே - பெரும்
வழியின்பெயர் :—சரிநெறியொழுக்கம் - தாரையா
று, வதியதர்மார்க்கம் - இயவைநடவை, பதவைகெப்
பம்-அயனமிடவை, வாரிவட்டை-வரிவயவைவகுந்து,
செலவுசிறுபதம்-வழிக்கிளவியாகும். ஆ-உக
அறுநெறியின்பெயர் .— அத்தங்கடங்கடறு-துறுபு
புசுரமருநெறி. ஆ-ரு.
கவர்நெறியின்பெயர் :—கவலைகவர்நெறி-ஆகக்கரு
துவர். ஆ-க. [மென்ப. ஆ-க.
சிறுவழியின்பெயர் :—விடங்கர்சிறுவழி - ஆகு
பெருவழியின்பெயர் :—பாதைபெருவழி. ஆ-க.
இழிந்தேறப்படுவழியின்பெயர் :—படுகர்மடுவிழிந்-
தேறப்படுநெறி. ஆ-உ. [கற்படி. ஆ-உ.
கற்படியின்பெயர் :— ஆரோகணஞ்சோபானங்
நீள்வழியின்பெயர் :-அளக்கர்நீள்வழியே. ஆ-க.
இடத்தின்பெயர் :—வாய்புலம்பாங்கர்-வயின்களம்
வைப்பு, தேயம்வழியுழி - திணையேமருங்கு, பானிலந்

தலமே - வளாகப்பட்டி, சூழுறுவனம் - இடப்பெயர்த் தொடர்பே. ஆ-௰அ.

இடப்பொதுப் பெயர் :—கண்கால்புறமகம் - உள் ளுறுழை கீழ்மேல், பின்சாரயல்புடை - * தேவகையெ னுஅ, முன்னிடைகடைதலை - வலமிடமெனுஅ, அன் னபிறவும் - அதன்பாலவென்மனார். ஆ-௰௬.

பக்கத்தின்பெயர் :—மாடுசிறையுழி - மருங்குஞாங் கர்முன், பால்புடைபாங்கர் - பக்கமாகும். ஆ-௯.

நடுவின்பெயர்:—நனந்தலைநாப்பண் - மத்திமநள் ளு, வயங்கிடையொத்தல் - நாவோடணவு, நலந்திகழ் கூழையும் - நடுவென்றுகும். ஆ-௯.

உயர்ச்சியின்பெயர் :—உம்பர்மீமிசை - உகப்புச்ச மோங்கல், துங்கமுவணம் - மேடுமோடு, தூக்குமேக்கு றை-உன்னதமெழுமை, நிவப்பிவையுயர்ச்சி - ஆக நிக ழ்த்துவர். ஞாங்கர்முன்னும் - மேலுமாகும். ஆ-௰௬.

முன்னரின்பெயர் :—முதலுந்தலைத்தாளும் - முன் னராகும். ஆ-௨.

இம்பரெனும்பெயர் :—இம்பரிவணே. ஆ-௧.

உம்பரெனும்பெயர் :—உம்பருவணே. ஆ-௧.

ஆண்டெனும்பெயர் :—ஆண்டவ்விடம். ஆ-௧.

ஈண்டெனும்பெயர் :—ஈண்டிவ்விடம். ஆ-௧.

கூப்பிடுதூரத்தின்பெயர் :— எல்லைகுரோசம்-கூப் பிடுதூரம். ஆ-௨.

கோழிப்பறவை யளவின்பெயர் :—கிறவுஞ்சங்கோ ழி - பறவையளவாகும். ஆ-௧.

யோசனைதூரத்தின்பெயர் :— புகையோசனையாம். ஆ-௧. [வர். ஆ-௧.]

காதத்தின்பெயர் :—காவதங்காதம் - ஆகக்கருது

ஒருவற் கொருவன் ஆகி யுதவியும்
பரிசின் மாக்கள் பற்பல ராயினும்
தானொரு வன்னே தரணி மானவன்
செந்தமிழ்ச் சேந்தன் தெரிந்த திவாகரத்

தைந்தாவது

இடப்பெயர்த்தொகுதி

முற்றிற்று.

---

* தேவகை-என்பது திசைக்கூறு. ஊக்கமென்பதூஉம் பாடம்.

கடவுள்துணை.

## ஆறாவது

# பல்பொருட்பெயர்த்தொகுதி.

## மூலபாடம்.

பொன்னின்பெயர்:—ஆடகமாசை-ஈழமேமம், மாடுகாணம்-கனகந்தமநியம், வெறுக்கைசொன்னம்-பொருளோடரியே, ஈகைநிதியே-கருந்தனங்காஞ்சனம், ரீதகமாடை-தொடுக்கமருத்தம், சாமீகரம்பூரி - சந்திரமாழை, நிதானந்தேசிகம் - செந்தாதுவித்தம், திரவியம் வேங்கை - சாம்பூனதமுரை, சாதரூபம் - உடல்பண்டமிரணியம், பொலமென்றின்னவை - பொன்னெனப்படுமே. ஆ-௩௭.

ஐவகையுலோகமாவன:—பொன்னும்வெள்ளியும்-செம்புமிரும்பும், அன்னவீயமும் - ஐவகையுலோகம். ஆ-க.

எழுவகையுலோகமாவன:—தராவொடுகஞ்சம்-தரணுங்கூட்டி, எழுவகையுலோகம் - என்னவும்படுமே. ஆ-க.

நவமணி கடவுண்மணியின் பெயர் :— நவமணிகடவுள் - மணியென்றிவற்றின், நிகழ்பெயர்நிதியும்-நிதானமுமென்ப. ஆ-உ.

பொற்காசின்பெயர் :—காணம்பொற்காசே. ஆ-க.

மணிப்பொதுப்பெயர் :—மனவுங்காசும்-மணியின் பொதுப்பெயர். ஆ-உ.

அகன்மணிப் பொதுப்பெயர் : — அரதனஞ்சலாகை-அகன்மணிக்காகும். ஆ-உ.

மாணிக்கத்தின்பெயர் :— மாமணிபதுமராகமாணிக்கம். ஆ-உ. [ஆ-௩.]

முத்தின்பெயர்:—நித்திலந்தரளம் ஆரமுத்தே.

தரளமெனும்பெயர் :—தரளந்திரட்சி - யாகவுஞ்சாற்றுவர். ஆ-க.

பவளத்தின்பெயர் :— வித்துருமந்துகிர்- துப்போரத்தம், ஒத்தபிரவாளம்-துவரிவைபவளம். ஆ-௬.

மரகதத்தின்பெயர் :— அரியொடுபச்சை-மரகதமாகும். ஆ-௩.

வச்சிரமணியின்பெயர் :—வச்சிரம்வயிரம்-ஆ-உ.

வைடூரியத்தின்பெயர் : — வாலவாயம் - வைடூரியமே. ஆடு-க.

நீலமணியின்பெயர்:—மணிநீலமணியே. ஆடு-க.

சங்கநிதியெனும் பெயர் : — செங்கைநிதியம்பற் - சேந்தன்செங்கையில், சங்கின்வடிவினது-சங்கநிதியே. ஆடு-ச.

பதுமநிதியெனும்பெயர் :—தேமலரலங்கல்-சேந்தன்செங்கையில், தாமரைவடிவினது - பதுமநிதியே. ஆடு-ச.

நிதியாவன:-பதினொன்குவகையும்- நிதியமென்ப. *

பண்டாரத்தின்பெயர் :—கோசந்தண்டம்-பண்டாரமாகும். ஆடு-உ. [தம்வெள்ளி. ஆடு-ங.]

வெள்ளியின்பெயர்:—இரசதந்தாரம் - களதௌ

வெண்கலத்தின்பெயர் :-கஞ்சம்வெண்கலம்-ஆகக்கருதுவர். ஆடு-க. [தளை. ஆடு-உ.]

பித்தளையின்பெயர்:—மாயாபுரியார - கூடம்பித்

செம்பின்பெயர் :—சீருனந்தாம்பிரம்-சுற்பஞ்செம்பே. ஆடு-ங. [பெனக்கருதுவர். ஆடு-உ.]

இரும்பின்பெயர் :—கருந்தாதுமயமும் - இரும்

எஃகின்பெயர் :—சத்தியெஃகே. ஆடு-க.

ஈயத்தின்பெயர் :—வங்கமுஞ்சீருளும் - ஈயமாகும். ஆடு-உ. [வர். ஆடு-ங.]

காரீயத்தின்பெயர் :—நாகங்காரீயம்ஆகக்கருது-

தராவின்பெயர் :—மதுகந்தராவென-வைக்கப்படுமே. ஆடு-க.

இரும்புள்வாங்கு காந்தமணியின்பெயர் : — வலித்திரும்புள்ளே - வாங்குங்காந்தம், சொல்லத்தகுஞ்சலாகை - சும்பகமென்ப. ஆடு-உ.

சந்திரனொளியிற்றண்ணீர்காலுமணியின்பெயர்:— சந்திரனொளியில்-தண்ணீர்கான்மணி, சந்திரகாந்தம் - எனப்பெயர்சாரும். ஆடு-க.

சூரியனொளியிற் றீக்காலுமணியின்பெயர் :—சூரியனொளியில் - திக்கால்சலாகை, சூரியகாந்தம் - எனப்பெயர்சொல்லும். ஆடு-க. [கும். ஆடு-உ.]

பளிங்கின்பெயர் :— படிகம்பளிங்கு-பருக்கையா

சங்குமணியின்பெயர் :—அக்குச்சங்கு - மணியாகுமென்ப. ஆடு-க.

* பதினொன்குவகையாவன - உலோகமைந்து மணியொன்பதுமாம்.

பலகறையின்பெயர் :—வராடிசோகி - பலகறையெ ன்ப, வெள்வரியலகெலா-விளம்பவும்படுமே. ஆ-ச.

பலபண்டத்தின்பெயர் :-பண்ணியங்கூலம்-வளமேப ண்டாரம், பண்ணிகாரம்-பலபண்டப்பெயரே. ஆ-ரு.

அரும்பண்டத்தின்பெயர் : — அரும்பண்டப்பெ யர் - தாரமென்றாகும். ஆ-க.

கருப்பூரத்தின்பெயர் :-கருப்பூரம்பாளிதம். ஆ-க.

கத்தூரியின்பெயர் :—கத்தூரிமான்மதம். ஆ-க.

நால்வகைச்சாந்தாவன :—பீதங்கலவை-வட்டிகை புலியெனை, நால்வகைச்சாந்தின்-நாமமாகும். ஆ-ச

சாந்தின்பொதுப் பெயர் :—கலவைச்சேறும் - கா லேகவண்ணமும், விரையுங்களபமும் - சாந்தின்பொ துப்பெயர். ஆ-ச.

செஞ்சாந்தின்பெயர் :—குங்குமஞ்செஞ்சாந்து. ஆ-க.

பூசுவனவற்றின் பெயர் :—அங்கராகம்பூசுவன. ஆ-க.

மயிர்ச்சாந்தின்பெயர் : — தகரமேலம் - காசறை மயிர்ச்சாந்தே. ஆ-ந.

செறிகுழம்பு-அல்லது-சந்தனக்குழம்பின்பெயர் :- தேய்வையுஞ்செச்சையும்-செறிகுழம்பாகும். ஆ-உ.

அப்புதலின்பெயர் : — கொட்டலுஞ்சாத்தலும் - அப்புதலாகும்.

பூசுதலின் பெயர் :—புலர்த்தலும் வரித்தலும் - பூசலாகும். ஆ-உ.

மகளிராகத்தெழுதுகோலத்தின்பெயர் : — எழுது கோலால் - மகளிராகத்து, தொழில்பெறவரிப்பது - தொய்யிலாகும். ஆ-க.

திலகத்தின்பெயர் :—சுடிகையுந்திலதமும்-சுட்டியுந்திலகம். ஆ-ந.

நுதற்புனைகுறியின் பெயர் : — புண்டரந்திலகம் - நுதற்புனைகுறியே. ஆ-உ.

சிந்தூரத்தின்பெயர் :-சேலேகஞ்சிந்தூரம். ஆ-க.

சாதிலிங்கத்தின்பெயர் :—இங்குலிகஞ்சாதிலிங்கம். ஆ-க.

குங்கிலியத்தின்பெயர் : — குங்குலுவுங் குக்குலுவும்-குங்கிலியமாகும். ஆ-உ.

பெருங்காயத்தின்பெயர் : — இங்குபெருங்காயம் - என்றிசைத்தனரே. ஆ-க.

அரக்கின்பெயர் :— அரத்தமுந்துப்பும்-அரக்கின் பெயரே. ஆ-உ.

சுக்கின்பெயர் :—சுண்டிசுக்கு. ஆ-க.

ஏலக்கின்பெயர் :—துடியேயேலம். ஆ-க.

அதிமதுரத்தின்பெயர் :—அதிங்கமட்டி - அதிம துரமாகும். ஆவ-உ. [ரம். ஆவ-ந.

சாமரையின் பெயர் : — சாமரைகவரி - சவரிசீக

அச்சுதமென்னும்பெயர் : — அறுகுவெள்ளரிசி - கூட்டியதச்சுதம். ஆவ-உ.

பிரப்பென்னும்பெயர் :-கொள்கலமொன்றில்-குறுணி யாக, பல்லுணவுபெய்து-பாரிப்பதுபிரப்பே. ஆவ-உ.

விறகின்பெயர் :— இந்தனங்காட்டம் - முருடிவை விறகே. ஆவ-ந. [சாற்றுவர். ஆவ-க.

ஓமவிறகின்பெயர் :—சமிதையோம - விறகெனச்

நெருப்புறுவிறகின்பெயர் :—ஞெகிழிகொள்ளி-நெ ருப்புறுவிறகாம். ஆவ-உ.

கடைக்கொள்ளியின்பெயர் :—முளரியலாதம்-முற் கங்கடைக்கொள்ளி. ஆவ-ந.

கரியின்பெயர் :—கந்துளுமிருந்தையும்-கரியெனக் கூறுவர். ஆவ-உ. [கும். ஆவ-உ.

சாம்பரின்பெயர் :— அடலைவெண்பலி-சாம்பரா

திருநீற்றின்பெயர் :—காப்பும்பொடியும்-பற்பமும் விபூதியும், திருநீறதனை - செப்புங்கிளவி. ஆவ-ச.

சாணியின்பெயர் :—சாணிபுண்ணிய-சாந்தமெனப் படும். ஆவ-க. [மும்-சுடுசுண்ணச்சாந்தே. ஆவ-உ.

சுடுசுண்ணச் சாந்தின்பெயர் : — சுதையுங்களப

புகையின்பெயர் :—தூமமுமரியும் - தூபமும்புகை யே. ஆவ-ந. [கொழும்புகையாகும். ஆவ-க.

மணப்புகையின்பெயர் :—குருஉப்புகைநறைபடு-

பனிநீரின்பெயர் : — இமசலஞ்சீதநீர் - பனிநீர்க் கெய்தும். ஆவ-உ.

பொடியின்பெயர் :—பிதிர்சிதர்பராகம்-தகர்சின்ன பின்னம், துகளுநீறும்-சுண்ணமுந்தாதும், பொடியின் பெயரே-புழுதியுமாகும். ஆவ-ய. [கந்தாது. ஆவ-ந.

காவிக்கல்லின்பெயர் :— காவிக்கல்செங்கல்-காரி

கழிப்புறுகுறுமலத்தின்பெயர் : — கழிப்புறுகுறும லம்-காட்டமெனப்படும். . ஆவ-க.

இலவின்பஞ்சின்பெயர் :-இலவின்பஞ்சின்பெயர் - பூளையாகும். ஆவ-க. [னல்பருத்தி. ஆவ-ந.

பருத்திப்பஞ்சின்பெயர் :—கார்பாசம்பரி - பன்

பஞ்சினுனியின்பெயர் ;—துய்யேபஞ்சில்-தொடர் நுனியாகும். ஆவ-க.

சோற்றின்பெயர் :—புன்கமிதவை - பொம்மல்போ நகம், அன்னமோதனம் - அயினியடிசில், பாளிகம் பொருகு-மிசைபதம்பாத்து, 'அமலையுணவு-துப்பசனங் கவளம், சொன்றிநிமிரம்-மடைகூழ்புழுக்கல், ஒன்றிய கூரல்-சோறெனவுரைப்பர். ஆ-உச.

பொதிசோற்றின்பெயர் :— பொதிசோற்றுணு - தோட்கோப்பாகும். ஆ-உ.

உண்டொழிலின்பெயர் :—உண்டிபதம்வல்சி-உணு மிசைதல்பக்கித்தல், அயின்றனுங்கல் - விழுங்கறுய்த் தல், மேய்தலயிறல் - நுகர்தலருந்தல், உண்டறின்றல்- பருகுதலென்றிவை, பண்பிற்றொழிலைப் - பகருங்கிளவி. ஆ-ஒள. [ருளிற்குமாகும். ஆ-க.

கூழெனும்பெயர் :— கூழெனும்பெயரெப்-பொ

அடிசிலெனும்பெயர் :—அடப்படுவதடிசில். ஆ-க.

புழுங்கலெனும்பெயர் :-புழுக்குவதுபுழுங்கல். ஆ-க.

தெய்வவுணவின்பெயர் :— அமிழ்துமவியும்-தெய் வவுணவே. பலியுஞ்சருவும்-அப்பெயர்ப்பால. ஆ-ச.

பொரிக்கறியின்பெயர் :—கருணையென்ப - பொரிக் குஞ்சிற்றுணவு. ஆ-க.

பிட்டின்பெயர் :—ஆவிவெந்தைபிட்டு. ஆ-உ.

உக்காரியின்பெயர் :—அஃகுல்லியுக்காரி. ஆ-க.

மோதகத்தின்பெயர் :—மோதகமிலட்டுகம். ஆ-க.

பில்லடையின்பெயர் :—பில்லடைசஃகுல்லி. ஆ-க.

அப்பவர்க்கத்தின்பெயர் :—பூரிகநொலையல் - கஞ் சந்தோசை, பேதவகைப்பெயர்-அப்பமாகும். ஆ-ச.

தினைமாவின்பெயர் :—நுவணையுமிடியும் - தினைநு ண்பிண்டி. ஆ-உ.

சிற்றுண்டியெனும் பெயர் : — அப்பம்பிட்டோ டஃகுல்லியிடியென, செப்பியவெல்லாம் - சிற்றுண்டி யாகும். ஆ-ச.

வறையலின்பெயர் :—வறையலோச்சை. ஆ-க.

பிண்ணாக்கின்பெயர் :-மலாவகம்பிண்ணாக்கே. ஆ-க

புளிங்கறியின்பெயர் :—துவையேபுளிங்கறி. ஆ-க.

கறியின்பெயர் :—கறிநீடாணம். ஆ-க.

குழம்பின்பெயர் :—பாகேகுழம்பு. ஆ-க.

கஞ்சியின்பெயர் :—கஞ்சிகாடிமோழை. ஆ-உ.

தயிரின்பெயர் :—ததியுமளையும் - தயிரெனமொழிப. ஆ-உ.

பாலின்பெயர் :—பயமுங்கீரமும் அமுதமும் பாலே. ஆூ-ங.

நெய்யின்பெயர் :—இழுதுங்கிருதமும்-துப்புநெய்யே-ஆச்சியமென்றும்-அதன்பெயராகும். ஆூ-ச.

மோரின்பெயர் : — முசரேதக்கிரம் - மோரென்றுகும். ஆூ-உ.

வெண்ணெயின்பெயர் :—ஐயங்கவீநம் - நவநீதம் வெண்ணெய். ஆூ-உ. [பேசுவர். ஆூ-உ.]

தேனின்பெயர் :—பிரசமுமதுவும் - தேனெனப்

சருக்கரையின்பெயர் :—கட்டியும்விசயமும் - குளமுங்கன்னலும், ஒட்டியபாகும்-அக்காரமுஞ்சருக்கரை. ஆூ-சா.

கண்டசருக்கரையின்பெயர் :— கண்டம்பாளிதம் - கண்டசருக்கரை. உண்டையயிர்புல்ல - கண்டமொருவிகற்பம். ஆூ-டு.

கள்ளின்பெயர் :—இக்குநனைதேன்-முருகுதொப்பி, நறவுபிரசம் - தணியல்சுரைபடு, வேரிமட்டு - தேறல் சாறு, பாநம்வடிபிழி-மதுவ்ழிதொண்டி, ஆனவரிட்டமும் - சாதியுங்கள்ளாம். அருகிக்கௌவையும் - விளம்பியுமாகும். பாலிசுமாலி - ஆலிமருட்டம், மாலிமுண்டகம் - சாலிமாரி, பாடலிமௌலி - சிக்கர்ஞாளி, பாணிகுந்தி - மதுகரஞ்சுவிகை, ஆசவமாம்பல் - அம்பியும்பதை, மேதைகஞ்சா - விகுணிசுலோகி, எனும்வகையுங்கட் - பெயரெனவறைவர். ஆூ-சஅ.

பானமென்னும்பெயர் :—பானம்பருகுவன - எவற்றிற்கும்பெயரே. ஆூ-க.

அமிழ்தின்பெயர் :—அமிழ்தின்பெயரே - மருந்தெனலாகும். ஆூ-க.

நஞ்சின்பெயர் :—ஆலங்காரி-கடுவிடநஞ்சே. ஆூ-ச.

உண்பனவற்றின்பெயர் :—துற்றியுண்பன. ஆூ-க.

தின்பனவற்றின்பெயர் :—திற்றிதின்பன. ஆூ-க.

இலைநுகர்விலங்கி னுணவின்பெயர் : — இலைநுகர் விலங்கின் - உணவுகுளகென்ப. ஆூ-க.

பறவையுணவிற்குமொருசார்விலங்கி னுணவிற்கும் பெயர் :—பறவைக்குமொருசார் - விலங்கிற்குமுணவு, இரையுறையூட்டி - எனப்பெயர்பெறுமே. ஆூ-ங.

ஒழிபொருளின்பெயர் :—மிச்சிலெச்சில்-உச்சிட்டமொழிபொருள். ஆூ-ங.

துணைக்காரணத்தின்பெயர் :— துப்பேசாதனம் - துணைக்காரணமாம், ஒக்குமதற்கே-உபகரணப்பெயரே. ஆ.-௪.

இரண்டின்பெயர் :—உபயமுமுகளமும் - ஓரிரண் [டாகும். ஆ.-௨.]

பேய்த்தேரின்பெயர் :—வெண்டேர்கானல்-பேய்த்தேராகும். ஆ.-௨.

சல்லியின்பெயர் :— துணையறைதூக்கம்-சல்லியா [கும். ஆ.-௩.]

அலகெனும்பெயர் :-மகிழின்பரலும்-நெல்லின்மணியும், அணையவையலகெனும் - பெயரவாகும். ஆ.-௫.

நிரையின்பெயர் :—ஒளியும்பந்தியும் - ஒழுங்குநிரையாகும். ஆ.-௩.

வருநற் கங்கை வடதிசைப் பெருமையும்
தென்றிசைச் சிறுமையும் நீக்கிய குறுமுநி
குண்டிகைப் பழம்புனற் காவிரிப் பெரும்பதி
அம்பற் கதிபதி சேந்தன் றிவாகரத்

தாறுவது
பல்பொருட்பெயர்த்தொகுதி
முற்றிற்று.

ஏழாவது
## செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

மூலபாடம்.

செயற்கைவடிவாவன :— எண்ணியவெழுவகை - உலோகத்தின்மரத்தின், மண்ணிற்றோலின்-நூலின்மற்றும், திண்மைசெய்வடிவே - செயற்கைவடிவாகும்.

சூலப்படையின்பெயர் :— கழுமுண்மூவிலைவேல் - முத்தலைகழுச்சத்தி, வருபவைசூலப் - படையெனவழங்கும். ஆ.-௫.

மழுவின்பெயர் :—பரசுகணிச்சி-நவியந்தண்ணம், பாலமென்றைந்தும் - மழுவின்பெயரே. ஆ.-௫.

சக்கரத்தின்பெயர் :—திகிரிநேமி - ஆழிவளையெஃகம் - சுதரிசனம்பரிதி - சக்கரத்துறுபெயர். ஆ.-எ.

வில்லின்பெயர் :— சிலைதநுவேணு - கார்முகஞ்சாபம், முனியேசார்ங்கம்-சராசனம்பிநாகம், கோதண்டந்

தவர் - கொடுமரந் துரோணம், வார்வில்லென்ப - மதி நூற்புலவர். ஆூ-௰ங.

சிவன்வில்லின்பெயர் :—பிநாகம்பிஞ்சகன்-பெருஞ் சிலைப்பெயரே. ஆூ-க.

மாயோன் வில்லின்பெயர் : — சார்ங்கமாயோன் - தநுவின்பெயரே. ஆூ-க.

அம்பின்பெயர் :-பகழிவாளி-வண்டுபாணம், நிகழ் சரம்பத்திரி-சிலீமுகம்பல்லம், புங்கங்கணைகுதை-கங்கபத்திரம், அத்திரந்தோணி-கோல்விசிகமம்பே.ஆூ-௰சு.

அம்புத்தலையின்பெயர் :—உடுவம்புத்தலை.ஆூ-க.

மொட்டம்பின்பெயர்:—உதண்மொட்டம்பே.ஆூ-க.

அம்பின்-குதையின்பெயர்:-புங்கமம்பின்குதை.ஆூ-க.

அம்பின்கட்டின்பெயர்:-புதையம்பின்கட்டே.ஆூ-க.

வேலின்பெயர்:—சத்தியெஃகம்-உடம்பிடிகுந்தம், விட்டேறரணம்-ஞாங்கரயில்வேல். ஆூ-அ.

கைவேலின்பெயர் :—கப்பணந்தோமரம் - குந்தம் கைவேல். ஆூ-ங.

வச்சிரப்படையின்பெயர்:—சம்பம்வயிரப் - படை குலிசம்வச்சிரம். ஆூ-ங.

வாளின்பெயர் :— நாந்தகங்கட்கம் - நவிரேதிகடகம், ஏய்ந்தவேணு - வஞ்சநாட்டம், கடுத்தலையுவணி - கரவாளங்கோணமோ, டடுத்தனவசியே - வாளென வறைவர். ஆூ-௰ங.

ஈர்வாளின்பெயர் :— வேதினங்கரபத் - திரமிவை யீர்வாள். ஆூ-உ.

உடைவாளின்பெயர் :—கரிகையுடைவாள். ஆூ-க.

கழுக்கடையின் பெயர் : — கழுமுள் கழுக்கடை. ஆூ-க.

அரிவாளின்பெயர் :—குயமும்புள்ளமும்-கொடுவாளுமரிவாள். ஆூ-ங.

பிண்டிவாலத்தின்பெயர் : — பீலித்தண்டெஃகம் - பிண்டிவாலம். ஆூ-உ.

கணையப்படைக்கலத்தின்பெயர் : — பரிகமுமெழுவும்-கணையப்படைக்கலம். ஆூ-உ.

தண்டாயுதத்தின் பெயர் : — கதைதடிதண்டாம். ஆூ-உ.

இருப்புலக்கையின்பெயர் :—மூசலமிருப்புலக்கை. ஆூ-க.

* மட்டிப்படைக்கலத்தின்பெயர் :— முற்கரங்காத்திரம் - கூர்த்திகைமுசுண்டி, பட்டஞ்சங்கு - மட்டிப்படைக்கலம். ஆ-௬.

உளிக்குந் தறிகைக்கும்பெயர், — உளிக்கருவிதறிகை-கருவியென்றிசைப்பன, கணிச்சிப்பெயரின் - வழங்குங்கருவி. ஆ-க. [கத்தியாகும். ஆ-க.]

† இலைமூக்கரிகத்தியின்பெயர்:— குளிரிலைமூக்கரி -

நாராசத்தின்பெயர் :—சலாகைநாராசம். ஆ-க.

இருப்புமுள்ளின்பெயர் : — தாறிருப்பு முள்ளே. ஆ-க. [கவணை. ஆ-௩.]

கவணின்பெயர் :— தழறட்டை கவணை-கல்லெறி

ஆயுதப்பொதுவின்பெயர் :—படைக்கலந்தானை - கடுமுட்சுதனம், படையேதுப்பு - கழுமுளேதி, கார்த்திகைகூர்த்திகை-ஆயுதப்பொதுப்பெயர். ஆ-ம.

ஆயுதக்கூர்மையின்பெயர் :—வள்ளயினுதிநுனை-வையார்நிசிதம், வசிவயிரம்பூ-அவற்றின்கூர்மை. ஆ-ம.

நுனியின்பெயர் :— நுதியுநுனையும் - நுனியாகுமே. ஆ-உ. [லும்படையுறை. ஆ-உ.]

படையுறையின்பெயர் : —தடறுங்கருவிப்-புட்டி

அம்புக்கூட்டின்பெயர் :—ஆவமுந்தூணியும் - ஆவநாழியும், அம்புபெய்கூடென் - றறையல்வேண்டும். ஆ-௩.

கவசத்தின்பெயர் : — அரணஞ்சாலிகை - ஆசுபரணம், கவசங்கண்டம் - மெய்யுறைதம்பம், கஞ்சுகசூரிகை - மெய்புகுகருவி. பாரமும்பரமும் - அப்பெயர்ப்பால. ஆ-ம௩.

தலைக்கருவியின்பெயர் :—சீசகஞ்சிரகம் - தலைக்கருவியாகும். ஆ-உ.

பலகையின்பெயர் :—சேடகம்வட்டம்-தோலேவேதிகை, கேடகம்பலகை - ஆமெனக்கிளப்பர். ஆ-௫.

மாவட்டணத்தின்பெயர்:—தட்டியம்பலகை-தட்டுமாவட்டணம். ஆ-௩.

தோற்பலகையின்பெயர் : — தோற்பரந்தோற்பலகை-தோலுமாகும். ஆ-உ.

---

* சம்மட்டி-வடி-வுளதோராயுதம்.

† நிகண்டாசிரியருள் ஒருசாரார் கோட்பாடுபற்றி இச்சூத்திரமிவ்வாறு பிரிக்கப்படினும், மற்றொருசாரார் கோட்பாடுபற்றிப் பிரிக்கப்படுமாறு. மூக்கரிகத்தின்பெயர் குளிர்-இலை-உ.

கைக்கட்டின்பெயர் :— கைப்புடைகோதை - கைக்கட்டியாகும். ஆஉ-உ.

பக்கரையின்பெயர் :— சுவடுபக்கறை-என்னச்சொல்லுவர். ஆஉ-க.

குதிரைக்கலணையின்பெயர் :— பல்லணம்பருமம் - படைபரங்கருவி, சொல்லற்குரியபண் - கலணைத்தொடர்பே. ஆஉ-ரு.

குதிரைவாய்க் கருவியின்பெயர் : — கலினமுங்கறுழும்-குதிரைவாய்க்கருவி. ஆஉ-உ.

குசைக்கயிற்றின்பெயர் : — வற்கங்குசைக்கயிறு. [ஆஉ-க.]

குதிரைச்சம்மட்டியின்பெயர் :—மத்திகைசம்மட்டி. ஆஉ-க.

கழுத்திடுகயிற்றின்பெயர் :—கவடும்புரோசையும் - கழுத்திடுகயிறே. ஆஉ-உ.

தளையின்பெயர் :—நிகளமும்விலங்கும் - தொடருந்தளையே. ஆஉ-ட.

வலிபற்றிரும்பின்பெயர் : — பறளைகற்பொறியள் - ளுவலிபற்றிரும்பே. ஆஉ-ட.

பாதகிண்கிணியின்பெயர் :—பரிபுரநூபுரம்-பரியகமென்ன, வருபவைபாத - கிங்கிணிமணியே. ஆஉ-ட.

சிலம்பின்பெயர் :--பரிபுரமரவம்-பைம்பொன்ஞெகிழி, அரிபெய்சிலம்பென்-றறையல்வேண்டும். ஆஉ-ட.

அரக்குடைச்சிலம்பின்பெயர் :—அரதனஞெகிழி, அரக்குடைச்சிலம்பணி. ஆஉ-உ.

காலணிமணிவடத்தின்பெயர் :— பாதசாலம்-காலணிமணிவடம். ஆஉ-க.

பாடகத்தின்பெயர் :—பாதகடகம் - பாடகமாகும். ஆஉ-க.

ஆடவர்காலணிவடத்தின்பெயர் :-கெழுதகையம்பல்-கிழவோன்சேந்தனில், விழைவுறுதியாகத்து - வீரத்துவீக்கிய, கழலேயாடவர் - கான்மிசையணிவடம். ஆஉ-க.

மேகலைமுதலியவையாவன :—மேகலைகாஞ்சி - கலாபம்பருமம், விரிசிகையேழுமோ - ரெட்டுமீரெட்டும், மூவாறுநாலெட்டும்-முறைக்கோவைமணியே. ஆஉ-ரு.

அரைப்பட்டிகையின்பெயர் :—மருவோடத்தரை-பட்டிகையாகும். ஆஉ-உ.

அரைநாணின்பெயர் :-இரதனமரைநாண். ஆஉ-க.

சதங்கையின்பெயர் :-சதங்கைகிங்கிணியே. ஆஉ-க.

பதக்கத்தின்பெயர் :—பதக்கங்கண்டிகை - ஆரமெனப்பகர்வர். ஆ-உ.

முலையணிவடத்தின்பெயர்:—ஆரம்பதக்கம்-கண்டிகைமாலை, கோவைகாசு - காழ்தாமமென்றிவை, மாதர் முலைமேல் - அணிவடமாகும். ஆ-அ.

பூண்கடைப்புணர்வின்பெயர் :—கடையுங்கயிலும்-பூண்கடைப் புணர்வே. மடையுமதற்கு - வகுக்கப்படுமே. ஆ-ரு.

ஆபரணத்தொங்கலின்பெயர் :—தொங்கலுமுத்தியும் - அவற்றின்றூக்கம். ஆ-உ.

துடக்குவடிவின்பெயர் :—மதலிகைதூக்கம்-துடக்குவடிவே. ஆ-உ.

தோளணியின்பெயர் :— அங்கதங்கேயூரம்-தோளணியாகும். ஆ-உ.

கங்கணத்தின்பெயர்:—கடகமுந்தொடியும்-கங்கணமாகும். ஆ-உ.

கைவளையின்பெயர் :—சங்குந்தொடியும்-சூடகமுஞ்சரியும், கன்றுங்குருகும்-வண்டுங்கைவளை. ஆ-எ.

குண்டலத்தின்பெயர் :—குழையேமிஞ்சிகை - காதணிகுண்டலம். ஆ-ரு.

காதணியின்பெயர் :—கடிப்பிணைவல்லிகை - வேடகங்காதிற், கணிப்பெயர்த்தோடும்-ஆகுமென்ப. கொட்டையுமதனை - கூறுங்கிளவி. ஆ-பு.

நுதற்சுடிகையின்பெயர்:-சுட்டிநுதற்சுடிகை. ஆ-க.

பட்டத்தின்பெயர் :—பட்டமோடை. ஆ-க.

நுதலணியின்பெயர் :—புல்லகமிலம்பகம் - நுதன்மிசையணிபூண். ஆ-உ.

சிரமாலையின்பெயர் :—கரோடிகைசிரமாலை - பெயரெனக்கருதுவர். ஆ-க.

மணிமுடியின்பெயர் :—சுடிகைமௌலி-முடியேசேகரம், மகுடங்கிரீடம் - மணிமுடியென்ப. ஆ-சு.

பேரணிகலத்தின்பெயர் :— பெரும்பூண்மதாணி - பேரணிகலமே. ஆ-உ.

ஆபரணப்பொதுப்பெயர் :-பொலங்கலனணிழை-பூணணிமதாணி, பொன்னினுமணியினும் - செய்யாபரணம். ஆ-எ.

உண்கலத்தின்பெயர் :—காலந்தட்டம் - தளிகையுண்கலம். ஆ-ரு.

கிண்ணம் அல்லது சிறுவட்டிலின்பெயர் :—வள்ளங்கிண்ணம். ஆ-க.

முடியுறுப்பின்பெயர் :—தாமமுகுடம்-பதுமங்கோடகம், கிம்புரிமுடியுறுப்-பைந்தெனக்கிளப்பர். ஆ-ரு.

தோட்டின்பெயர் :—தோடுதாடங்கம். ஆ-க.

பிள்ளைக்கைவளையின்பெயர் : — பிடிகமென்பது - பிள்ளைக்கைவளை. ஆ-க.

ஓசைசெய்தளையின்பெயர் : — குடச்சூல்ஞெகிழம் - ஓசைசெய்தளை. ஆ-உ.

செவிமலர்ப்பூவின்பெயர் :—கன்னுவதஞ்சம்-செவிமலர்ப்பூவே. ஆ-க.

சரிமணியின்பெயர் :—கலாபந்தோரை - சரிமணிப்பெயரே. ஆ-உ.

மோதிரத்தின்பெயர் :—விரலணியாழி - வீகமிலச்சினை, மோதிரமென்ன-மொழியற்பால. ஆ-ச.

வயிரச்சங்கிலியின்பெயர் :—சங்கிலிவயிரச் - சங்கிலிசாரும். ஆ-க.

பூணுநூலின்பெயர் :—உபவீதம்பூணுநூல். ஆ-க.

தெய்வவுத்தியின் பெயர் : — திருத்தெய்வ வுத்தி. ஆ-க.

தலைக்கோலத்தின் பெயர் : — பிஞ்ஞகந்தலைக்கோலம். ஆ-க.

தலைப்பாளையின் பெயர் : — தலைப்பாளைதொய்ய [கம். ஆ-தூ.}

கல்லழுத்துங் குழிவட்டத்தின் பெயர் :—கல்லழுத்துங்குழி-வட்டங்கேவணம். ஆ-க.

பூணின்பெயர் :—கோளகைதாங்கி-வயிரங்கிம்புரி, பூணின்பெயரென - போற்றல்வேண்டும். ஆ-ச.

வட்டிலின்பெயர் :—கோரம்வட்டில். ஆ-க.

நாழிகைவட்டிலின்பெயர் :—கன்னனாழிகை-வட்டிலாகும். ஆ-க.

சட்டுவத்தின்பெயர் :—தவ்விசிலகம் - தருவிசட்டுவம். ஆ-ங.

கண்ணாடியின்பெயர் :-ஆடிபடிமக்கலம்-தருப்பணங்கஞ்சநம், ஆதரிசநமுகுரம்-கண்ணாடியாகும். ஆ-சூ.

பெருமணியின்பெயர் :—கண்டையானைமணி - பெருமணித்தொடர்பே. ஆ-உ.

கைம்மணியின்பெயர் :—பரந்தவட்டம் - படலிகை கைம்மணி. ஆ-உ.

சேகண்டியின்பெயர் —எறிமணிசேகண்டி - ஆமெ னவுரைப்பர். ஆ-க.

கலசப்பானையின்பெயர் :—கஞ்சனைகலசப் - பானை யென்ப. ஆ-க.

படிக்கத்தின்பெயர் :—படியகம்படிக்கம். ஆ-க.

நெய்த்துடிப்பின்பெயர் :—சுருக்குச்சுருவம்-நெய் த்துடுப்பாகும். ஆ-உ.

தூபமுட்டியின்பெயர் :—தூபமுட்டியிந்தளம்-தட வெனச்சொல்ப. ஆ-உ.

தாளத்தின்பெயர் :— கிட்டிபாண்டில் - கஞ்சந்தா ளம். ஆ-ங

தூபமணியின்பெயர் :—கைம்மணிதூபமணி. ஆ-க.

பூண்கொள்கலத்தின்பெயர் :— பீடிகைதுமாநம்- காண்டங்கண்டிகை, கோடிகங்கடிப்பம் - பூண்கொள்க லமே. ஆ-ரு.

பரணியின்பெயர் :—கோயம்பரணி. ஆ-க.

காளத்தின்பெயர் :—காகளங்காளம். ஆ-க.

சிறுசின்னத்தின்பெயர் :—பீலிசிறுசின்னம். ஆ-க.

குறிஞ்சிப்பறையின்பெயர் :— தொண்டகமுருகிய ம்-துடியிவை மூன்றும், வென்றிகொள்குறிஞ்சிப்-பறை யெனவிளம்புவர். ஆ-ங.

பாலைநிலப்பறையின்பெயர் :—துடியேபாலை - வே டர்தொல்பறை. ஆ-க.

ஏறங்கோட்பறையின்பெயர் :—முல்லையாளர்-ஏறங் கோட்பறை, சொல்லியபம்பை-ஆகலுமுரித்தே. ஆ-க.

மருதநிலப்பறையின்பெயர் :— கிணையேமருதக் - கிளர்பறையாகும். ஆ-க.

நெய்தற்பறையின்பெயர் :—சாபறைநெய்தல்-பறை யெனச்சாற்றுவர். ஆ-க.

உவகைப்பறையின்பெயர் :—தூரியமுவகைப்-பறை யெனச்சொல்ப. ஆ-க.

சிறுபறையின்பெயர் :—ஆகுளிசிறுபறை. ஆ-க.

ஒருகட்பறையின்பெயர் :—ஒருகட்பறைமொந்தை. ஆ-க.

உடுக்கையின்பெயர் :—தண்ணுமையுடுக்கை. ஆ-க.

இடைசுருங்கு சிறுபறையின்பெயர் :— துடியிடை சுருங்கு-வடிவிற்சிறுபறை. ஆ-க.

மார்ச்சனையின்பெயர் :—மண்ணைமார்ச்சனை. ஆூ-க.

பரந்தவாய்ப்பறையின்பெயர் .—பதலைபரந்தவாய்ப் -பறையெனப்பகர்வர். ஆூ-க.

முழவத்தின்பெயர் :—முழவங்குளிரென-மொழிய வும்படுமே. ஆூ-க.

குடமுழவின்பெயர் :—மண்கணைமுழவம்-குடமுழ வின்பெயர். ஆூ-உ.

கடிப்பின்பெயர் :—குணில்கடிப்பாகும். ஆூ-க.

திமிலையின்பெயர் :—சல்லரிதிமிலை· ஆூ-க.

பேரிகையின்பெயர்:—சகண்டைமுழவம்-பணையே சகடம், துந்துபிபேரிகைத்-தொகுபெயராகும். ஆூ-ரு.

நிசாளத்தின்பெயர் :—தண்ணுமைநிசாளம். ஆூ-க.

பன்றிப்பறையின்பெயர் :— குடப்பறைபன்றிப் - பறையெனக்கூறுப. ஆூ-க.

கரடிப்பறையின்பெயர் :— தட்டைகரடிப் - பறை யெனக்கூறுப. ஆூ-க.

இடக்கையின்பெயர் :— இடக்கையாமந் - திரிகை யெய்தும். ஆூ-க.

படகத்தின்பெயர் :—பணவந்திண்டிமம் - ஆநகம் படகம். ஆூ-ங.

பல்வகைப்பறையின்பெயர்:—சல்லரிபம்பை-தடாரித க்கை. பல்வகைப்பறையின்-பெயர்ப்பாலவாகும். ஆூ-ச.

வாச்சியப்பொதுவின்பெயர் :— முரசுதாளம்-பீலி மூருடு,பொருகோட்டையொடு-முழவுதூரியம்,பணையிவ் வெட்டும்-வாச்சியப்பொதுப்பெயர். ஆூ-அ.

கொம்பின்பெயர் :—வயிரேயிரலை-ஆம்பல்கோடென், றினையநான்கும்-கொம்பெனவிசைப்பர். ஆூ-ச.

யாழின்பெயர் :—தந்திரிவீணை - கிந்நரம்விபஞ்சி, கருவிகோடவதி - அறுசரம்வல்லகியென், றறைபவை யோசை-யாழின்பெயரே. ஆூ-அ.

யாழ்முறுக்காணியின்பெயர் :—மாடகமுறுக்காணி. ஆூ-க.

யாழ்வலிக்கட்டின்பெயர் :—திவவுயாழ்வலிக்கட்டு. ஆூ-க.

யாழ்நரம்பின்பெயர் :—கோலேதந்திரி-குரல்யாழ் நரம்பே. ஆூ-ங.

ஆதியாழாவது :—ஆயிரநரம்பிற் - ருதியாழாகும். [ஆூ-க.

தேரின்பெயர் :—கவரியியந்திரம்-திகிரிசயந்தநம், இரதம்வையம்-கொடிஞ்சிகூவிரிதேர். ஆ-அ.

தேர்க்காலின்பெயர் :— உருளிநேமி - பரிதியுந்தி, திகிரியாழி-சில்லிதேர்க்கால். ஆ-எ.

தேரினகத்திற்செறிகதிரின்பெயர் :—ஆரேயுருளின் அகத்திற் செறிகதிர். ஆ-க.

தேர்நடுவின்பெயர் :—நாப்பணுந்தட்டும்-தேர்நடு வாகும். ஆ-உ.

தேர்க்கொடிஞ்சியின்பெயர் :—கூவிரங்கொடிஞ்சி.

தேர்மொட்டின்பெயர் :— கூம்புதேர்மொட்டே. ஆ-க.

பாண்டில்பூண்டவூர்தியின்பெயர் :—சிவிகைபாண் டில்-பூண்டவூர்தி. சகடம்வையம் - எனப்பெயர்சாரும். ஆ-ரு.

பரிபூண்டீர்க்கு மூர்தியின்பெயர் :— பாண்டில்கஞ் சிகை-வையமென்பன, பரிபூண்டீர்க்கும்-ஊர்திப்பால. ஆ-ரு.

பண்டியின்பெயர் :—வையமுருளொழுகை-சாகாடு சகடம்,எய்தியசாடு-பண்டியென்றிசைப்பர். ஆ-சு.

பண்டியுளிரும்பின்பெயர் :— இருசுங்கந்தும்-பண் டியுளிரும்பாம்.ஆ-உ.

தேர்மேலிடுபரப்பின்பெயர் :— பலகைப்பாவே - தட்டுப்பாவென, இலகுதேரின் - மேலிடுப்பரப்பே. ஆ-உ.

தேர்மேன்மரச்சுற்றின்பெயர் :— கிடுகுதேர்மேல் - புடைசூழ்மரச்சுற்று. ஆ-க.

கலப்பையின்பெயர் :— நாஞ்சிலலம்படை-கலனை யென்ன, வாய்ந்தநான்கொடு-மேழியுங்கலப்பை.ஆ-ரு.

கலப்பைப்பல்வகையுறுப்பின்பெயர் :— கலப்பை யுங்கலனையும்-என்னவரும்பெயர், உரைக்கிலொன்றிற் கமைந்தபல்லுறுப்பே. ஆ-உ.

கொழுவின்பெயர் :—கோளேகொழுவாம். ஆ-க.

தூணின்பெயர் :—கந்தெழுவெளிலே - ஆளாநந் தறி, கம்பந்தம்பம்-மதலைபற்றுத்தூண். ஆ-கூ.

யானைத்தூணின்பெயர் :—ஆளாநம்வெளில்-யானை யணைதறி. ஆ-உ.

குறுந்தறியின்பெயர் :—போதிகைகுறுந்தறி.ஆ-க.

வேள்வித்தூணின்பெயர் :—யூபம்வேள்வித்தூண். ஆ-க.
கணையமரத்தின்பெயர் :—எழுவேகணையமரம். ஆ-க.
தொழுமரத்தின்பெயர் :—தொழுவேதொழுமரம். ஆ-க.
கதவின்பெயர் :—கவாடமும்புதவும் - வாரியுங்கதவே. ஆ-ந.
கதவிற்செறிதாழின்பெயர் :— சீப்புக்காழ்கதவிற் - செறிதாழாகும். ஆ-உ.
யானைத்தோட்டியின்பெயர் :—அங்குசம்கோணம்- யானைத்தோட்டி. ஆ-உ.
சுட்டுக்கோலின்பெயர் :—சுட்டுக்கோலுலை-யாணிக்கோலே. ஆ-க.
சம்மட்டியின்பெயர் :—கூடஞ்சம்மட்டி. ஆ-க.
உரலின்பெயர் :— உலூகங்கறையிவை-இரண்டுமுரலே. ஆ-உ.
உலக்கையின்பெயர் :—முசலமுந்தடியும்-உலக்கை. யாகும். ஆ-உ.
அஞ்சனக்கோலின்பெயர் :—கோலஞ்சனக்கோல். ஆ-க
எழுதுகோலின்பெயர் :—துகிலிகையெழுதுகோல். ஆ-க.
ஊசியின்பெயர் :—ஊசிசூசி. ஆ-க.
ஊசித்துளையின்பெயர் :—பாசமூசித்துளை. ஆ-க.
ஓலைதீட்டும்படையின்பெயர் :—ஊசிகண்டமாணி- ஓலைதீட்டும்படை. ஆ-ந.
சங்கிலியின்பெயர் :—சங்கிலிதொடர்துவக் - கிடங்கணிசாலும். ஆ-ந.
உறியின்பெயர் :—சிமிலிசிக்கம்-சிதர்தூக்குறியே. ஆ-ச.
ஊஞ்சலின்பெயர் :—ஊசல்விண்டாண் - டூஞ்சலாகும். ஆ-உ.
கட்டிலின்பெயர் :—மஞ்சம்பாரி - அரிபரியங்கம், இங்கிவைகட்டில்-எனமொழிந்தனரே. ஆ-ச.
விசியின்பெயர் :—விசியரியாகும். ஆ-க.
தவத்தோர்பீடத்தின்பெயர் :— விட்டரம்பீடிகை- தவத்தோர்பீடம். ஆ-உ,
சிங்காதனத்தின்பெயர் :— பத்திராசநஞ்சிங்-காதனம்பகரும். ஆ-க.
அளவைக்காலின்பெயர் :—குளகமம்பணம்-தூம்புகச்சம், அளவைக்காலென்-றறையல்வேண்டும். ஆ-ச.

நாழியின்பெயர் :—குஞ்சநாழி. ஆ௨-க.
கொத்தளிப்பாயின்பெயர் :— ஆரைகொத்தளிப் பாய். ஆ௨-க.
புற்பாயின்பெயர் :—சாப்பைபுற்பாய். ஆ௨-க.
பிரப்பம்பாயின்பெயர் :—சாதிப்பாய்பிரப்பம் - பா யெனச்சாற்றுவர். ஆ௨-க.
தோற்பாயின்பெயர் :—சருமந்தோற்பாய். ஆ௨-க.
தடுக்கின்பெயர் :—தவிசுதடுக்கே. ஆ௨-க.
குழாயின்பெயர் :—தண்டுகுழாயம். ஆ௨-க.
பூந்தட்டின்பெயர் :— பூந்தட்டுக்கோடிகம். ஆ௨-க.
பூப்பெட்டியின்பெயர் :— பூப்பெட்டி மூழிவாய். ஆ௨-க.
கிடுகின்பெயர் :—சட்டங்கிடுகே ஆ௨-க.
விளக்குத்தண்டின்பெயர் :— தம்பங்கௌசிகம்-மத் திகைவிளக்குத், தண்டின்பெயரென - சாற்றப்பெறுமே. ஆ௨-ங.
முறத்தின்பெயர் :—சின்னந்தட்டு - சேட்டைமுற் றில், முன்னியமுறமென—மொழியற்பால. ஆ௨-ச.
புட்டிலின்பெயர் :—புட்டிலிறவை. ஆ௨-க.
கூடையின்பெயர் :—கூடைவட்டிகை ஆ௨-க.
சுளகின்பெயர் :—சுளகேசூர்ப்பம். ஆ௨-க.
துடைப்பத்தின்பெயர் :— சோதிநிமாறு-துடைப் பமாகும் ஆ௨-உ.
மூழையின்பெயர் :—மூழைமூழி. ஆ௨-க.
மத்தின்பெயர் :—மத்தும்மத்தம். ஆ௨-க.
தயிர்கடைதறியின்பெயர் :—வெளிறயிர்கடைதறி. ஆ௨-க.
பாவாற்றியின்பெயர் :—பாவாற்றிகுச்சு. ஆ௨-க.
நூனாழியின்பெயர் :—நூனாழிநாடா. ஆ௨-க.
காராம்பியின்பெயர் :— காராம்பிபூட்டை-கிழாரம் பிகாம்பி. ஆ௨-ச.
இறைகூடையின்பெயர் :— இறைகூடைபிழார்-இ டராகும்மே. ஆ௨-உ.
நீர்ப்பத்தரின்பெயர் :— நீர்ப்பத்தர்க்கம்பணம் - தூம்புநேர்ப. ஆ௨-உ.
பாணின்பெயர் :— பணைவயிதணம் - கழுதுபா ணே. ஆ௨-ங.

ஏணியின்பெயர் :—ஏணிகடவை- இறைவைசேணி. ஆ-ந.

கண்ணேணியின்பெயர் : — மால்புகண்ணேணி - எனவகுத்தனரே. ஆ-க.

கிளிகடிகருவியின்பெயர் :—குளிருந்தழலும்-தட்டையுமூன்றும், கிளிகடிகருவி-எனக்கிளத்தினரே.ஆ-ந.

குறுந்தடியின்பெயர் :—குணிலேகுறுந்தடி. ஆ-க.

நெய்த்துடுப்பின்பெயர் : — துடுவைநெய்த்துடுப்பே. ஆ-க.

அடைகுறட்டின்பெயர் : — பட்டடையடைகுறடு. ஆ-க.

பருங்குறட்டின்பெயர் :—முருடுபருங்குறடே. ஆ க.

மரக்கலத்தின்பெயர் :—வங்கம்பாதை - தோணியானம், தங்குமதலை-திமில்பாறம்பி, பஃறிசதாவே-பாரதிநவ்வே, போதந்தொள்ளை-நாவாயென்றிவை, மேதகு நீர்மேல்-ஓடுமரக்கலம். ஆ-மரு.

மரக்கலப்பாயின்பெயர் :— இதையேமரக்கலப்-பாயெனவிசைப்பர். ஆ-க.

தோணியின்பெயர் :—பகடுபஃறி - அம்பியோடம், திமிலேதோணி-எனச்செப்பினரே. ஆ-ச.

தெப்பத்தின்பெயர் :—பகடுபட்டிகை - யானமம்பி, படுவைதொள்ளம்-புணைமிதவைதெப்பம். ஆ-அ.

பேழையின்பெயர் : — மஞ்சிகமஞ்சிகை - பேழையென்றிசைப்பர். ஆ-உ.

கெண்டிகையின்பெயர் :—காண்டங்கரகம் - கமண்டலங்குண்டிகை,கடிப்பங்கெண்டிகை - ஆமெனக்கருதுவர். ஆ-ரு.

பீடிகைஅல்லதுபூண்கொள்கலத்தின்பெயர் :— பீடிகைதுமானம்-எனப்பெயர்பெறுமே. ஆ-க.

கொள்கலமென்பது:— மாலையுஞ்சாந்தும்-மடியும்பெய்த,கோலவிகற்பம்-கொள்கலமாகும். ஆ-ச,

பகுவாய்கொள்கலத்தின்பெயர் :— பகுவாய்கொள்கலம்-பிழாவெனப்படுமே. ஆ-க.

ஓலைக்குடையின்பெயர் : — குடையோலையேனம் - பொதிமுடையென்ப. ஆ-ந.

பொற்கொல்லன்சின்னத்தட்டின்பெயர் :— கன்னம்பொற்கொல்லன்-சின்னத்தட்டே. ஆ-க.

மயிற்பீலிக்குடையின்பெயர்:-கலாபந்தழையே-தொங்கலென்றிவை,கலாபப்பீலியில்-கட்டியகவிகை. ஆ-ங.
வெண்குடையின்பெயர் :—தொங்கல்கவிகை-சத்திரம் பிச்சம்,இங்கிவைவெண்குடைப்-பெயரவாகும். ஆ-௪.
சிற்றாலவட்டத்தின்பெயர் :—பீலிசாந்தாற்றி - சிற்றாலவட்டம்.ஆ-உ.
கால்செய்வட்டம் அல்லது பேராலவட்டத்தின் பெயர் : —விசிறிவீசநம்-சாந்தாற்றியென்றிவை, வகுத்தகால்செய்-வட்டமாகும். ஆ-ங.
சிப்பின்பெயர்:-சிக்கமயிர்வாரி-சீப்பென்றாகும்.ஆ-உ.
மகளிராடுங்கலத்தின்பெயர் :— ஒரைமகளிர்-ஆடுங்கலமாம். ஆ-க.
சூதாடுகருவியின்பெயர் :— காசும்வல்லும்-சூதாடுகருவி. ஆ-உ.
கவற்றிற்றாயத்தின்பெயர்:—ஆயங்கவற்றிற்-றாயமாகும்.
சாரியின்பெயர் : —சாரிநாயாம். ஆ-க. [ஆ-க.
பந்தின்பெயர் : —கந்துகக்கிளவி - பந்தெனப்படுமே. ஆ-க.
சும்மாட்டின்பெயர் :—சுமடுசுமையடை-சும்மாடாகும். ஆ-உ. [கும். ஆ-உ.
கண்டத்தின்பெயர் :— கடிகைதுண்டம்-கண்டமா
நூலின்பெயர் :—பனுவலுந்தந்தும்-நூலெனப்படுமே. ஆ-உ.
தைத்தலின்பெயர் :— பொல்லந்தைத்தல்-புரையறுதுன்னம். ஆ-உ.
வாரின்பெயர் :—வ ளும்வகிரும்-வாரதாகும்.ஆ-உ.
கயிற்றின்பெயர் : - பாசமுநாணும் - குணமுங்கயிறே. ஆ-ங.
தாமணியின்பெய ர் :—தாமணிதாம்பே. ஆ-க.
காற்றுடியின்பெய ர்:—கழல்கழங்குகதலி-காற்றுடிக்காம். ஆ-ங.
கயிற்றுவலையின் பயர் :—சாலமென்பது - கயிற்றுவலையே. ஆ-க.
செருப்பின்பெய :—தொடுதோல்கழலிவை-தோற்செருப்பாகும். ஆ-௨ .
அடியிற்றொடுவ வற்றின்பெயர்:— அடியிற்றொடுவன-பாதுகைமிதிய . ஆ-உ.

மிதியடிக்கொட்டையின்பெயர் :— குடைமிதியடி மேல்-இட்டகொட்டை. ஆ-க.

பற்சீவுங்கோலின்பெயர் :— மெல்கோல்பற்சீவும் - கோலின்மேற்றே. ஆ-க.

தூண்டிலின்பெயர்:—தூண்டில்வளிசம். ஆ-க.

அம்மானையின்பெயர்:—அம்மானையம்மனே.ஆ-க.

தவிட்டின்பெயர் :—முட்டைதவிடு-முடையுமாகும். ஆ-உ.

நொய்யின்பெயர் :-நொய்நொறுங்குநுவலும்.ஆ-க.

உலைத்துருத்தியின்பெயர் :— அத்திரியுலைத்துருத்திக்-கடைத்தபெயரே. ஆ-க.

கொல்லுலைமூக்கின்பெயர் : — குருகுஞ்சிவையும் - கொல்லுலைமூக்கே. ஆ-உ.

செத்தையின்பெயர் : — தூராஞல்காடு-ம்யல்செத்தைசொல்லும். ஆ-ச.

பாடையின்பெயர் :—பாடைவெள்ளில். ஆ-க.

சாணைக்கல்லின்பெயர்:-சிலாவட்டஞ்சாணைக்கல்.ஆ க.

நீர்தூஉந்துருத்தியின்பெயர்:—சிவிறிசிறுதாரை-நீர்தூஉந்துருத்தி. ஆ-உ.

குடத்தின்பெயர் :—இடங்கர்தசும்பு - கடங்கும்பங்குடம்,கன்னலென்றும்-கருதுவர்புலவர். ஆ-ரு.

கரகத்தின்பெயர்:-கன்னல்சிரகம்-கரகாமாகும்.ஆ உ.

பானையின்பெயர் :— தடாவுங்குழிசியும்-மிடாவும் பானை. ஆ-ந.

மிடாவின்பெயர்:— அகளமுந்தசும்பும்-தடாவுமிடாவே. ஆ-ந.

தாழியின்பெயர்:—சாடியகளம்-பதலைதாழி.ஆ-ந.

நீர்ச்சாலின்பெயர்: —இடங்கர்வட்டம்-நிறைநீர்ச்சாலே. ஆ-ந. [கூறுப. ஆ-உ.

கொப்பரியின்பெயர்:—கொப்பரிகடாரம்-தசும்புங்

தயிர்கடைதாழியின்பெயர் :—குடாரமந்திறியொடு -தயிர்கடைதாழி. ஆ-உ.

அகலின்பெயர் :—சராவஞ்சுத்திகை - அகலெனச் சாற்றுவர். ஆ-உ.

தகழியின்பெயர் :—இடிஞ்சில்பாண்டில் - தகழிக்கியம்புவ. ஆ-உ.

குடுவையின்பெயர் :— குண்டங்குடுவை. ஆ-க.

சட்டியின்பெயர் :—சட்டிவிசளை. ஆகூ-க.

இரப்போர்கலத்தின்பெயர்:—கடிஞையையம் - இரப்போர்கலமே. ஆகூ-உ.

கொள்கலமெவற்றின்பெயர் :— இடுங்கலம்பாண்டம்-என்பவிரண்டும்,கொள்கலமெவற்றிற்கும் - கூறுங் கூற்றே. ஆகூ-உ.

மண்ணரிநாரின்பெயர் :— மட்பகைகுயவர் - மண்ணரிநாரே. ஆகூ-க.

கூறையின்பெயர் :— மடியேபுட்டம்-மாறுகங்கலையுடை,இலக்கர்கலிங்கம்-சேலைகாடகம்,காழகமறுவை-வட்டஞ்சாடி, தானைவாதநம் - கோடிகமம்பரம், ஆசாரமாடை-தூசுதுகினீவி, சம்படம்பட்டம்-படாம்புடைவை கூறை. ஆகூ-உ௬.

நல்லாடையின்பெயர்—எடகம்புங்கம்-பங்கமிடையல்,வேதகஞ்சில்லிகை-சித்திலிகைகத்தியம், நாகந்தூரியம்-கருள்பாரிநல்லாடை. ஆகூ-௰உ.

பட்டாடையின்பெயர் :—பாளிதங்கோசிகம்-நேத்திரம்பட்டாடை. ஆகூ-ங..

பட்டுவிகற்பத்தின்பெயர்:—காம்புபட்டு - விகற்பங் கழறும். ஆகூ-க.

நற்பணித்தூசின்பெயர் :— தேவாங்கநற்பணி-தூசிற்குச்செப்புப. ஆகூ-க.

மயிர்ப்படாத்தின்பெயர் :— மயிரகமூரிகம்-மயிர்ப் படாமாகும். ஆகூ-உ.

மரவுரியின்பெயர் :—வற்கலைசீரை - இறைஞ்சிமரவுரி. ஆகூ-ங.

செம்படாத்தின்பெயர் :— கம்பளஞ்சிம்புளி-செம் படாமாகும். ஆகூ-உ.

முகபடாத்தின்பெயர்:—சூழிமுகபடாம். ஆகூ-க.

மேற்போர்வையின்பெயர்:— மீக்கோண்மேற்போர்வை. ஆகூ-க.

முன்றானையின்பெயர்:—முன்றானைதோகை.ஆகூ-க.

கொய்சகத்தின்பெயர்: — நீவியென்கிளவி - மாதர் கொய்சகம். ஆகூ-க.

கம்பளிப்படாத்தின்பெயர் :— கம்பலங்கம்பளம்-என்பவிரண்டும், கம்பளிப்படாத்தின் - கண்ணவாகும். ஆகூ-உ.

கச்சின்பெயர் :—வம்புபிணிகை - பட்டிகைவார்வ டம், என்றிவையைந்தும்-கச்செனவிசைப்பர். ஆூ-ரு.

கச்சின்கடைக்கயிற்றின்பெயர் :— சார்வாரங்கச் - சின்கடைக்கயிறே. ஆூ-க.

உடுத்தலின்பெயர் :—சுற்றலுடுத்தல். ஆூ-க.

உத்தரீயத்தின்பெயர் :—உத்தரீயமேகாசம். ஆூ-க.

அத்தவாளத்தின் பெயர் : — வடக மத்தவாளம். ஆூ-க.

மேற்கட்டியின்பெயர் : —கம்பலம்விதாநம் - மேற் கீட்டியாகும், வானிபடங்கெனவும் - வகுத்தனர்புலவர். ஆூ-உ.

சட்டையின்பெயர் :—மெய்ப்பைகஞ்சுளி-கஞ்சுகம் வாரணம்,குப்பாயமங்கி-சட்டையாகும். ஆூ-சு.

இடுதிரையின்பெயர் :—கண்டமேமம்படாம் - கஞ் சிகைகழனியென், றிங்கிவையெழினி-ஓடுபடமிடுதிரை. ஆூ-எ.

கொடியின்பெயர் :— பதாகைகேதநம்-விலோதநங் கதலிகை, படாகைதுவசம்-துகிலிகைவானி,படங்குஞ்ச த்தியும்-பாற்படுத்தின்னவை, நுடங்கியகொடியென-நு வன்றிசிஞேரே. ஆூ-ம.

சிறுகொடியின்பெயர் :—கந்திகைசிறுகொடி-ஆகக் கருதுவர். ஆூ-க.

சீரையின்பெயர் :—சிதவல்சிதர்துணி-சீரையாகும். ஆூ-ரு.

மெத்தையின்பெயர் :— அணையுந்தவிசும்-தளிமமி ம்மூன்றும்,பூளையுமெத்தை-எனப்புகன்றனரே. ஆூ-ரு.

தலையணையின்பெயர் :—உபதாநந்தலையணை - உள் ளூங்கிளவி. ஆூ-க.

வீதியிற்கட்டியகொடியின்பெயர் :—வீதியிற்கட்டிய -கொடிப்பெயர்விடங்கம். ஆூ-க.

தேர்க்கொடியின்பெயர் :— கூவிரந்தேரில் - திகழ் கொடிக்கூற்றும். ஆூ-க.

சித்திரப்படாத்தின்பெயர் : — சித்திரப்படாமே - பொத்தகமாகும். ஆூ-க.

சித்திரத்தின்பெயர் : — ஓவியம்வட்டிகை - துகிலி கையென்றிவை மேவிடுசித்திரம் - என்மனுர் புலவர். ஆூ-ரு.

எழுதலின்பெயர் :— வரைதறீட்டல்-பொறித்தலி ரேகை, எழுதற்பெயரென-இயம்பினர்புலவர். ஆூ-௪.

இறுக்கலின்பெயர் :—தற்றலிருக்கல். ஆூ-க.

முற்றவப் பயனோ கற்றவப் பயனோ
சாபத் திழுக்கிய தேவசா தரில்
தோற்ற முடையனென அம்பற் றோன்றிய
இயற்கைச் சேந்தன் றிவாகரத்

தேழாவது

செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி

முற்றிற்று.

---

எட்டாவது

# பண்புபற்றியபெயர்த்தொகுதி.

மூலபாடம்.

பண்பென்பன:—வடிவினளவின்-வண்ணத்தின்வ ரூஉம், கடனியன்மரபில்-காட்சிப்பொருளினும், உணர் விற்புலப்படும் - உண்மைப்பொருளினும், பகர்குணத் தொடர்பு-பண்பெனப்படுமே.

வட்டவடிவின்பெயர் :—வலயநேமி - திகிரிமண்டி லம், பரிதியாழி-பாண்டில்விருத்தம், கோளகைகடகம்-பாலிகைகொம்மை, தட்டுவலயம்-சக்கரஞ்சில்லி, வட்ட வடிவிற்-கொட்டியபெயரே. ஆூ-௰௬.

வளைதலின்பெயர் :— குடிலந்தட்டு-வாங்கல்குலாவ ல்,கோட்டம்வணரே-வளாவல்வளைதல். ஆூ-எ.

திரள்வடிவின்பெயர் :— பந்தஞ்சேடு-கொம்மையு வவு,புஞ்சந்தொகுதி-சோகந்துறுமல்,உண்டைமாழை-குவிதல்கணைகுழியம், பிண்டமேழிரண்டும் - திரள்வடி வென்ப. ஆூ-௰௪.

குவிந்தவடிவின்பெயர் : —குவையுங்குவாலும்-குப் பையுமிராசியும்,குவவுங்குவிதற்-பொருளவாகும்.ஆூ-ரு.

தொகுதியின்பெயர் :—தொகுதியுமொய்யும்-தோடு ங்குழுமலும்,கருவியுதொகுதிப் - பெயர்க்கட்டுரைக்கும். ஆூ-ரு.

துறுவலின்பெயர் :— துறுவுந்துற்றுவும் - துறுவ லாகும். ஆூ-உ.

ஐம்மைவடிவின்பெயர்:— அடரேதகடுமுதல்-ஐம்மைவடிவின. ஆ-உ.

பரந்தவடிவின்பெயர் :— படலேபடர்ச்சி-பரந்தவடிவின. ஆ-உ.

குமிழ்ப்புவடிவின்பெயர் :—குமிழ்ப்புறுவடிவே-புளகப்பெயர்க்கொடை. ஆ-க.

மொக்குள்வடிவின்பெயர் :— மொக்குள்வடிவே - கொப்புளமாகும். ஆ-க.

உண்டையின்பெயர் :—சூழியந்திரளுண்டைக்-குரியவாகும். ஆ-உ.

உட்டுளைவடிவின்பெயர் :— தூம்புநாழிபுழை-உட்டுளைவடிவின.சுரையுமுட்டுளை-வடிவெனலாகும்.ஆ ச.

துளையுடைப்பொருளின்பெயர்:—புழையுங்குழலும்-துளையுடைப்பொருளே. [கும். ஆ-உ.

துவாரத்தின்பெயர் :— சுரியுமடையும்-துவாரமா

சர்ச்சரைவடிவின்பெயர்:— பிணரேசர்ச்சரை-வடிவினதாகும். ஆ-க.

கதிர்த்தொகுதிபோல்வன மயிர்த்தொகுதிபோல்வனவற்றின்பெயர்:--கதிர்த்தொகுதிமயிர்த்தொகுதி-போல்வனகற்றை- ஆ-க.

இடனுடைமையின்பெயர் :—நாடென்கிளவி-இடனுடைமையாகும். ஆ-க.

பெருமையின்பெயர்:— தடந்தடவுவிபுலம்-வியலிலகவியன்விறல், முடலேயகலுள்-[illegible]ாடுசெம்மை, பீடுகெண்பாழி - பின்மூன்புமான்மா,வந்தைகலந்தை - பரிபணேயழுவம்,பிறங்கல்படுநனி-இயக்கம்வியந்தகை, செம்மலணிநன்-றருமையிருமை, கருமைகதழ்வு - கயவுமூரி, பெருமைபாடு-மண்ணலுமதற்கே. ஆ-ருகூ. [ஆ-உ.

பருமையின்பெயர் :—பருஉம்பீநமும்-பருமையாகும்.

சிறுமையின்பெயர் :-இறையணுவஞ்சம் - சிறிதுசின்னம்,வறிதாசென்ப-சிறுமையின்னம், கன்றுகணந்தநு-இட்டிமையற்பம், தன்னமுமதற்கே - சாற்றப்பெறுமே. [ஆ ௰ச.

சிறிதின்பெயர் :—கிலமேசிறிதாம். ஆ-க.

முழுவதின்பெயர் :—அகிலமுழுவதும்-ஆமெனவறைவர், அகண்டஞ்சமத்தம்-அடங்கல்யாவும், முடியவனைத்தெல்லாம்-முற்றுமுழுவதாம்,அடையவென்பதும்-அதன்பாற்ருகும். ஆ-௰.

மிகுதியின்பெயர்:—அமலையுறுதவ-நனியுருப்பாற்றல், கழிவுவிதப்பிறப்பு - கதழ்வுகடுமை, பெருமைசிறப்பான்றல்-மதர்வுபிறங்கல், அதிகம்புதுமை - கயவுபரம்பொற்பு,பொக்கம்பொம்மலொ - டெழுமூன்றிரண்டும், மிக்கோர்மிகுதி-எனவிளம்பினரே. ஆ-உரு.

உயர்ச்சியின்பெயர் :— உகப்பேதுங்கம் - உந்நதமோடே,நிவப்பேசேணே - பிறங்கலேந்தல்-ஓங்கனிமிர்தல், புரைபரியீராறும்-பாங்கினல்லோர், உயர்ச்சியெனப்பகர்வர். ஆ-மஉ.

தூரத்தின்பெயர்: —சேணுநீளிடையும்-சேய்த்துந்தூரம். ஆ-ரு. [பாடே. ஆ-ரு.

விசாலத்தின்பெயர் :—விசாலம்விபுலம்-விரிவிடம்

பரப்பின்பெயர் :— பாய்தலுஞெமிர்தலும்-பப்பும்பரவையும்,பரவலுந்தாவலும்-அழுவமும்பரப்பே.ஆ-எ.

கூடலின்பெயர்:-கூடல்குவிதல்-பயினிசங்கம்.ஆ-ரு.

நீளத்தின்பெயர் :—வார்தல்போகல் - சேண்வரியுறையே,நீக்கந்தீர்தல் - நேர்பாடொழுகல், நெடுமைவடிதல்-நெடிலிவைநீளம். ஆ-மஉ.

செவ்வையின்பெயர்:-செவ்வனுமிருசும்-செப்பமுஞ்செம்மையும்,செவ்வைமற்றதற்கு-நேருஞ்செப்புப. ஆ-ு.

நுண்மையின்பெயர் :—நுவணைநொய்வு - நுழையயிர்நுணங்கு,சாயன்முளரி - நுணுகுநுணுக்கம், ஆய்தனிமுற்றல் - நொசிவுநுனிகூர்மை,ஆயவீரேழும்-நுண்மையாகும். ஆ-மச.

அகலத்தின்பெயர் :— அகறல்பாழி-ஆய்வுபரப்பகலுள்,கண்ணறைபடர்தல்-வியலிடமான்றல்,பயனைவுவிரிவு-மேனளியென்றிவை, அகலமென்பர்-அறிந்திசிஞோரே. ஆ-மச.

சிறுகலின்பெயர்:—அஃகலுமருகலும்-அவிதலுங்குறைதலும்,சுருங்கலுங்குன்றலும்-சிறுகலாகும்.ஆ-சு.

உள்ளதுசிறத்தலின்பெயர் :— கூர்ப்புங்கழிவும் - உள்ளதுசிறத்தல். ஆ-உ.

மேன்மையின்பெயர்:—கயவுசாயல்-சால்புமேம்பாடென்,றுயர்வினுன்கும்-மேன்மையாகும். ஆ-ச.

செறிவின்பெயர் :— விறப்புமுறப்பும்-வெறுப்புநளியும், செற்றலும்பொதுளலும் - ஞெமுங்கலுமிவர்தலும்,துற்றுஞ்சடிலமும்-செறிவெனச்சொல்வர். ஆ-ம.

மிடைதலின்பெயர் :— துதைதலுந்ததைதலும்-மிடைதலாகும். ஆ-உ.

நிறைவின்பெயர் :--மலிதல்பெருகல்-மல்கலார்தல், தெகிழ்தறுவன்றல்-கெழுமறெவுளல், பழுதினிறைவின்-பாலவாகும். ஆ-அ.

பாதியின்பெயர் :—பாலும்பயலும்-அருத்தமுங்கூறும்,பாகமும்பாதிப்-பெயரெனப்பகர்வர். ஆ-ரு.

பாரத்தின்பெயர் :—சிருங்குருவும்-கநமுனாட்பும், பாரப்பால-பொறையுமதற்கே. ஆ-ரு.

மென்மையின்பெயர் :— மிருதுசுகுமாரம் - மென்மைமேன. ஆ-உ.

நொய்ம்மையின்பெயர் :— இலகுநொவ்வும்-இலேசுநொய்ம்மை. ஆ-ந.

சலியாநிலையின்பெயர் :—துவஞ்சலியாநிலை - துருவமுஞ்சொல்ப. ஆ-உ.

அளவின்மையின்பெயர் :— அபாரமனந்தம்-அபரிமிதமளவின்மை. ஆ-ந.

ஐவகைவண்ணமாவன:—செம்மையுங்கருமையும்-பொன்மையும்பசுமையும்,வெண்மையுமைவகை - வண்ணத்தின்மேன. ஆ-ரு.

சிவப்பின்பெயர் :—அரக்குச்செம்மை - துப்புத்துவர்சோணம், அரத்தஞ்சேத்து-பூவல்பாடலம், சிந்துரமத்து - படீரமருணம்,சேந்துசெக்கர் - குலிகஞ்சேப்பெனூ, வந்தபதினேழும்-சிவப்பெனவறைவர். ஆ-௰எ.

பொன்னிறத்தின்பெயர் :— பீதம்பிங்கலம்- புற்கெனல்பொன்னிறம். ஆ.ந.

புகர்நிறத்தின்பெயர்:—கபிலங்குராணிறம்-புகர்புற்குமாமே. ஆ-ந.

வெண்மையின்பெயர் :—வால்பால்சுவேதம் - தவளம்பாண்டு, நரைவிளர்சுக்கிலம் - குருகுவெண்மை. ஆ-௰.

பச்சைநிறத்தின்பெயர் :—பாசும்பைம்மையும்-சாமமும்பைத்தும்,பேசிற்பசுமையும் - சாமளமும்பச்சை. ஆ-சு.

கருமையின்பெயர் :— காளிமங்களங்கம்-கார்களநீலம்,காளமஞ்சநம்-கருள்கறைமாசொடு,காளகமெனப்பதி-ஞென்றுங்கருமை. ஆ-௰க.

மாசின்பெயர் :— களங்கமலி நம் - கசடுகறைமாசே. ஆ-௪.

நிறத்தின்பொதுப்பெயர் :— புகரேமேனி-மாமை கேழ்வண்ணம்,குருவேகொழுமை-கெழுவேசந்தம்,உரு வெனப்பத்தும்-நிறத்தின்பொதுப்பெயர். ஆ-௰.

ஒளியின்பெயர் :—வில்லேவாள்வெயில்-நிலவுகதிர் கிரணம், எல்லேசேடி-சுடர்கனல்கேழ்நகை, தாமம்விரி யல்-விளக்கநிழறுளக்கம். வாமநீமம்-வளரொளியாகும். ஆ-௰௬.

ஒளிவிடுதலின்பெயர் :—அலங்கல்சுடர்தல்-அவிர் தலிமைத்தல், வயங்கறயங்கல் - ஒளிர்தனகுதல்,இலங்க லொன்பதும்-ஒளிவிடுதலிசைக்கும். ஆ-௯.

மிகச்சிவத்தலின்பெயர் :— சேத்தலுஞ்சேப்புய்-மி கச்சிவத்தலாகும். ஆ-௨.

கட்டழகின்பெயர் :— ஏர்வனப்பெழில்யாணர்-மா மைகேழ்தையல்,காரிகைதோட்டி-கவினேவிடங்கம்,வா மம்வகுப்பொப்பு-மஞ்சுபொற்பு, காமரணியிவை-கட்ட ழகாகும். ஆ-௰௮.

அழகின்பெயர் :— நவ்வியந்தம்பை - பூபொலம ற்புதம், செவ்வியொண்மைமாண்பை - சித்திரமழகே. ஆ-௰௧.

பேரழகின்பெயர் :—விசித்திரம்பேரழகு. ஆ-௧.

வடிவின்பெயர் :—செண்ணம்வடிவே. ஆ-௧.

வண்ணத்தின்பெயர் :— வண்ணஞ்சந்தம் ஆ-௨.

வலியின்பெயர் :—மிடலேயும்பல் - ஆற்றல்வீரம், முடலைபீடு-மள்ளன்மதுகை,வாய்மைமல்லல்-தோற்றம தமெறும், மூரிமுடுகல்-முரண்வயம்பாழி, மைந்துதிண் மை-மீளிதுப்பூக்கம், ஏணேநோன்மை-முன்புமொய்ம் புவலம், தாவுதாநம்-மாநமுரம்வலி. ஆ-௨௯.

மதர்த்தலின்பெயர் :—மதர்வுமதர்த்தல். ஆ-௧.

நொய்தின்பெயர் :—நொங்வுநொய்தாதல். ஆ-௧.

குறைப்பாட்டின்பெயர் :—குறையேநிரப்பே-ஈநங் குறைபாடு. ஆ-௩.

எளிமையின்பெயர் :—எண்மையுந்தஞ்சமும்-தண் மையுமெளிமை. ஆ-௩.

புல்லறிவின்பெயர் :—வெண்மையும்வெளிறும்-த ண்மையும்புல்லறிவு. புல்லறிவிற்கு-புகல்பசிற்றறிவும். ஆ-௪.

இழிதகவின் பெயர்: —இளிவேபரிபவம் - இழிதக வாகும். ஆ-உ.

மானத்தின்பெயர்: —மானம்பெருந்தன்மை-குற்றப் பாடும்வரையார். ஆ-உ.

வெப்பத்தின்பெயர்: —அழலேயுருப்பம் - வெப்ப மாகும். ஆ-உ.

குளிர்ச்சியின்பெயர்: —சீதளநளியே - சீதந்தண்கு ளிர்ச்சி. ஆ-ச.

வீரத்தின்பெயர்: —விறலேகொற்றம் - வீரமாகும். ஆ-உ.

வெற்றின்பெயர் :— வலனேகொற்றம்-ஆடுவாகை, விசயம்புகலெ‌ன - ஆறும்வெற்றி. ஆ-சு.

தோல்வியின்பெயர்: —தொலைவுநிலையழிவு-தோற் றமேர்ல்வி. ஆ-ந.

அளவின்பெயர்: — தாறுகான்மாத்திரை-வரைது ணைநேரம்,காறுபரிமாணம்-அவதியளவாகும். ஆ-கூ.

எல்லையின்பெயர்:—எணியும்வரைப்பும் - வரம்பு மெல்லை. ஆ-ந.

வரையறையின்பெயர்:—அளவுநிறையெண்-வரை யறையாகும். ஆ-ந.

அளவையின்பெயர் :—கச்சமளவை-கடனுமாகும். ஆ-உ.

கூறுபாட்டின்பெயர் :—வகையுந்திறனும்-கூறுபா டாகும். ஆ-உ.

முதுக்குறைவின்பெயர்: — தெட்பமுதிர்ச்சி-ஒட்ப முதுக்குறைவே. ஆ-ந.

அறிவின்பெயர் :—உரனேகாட்சி - உணர்வேயொ ண்மை,புலனேஞானம் - அறிவெனப்புகல்வர். ஆ-சு

கருத்தின்பெயர்:— எண்ணல்பேணல்-எடல்சேத்து, கண்ணுதல்குறிப்பு-விரும்பல்வினையே, உன்னம்மதமே -இங்கிதஞ்சிந்தை,வன்மைமெய்ம்மை - ஏமாப்புள்ளல், கவிஞரெண்ணிரண்டும்-கருத்தெனக்கருதுவர். ஆ௰சு.

கருதலின்பெயர் :— கண்ணனுதலல் - புகறலகரு தல். ஆ-ந.

நல்லுணர்வின்பெயர்: —ஞானமுஞ்சீலமும்-நல்லு ணர்வாகும். ஆ-உ.

விருப்பின்பெயர் :--மாதர்காதல்-ஆதரவார்வம்,காமர்வெப்பம் - பற்றேகாமம்,வீழ்தல்வேட்கை - தாழ்தல் வெஃகல்,நசையேநம்பு-மேவுநயப்பு, பிணையேபேணல் -பெட்பேபெட்டல்,இவறலவாவே - இவர்தல்கவர்தல். விழைவேவிருப்பின் - பொருட்கட்டுரையே. ஆஉ-உரு.

அவாவின்மையின்பெயர் :—வெறுப்பொல்லாமை -வேண்டாமைமுனைவோ, டுவர்ப்பறுத்திடன்மா-உரைப்பவவாவின்மை. ஆஉ-எ.

அமையுமென்றலின்பெயர் :— அலமென்கிளவி -அமையுமென்றல். ஆஉ-க.

அன்பின்பெயர் :--பரிவுமார்வமும்-ஈரமும்பற்றும், அளியுநாரும்-பரிவுமன்பே, ஆஉ-எ.

எழுமையுந்தொடர்ந்தவன்பின்பெயர் : — உழுவலெழுமையும்-தொடர்ந்தவன்புரைக்கும. ஆஉ-க.

இரக்கத்தின்பெயர் :--அருளுங்கருணையும்-இரக்கமாகும். ஆஉ-உ.

மநத்தின்பெயர் :— உன்னமகஞ்சித்தம்-உள்ளமிதயம்,முன்னநெஞ்சு-மொழிபமனக்கே. ஆஉ-எ,

ஒருதலைக்காமத்தின்பெயர் :—கைக்கிளையொருதலை -காமமாகும், ஆஉ-க.

வழுவுடைக்காமத்தின்பெயர் :—பெருந்திணைவழுவுடை-காமப்பெயரே. ஆஉ-க.

அன்புடைக்காமமென்பது:—ஐந்திணையுடையது -அன்புடைக்காமம் ஆஉ-உ.

காமக்கவலையின்பெயர் :—மதநங்காமம் - விரகங்காமக்கவலை. ஆஉ-ங.

வேட்கைப்பெருக்கத்தின்பெயர்:--வேணவாவென்பது-வேட்கைப்பெருக்கம். ஆஉ-க.　　[ஆஉ-உ.

தக்கதின்பெயர்:— தகவுந்தகுதியும் - தக்கதாகும்.

மாட்சியின்பெயர் :—மாணேமாண்டல் - மாட்சியாகும்.ஆன்றலுஞ்சால்பும்-நிறைவுமமைதியும். வாய்த்தலுஞ்செழுமையும்-வளமும்வரையார். ஆஉ-கூ.

சினத்தின்பெயர் :--சினமறமுனிவு-செயிர்கறுவுசிற்றம்,வெகுளிகதம்வைரம்-வேரஞ்செற்றம். ஆஉ-ம.

சினக்குறிப்பின்பெயர் :— கறுப்புச்சிவப்புக்-கனறல்கன்றல்,வியர்ப்புப்புழுங்கல்-புகைதல்வெய்துறல்,சினத்தின்குறிப்பில்-தெரிக்குங்கிளவி. ஆஉ-அ.

முன்கோபத்தின்பெயர்:--கோம்பல்வெம்பல்-கொந்தன்முன்கோபம்,கனிதலுமதற்கே-கழறலாகும்.ஆூ ச.
பெருங்கோபத்தின்பெயர் :—உருத்தல்சீறல் - உலறன்முனைதல்,உடற்றல்காய்தல் - விடைத்தறீவிரத்தொடு,தொடுத்தவெட்டும்-பெருத்தகோபம். ஆூ-அ.
வைரத்தின்பெயர் :—செற்றஞ்சலம்பவம்-தொந்தம்வேரம்,உற்றவைரம்-மொழியுங்கிளவி. ஆூ-ரு.
அதிசயத்தின்பெயர்:—வியப்பிறும்பூது-விம்மிதம்விபரீதம்,அச்சோவைந்தும் - அதிசயமாகும். ஆூ-ரு.
அதிசயமுறவிரங்குதலின்பெயர் :—ஐயோவந்தோ - அன்னோவாவோ, என்பவதிசயமுற - இரங்கற்குரிய. ஆூ-ரு.
கண்ணோட்டத்தின்பெயர்: —நயப்புணர்வு நாகரிகம்-கேண்மைகண்ணோட்டம். ஆூ-ரு.
உள்ளக்களிப்பின்பெயர் :— மதர்ப்புப்பெருமிதம்-பாடவமத்தம்,செருக்குமதமுள்ளக் - களிப்பின்றிறத்த. ஆூ-கா.
கருதலின்பெயர் :— சுட்டலுங்குறித்தலும் - கருதலாகும். ஆூ-உ.
அழுக்காற்றின்பெயர் .—அழுக்காறுமநச்சழுக்கம்.கூரம்பொருமை-நோனைமையுமழுக்காறு. ஆூ-ச.
மனக்கோட்டத்தின்பெயர் :— ஔவியமநக்கோட்டம். ஆூ-க.
மறத்தலின்பெயர் :— இழுக்குச்சோர்வு-பொச்சாப்பிகழ்ச்சி,வழுக்குமறான்மறவி-மறத்தலாகும். ஆூ-எ.
கொடுமையின்பெயர்:— கோரஞ்சண்டம்-கடினங்கடுமை,கூரங்கொடுமை-அஃகக்கூறுவர். ஆூ.ரு.
உள்ளமிகுதியின்பெயர் :--ஊக்கமுமுரணும்-உள்ளமிகுதி. ஆூ-உ.
இறுமாப்பின்பெயர்:--இருமாப்பெக்கழுத்தம்.ஆூ க.
அகமலர்ச்சியின்பெயர்:-செம்மாப்பகமலர்ச்சி.ஆூ க.
பேரறிவின்முதிர்ச்சியின்பெயர் :— முதுக்குறைவு பேரறிவின்-முதிர்ச்சியாகும். ஆூ-க
கொடுங்கோன்மையின்பெயர்:— மேகாணேகொடுங்கோன்மை. ஆூ-க.
நிலையுடைமையின்பெயர் :--ஏணேநிலையுடைமை. ஆூ க.
நாணத்தின்பெயர்:--மாநமும்வெட்கலும்-வட்கலு

ஞ்சமழ்ப்பு, ரணமுநாணமுணர்த்தும் - நடையவாகும். ஆ-௪.

மதித்தலின்பெயர் :—பேணலுங்கருதலும்-மதித்தலாகும். ஆ-௨

தீதின்பெயர் :—ஊறுங்கோளும்-தீதாகும்மே.அந்தராயந்திங்கலாபமுட்டுப்பா, டந்தரம்விக்கிநம்-தட்டுந்தீதாம். ஆ-௯.

இன்பத்தின்பெயர் :— நயனுமகிழ்வும்-நகையுமின்பம்,ஏமமுமதற்கே-இயம்புங்கிளவி. ஆ-௪.

தளர்வின்பெயர் : — எட்டைதளர்வே-அசாவென்கிளவியும்,தளர்ச்சிக்கறைப. ஆ-௨.

குறிப்பின்பெயர் :—நாட்டியங்குறிப்பே. ஆ-க.

சுழற்சியின்பெயர் :—அலமரல்கோட்டு-கறங்குசுழல்வு,தெருமரல்சுழற்சி-ஆமெனச்செப்புவர்.ஆ-ரு.

இரங்கலின்பெயர் :— இனைதலெற்றித்தல்-இரங்கலாகும். ஆ-௨.

ஐயத்தின்பெயர் :—கொல்லேமாறுதல்-அநுமாநமாசங்கை,ஐயமென்பர்-அறிந்திசினோரே. ஆ-௪.

இகழ்ச்சியின்பெயர் :—எள்ளனகையிகழ்வு-உவர்ப்பொல்லாமையிகழ்சசி. ஆ-ரு.

நன்மையின்பெயர் :—மண்ணன்மணிசிர் - யாணர்மாசறல், நன்னர் நறுமை-உறுதி நயமென், றின்னவை நன்மைக்-கெய்தும்பெயரே.ஆ-அ.

அகமகிழ்ச்சின்பெயர் :—ஆநந்தமின்பம்-அகமகிழ்ச்சியாகும்.தொய்யலுங்கட்டியும் - அப்பெயர்சிவணும். ஆ-௪. [கும். ஆ-௨

உவகையின்பெயர் :— ஓகைமாராயம் - உவகையாகும்.

நிச்சயத்தின்பெயர் :—தீர்க்கமுந்தரிப்பும்-தேறுநிச்சயம், மன்றவென்கிளவியும் - வகுப்பவதற்கே.ஆ-௪.

ஆக்கத்தின்பெயர் :—நந்தலாக்கம். ஆ-க.

பெயரின்பெயர் :—நாமமபிதாநம் - நாட்டும்பெயரே. ஆ-௨-

அறியாமையின்பெயர் : — எய்யாமையறியாமை - ஆகுமென்ப.மருட்சிமடம்பேதைமை-மற்றுமறியாமை. ஆ-௪.

அறிவின்றிரிவின்பெயர் :—துயவென்கிளவி-அறிவின்றிரிவே. ஆ-க.

அறிமடத்தின்பெயர் :— பெருஞ்சேந்தனம்பல் - பெருமான்போல, தெரிந்துபிறரறிவின் - சோர்வுபுறம றைத்,தறிந்துமறியார்-போறலறிமடம். ஆ-எ.

மறவாக்கடனின்பெயர்:—கடைப்பிடிகொண்டது-மறவாக்கடனே. ஆ-க.

நோயின்பெயர் :— மடங்கனீமுன்-மடியஞரழுங்கல்,முடங்குகுத்து-பிணிபையுள்சூர்நோய். ஆ-ம.

நரகநோயின்பெயர் :— நரகநோயாதனை. ஆ-க.

வேதனைபண்ணுநோயின்பெயர் :— வாதைபீதி - வேதனைபண்ணுநோய். ஆ-உ.

உன்மத்தத்தின்பெயர் :—மான்றன்மாழ்கல்-கழும ல்களிமறல், மான்மாழாத்தல் - மையன்மைந்துணரா மை,மருண்மயன்மயக்கம் - அனந்தரினமை, இருண்ம யர்வேமம்பித்-துன்மத்தமாகும். ஆ-மக.

தெளிவின்பெயர் :—நனவுணர்வுதேற்றம்-துணிவு தெளிவாகும்.ஆ-ச.

பொறுமையின்பெயர் :— நோனுமைபொறுமை - ஆமெனநுவல்வர். ஆ-க.

நீங்காமையின்பெயர் :— ஆனுமைதண்டாமை-ஆயிரண்டுநீங்காமை. ஆ-உ.

பொறையின்பெயர் :— நோன்மைநோன்றல்-பொறையெனநுவல்வர். கமித்தலுமாற்றலும் - சகித்தலு மோர்ப்பும்,மற்றப்பொறையை-வகுக்குங்கிளவி.ஆ-சு.

வறுமையின்பெயர் :—அல்கலொற்கம்-இலம்பாடின்மை,நல்குரவுவறுமை-ஆமெனநவில்வர்.குறைவுமிச்சை-குறுவாழ்க்கையஃகல், சிறுமைமிடிவறுமை- நிரப்புஞ்செப்புப, ஆ-மஉ.

தனிமையின்பெயர் :— புலம்பேதனிமை.கேவலத் தோடேகம்-கிளத்துபதனிமை. ஆ-ந.

பொலிவின்பெயர்:—துப்பக்கலித்தல்-பம்பறுவன்றல், பொற்புக்கஞறல்-உவப்பேபமரல், அதிகமங்கலம்-மலர்ச்சியென்றிவை,பொலிவின்பெயரென-புகன்றனர் புலவர். ஆ-மக. [பொலிவழிதலாகும். ஆ-உ.

பொலிவழிதலின்பெயர் :— புல்லெனன்மழுங்கல்-

வருத்தத்தின்பெயர்: —உயவேயனுக்கம்-கவறலுயங்கல்,அயர்வேயாகுலம்-அணங்குகசிவே, வயாவென்றின்னவை-வருத்தமாகும். ஆ-கூ.

சோம்பலின்பெயர் :—ஆஞ்சியமுங்கல் - அலேசன்மாழ்கல், அஞர்தன்னொள்கல்-அஞ்சலாழ்தல், தூங்கலசைதல் - மடிசோம்பலாகும். மூரிமந்தமும் - மொழிபசோம்பல். ஆ-ம௩.

ஒண்மையென்னும்பெயர் :— நன்மையுமிகுதியும்-அறிவுமொழுங்கும், ஒண்மையென்னும் - சொல்லிற்குரிய. ஆ-௪.

நயனென்னும்பெயர் :—பயனுமகிழ்வும்-இன்பமுநன்கும், நயனென்கிளவி-நடைபெற்றியலும். ஆ-௫.

அச்சத்தின்பெயர் :—அதிர்ப்புக்கம்பலே - வெருவுஞராமுங்கல், பொதிர்ப்புத்துணுக்கம் - இரிதல்கூசுதல், வெடிப்புத்துளக்கம் - கரிப்பேதெருமரல், விதிர்ப்புப்பனித்தல்-அலமரல்வெம்மை, வெறிபுலம்புவீதி - கவலேசூர்பிறக்கம்-நடுக்கமிடும்பை-மிறையேயுலேதலென், றடுத்தனவெல்லாம்-அச்சமாகும். பேஎநாமுருமென-வருஉங்கிளவி, ஆமுறைமூன்றும்-அச்சப்பொருள.ஆ-௩ம.

அச்சக்குறிப்பின்பெயர் :— திட்கலோடல்-தேங்கன்றெரேலெனல், துட்கலுலமரல் - துடுக்கெனல்வெய்துறல், அஞுக்கன்றொள்கல்-அச்சங்குறிப்பாம். குலேதலொடுதுண்ணெனல்-கூறுபவதற்கே. ஆ-ம௨.

கூம்புதலின்பெயர் :— சாம்புதலொடுக்கம்-கூம்புதலாகும். ஆ-௨.

மெலிவின்பெயர் :—தேம்புதன்றொள்கல்-சிக்குசிப்பென், றும்புகனுன்கும்-மெலிவெனவிசைப்பர். பழுங்கனும்புன்கனும்-மெலிவின்பால. ஆ-௬.

துன்பத்தின்பெயர் : —இன்னலமுங்கல்-வருத்தம்பிணியிடுக்கண், அல்லலேஞயின்னு - அரந்தையிடும்பை, படர்துனிதுக்கம்-அஞர்புலம்பெவ்வம், நடலேகம்பலே-செல்லல்பாசறை, பையுள்சூர்துயர் - பைதலிரக்கம், சிறுமைவிழுமம்-கவலேபீழை, வறுமைபருவரல் -புன்கணோவாகுலம், உறுவல்கவ்வைபனி-வெய்துறன்மம்மர், உறுகணலத்தல்-துன்பமென்றுரைப்பர், இடர்கோட்டாலே-ஏதங்கேதம்அலக்கண்பீடையோ - டல்லகண்டமும், துன்பப்பொருளே-சொல்லுங்கிளவி. ஆ-௪௮.

குற்றத்தின்பெயர் : — காசுநவைதவறு-கசடுவசைவடு, மாசுமாநமரில்-செயிர்புகர்பழுது, ஏதமாசு-*போக்குப்புரைபழி, கோதுதோமிழிவு-குற்றமாகும், மிறையறி

ப்பேசிவை-மூன்றும்வரையார், அழிப்புக்குறைகழிப்பு-கொழிப்புமதற்காம். ஆ-உஎ.

அருவருப்பின்பெயர் :— பயிர்ப்புக்குற்சிதம்-அருவருப்பாகும். ஆ-உ.

பகையின்பெயர் :—முனையுறழ்வுதுப்பு - முரண்படிதெவ்வொ,புகலபகையாகும-என்றிசினோரே. ஆ-எ-

வஞ்சனையின்பெயர் : —கூடம்புள்ளுவம்-குடிலங்குத்திரம்,கைதவமாயம்-பட்டிமைவஞ்சனைபடிறுகுய்யம்-பகர்வவஞ்சனை,சாட்டியப்பெயரும் - சாற்றப்பெறுமே. ஆ-கூ.

நட்பின்பெயர் :—கேண்மையுந்தொடர்பும்-கேளுநட்பே. ஆ-ந.

ஒழுக்கத்தின்பெயர் :— கையேயொழுக்கம். ஆ-க.

ஒழுக்காற்றின்பெயர் :—கையாறொழுகலாறு. ஆ க.

செயலின்மையின்பெயர் :— கையறலசெயலின்மை. ஆ-க.

அடைக்கலத்தின்பெயர் :—கையடையடைக்கலம். ஆ-க.

கையொழியாமையின்பெயர் :— கைதூவாமை-கையொழியாமை. ஆ-க.

மேற்கோளின்பெயர் :—பூட்கைக்கிளவி - மேற்கோளாகும். ஆ-க.

பழைமையின்பெயர் :—தொன்மைதொடர்பு-தொத்துத்தொண்டு, முறையேமுன்பு-தொன்றுபூருவம், தொல்லைமூரி-விருத்தமூது, முந்துபுராதனம் - புராணமுதுமையென, வந்தவைபழைமை - ஆமெனவைப்பர். ஆ-யசா.

புதுமையின்பெயர் :—புத்தேள்யாணர்-புனைபுணர்விருந்து, நூதநம்வம்பு-கடிநவம்புதுமை. ஆ-கூ.

ஈன்றணிமையின்பெயர் :— புனிறீன்றணிமை. ஆ க.

நிலையின்மையின்பெயர் : — நிலையின்மைவம்பே. ஆ க.

பிறப்பின்பெயர் :—சூதகம்பிறந்தை-பயஞ்சநிப்புச்சநநம்,ஒதியதோற்றம்-யோநிபவம்பிறப்பே,சன்மமுழுற்பத்தியும-சாற்றுபவதற்கே. ஆ-ய.

கழிபிறப்பின்பெயர் : —உம்மைகழியிறப்பே. ஆ க.

இப்பிறப்பின்பெயர் :—இம்மைப்பிறப்பே. ஆ க.

* பொக்கு-எனினுமமையும்.

வருபிறப்பின்பெயர் :—அம்மையுமறுமையும்-வருபிறப்பாகும். ஆ -உ.

ஒருபிறப்பின்பெயர்:—ஒருபிறப்பொருமை.ஆ -க.

எப்பிறப்பின்பெயர் :— எப்பிறப்பெம்மை. ஆ -க.

எழுபிறப்பின்பெயர் :— எழுமையேழ்பவம்-எழுபிறப்பாகும். ஆ -உ.

பின்னின்பெயர் :—வழிபின்னுகும். ஆ -க.

முறைமையின்பெயர் :— மரபுபாரம் - பரியமுறைமை. ஆ -உ.

இளமையின்பெயர் :— மழவுநவ்விசேய்-போதகமஞ்சு,குழவுகுருளை-கயமிளைபுருவை, முருகேதருணம்-பீழேபருவம்,சேடுகொம்மை - எனவீரெட்டும்.நாடிலிளமைப்-பெயரெனநவில்வர், வெண்மையுநாகும்-விளம்புவவிளமை. ஆ -மஅ.

இளமைச்செவ்வியின்பெயர் :—கோமளமிளமைச்-செவ்வியைக்கூறும். ஆ -க.

காரணத்தின்பெயர்:— நிபமும்பொருட்டும்-ஏதுவுநிமித்தமும், திறனும்வாயிலும் - காரணந்தெரிசொல். ஆ -சு.

பற்றுக்கோட்டின்பெயர்:—கந்தொடாலம்பநமும்-பற்றுக்கோடே.தஞ்சந்தூவூற்றமும் - சாற்றுபவதற்கே. ஆ -ரு.

உரிமையின்பெயர் :— பாங்குபால்கிழமை-தாயமாட்சி,ஈங்கிவையைந்தும் - உரிமையாகும். காணிகெழுதகைமையும்-கழறுபவுரிமை. ஆ -எ.

இலாபத்தின்பெயர் —ஊதியம்பசைபயன்-பலித்தலாக்கமென்,ருேதியவைந்தும் - இலாபமாகும்.பேறுமதிகமும்-பேசுபவிலாபம். ஆ -எ.

மகளிர்கையுறுப்பொருட்டின்பெயர்:—பூப்புமகளிர்-கையுறுப்பொருட்டே. ஆ -க.

அசுத்தத்தின்பெயர்:— தூய்தன்மைவாலாமை-சூதகமசுத்தம். ஆ -ங. [அழுக்கின்மையாகும். ஆ -உ.

அழுக்கின்மையின்பெயர் :—அமலமும்விமலமும்-

தூய்மையின்பெயர்:-- புநிதம்பவித்திரம்-தூய்மையாகும்.துப்புத்தூப்பாவநம் - வாலுந்தூய்மை.ஆ -சு.

தருமத்தின்பெயர் :—சீலமருண்மங்கலம்-சுபமேசுகிர்தமென, நாலுமொன்றும்-தருமமாகும். ஆ -ரு.

அறிவின்பெயர் :—சேதநமறிவே. ஆ-க.
அறிவின்மையின்பெயர் :—அசேதநமறிவின்மை.
ஆ-க.    [ஆ-ங.
மேலின்பெயர் :— ஆணேதலைமை-தலைமேலாகும்.
அழிவின்மையின்பெயர்:—குமரிகன்னி - கோணையழிவி
ன்மை. ஆ-ங.    [ண்ணும்,ஆ-ச.
எண்ணின்பெயர் :— கரணங்கணிதம்-கணக்கலகெ
நாநாவிதத்தின்பெயர்:—பரியாயம்பன் முறை-பல்
விதநாநாவிதம். ஆ-ங.
முதலின்பெயர்:— ஆதியுமோனையும்-தொடக்கமு
முதலாம். ஆ-ங.
நடுவின்பெயர் :—இடையேசமன்பகல்-நாப்பண்ம
த்திமம்,நள்ளே நடுவென்-றோதினர் நயந்தோர்.ஆ-சு.
ஈற்றின்பெயர்: — அந்தந்தீர்தல் - முடிவேயிறுதி
யென,வந்தநான்கும்-ஈற்றின்பால. ஆ-ச.
அநுபவத்தின்பெயர் :—துவ்வேதுப்புரவு - அநு
பவமாகும். ஆ-உ.
வளமையின்பெயர்:—கொழுமையாணர்-மல்லல்வ
ண்மை,செழுமைவாய்ப்பு-வளமையாகும். ஆ-சு.
செழுமையின்பெயர்:—செழுமைசெழித்தல்.ஆ-க.
கொழுமையின்பெயர்:—கொழுமைகொழுப்பே.ஆ-க,
வேறுபாட்டின்பெயர்:—விகிர்தமும்விகடமும்-வே
றுபடற்பொருட்டே. ஆ-உ.
குணமின்மையின்பெயர்:—சீரணஞ்சிதம்பு-சீத்தை
குணமின்மை, ஆ-ங.
தாமதத்தின்பெயர்:—விளம்பநந்தாமதம் - விளம்
புங்கிளவி.ஆ-க.
கேட்டின்பெயர் :—இழிவுநந்தல்-இறுதரிரிதல்,வ
ழுவழுங்கன்முறிதல்-மடிகயங்கேடே, சுதமுங்கந்தலும்-
சொல்பவதற்கே. ஆ-யக.
பாவமென்னும்பெயர்:— பாவமுமறமும்-பாவையு
ஞ்செடியும்,அகமுமொருபொருட்-கிளவியாகும். ஆ-ச.
உறவின்பெயர் : —உறவியுறவே. ஆ-க.
துறவின்பெயர்:—துறவிதுறவே. ஆ-க.
செல்வத்தின்பெயர் :—வெறுக்கைமாபொறிசீர்-வி
பவஞ்செல்வம், விருத்தியாக்கந்திரு - மாடிடம்வாழ்க்
கை,பெருக்கமுஞ்செல்வப்-பெயரெனப்பேசுப,ஆ-யஉ.

மணப்பொதுவின்பெயர் : —கமழ்தல்கந்தித்தல் - நாறுதன்மணப்பொது. ஆ-ரு.

நறுநாற்றத்தின்பெயர் :—மணமேவசந்தம்-முருகு மன்றல்,வாசம்விரையே - கந்தம்வதுவை, நானந்தேம் வெறி - ஆமோதம்மே, கடியேவம்பு - கானம்பரிமளம், நறைநறுநாற்றம்-ஆகுமென்ப. ஆ-மஎ.

துர்க்கந்தத்தின்பெயர் :—பூதிதுர்க்கந்தம் - ஆகப் புகல்வர், ஆ-க.

இனிமையின்பெயர் : — சுவையேசாரம் - இரதமினிமை.சேறமுதுதீமொடு-தேமுமினிமை. ஆ-எ.

தித்திப்பின்பெயர்:—தீமுமதுரமும் - தேமுந்தேக்கும்,ஆயநான்கும்-தித்திப்பாகும். ஆ-ச.

காழ்த்தலின்பெயர் :—காயமுங்கரிலும்-கடுகமுங்காழ்த்தல். ஆ-ரு.

கைத்தலின்பெயர் :—கைத்தறித்தம். ஆ-க.

புளித்தலின்பெயர் :—புளித்தலாமிலம். ஆ-க.

ஒருபலத்தின்பெயர் :—ஒருபலப்பெயர்தொடி. ஆ-க.

காற்பலத்தின்பெயர் :—கஃசுகாற்பலம். ஆ-க.

நூறுபலத்தின்பெயர்:—தூக்குங்காவும் - துலாமுநூற்றுநிறை. ஆ-ரு.

ஒன்றின்பெயர் :—ஒன்றேகம்மே. ஆ-க.

பத்தின்பெயர் :—தசம்பத்தாகும். ஆ-க.

நூற்றின்பெயர் : —நூறுசதமே. ஆ-க.

ஆயிரத்தின்பெயர்:—நூற்றுப்பத்தாயிரம். ஆ-க.

பல்குணத்தின்பெயர் :—மாலைபெற்றி - தன்மைமரபு,பாலூழ்பான்மை-பண்புமுறையுழுவல்,தகவுதகைகியியல்பு-குணநுனித்தலுரிமை,நிலைமைநீர்மை - பரிசுகழமை,விதியதிகாரம்-ஒருபொருளாகும். ஆ-உக.

குணமுழுதின்பெயர் :— ஊழென்கிளவி-குணமுழுதாகும். ஆ-க.

பண்பின்பெயர்: —பண்புநிறனும்-குணனுமாகும். [ஆ-உ.

கொள்கையின்பெயர் :— குணனுமறிவும் - கொள்கையாகும். ஆ-க.

தகையின்பெயர் : — தகையேயியல்பும் - அழகுமாகும். [ஆ-உ.

உவமத்தின்பெயர் : — சேத்துப்பொருவுறழ்வு - போல்புரைகடுப்ப, வொப்புத்துணையிணை - மானநிகர்நேர்,ஏயவுவமம்-என்னவுரைப்பர். ஆ-மரு.

உவமத்தியல்பாவது: — வினையுவமம்பயனுவமம்-மெய்யுவமமுருவுவமம்,என நான்குவகைத்தே - உவமத்தியல்பே. ஆ-ச.

உவமமாவது:— உவமமொன்றே-டொன்றையொப்புறுத்தல்.

மறக்குறும் போட்டி அறத்தின் வழிநின்று
கவிகைத் தண்ணளி புவிபெற வாணையின்
ஐம்புல ஞளும் அம்பற் கோமான்
திண்பெருஞ் சேந்தன் திவாகரத்

தெட்டாவது
பண்புபற்றியபெயர்த்தொகுதி
முற்றிற்று.

ஒன்பதாவது
## செயல்பற்றியபெயர்த்தொகுதி.

மூலபாடம்.

செயலாவது:—கருமமுஞ்செயலும்-தருமமுந்தொழிலும்,வினையுமொருபொருள்-விதியுமாகும்.

தொழிற்பயில்வின்பெயர் : — தொறுவென்கிளவி-தொழிற்பயில்வாகும். ஆ-க.

செய்தலின்பெயர் :— அயர்தல்குயிற்றல்-ஆற்றலிழைத்தல்,வினைதல்செய்தல்-மாற்றமாகும். ஆ-டு.

மகளிர்விளையாட்டின்பெயர் :— ஓரைபண்ணை-கெடவரல்பொய்தல், உண்டாட்டுக்கிரீடை - உப்புக்கேளி, •வுண்டஞெடலை - மகளிர்விளையாட்டு,விலாசனையென்பதும்-அவர்விளையாட்டே. ஆ-ங்க.

பிறப்பித்தலின்பெயர்:— நியமித்தல்விதித்தல்-நிருமித்தல்சிட்டித்தல்,படைத்தல்பிறப்பித்தல் - பாரித்தலுமாம். ஆ-சு.

கொண்டாடலின்பெயர் : — பாராட்டன்மெச்சல்-பரிந்துகொண்டாடல். ஆ-உ.

பொழுதுகழித்துவிளையாடலின்பெயர் :—விநோதம்பொழுது-கழித்துவிளையாடல். ஆ-க,

புதுமணத்தின்பெயர் :-வதுவைகடியே-மன்றலிம்மூன்றும்.புதுமணப்பெயரென-புகல்வர்புலவர். ஆ-ங.

கைப்பற்றலின்பெயர் :— கடியுந்திவேள்வியும்-கைப்பற்றலாகும், விதியுளிவேட்டல்-மணங்கல்யாணம், திவலஞ்செய்தலும்-செப்பற்பால. ஆ-எ.

விழாவின்பெயர் :—முருகுஞ்சாறும் - சேறும்விழாவே. உயர்துணங்கறலும்-உச்சவமுமாகும். ஆ-டு.

ஒப்பனையின்பெயர் :—மண்ணல்கைசெய்தல்-பொற்பலங்கரித்தல், புனைதன்மிலைதல்-வேய்தலணிதல், வனைதலொப்பனை-மாற்றமாகும். ஆ-கூ.

சூடுதலின்பெயர் : — மிலைதலுமலைதலும்-வேய்தலுஞ்சூடுதல். ஆ-ந.

சொருகுதலின்பெயர் : — அடைச்சல்செருகுதல்-ஆஞ்சொருகுதற்கே. ஆ-உ.

அடிசிலுண்டொழிலின்பெயர் :—அயிறலுமிசைதலும்-அடிசிலுண்டொழில், பகரிற்கைதொட்டலும்-பாரணமுமாகும். ஆ-ச.

உண்ணும்பண்பின்றொழிலின்பெயர் :—துய்த்தலருந்தல்-ஆர்தறுவ்வுதல், துற்றனுகர்தல்-மாந்தலயிறல், உண்டறின்றல்-பருகுதலிவையுணும், பண்பிற்றொழிலெபகருங்கிளவி. ஆ-மக.

நுகர்தலின்பெயர் : —நுங்கல்விழுங்கல் - தொண்டனுகர்தல். ஆ-ந.

துயிறலின்பெயர் .—கண்படைகண்வளர்தல் - கனவோட்டனந்தர் துஞ்சல்பள்ளி - துயிறலாகும், உறங்கலும்படையும்-உரைப்பரதற்கே. ஆ-அ.

நிரம்பாத்தூக்கத்தின்பெயர் :—தூங்கனிரம்பாத்-தூக்கமென்ப. ஆ-க.

களவின்பெயர் :—கரம்புகட்டல் - கள்ளல்காவு, கரவடத்தோடு-பட்டிமைகளவே. தேயந்தேறு-சௌரியஞ்சோரம், பட்டிதிருட்டு-படிறுமற்றதுவே. ஆ-மந.

சித்தின்பெயர் : — சம்பிரதஞ்சித் - தின்பெயர்மேற்றே. ஆ-க.

ஏறுதலின்பெயர் : —எஃகலுமெக்கலும்-இவர்தலுமேறுதல். ஆ-ந.

முறித்தலின்பெயர் : —ஒசித்தல்கோடல்-ஒடித்தலகைத்தல், ஞெமிர்த்தலிறுத்தல் - முறித்தலாகும். இசித்தலென்றும்-இயம்பற்பாற்றே. ஆ-எ.

வெறுப்பின்பெயர் : — ஒறுத்தலுஞ்செறுத்தலும்-வெறுப்பின்மேன. ஆ-உ.

ஓய்தலின்பெயர் :— ஓசிதலுந்தளர்தலும்-ஓய்தலை யுரைக்கும். ஆூ-உ.

தாழ்தலின்பெயர்: —இறைஞ்சல்குரங்கல் - தாழ்த லாகும். ஆூ-உ.

துவளலின்பெயர்: — திவளறிவண்டல்-துவண்ட றுவளல். ஆூ-ந.

அழுதலின்பெயர்:—கலுழேகலக்கம்-கசிதலழுதல் விம்மல்பொருமல்-ஏங்கலுரோதநம், இரங்கலென்றும்- இசைக்கற்பாற்றே. ஆூ-அ.

ஊடன்முதிர்வின்பெயர் :— ஊடலின்முதிர்தல் - புலவியாகும். ஆூ-க.

புலவிநீடுதலின்பெயர்: — அதனினீடுதல் - துனி யெனப்படுமே. ஆூ-க.

முடிவிடத்தின்பெயர் : — ஒல்லுஞ்சிரலும்-முடிவி டனுரைக்கும். ஆூ-உ.

கடத்தலின்பெயர் :— இகத்தலுகளுதல்-தாவுதல் வாவுதல், குவித்தலகறல் - குப்புறனீடுதல், தத்தலென வொன்பதும்தாண்டலுங்கடத்தல்.பரிகரிசேறல்-பாறு தலோவல்,மீளலுமதற்கே-விளம்பலாகும்.ஆூ-யரு.

போகலின்பெயர்: —படர்தறீர்தல்-பிரிதல்சேறல், இயங்கல்விடுதல்-வழங்கனீங்கல், இறத்தறணத்தல்-இக த்தலேகல்,கடத்தல்பெயர்தல் - செலவெனவிவற்றொடு, நடத்தலீரேட்டும்-போகலாகும்.

இல்லலொதுக்கம்- கழிதலிவறல், சொல்லியநான் கும்-தொடருமற்றதற்கே. ஆூ-உய.

விரைவின்பெயர்:—கதழ்வும்வல்லையும்-ஒல்லையுங்க டுகலும்,துனைவுநொறிலும்-தவறலுமுடுகலும், விரைவி னிளவி-வேகமுமாகும், கவநந்தாரை - சடிதிசீக்கிரம், ஈண்டுவிதுப்பு-விசையுமதுவே. ஆூ-யசு.

விரைவுக்குறிப்பின்பெயர் :— ஞெள்ளல்சண்டம்- குத்திரம்வெம்மை, பொள்ளேகோரம் - எனவிருமூன் றொடு, மையெனல்கதுமெனல் - நொய்தெனல்பொருக் கெனல், வெய்தெனலின்னவும் - விரைவுக்குறிப்பே. ஆூ-யக.

கடுப்பின்பெயர்: — கதநந்துரிதம்-கவநங்கடுப்பே, ஆூ-ந.

[றல். ஆூ-ந.

திருகலின்பெயர் :— திருகல்முறுகல் - கஞறல்கன்

நெருங்குதலின்பெயர் :— நிமிர்தன்மிடைதல்-நெருங்குதலாகும். ஆ-உ.

திரிதரலின்பெயர் :—உழிதரல்கொட்பு-திரிதரலாகும்.ஆ-உ.

நீர்ச்சுழியின்பெயர்: — உந்தியுஞ்சுரியலும்-நீர்ச்சுழியாகும். ஆ-உ.

மீளுதலின்பெயர்:— மறிதரலென்பது-மீளுதலாகும். ஆ-க.

கொடுபோதலின்பெயர் : — போதரல்கொடுபோதல்.ஆ-க.

உலாப்போதலின்பெயர் :—பவனியுலாப்போதல். ஆ-க.

ஓடலின்பெயர் : — நெரிதரல்பாறல் - இரிதலோடல், நிரிர்தனீளுதல்-நிகழ்த்துபவதற்கே. ஆ-ரு.

பிறகிடலின்பெயர் :— பின்றலும்பிறக்கிடலும்-பிறகிடலாகும். ஆ-உ.

உராய்ப்போதலின்பெயர் :— உராய்ப்போதலுரோஞ்சல்-உரிஞ்சலாகும். ஆ-உ.

வழிப்படுத்தலின்பெயர்:—ஆற்றுப்படையே-வழிப்படுத்தலாகும். ஆ-க.

வலியழித்தலின்பெயர் :—ஆற்றலறுத்தலே-வலியழித்தலாகும். ஆ-க.

பாய்தலின்பெயர்:— குப்புறலுகளுதல் - குதித்தல் பாய்தல்.உறுக்கலுமிதித்தலும்-உரைப்பரதற்கே.ஆ-ரு.

மண்டிலமாவோடலின்பெயர்:-மாதியுஞ்சுற்றும்-சாரிகைதன்னொடு,வாளியுமண்டில-மாவோடலாகும்.ஆ-சு.

நேரோடலின்பெயர்:—ஆதியும்வீதியும்-நேரோடலாகும். ஆ-உ

செலுத்தலின்பெயர்: —செலுத்தல்கடத்தல்-துரத்தறூண்டல். உகைத்தலூர்தல்-உய்த்தலொருபொருள், நடவலெய்தல்-ஓட்டலுமதுவே. ஆ-ὦ.

அணுகுதலின்பெயர் :—நண்ணனேர்தல்-நணுகல்குறுகல், துன்னல்சார்தல்-அண்ணலணுகுதல், மருவுதல்புல்லல்-அருகுறல்சிவணல், அப்பெயர்க்குரியவென்றறைந்தனர்புலவர். ஆ-ωக.

கூடுதலின்பெயர் :—மணத்தல்கூடுதல். ஆ-க.

பிரிதலின்பெயர் :—தணத்தல்பிரிதல்.ஆ-க.

நீங்குதலின்பெயர் :— நீத்தலுந்துறத்தலும்-ஒருவலுநீங்குதல். ஆ-ங.

தங்கலின்பெயர் :—அசைதறெவுட்டல்-ஆர்தலிறுத்தல்,வதிதல்வைகல்-தங்கலாகும். ஆ-சு.

நிலைபோற்றின்பெயர் :—புரத்தறுஞ்சல் - அற்கன்மன்னல்,நிலைத்தலைநந்தும்-நிலைபேறுகும். ஆ-ரு.

சுமத்தலின்பெயர்: — பரித்தலும்பொறுத்தலும் - சுமத்தலாகும். ஆ-உ.

முயற்சியின்பெயர் :—உஞற்றுழப்புத்தாளாண்மை-ஆள்வினையூக்கம்,இயற்றலென்றிவை-முயற்சியாகும்.ஆ-சு.

மிக்கசெயலின்பெயர் :— ஊராண்மைமிக்கசெயல். ஆ-க.

அரியசெயலின்பெயர் : — பேராண்மையரியசெயல். ஆ-க.

எண்ணலின்பெயர் :— சூழ்ச்சியுசாவே-தேர்ச்சிநுலென,யாப்புறவெண்ணற்-கிளவியாகும். ஆ-ச.

ஆராய்தலின்பெயர்:— தேர்தறூக்கல்-ஆய்தறெரிதல்,ஓர்தறெளிதல்-ஆய்வாராய்தல். ஆ-எ.

தேடலின்பெயர் : — நாடலுநேடலும் - தேடலாகும்,கூடுங்கையறி-கொள்ளலுமதற்கே. ஆ-ங.

ஒற்றுமையின்பெயர் :—ஒற்றுமைகுறிக்கோள்.ஆ-க.

ஒற்றின்பெயர் :—ஒற்றிவேவுவேய். ஆ-உ.

வரையறுத்தலின்பெயர் : — கணித்தலுங்குணித்தலும்-வரையறுத்தலாகும். ஆ-உ.

விலையின்பெயர்: —விற்றல்பகர்தல் - நொடைவிலையாகும். ஆ-ங.

கலக்கத்தின்பெயர் : — வெறுப்புவெதிர்துருமம் - புலம்புகவனம்,முதிர்ப்புக்கலங்கல்-கலக்கமாகும்.ஆ எ.

நடுக்கத்தின்பெயர்: — விதிர்ப்புப்பனிப்பு-விதலைகம்பம்,அதிர்ப்புப்பொதிர்ப்பு-நடுக்கமாகும்.ஆ-சு.

தியாகத்தின்பெயர் :—வேள்விவண்மை-வேளாண்மையுதவி,கொடையுபகாரம்-கவிகைபொழிதல்,இடுதலிகுத்தல் - பணித்தலீதல்,தருதல்வழங்கல் - வீசனல்கல்,அருளலளித்தல்-புரத்தறியாகம். ஆ-யக.

வரையாதுகொடுத்தலின்பெயர் :— திடமொழியம்பற்-சேந்தனையேய்ந்த,கொடைமடம்வரையாது-கொடுத்தலாகும். ஆ-க,

வேள்வியின்பெயர் :— ஓமங்கிருது - எச்சம்யாகம், இட்டியூபம்-மகமிவைவேள்வி. ஆ-எ.

பாதுகாத்தலின்பெயர் :— போற்றலுமோம்பலும்-பாதுகாத்தல். ஆ-உ.

தலைக்காவலின்பெயர்:—இளையென்கிளவி-தலைக்கா வலாகும். ஆ-க.

அகத்திடுதலின்பெயர்: —கவ்வகத்திடுதல். ஆ-க

கொளற்பொருட்டின்பெயர் : — தெவுகொளற்பொருட்டே. ஆ-க.

பிச்சையின்பெயர் : — பலியுமையமும்-பிண்டமும் பாகமும், சரிதையும்பிச்சையின்-பெயரெனச்சாற்றுவர். ஆ-ரு.

இரத்தலின்பெயர் :—இரவேயிரத்தல். ஆ-க.

கரத்தலின்பெயர் :—கரவேகரத்தல். ஆ-க.

தொழுதலின்பெயர் :— வணங்கல்பணிதல்-அஞ்சலி வந்தனை,இறைஞ்சல்பரவுதல்-தாழ்ற்றொழுதல் ஆ-எ.

பூசனையின்பெயர் : —ஆராதனைநயே - அருச்சனை நவழிபாடு,பூசனையென்ன-புகன்றனர்புலவர். ஆ-ரு.

பெறுதலின்பெயர் :—வாய்த்தலும்பயத்தலும்-பெறுதன்மாற்றம்.கிடைத்தலுமதுவென-கிளத்தற்பாற்றே. ஆ-ரு.

உண்டாதலின்பெயர் : — பூத்தலும்பயத்தலும் - உண்டாதற்பொருள். ஆ-உ.

புணர்வின்பெயர் :— இணைவிழைச்சுமைதுநம்-புணர்வுப்பெயரே. ஆ-உ.

தீவினைத்தொடர்பின்பெயர் : — காதரந்தீவினை - தொடர்பதாகும். ஆ-க.

கலத்தலின்பெயர் :—கலவியும்புணர்ச்சியும்-கலத்தலாகும். கலாவல்கலம்பகம்-அளாவல்சங்கீரணம், நிலாவுமதற்கே-நிகழ்த்துபமேலோர். ஆ-சு. [ஆ-உ.

பயிறலின்பெயர் :— நவிறல்கெழுமல்-பயிறலாகும்.

அறுத்தலின்பெயர் :—வகிர்தல்பிளத்தல்-துமித்தறுணித்தல்,அரிதறுண்டித்தல்-அகைத்தல்பரிதல்,அறுத்தலாகுமென்-றறைந்தனர்புலவர். ஆ-அ.

பறித்தலின்பெயர் :—களைதல்குற்றல்-கட்டல்பறித்தல். ஆ-ரு. [லாகும். ஆ-உ.

பித்தலின்பெயர் :—புய்த்தலும்பூய்த்தலும் - பித்த

நெரித்தலின்பெயர்:— நெரித்தறெறுதல். ஆ-க.
அழுந்தலின்பெயர்:--ஞெமுங்கலழுந்தல். ஆ-க.
கொல்லுதலின்பெயர்:—எருக்குதல்காதுதல் - எற்றுதறெய்த்தல்,முருக்குதலொழித்தல்-கோறலைமொழிப. வெட்டல்வீட்டுதல்-படுத்தன்மாரணமும்,அம்மொழிப் பாலவென்-றறையல்வேண்டும். ஆ-ம.
அழித்தலின்பெயர்:—சவட்டல்செகுத்தல் - தெறுதல்சட்டித்தல்,செவிட்டல்சிதைத்தல் - அழித்தலாகும். ஆ-சா.
வீசுதலின்பெயர் :—வீசுதலெறிதல்-ஓச்சல்செலவிடல். ஆ-ௗ.
வெட்டலின்பெயர் :—துமித்தறுணித்தல்-துழாவல்வெட்டல்,பரிதல்கண்டித்தல்-பகுத்திடறடிதல். எற்றறித்தலும்-ஏற்குமென்ப. ஆ-கூ.
கிளறுதலின்பெயர் — கிண்டல்கிளைத்தல்-கிளறுதலாகும். ஆ-உ.
போழ்தலின்பெயர் : — கீழ்தலென்பது - போழ்தலாகும். ஆ-க.
கிழித்தலின்பெயர்:—கீழ்தல்கிண்டல் - கீறல்கிழித்தல். ஆ-ௗ.
குலைதலின்பெயர் :—குலைதல்குன்றல். ஆ-க.
தோண்டலின்பெயர்: --சூறல்சூன்றல்-தோண்டலாகும், தொட்டலுந்தொடுதலும் - அகழ்தலுமதற்கே. ஆ-ரு.
துளைத்தலின்பெயர் :— தொள்ளல்குயிற்றல்-துளைத்தலாகும். ஆ-உ.
கொழித்தலின்பெயர்: -வரன்றல்வாருதல்-வார்தல்கொழித்தல்,தெள்ளுதலெனவும்-செப்பபற்பாற்றே. ஆ-ச.
தெரிதலின்பெயர்:—வரன்றலென்பது-தெரிபிலாகும். ஆ-க.
தூய்மைசெயலின்பெயர்:—உவளித்தறூய்மை-செயலையுணர்த்தும்,உபலாளநமென்-றுணர்த்தவும்படுமே ஆ-உ.
கடைதலின்பெயர்:—கவர்தல்குடைதல்-ஞெலிதல் கடைதல். ஆ-ௗ.
சிந்துதலின்பெயர்: -சிதர்தலுந்தூவலும்-சிந்துதலாகும்,உகுத்தலுமுளர்த்தலும் - உரியமற்றதற்கே. ஆ-ச.
வடுப்படுதலின்பெயர் : --கறுவாய்வடுப்படுதல். ஆ-க.

தினவின்பெயர் :—கண்டூதிதினவே - சொறியென்
கிளவியும்,சொல்லுபவதற்கே. ஆ -உ.
அடுத்தலின்பெயர் :— அடுத்தல்கூடுதல். ஆ -க.
வழிப்பறித்தலின்பெயர் :— ஆறலைவழிப்பறி-அத
ர்கோளுமற்றதற்-காகுமென்ப. ஆ -உ.
மீதூரலின்பெயர் :— இடங்கழிமைநெருங்கல் - மீ
தூரலாகும். ஆ -உ.
உலைப்பின்பெயர்:—உலைத்தலொறுத்தல்-உயங்கன்
மிறைசெயல், அலைத்தல்வேதனையுலைப்-பாமெனமொ
ழிப. ஆ -சு.
மடங்கலின்பெயர்:—நுணங்கேமுடங்கல் - மடங்க
லாகும். ஆ -உ.
சாதலின்பெயர் :— துஞ்சல்பொன்றல்-விளிவல்வீ
தல்,முஞ்சறுவன்றல்-முடிவுலத்தல்வீடல்,மாய்தலிறத்த
ல்-மாளறபுதல்,சாதலென்ன-சாற்றினர்புலவர்.ஆ ௰கூ.
கொலைசெய்தலின்பெயர் : — அடுதல்வீட்டல்-அ
ணங்கல்வெட்டல், படுத்தலென்றிவை - கொலைசெயற்
பால. ஆ -ரு.
வேறுபாட்டின்பெயர் :— வீற்றும்பேதமும்-விள்ள
லுந்திரிபும், வேற்றுமையுங்கொள்ப - வேறுபாட்டிபொ
ருட்டே. ஆ -ரு.
குன்றலின்பெயர்:— சிங்கலுமெஞ்சலும்-தவறலுங்
குன்றல். ஆ -ரு.
அழிதலின்பெயர் :— உலைதலுமுருக்கலும்-அழித
லாகும். ஆ -உ.
தளர்தலின்பெயர் : —ஒல்கலுமிழுக்கலும் - தளர்த
லையுரைக்கும். ஆ -உ.
வளைத்தலின்பெயர்:— சுற்றுதல்கோலல்-சூழ்போ
தல்வரையறுத்தல்,முற்றுதல்சூழ்தல் - வளாவல்வளைத்
தல். ஆ -எ.
கட்டலின்பெயர் :— தொட்டல்பிடித்தல்-வளைத்த
ல்பந்தித்தல், விசித்தல்சிமிழ்த்தல்-வீக்கல்சுருக்கல், அ
சைத்தலிசைத்தல், யாப்பேயிமிழ்த்தல், தொடுத்தலாத்
தல்-யாத்தலெருடர்தல்,ஆர்த்தல்பிணித்தல்-கட்டலாகும்
ஆ -௰அ.
சுற்றுதலின்பெயர் :—சுலவல்சுற்றுதல். ஆ -க.
நிணத்தலின்பெயர் :—வலத்தனிணத்தல். ஆ -க.

விடுதலின்பெயர் :— தீர்தலுந்தீர்த்தலும் - விடற்பொருட்டாகும். ஆ-௨.

பூசலின்பெயர் :— உறழ்வுவெஞ்சமம்-மொய்செருஞாட்பே, இரணந்தாக்கே-இகலாயோதநம், அமர்போருடன்றல்-ஆர்ப்புநிகர்ப்பு,மலைதனேர்தல்-குறும்பேயுடலுதல்,ஆகவமண்டலம்-தெவ்வுவினையாடல், திறன்மறன்மறமுரண்-சினஞ்சமர்சமீரம், ஆர்த்தல்சங்கிராமம்-தும்பைகூட்டமென், றீதெண்ணான்கோ - டிரண்டும்பூசல். ஆ-௩௪.

தோற்றுதலின்பெயர்:—பாரித்தரேற்றுதல். ஆ-௧.

மிகுத்தலின்பெயர் :— பூரித்தன்மிகுத்தல். ஆ-௧.

தடுத்தலின்பெயர் :—வாரித்தல்வாரணம்-தடுத்தன்மாற்றம், ஆணைதட்டல்-தகைத்தலுமதுவே. ஆ-௫.

கூடலர்நாடழிவின்பெயர்:- கூடலர்நாடழிவு-கொற்றவள்ளை. ஆ-௧.

சாய்ந்தார்மேற்படாமையின்பெயர் :— சாய்ந்தார்மேற்பட-ராமைதழிஞ்சி. ஆ-௧.

பாதீட்டின்பெயர்:— அளித்தல்பெய்தல் - பாதீட்டாகும்.செறித்தலுமதுவென-செப்பபற்பாற்றே. ஆ-௩.

கொட்டாவியின்பெயர் :--ஆவித்தல்கொட்டாவி. ஆ ௧.

வருந்தந்தீர்தலின்பெயர்:— அயர்வுயிர்த்தல்வருத்தம்-தீர்தலாகும். ஆ-௧.

உயிர்ப்பின்பெயர்: —ஆவியுயிர்ப்பே. ஆ-௧.

வெயர்வரும்பலின்பெயர்:— வியர்த்தல்வெயர்வரும்பல். ஆ-௧.

வாய்விடலின்பெயர்:-உயிர்த்தல்வாய்விடல்.ஆ ௧.

காய்தலின்பெயர் :--முனிதல்வறத்தல் - உலறுதல்காய்தல்,முதிர்ந்திடலென்பதும்-மொழியுமற்றதற்கே.ஆ-௪.

தூவுதலின்பெயர்:— பிலிற்றலும்பில்கலும்-தூவுதற்பொருள். ஆ-௨.

சொரிதலின்பெயர்:—பொழிதல்பனித்தல் - இலுலெக்கர், சொரிதலாக-சொல்லுவர்புலவர். ஆ-௪.

தெவிட்டலின்பெயர்: — உமிழ்தலுமிமிழ்தடுதம் தெவிட்டலை யுரைக்கும். ஆ-௨.

துவலைவிடுதலின்பெயர்: —துவறுவலை-விடுதலாகும்.ஆ-௧. [நேரலுமுடன்படல்.ஆ-௩.

உடன்படலின்பெயர் : — ஒட்டலும்வலித்தலும் -

பொழுதுநீட்டித்தலின்பெயர் :—நெடித்தல்பாணித்தல்-பொழுதுநீட்டித்தல். ஆ-உ.

ஒருங்கின்பெயர் :—உடங்கொருங்காகும். ஆ-க.

உறுத்தலின்பெயர் : — ஒற்றுதலுறுத்தல். ஆ-க.

எழுப்பலின்பெயர் : — எற்றலுணர்த்தல் - எடுப்பலெழுப்பல். ஆ-ங.

சோர்வின்பெயர் :—கயக்குச்சோர்வு. ஆ-க.

வழுவின்பெயர் :—பிறக்குவழுவே. ஆ-க.

இசைவின்பெயர் :—இயைவேபுணர்ச்சி-இயைப்பிசைவாகும். ஆ-ங.

மூடுதலின்பெயர் :—மூய்தலுங்கவித்தலும் - மூடுதலாகும். ஆ-உ.

மொய்த்தலின்பெயர் :— மூழ்த்தலுமூசலும்-மூஞ்சலுமொய்த்தல். ஆ-ங.

அரசிறையின்பெயர் :— அரசிறைத்திறையே-கப்பமுமிறையும்காட்டுமதுவே. ஆ-ங.

சுங்கவிறையின்பெயர் : — உல்குசுங்கவிறை-ஆயஞ்சாரிகை, அஃதெனமொழிப. ஆ-ங.

குடியிறையின்பெயர் : —கரமுங்கடனும்-கறையுங்குடியிறை,இறுப்பும்வரியும்-ஏற்குமதற்கே. ஆ-ரு.

தேய்த்தலின்பெயர் :—பாற்றறேய்த்தல். ஆ-க.

பிறக்கலின்பெயர் :—போற்றல்பிறக்கல். ஆ-க.

எழுச்சியின்மிகுதிப்பெயர் :-கதித்தல்பம்மல்-கஞறல்கன்றல், எழுச்சியின்மிகுதிக்-கெய்தும்பெயரே. ஆ-ச.

எழுப்புதலின்பெயர் :—ஆக்கமலர்ச்சி-உறுமலிவர்தல்,ஒக்கலுகைத்தல்-எழுப்புதலாகும். ஆ-சு.

தழீஇக்கோடலின்பெயர் :—விள்ளல்விளாவல்-மூயங்கறழீஇக்கோடல், ஆ-ங.

சார்தலின்பெயர் : — அண்ணுதறோய்வு-சார்ச்சியணவுதல். நண்ணுதறொடல்புல்லல்-நணுகுதல்புணர்தலென், றெண்ணியவொன்பது - படிதலுஞ்சார்தல்.மருவுதலணுகல்-அருகுறல்சிவணல், துன்னலுமதுவெனசொல்லறப்பால. ஆ-மரு.

கலத்தலின்பெயர் :—கலாவலுந்துழாவலும்-வளாவலுங்கலத்தல். ஆ-ங.

தடவுதலின்பெயர் :—நைவரல்வருடல்-நீவுதறடவுதல். ஆ-ங.

திமிர்தலின்பெயர் :—துவருதறிமிர்தல். ஆூ-க.

வளைதலின்பெயர் :— வக்கிரம்வளைதல். ஆூ-க.

வற்புறுத்தலின்பெயர் :— வருட்டடெருட்டல்-வற்புறுத்தலாகும். ஆூ-உ.

ஒழுக்கத்தின்பெயர் :— இயல்புமாலையும் - நிழலுநடையும்,செயலுஞ்சரிதையும்-கையாறுமொழுக்கம். ஆூ-எ.

நென்முதலியகுற்றுதலின்பெயர் :— அவைத்தல்குற்றுதல். ஆூ-க.

அடைவின்பெயர் :—ஆம்பலடைவே. ஆூ-க.

முளைத்தலின்பெயர் :—உருத்தனுறுதல்-பொடித்தரேற்றலென,வடித்தநான்கும்-முளைத்தலாகும். ஆூ-ச.

விரிதலின்பெயர் :—எதிர்தல்மலர்தல்-அலர்தலவிரிதல், விள்ளலுமவிழ்தலும்-விளம்புமதற்கே. ஆூ-சு.

பதனழிவின்பெயர் :— ஊழ்த்தல்செவ்வி-உறுபதனழிவே. ஆூ-உ.

அமைத்தலின்பெயர் : — சமைத்தல்சேர்த்தல்-அமைத்தலாகும். ஆூ-உ.

மறித்தலின்பெயர் :—இடித்தல்வீழ்த்தல் - விளித்தன்மறித்தல். ஆூ-ந.

மேவுதலின்பெயர் :— வீழ்தலுமமர்தலும்-மேவுதலாகும். ஆூ-உ.

அசைதலின்பெயர் :—அசைதறுயல்வரல். ஆூ-க.

எட்டுதலின்பெயர் :—அணவுதலெட்டுதல். ஆூ-க.

கூடுதலின்பெயர் :— ஒல்லல்சிவணல்-பொருந்தல்கூடுதல். ஆூ-ந.

சரண்புகலின்பெயர் :—மறைபுகற்கிளவி - சரண்புகலாகும். ஆூ-க.

காவலின்பெயர் :—சிறையுமரணமும்-சேமமுமேமமும், கடியுங்கதவும்-கட்டுங்காவல். ஆூ-எ.

ஏவலின்பெயர் :—வியங்கோளேவல். ஆூ-க.

வறுமையின்பெயர் :—வீதல்வறுமை. ஆூ-க.

அவித்தலின்பெயர் : — நதுத்தலுநொதுத்தலும்-நுதுத்தலுமவித்தல். ஆூ-ந.

மூட்டுதலின்பெயர் :— மாட்டலும்பொருத்தலும்-மூட்டுதலாகும். ஆூ-உ.

செறித்தலின்பெயர் : —குளித்தலுமூழ்கலும்-செறித்தலைக்கூறும். ஆூ-உ.

கூட்டத்தின்பெயர்:—யோகங்கூட்டம். ஆ-க.
விடுதலின்பெயர்:--வியோகம்விடுதல்-மோசநமோக்கம், வீதலுமதுவே. ஆ-ச.
கடுமையின்பெயர்: —வேகங்கடுமை - எனவிளம்பினரே. ஆ-க.
செய்கடனின்பெயர் :— நியமமுநியதியும்-நிகழுஞ்செய்கடன். ஆ-உ.
குயிலுவத்தொழிலென்பது :-குயிலுவத்தொழிலே-நரப்புமுன்கருவி,பயிலும்பாடல்-பண்பிற்ருகும்.ஆ-ந
கூத்தின்பெயர்: —நடமேநாடகம்-கண்ணுணட்டம்,படிகமாடல்-தாண்டவம்பரதம்,ஆலுதறாங்கல் - வாணிகுரவை, இலயநிலயம்-நிருத்தங்கூத்தே. நாட்டியநட்டணம்,நடையுமதற்கே-நவிலலுமாகும். ஆ-உ௰.
மாயோனுடலின்பெயர்: —அல்லியங்குடமாடல்-மல்லேமரக்கால்,எல்லொளிமாயோன்-ஆடலாகும். ஆ-ச.
சிவனுடலின்பெயர்:—பாண்டரங்கம்-கபாலங்கொடுகொட்டி,என்றிவைமூன்றும்-முக்கணனுடல். ஆ-ரு.
முருகனுடலிபெயர்: —கொட்டியுங்குடையும்-குமரனுடல். ஆ-உ.
திருமகளாடலின்பெயர்:— பாவையென்பது-திருமகளாடல். ஆ-க.
இந்திராணியாடலின்பெயர் :—அயிராணியாடல்-பெயர்கடையமாகும். ஆ-க.
துர்க்கையாடலின்பெயர் :—மரக்காற்கூத்தே-துர்க்கையாடல். ஆ-க.
சத்தமாதராடலின்பெயர்: —எழுவர்மங்கையர்-ஆடலுந்துடியே. ஆ-க.
காமனுடலின்பெயர் :—பேடாடல்காமன-தாடலாகும். ஆ-க.
கூத்தின்விகற்பத்தின்பெயர் : — கரணம்பித்தம்-மலைப்புப்பவுரி,பிரமரிவீரட்-டானங்குனிப்பே, உள்ளாளனங்கடகம்-எனவேயொன்பதும், ஓள்ளியகூத்தின்-விகற்பமாகும்,உம்பிதம்புரியம்-இலயம்பரதமும்,அப்பெயர்க்காமென்-றறைந்தனர்புலவர். ஆ-௰ரு.
கைகோத்தாடலின்பெயர்: —குரவைக்கூத்தே-கைகோத்தாடல். ஆ-க.
முடக்கியவிருகைப் பழுப்புடை யொற்றியாடலின் பெயர்: —முடக்கியவிருகை-பழுப்புடையொற்றி, துடக்கியநடையது-துணங்கையாகும். ஆ-க.

வேலனுடலின்பெயர்: — அணங்கும்வெறியும்-கழகும்வேலனுடல். ஆூ-ங.

ஒற்றறுத்தலின்பெயர் : — வட்டித்தறட்டல்-வட்டணையொற்றறுத்தல். ஆூ-ங.

கைகுவித்துக்கொட்டலின்பெ ர் :—கொம்மைகொட்டல்-கைகுவித்துக்கொட்டல். ஆூ-க.

ஆர்த்துவாய்புடைத்தலின்பெயர் : —ஆவலங்கொட்டல்-ஆர்த்துவாய்புடைத்தல். ஆூ-க.

குந்திநிற்றலின்பெயர் : —குந்தியகானிலை-குஞ்சித்தலாகும். ஆூ-க.

கைகூப்பிமெய்கொட்டிநிற்றலின்பெயர் : —குடந்தங்கூப்பி-மெய்கொட்டிநிற்றல். ஆூ-க.

தாளவொற்றின்பெயர் : —சதியுஞ்சீரும்-தாளவொற்றின்பெயர். ஆூ-உ.

கீறலின்பெயர் : — கீளல்கீண்டல்-கிழித்திடல்கீன்றல்,கீழ்தல்பீறல்-கீறலின்பெயரே. ஆூ-ஈ.

கிளைத்தலின்பெயர் :— பிளிரன்ஞெண்டல்-கிண்டல்கிளைத்தல். ஆூ-ங.

கத்தரித்தலின்பெயர் : —கொய்தல்கத்தரித்தல். ஆூ க.

குட்டுதலின்பெயர் :—தகர்த்தல்குட்டுதல் - உடைதலுமாகும். ஆூ-உ.

அடுக்குதலின்பெயர் : — ஏற்றலடுக்குதல். ஆூ-க.

ஒழிதலின்பெயர் : —ஓவலொழிதல். ஆூ-க.

மாற்றலின்பெயர் :—விலக்கன்மாற்றல். ஆூ-க.

மிசையின்பெயர் :—மீமிசைமிசையே. ஆூ-க.

தாபித்தலின்பெயர் : — நிலைபடச்செய்தல்-தாபித்தலாகும். ஆூ-க.

நிறுத்தலின்பெயர் :— நோன்றறுனே-நிறுத்தலென்ப. ஆூ-க.

சொலித்திடலின்பெயர் :— இடத்தல்சொலித்திடல்-என்னற்பாற்றே. ஆூ-க.

வகிர்தலின்பெயர் : — துவர்தல்வகிர்தல்-ஆகச்சொல்லுவர். ஆூ-க.

குத்தலின்பெயர் :— புடைத்தலெரிதல் - எற்றலிம் மூன்றும்,குத்தலென்ன-கூறப்படுமே. ஆூ-ங.

அடித்தலின்பெயர் :—கொட்டன்மொத்தல்-அறைதலகைத்தல், எற்றலதுக்கல் - மோதல்வழுக்கல்,என்றிவையெட்டும்-அடித்தலென்ப. ஆூ-அ.

வசமாக்குதலின்பெயர் :—வடித்தல்வசமாக்-குதலின்மாற்றே. ஆ-க.

மூண்டிதமாக்கலின்பெயர் :—மழித்தன்மூண்டிதம்-ஆக்கலென்ப. ஆ-க.

வாருதலின்பெயர்:—வளைத்தல்கவர்தல்-வெளவல்கொளலிவை,வாருதலென்ன-வகுக்கற்பால. ஆ-ச.

கொள்ளையின்பெயர்:—கொண்டிசூறை - கொள்ளையாகும். ஆ-உ.

பரத்தலின்பெயர் : — பாரித்தல்விரியல் - பரத்தலென்ப. ஆ-உ.

முகத்தலின்பெயர் :—தோண்டலேண்டல்-முகத்தலென்ப. ஆ-உ,

காத்தலின்பெயர்:—திதிநிலைபெறுத்தல்-நோக்கல்புரத்தல்,காத்தலென்ன-கழறப்படுமே. ஆ-ச.

பங்கீட்டின்பெயர் : — பகுத்தல்பார்த்தல் - பாகம்பாதி,பங்கீடென்ன-பகரற்பால. ஆ-ச.

விரித்தலின்பெயர் :—இருத்தல்விரித்தல். ஆ-க.

பொதிதலின்பெயர் : —வீக்கம்பொதிதல். ஆ-க.

சித்தின்பெயர்:—சம்பிரதம்-சித்தின்மேற்றே.ஆ-க.

அருவலின்பெயர்:—பருவரலருவல். ஆ-க.

நீக்கலின்பெயர் :—வரைவுநீக்கல். ஆ-க.

மாறுபாட்டின்பெயர்:—தெற்றலென்பது-மாறுபாடென்ப. ஆ-க.

சுடலின்பெயர் :— தூபிதஞ்சந்தாபம்-சுடலெனப்படுமே. ஆ-உ.

மறைப்பின்பெயர் :— மாய்தலாவரணம்-மறைப்பின்பெயரே. ஆ-உ.

தள்ளலின்பெயர் :—நூக்கலூன்றல் - நோன்றறள்ளல். ஆ-ந.

அவமதிச்சிரிப்பின்பெயர்: — அசியவமதிச்சிரிப்பாமெனவறைவர். ஆ-க.

பிணக்கின்பெயர் : —மறலரிலபறம்-துவக்குப்பிணக்கே. ஆ-ச.

கொப்பளித்தலின்பெயர் :—பிளிற்றல்பில்கல்-காலல்கொப்பளித்தல், உமிழ்தலுமாமென - உரைக்கற்பாற்றே. ஆ-ந.

அலையலின்பெயர்:— அலைசன்ஞெகிழ்தல்-ஞொல்கலாஞ்சி,அலையலின்பெயரென-அறைதற்குரிப.ஆ-ச.

சத்திசெயலின்பெயர்: —உமிழ்தல்கான்றல்-உற்கா ரஞ்சத்தி,செயலின்பெயரென-செப்பினர்புலவர். ஆூ ௩.

மூச்சின்பெயர் :—தும்மல்சுவாசம்-மூச்சௌச்சொல்லும். ஆூ-உ.

தாழ்தலின்பெயர் :— குரங்கலிறைஞ்சல்-கூறுபதாழ்தல். ஆூ-உ. [மாகும். ஆூ-உ.

இறக்குதலின்பெயர்:—இறக்குதலிறங்குதல்-குனிவு

அதனினடித்தலின்பெயர் :— அதனினடிப்பது - நடமாகும்மே. ஆூ-க.

அண்ணல் செம்பாதிக் காணி யாட்டியை
பெண்ணணங்கை மூவுலகும் பெற்ற வம்மை
செந்தமிழ் மாலையந் தாதி புனைந்த [யை
நாவல னம்பற் காவலன் சேந்தன்
இயல்வுற்ற திவாகரத்

தொன்பதாவது

செயல்பற்றியபெயர்த்தொகுதி

முற்றிற்று.

பத்தாவது

## ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

மூலபாடம்.

சொல்லுதலின்பெயர் : —விரித்தல்கதைத்தல் - உரைத்தல்கூறல்,தெரித்தலாடல்-நொடித்தனவிலல், சாற்றல்பணித்தல்-மொழிதல்வலித்திடல், ஏற்றமுந்நான்கும்-சொல்லுதற்கிசையும். ஆூ-௰உ.

சொல்லின்பெயர்:—பகர்தல்செப்பல்-இயம்பல்பரவல்,குயிறலிறுத்தல்-கூறல்புகறல், கட்டுரைவிளம்பல்-கரைதலோதல்,சொற்றல்வழங்கல்-வசநங்காதை, பேசல்பேச்சு-கிளப்பேயறைதல்,இசைப்புத்தேர்தல் - மிழற்றல்வாணி,அசைப்பென்றின்னவை - சொல்லெனவறைவர்.குயில்விஞவெதிர்ப்பு-கீர்நுவல்பாணி,இயம்வாக்கென்பவும்-சொல்லின்பால. ஆூ-௩௩.

பதத்தின்பெயர்:— பாழியுமுரையும் - பதமெனவுரைப்பர்.ஆூ உ.

வாசகத்தின்பெயர்: —வார்த்தைவசநம்- வசித்தல் பாசுரம், சேர்த்தநான்கும்-வாசகஞ்செப்பும். ஆ-ச.

பல்கால்விளம்புதலின்பெயர்:—மீதுரைப்பல்கால் -விளம்புதலாகும்.ஆ-க.

சத்தியத்தின்பெயர் :—ஆணைவிரதம் - வட்டித்தல் சூள்பிர,மாணம்வஞ்சினம்-சபதஞ்சத்தியம்.ஆ-எ.

மெய்யின்பெயர்:— வாய்மைசாதம்-சரதமுண்மை வாய், ஆணையுந்திடமும் - மெய்யெனவறைவர் .சத்திய மன்றம்- நிலைமையைவேளாண்மை, நிச்சயமென்பவும்-மெய்யென நிகழும். ஆ-ம௨.

பொய்யின்பெயர்:—மடிவஞ்சமாயம் - அநுசிதம் படிறு, சடம்வக்கிரம்விகிர்தம் - நுசிதம்பொய்யே, மிச்சைவலக்காரம்-தள்ளல்வழுது, பெட்டுசாதநை-பொய் யின்கூற்றே. ஆ-ம௫.　　[ம்.ஆ-உ.]

குறளையின்பெயர்:—குஞ்சம்பிசுநம் - குறளையாகு

புறங்கூறலின்பெயர் :—கொடுவாயென்பது - புறங் கூறலாகும். ஆ-க.

வெறும்புறங்கூறலின்பெயர் : — கொண்டியுந்தொ டுப்பு - வெறும்புறங்கூறல். ஆ-உ.

ஆசில்வாழ்த்தின்பெயர் :—ஆசிடையென்ப - தா சில்வாழ்த்தே, பல்லாண்டாசிகை - வாரஞ்சோபநம், சொல்லியநான்குமவ்-வாழ்த்தினைச்செப்பும். ஆ-ரு.

திசைச்சொல்லின்பெயர்:—தேசிகந்திசைச்சொல். ஆ-க.

துதித்தலின்பெயர் :—வழுத்தல்பரவுதல் - ஏத்த றுதித்தல், போற்றல்பாசுதல்-தோத்திரமெச்சல், சாற் றியநான்கும் - அதன்பாற்சாரும். ஆ-எ.

வாழ்த்தின்பெயர் :— பழிச்சல்புகழ்தல்-வாழ்த்தெ னப்படுமே. ஆ-உ.

பெருஞ்சொல்லின்பெயர் :—பலரறிசொல்லே-பெ ருஞ்சொல்லென்ப. ஆ-க.

சிறுசொல்லின்பெயர் :—சிறுசொற்பழித்தல். ஆ-க.

பழிச்சொல்லின்பெயர்:—அம்பல்கௌவை - எச் சலர்பழிச்சொல், பரிவாதந்தீச்சொல் - பழிச்சொல்லா கும். ஆ-சு.

விடாதுபேசலின்பெயர் : — பிதற்றுதல்விடாது - பேசலாகும். ஆ-க.

16

சிலரறிந்துதம்முட்புறங்கூறலின் பெயர் : — அம்பல்சிலரறிந்து-தம்முட்புறங்கூறல். ஆ-க.

பலருமறிந்துபழிதூற்றுதலின்பெயர் : — அலரே பலரு-மறிந்தலர் தூற்றல். ஆ-க.

இகழ்ச்சிச்சொல்லின்பெயர் :—ஏயேசீச்சி - என்னி ளியேளநம், ஆயநான்கும் - இகழ்ச்சியினுகும். ஆ-ரு.

அதட்டலின்பெயர் : — அதிர்த்திடறெழித்தல் - உரப்பலதட்டல். ஆ-ங.

மறைத்துமொழியுஞ்சொல்லின்பெயர் : — இடக்கரென்பது - மறைத்துமொழிகிளவி, மற்றுங்கூதநம் - மறைத்துறைக்குஞ்சொல். ஆ-உ.

புகழின்பெயர் :— கீர்த்திமேம்பாடு-மீக்கூற்ருெளியிசை, சிர்த்தியென்றிவை - புகழெனச் செப்பினர். ஆ-சு.

ஏற்றமொழியின்பெயர் : — தோற்றமுஞ்சொன்மாலையும் - ஏற்றமொழியாகும், மெய்ப்புகலோகஞ்சிர்.ஏற்றமொழியென்ப. ஆ-ரு.

ஏற்றத்தின்பெயர் :—ஙியாதக்கிளவி - ஏற்றங்கிளக்கும். ஆ-க.

மிகுபுகழின்பெயர் :—சிர்த்தியுங் கீர்த்தியும்-மிகுபுகழாகும். ஆ-உ.

மேம்பாட்டின்பெயர் :— ஊற்றமேம்பாட்டின்-பெயராகும்மே. ஆ-க.

தேற்றத்தின்பெயர் :—ஓர்ப்பு கடைப்பிடி - குறிக்கோடேற்றமென், ருர்த்தபுலவர் - அறிந்துரைத்தனரே. ஆ-ங.

தேற்றமொழியின்பெயர் : — மற்றென் கிளவியும் - மன்றவென் கிளவியும், தெற்றென்கிளவியும் - தேற்றமாகும். ஆ-ங.

உறுதிக்கட்டுரையின் பெயர் :--கழற லுமிடித்தலும்-உறுதிக்கட்டுரை. ஆ-உ.

நிரம்பாமென்சொல்லின் பெயர் :— நிழற்றலுமிழற்றலும்- நிரம்பாமென்சொல். மழலைகொஞ்சல்-குதலையுல்லாபம், மிழலையெனவும்-விளம்புமதற்கே. ஆ-எ.

புனருத்தியின்பெயர் :—கூறியதுகூறல் - புனருத்திக்கூற்றே. ஆ-க.

சூளுறவின்பெயர் :—சூளேவஞ்சினம்-சபதஞ்சூளுறவே. ஆ-ங.

பேசாவென்பதின்பெயர் :— வாளாவென்கிளவி - பேசாவென்றாகும். ஆ-க.

நன்நிமித்தத்தின்பெயர்:-விரிச்சியும்வாய்ப்புளும்- நற்சொனிமித்தம். ஆ-உ.

அழைத்தலின்பெயர் : — கூவலும் விளித்தலும் - உளைத்தலுங்கரைதலும், வாவெனலுமழைத்தல்-மாற்ற மாகும். ஆ-ரு.

சுமையிலாதழைத்தலின்பெயர் :— கத்தல்கூப்பிடல்- கதறலலறல், ஒத்தநான்கும் - கமையிலாதழைத்தல், இருத்தல்கேதல் - ஆகருடணை, அகவலுன்குமவ்-வழை த்தலாகும். ஆ-அ.

பொரவழைத்தலின்பெயர் :— அறைகூவல்பொர வழைத்தல். ஆ-க.

கீழறுத்தலின்பெயர் :—அறைபோதல் கீழறுத்த [ல். ஆ-க.]

முதுசொல்லின்பெயர் : — மொழிமைமுதுசொல். ஆ-க.

காரணச்சொல்லின்பெயர் :—கதைகாரணச்சொ [ல். ஆ-க.]

உபசாரச்சொல்லின்பெயர் :— முகமனுநன்னயக் - கிளவியுமுபசாரம், சம்மானமுமுப - சாரச்சொல்லே. ஆ-ங.

நயச்சொல்லின்பெயர்:—அசதிநகைநயக் - கிள [வியாகும். ஆ-உ.]

வினவலின்பெயர்:—வினவல்கடாவல். ஆ-க.

வினவற்கெதிர்மொழியின்பெயர் :—விடையதற்கெ திர்மொழி. ஆ-க.

வினவும்விடையுங்கூடியபொருளின்பெயர் :—சல் லாபம்வினவிடை - தழுவும்பொருளே. ஆ-க.

பொருளின்மையின் பெயர் : — அநர்த்தம்பொரு ளின்மை - ஆகுமென்ப. ஆ-க.

நெடுமொழியின்பெயர் : — நெடுமொழிதன்மேம் - பாடுதானிகழ்த்தல். ஆ-க.

அசைச்சொல்லின்பெயர் :—அன்றென்கிளவியும்- இன்றென்கிளவியும், ஆமென்கிளவியும் - ஆகுமசைச் சொல். ஆ-ங.

கேட்பிக்குமுரை யசைச்சொல்லின்பெயர்:—அம்ம கேட்பிக்கும் - உரையசைச்சொல்லே. ஆ-க.

உரையசைச்சொல்லின்பெயர் : — ஆங்கவ்வுரைய சைச் - சொல்லெனலாகும். ஆ-க.

முன்னிலையசைச்சொல்லின்பெயர்:—மியாவிகமோ மதி - இகுஞ்சினென்னும், ஆவயினாறும் - முன்னிலை யசைச்சொல். ஆூ-சு.

அசைநிலைச்சொல்லின்பெயர் : — யாகாபிறபிறக்க ரோ-யோமாதெனவருஉம், ஆயேழ்சொல்லும்-அசை நிலைக்கிளவி. ஆூ-எ.

இசை நிறை யசை நிலையின் பெயர் : — ஏயுங்குரை யும் - இசைநிறையசைநிலை. ஒப்பில்போலியும் - அப் பொருட்டாகும். ஆூ-ரு.

உடனிகழ் விடைச்சொல்லின்பெயர் :— ஒடுவென் கிளவி-உடனிகழ்வாகும். ஆூ-க.

சாரியைமொழியின்பெயர் :—இன்னேவற்றே-அற் றேயம்மே, ஒன்னேயானே - அக்கேயிக்கே, அன்னென் கிளவி-உளப்படப்பிறவும், அன்னவென்ப - சாரியை மொழியே. ஆூ-கூ.

இடைச்சொல்லின்பெயர்:—அம்ஆம்எம்ஏம்- தம் நம்நும்மே, உம்மேஅன்ஆன் - உறைகெழுஞான்றே, அல்ஆல்அன்றே-எனவேமன்னே, தில்லைவான்பாக்கு- தெய்யவுமிடைச்சொல். ஆூ-உரு.

எழுத்தின்சாரியையின்பெயர் :— காரமுங்கரமும் - காஞெடுசிவணி, நேரத்தோன்றும்-எழுத்தின்சாரியை. ஆூ-ரு.

வேற்றுமையின்பெயர்:—ஐயொடுகுஇன் - அது கண்ணென்றும், அவ்வாறென்ப - வேற்றுமையுருபே. ஆூ-சு.

சுட்டின்பெயர் :—அ இ உ இம்-மூன்றுஞ்சுட்டே. ஆூ-ரு.

விஞவின்பெயர்:—ஆ ஏ ஓ இம் - மூன்றும்விஞ. [ஆூ-ரு.]

ஐயுற்றசொல்லின்பெயர் :—யாதுமெவனும்-கொல் லுமென்னையும், ஆகுமென்ப - ஐயுற்றகிளவி. ஆூ-ச.

இடத்தினையுற்றசொல்லின்பெயர்:—யாண்டையும் யாங்கும் - இடத்தினையுற்றசொல். ஆூ-உ.

கல்வியின்பெயர் :—உறுதியுஞ்சால்பும் - ஓதியுமறி வும், கலையுங்கேள்வியும் - கல்வியாகும். வித்தைசாலம்- விஞ்சையுதியம், மற்றிந்நான்கும்-கல்வியினுமாம். ஆூ-ம.

கற்றலின்பெயர் :—நவிலல்கெழுமல் - பயிலலுங் கற்றல். ஆூ-ரு.

படித்தலின்பெயர்:—பாடல்வாசித்தல்-பயிலல் கற்றல், ஓதல் த்தி - யபநமும்படித்தல். ஆ -சு.

எழுதாக்கேள்வியின்பெயர் :—சுருதிமறைசாகை - எழுதாக்கேள்வி. ஆ -ரு.

வேதநூலின்பெயர்:—ஆதிநூலென்பது-வேதநூற் பெயரே, இருக்கோத்தாரணம்-வேதமென்ப.ஆ -சு.

வேதநூலி னிருவகைப்பொருளின்பெயர்:—ஞாந பாகையும்-கருமபாகையும், ஆயிருபாற்பொருள்-வேத நூற்கே. ஆ -உ.

வேதத்தின் ஞானபாகையின்பெயர் :—ஆரணம்வே தத்தின்-ஞானபாகை. ஆ -க.

உபநிடதத்தின்பெயர்:—உபநிடதம்வேதத்தின் - உட்பொருணுட்பம். ஆ -க.

வைதிகத்தின் பெயர் : — வைதிகம்வேத - மொழி மார்க்கமாகும். ஆ -க.

முதல்வேதத்தின்பெயர் :—இருக்குமுதல்வேதம் - பௌடிகமெனப்படும். ஆ -உ.

இரண்டாம் வேதத்தின்பெயர் :— இரண்டாம்வேதம் - தைத்திரியமென்ப ஆ -க.

மூன்றும்வேதத்தின்பெயர் :— மூன்றுவசுசாமம் - கீதனடைசாரும். ஆ -உ.

நான்காம்வேதத்தின்பெயர் : — நான்காம்வேதம் - அதர்வணமென்ப. ஆ -க.

பனுவலின்பெயர் :— அதிகாரமாரிடம் - பனுவலாகும். ஆ -க.

நூலின்பெயர்:—பிடகந்தந்திரம்-நூலின்பெயரே. ஆகமம்பனுவல் - ஆரிடஞ்சமயம், சூத்திரமைந்தும் - நூலினைத்துலக்கும். ஆ -ரு.

நூன்முடிபின்பெயர் :— படலஞ்சருக்கம்-பரிச்சேதங்காண்டம், இலம்பகமத்தியாயம் - எய்துநூன்முடிபே. ஆ -சு.

பாயிரத்தின்பெயர் :— பாயிரநூன்முகம்-புறவுரையெனப்படும், பதிகம்புனைந்துரை - தந்துரையுமதுவே. ஆ -ரு.

முதுரையின்பெயர் :—முதுரைபழமொழி - முதுமையுமெனப்படும், மொழிமைமுன்சொல் - முதுசொல பழஞ்சொல், மொழிந்தநான்குமம் - முதுரையென்ப. ஆ -சு.

பாடத்தின்பெயர் :—ஓதன்மையாடல்-பாடமாகும். ஆ -க.

நூற்பாவகவலென்னும்பெயர் : —நூற்பாவகவல்-நுணங்கநாடில்,சூத்திரங்குறித்த - யாப்பிற்ருகி, அடிவரையின்றி-விழுமிதினடக்கும்.

ஒத்தென்னும்பெயர்:—நேரினமணியை-நிரல்படவைத்தாங்,கோரினப்பொருளை-ஒருவழிவைப்ப, தோத்தெனமொழிப-உயர்மொழிப்புலவர்.

படலமென்னும்பெயர்: —ஒருநெறியன்றி-விரவியபொருளால், பொதுமொழிதொடரினது-படலமாகும்.

வேற்றிசைப்பாவென்னும்பெயர் :— சருக்கமுடிவினும் - இலம்பகமுடிவினும்,விருத்தநடையது - வேற்றிசைப்பாவே.

உரைப்பொருளின்பெயர்:--விரித்துரைமெய்யுரை-உரைப்பொருளாகும். ஆ-உ.

பொழிப்பென்னும்பெயர் : — பொழிப்பெனப்படுவது-பொருந்தியபொருளை, பிண்டமாக-கொண்டுரைப்பதுவே.

பதிகமென்னும்பெயர் :—பதிகக்கிளவி-பலவகைப்பொருளை,தொகுதியாக-சொல்லுதலாகும்.

இலக்கியத்தின்பெயர் :-இலக்கியமுதாரணம்-எடுத்துக்காட்டல்.இதிகாசமுமே-இலக்கியமாகும். ஆ-ந.

அரும்பொளின்பெயர் :-ஞாபகமும்பிசியும்-அரும்பொருணடையே. ஆ-உ.

பாவின்பெயர் : —தூக்கும்யாப்பும்-செய்யுளுங்கவியும்,பாட்டுங்கவிதையும்-பாவெனப்படுமே. ஆ-சு.

வெண்பாவின்பெயர் :—முதற்பாவெண்பா.ஆ-க.

கலிப்பாவின்பெயர் : —முரட்கைகலிப்பா. ஆ-க.

ஆசிரியப்பாவின்பெயர்:—அகவலுந்தொகையும்-ஆசிரியப்பாவே. ஆ-உ.

வண்ணகத்தின்பெயர் :—அராகமுடுகியல்-வண்ணகமாகும். ஆ-உ.

குளகச்செய்யுளென்னும்பெயர் :— குற்றெழுத்துத்தொடரினது-குளகச்செய்யுள்.

சந்தப்பாட்டென்னும்பெயர் :-இருபதின்மேலும்-இருமூன்றெழுத்துநான், கடியும்வருவது - சந்தப்பாட்டே.

தாண்டகமென்னும்பெயர் : — மற்றதன்மிகுதி - சொற்பெயர்தாண்டகம்.

கணக்கின்பெயர் :— எழுத்துமெண்ணும் - கணக்கெனப்படுமே. ஆறு-உ. [மலகே. ஆறு-ந.]
எண்ணின்பெயர் :—எண்ணேகரணம் - கணித

எழுத்தாவன:—பெயரெழுத்துமுடிவெழுத்து-வடிவெழுத்துத்தன்மை, எழுத்தெனவெழுத்தின் - பெயரியம்பினரே.

ஒற்றெழுத்தின்பெயர் :— விராமமும்புலுதமும் - மெய்யுமொற்றெழுத்தே,தனிநிலைபுள்ளி - ஆய்தமொற்றெழுத்தே.

உயர்மொழிக்காஞ்சியென்னும்பெயர் :—நல்லவருறையுலகம் - எய்தப்புலவர்,ஒழுக்கங்கொளுத்துமுறை-உயர்மொழிக்காஞ்சி.

முதுமொழிக்காஞ்சியென்னும்பெயர் :—கழிந்தோரேனை-ஒழிந்தோர்க்குக்காட்டிய,முறைமையாகும்-முதுமொழிக்காஞ்சி.

பேரியற்காஞ்சியென்னும்பெயர் :— கேட்டியல்புரைத்தது-பேரியற்காஞ்சி.

பொருண்மொழிக்காஞ்சியென்னும்பெயர் :-அருண்மொழிமெய்ப்பொருள்-பொ[illegible] காஞ்சி.

முதுபாலையென்னும்[illegible] [illegible]க்திடை-கணவனையிழந்து,தனிமக[illegible]

குறுங்கலியென்[illegible]

வல்லிசையின்பெயர் : — உச்சந்தாரம் - ஓங்கும் வல்லிசை. ஆூ-உ.

மந்தவிசையின்பெயர்:—காகுளிமந்தவிசை.ஆூக.

இன்னிசையின்பெயர் :—இராகமின்னிசை.ஆூக.

சமனிசையின்பெயர் :—மந்தமத்திமம்-வழங்குஞ்சமனிசை. ஆூ-உ.

பல்லியந்தழுவுபாடலின்பெயர்: — சங்கீதம்பல்லியம்-தழுவுபாடல். ஆூ-க.

நரம்பிேேசையின்பெயர்: —எழாலேதந்திரி- நரம்பிேேசை. ஆூ-உ.

பண்ணென்னும்பெயர் : —நிறைநரம்பிற்றே-பண்ணெனலாகும். ஆூ-க.

திறமென்னும்பெயர் :—குறைநரம்பிற்றே-திறமெனப்படுமே. ஆூ-க.

நால்வகையாழாவன :—பேரியாழ்சகோடயாழ்-மருதயாழ்செங்கோட், டியாழெனு நான்கும் - நால்வகையாழ்ப்பெயர்.

நாற்பெருமபண்ணவன :—யாமையாழ்ப்பெயர்-குறிஞ்சியாழுங் ... ராழ்ப்பெயர்-முல்லையாழும்,பாலையாழும் ... நால்வகையாழும் - நாற்பெ

... ிறனில்யாழே-நெய்தல

நெய்தல்யாழ்த்திறனின்பெயர் :—திறனில்யாழ்விளரி-நெய்தனிலஞ்சிவணும். ஆ-உ.

பாடலாடற்றுறைப்பாட்டிற்கேற்பன : — செந்துறைவெண்டுறை - பாடற்கேற்பன. அம்மென்பாட்டே-ஆடற்கேற்பன.

அகமார்க்கமென்னும்பெயர் :—அருமையிற்பாடல் அகமார்க்கமாகும்.

ஏழிசையின்பெயர்:—குரலேதுத்தம் - கைக்கிளையுழையே, இளியேவிளரி - தாரமென்றிவை, எழுவகையிசைக்கும் - எய்தும்பெயரே. ஆ-எ.

இவற்றிேனசையின்பெயர்: — சங்குகுயின்மயில் - யானைபுரவி, அன்னங்காடை-அவற்றிேனசை, வண்டுகிள்ளை - வாசிமதயானை, தவளைதேநுவா - டேழிசையோசை. ஆ-ிச.

இவற்றினெழுத்தின்பெயர் :— சவ்வும்ரிவ்வும்-கவ்வுமவ்வும், பவ்வுந்தவ்வும்-நிவ்வுமென்றிவை, ஏழுமவற்றின் - எழுத்தேயாகும். ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ எனும், இவ்வேழெழுத்தும் - ஏழிசைக்குரிய. ஆ-ிச.

இவற்றின் பிறப்பிடத்தின் பெயர் : — மிடறுந்தாலும் - அண்ணமுஞ்சிரமும், நெற்றியுநெஞ்சும் - நாசியுமுறையே, குரலாதியேழிசைக் - குப்பிறப்பிடமே. ஆ-எ.

இவற்றின்மாத்திரையின்பெயர் : — இளிதுத்தங்குரற்-கேற்குநந்நான்கே, கிளையும்விளரியும் - மும்மூன்றுழையும், தாரமுமிவ்விரண் - டேழிசைமாத்திரை. *

இவற்றின்மணத்தின்பெயர் :—மௌவன்முல்லை - கடம்புவஞ்சி, நெய்தல்வீரை - புன்னையுமிசைமணம். ஆ-எ.

இவற்றிற்கீசரின்பெயர் :—விசுவாமித்திரன்-இயமனங்கி, சசியேவெய்யோன் - கௌதமகாசிபன், இவ்வேழ்பெயரும் - ஏழிசைக்கீசர். ஆ-எ.

இராகத்தின்பெயர் : — தக்கராகம் - துக்கராகம், பழைந்தக்கராகம் - நட்டராகம், கின்னராகம் - சங்கின்னராகம், நிருபதுங்கராகம்-என்னவருபவை, இராகப்பெயரென - இசைத்தனர்புலவர். ஆ-எ.

* அவையாவன:—இளி-ச. துத்தம்-ச. குரல்-ச. கைக்கிளை-ங. விளரி-ங. உழை-உ. தாரம்-உ.

கொல்லிவகையின்பெயர் :— சாயவேளர்கொல்லி - சித்திரவேளர்கொல்லி, இத்திறங்கொல்லி - பெயரென விசைப்பர். ஆூ-உ.

வராடிவகையின்பெயர் :—ஆரியவராடி - கொல்லி வராடி., தீபவராடி - என்னுந்திறமும், ஆகும்வராடிக்-கமைத்தபல்பெயரே, ஆூ-ங.

குறிஞ்சிவகையின்பெயர் :—சாவகன்குறிஞ்சி-மேக ராகக்குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி - அந்தாளிக்குறிஞ்சி, ஆகுங்குறிஞ்சிக் - கடுத்தபல்பெயரே. ஆூ-ச.

பஞ்சமத்தின்பெயர் :—காந்தாரபஞ்சமம் - உருத் திரபஞ்சமம். ஆூ-உ.

தக்கேசியின்பெயர் :—பஞ்சமங்காம்போதி - பாண் டிதக்கேசி. ஆூ-ங.

இந்தளத்தின்பெயர்:—இந்தளமருளிந் - தளமே யாகும். ஆூ-க,

பண்ணின்பெயர் :— இராமக்கிரிதே - சாக்கிரிகொ ண்டை, கிரிமகுடராமக் - கிரியந்தாளி, பாடைநட்ட - பாடையருமவதி, செந்துருந்திசிகர-மாஞ்சிகண்டி, காந் தாரம்புறநீர்மை-குறண்டிகௌசிகம், நாட்டைசாதாரி-சாயரிகுச்சரி, நளுத்தைபழம்பஞ்சுரம் - பஞ்சுரங்கவ் வாணம், கொல்லிகவ்வாணம்-காஞ்சிக்கவுடிகம், மல கரிபயிரவி - காம்போதியென்ன, பண்ணுந்திறமும் - பிறவும்பண்ணே. ஆூ-உசு.

ஒலித்தலின்பெயர் : — கலித்தல்சும்மை - கம்பலை யழுங்கல், சிலைத்தறுவைத்தல் - சிலம்பலிரங்கல், இமி ழ்த்தல்விம்மல் - இரட்டலேங்கல், கனைத்தறழுங்கல் - கறங்கலரற்றல், இசைத்தலென்றிவை-ஒலித்தலையிசைக் கும், சிரற்றறெருநித்தல் - தெழித்தல்குமுறல், உரற்ற லுளைத்தல் - உரைத்தலேங்கல், இரைத்தலும்பல்-இடி த்தன்முழக்கல், குரைத்தறெவிட்டல் - குளிறலியம்பல், சிலம்பலலம்பல்-சிதைத்தல்புலம்பல், இங்கிந்நாலைந் - தொலித்தலுக்கேற்கும். ஆூ-ஙஎ.

ஒலியின்பெயர் : — ஓதைநாதம் - கம்பலையோலே, ஆகுலம்புலம்பல் - கோடணையரவம், ஓசைகர்ச்சனை - ஒலியென்கிளவி, சுருதிதுழனி - தொநியாரவாரம், இரையுரைசும்மை - இசைகளன்வகுணி, பாட்டிடியா றிரண் - டொலியினைப்பகரும். ஆூ-உஉ.

சிலையொலியின்பெயர் :— மருமராஞ்ச சிலையொலி. ஆ-க.

உள்ளோசையின்பெயர் :—முரவுநரல்வும்-தெளிரு ஞெளிரும், உழைவுநுணுக்கமும் - உள்ளோசையாகும். ஆ-சா.

எழுத்திலாவோசையின்பெயர் :— பிளிறலுங்குளிரலும் - பிரற்றலுஞ்சிரற்றலும், மருளலும்பயிறலும் - குரைத்தலுங்கனைத்தலும், முழைத்தலுமகவலும்-எழுத்திலாவோசை. ஆ-ய.

ஆரவாரத்தின்பெயர் :—அதிர்ச்சியழுங்கல்-ஞெள்ளலுரற்றல், குரைத்தறழுங்கல்-பிளிற்றுவைத்தல், கலித்தல்கரைதல் - ஓதைபாரரை, தெளித்தல்புலம்பல்-பூசறமரம், கனைத்தல்சிள்ளெனல் - ஒளிகோலாகலம், அனைத்துந்திமிலமொ - டாரவாரம். ஆ-உக.

ஒன்றலாப்பேரொலியின்பெயர் :— தமரப்பூசல் - ஆர்ப்புக்கர்ச்சனை, குமுறலுலம்பல்-கோடணைகோலா, கலமேதெழித்தல்-கலகமாகுலமோ, டேறுதன்முந்நான்-கொன்றலாப்பேரொலி. ஆ-யஉ.

அநுகரணவோசையின்பெயர் :— இம்மெனல்கல்லெனல் - இமூமெனல்வல்லெனல், பொம்மெனலொல்லெனல் - பொள்ளென்ஞெள்ளெனல், அன்னவநுகரண - ஓசையாகும், கொம்மெனல்விடேலெனல்-நெரேல்னன்முகேரெனல், அம்மெனல்சரேலெனல் - அநுகரணவோசை. ஆ-யசு.

உபயவோசையின்பெயர் :—படபடெனல்களகளெனல்-பதபதெனல்கொளகொளெனல், மொடுமொடெனறிடுதிடெனல் - மொகமொகெனல்கலகலெனல், நெடுநெடெனல்கடகடெனல்-நிறையுபயவோசை. ஆ-யி.

அரக்கரைப் பொருத முரட்போர் வில்லும்
பாரதம் பொருத பேரிசைச் சிலையும்
தாருகற் கடிந்த வீரத் தமிழும்
பாடிய புலவன் பதியம்பற் சேந்தன்
பயில்வுற்ற திவாகரத்துப்

பத்தாவது
ஒலிபற்றியபெயர்த்தொகுதி
முற்றிற்று.

கடவுளதுணை.

பதிற்றென்றுவது

ஒருசொற்

# பல்பொருட்பெயர்த்தொகுதி.

## ஆதியிற்பொருள்.

அங்கதமென்னும்பெயர் :— அங்கதந்தோளணி - அரவுமாகும். ஆூ-உ.

அசைதலென்னும்பெயர் : — அசைதலாடலும் - தங்கலுமுரித்தே. ஆூ-உ.

அடுதலென்னும்பெயர் :— அடுதல்சமைத்தலும்-கோறலுமாகும். ஆூ-உ.

அணியென்னும்பெயர்:—அணியேபூணும்-அழகுமாகும். ஆூ-உ.

அண்டரென்னும்பெயர் : — அண்டர்தேவரும் - ஆயருமாகும். ஆூ-உ.

அண்ணலென்னும்பெயர்:— அண்ணல்பெருமையும்-தலைவனுமண்ணுகலும். ஆூ-௩.

அந்தமென்னும்பெயர்:—அந்தமீறும் - அழகுமாகும். ஆூ-உ.

அந்திலென்னும்பெயர் : — அந்திலவ்விடமும் - அசைநிலைக்கிளவியும். ஆூ-உ.

அமர்தலென்னும்பெயர் :— அமர்தன்மிகுதியும் - பொலிவுமாகும். ஆூ-உ.

அம்பரமென்னும் பெயர் :—அம்பரங்கூறையும் - கடலுமாகாயமும். ஆூ-௩.

அயிலென்னும்பெயர்:—அயிலேவேலும்-கூர்மையுமாகும். ஆூ-உ.

அரணமென்னும்பெயர்:—அரணமதிலும் - கவசமுமாகும். ஆூ-உ.

அரலையென்னும்பெயர்:—அரலைகழலையோ-டருங்கனிகாழே. ஆூ-உ.

அரிலென்னும்பெயர் :—அரிலேபிணக்கும் - சிறுதூறுங்குற்றமும். ஆூ-௩.

அருகலென்னும்பெயர் : — அருகல்சுருங்கலும் - காதலுமாகும். ஆூ-உ.

அருணமென்னும்பெயர் :— அருணஞ்சிவப்பும் - ஆடுமாகும். ஆ-உ.

அலரியென்னும்பெயர் :—அலரிபூமரனும்-அருக்கனுமாகும். ஆ-உ.

அழுங்கலென்னும்பெயர் :—அழுங்கலிரக்கமும் - கேடுமாகும். ஆ-உ.

அள்ளென்னும்பெயர் : — அள்ளேகூர்மையும் - செறிவுமாகும். ஆ-உ.

அறலென்னும்பெயர் :—அறலேயறுதலும் - நீருநீர்த்திரையும், திரையலைத்துறுநுண் - கருமணலுமாகும். ஆ-ச.

அற்றமென்னும்பெயர் :—அற்றமறைபொருளும்-சோர்வுமாகும். ஆ-உ.

ஆகமென்னும்பெயர் :—ஆகமார்பும் - உடலுமாகும். ஆ-உ.

ஆசென்னும் பெயர் : — ஆசுசிறுமையும் - குற்றமும்விரைவும், பேசின்மெய்புகு - கருவியும்பெறுமே. ஆ-ச.

ஆயமென்னும்பெயர் : — ஆயங்கூட்டம் - சூதுக்கருவி. ஆ-உ.

ஆய்தலென்னும்பெயர் :—ஆய்தனுணுக்கமும்-தெரிதலுமாகும். ஆ-உ.

ஆரலென்னும் பெயர் : — ஆரல்செவ்வாய்க்கோளும் - கார்த்திகைநாளும். ஆ-உ.

ஆரென்னும்பெயர் :—ஆரேகூர்மையும்-ஆத்திபுமாகும், தேராழியகத்தில்-செறியுறுப்புமாகும். ஆ-ங.

ஆர்தலென்னும்பெயர் :-ஆர்தனிறைதலும்-உண்டலுமாகும். ஆ-உ.

ஆலுதலென்னும்பெயர் :—ஆலுதலாடலும் - ஒலித்தலுமாகும். ஆ-உ.

இகுத்தலென்னும்பெயர் : — இகுத்தல் தெகுத்தலும் - வீழ்த்தலுமாகும். ஆ-உ.

இதையென்னும்பெயர் :—இதையேமரக்கலப்-பாய்புதுப்புனமே. ஆ-உ.

இயலென்னும்பெயர் :— இயலேசாயல்- நடையென்றுகும். ஆ-உ.

இரங்கலென்னும்பெயர் :—இரங்கலரவமும்-அழுங்கலுமிசைக்கும். ஆ-உ.

இரலையென்னும்பெயர்:—இரலைக்கிளவி-தலைநாட் பெயரும், ஊதுகொம்பும்-புல்வாயுங்கலையும். ஆ-௪.

இழுமெனவென்னும்பெயர் :—இழுமெனலோசையும் - இனிமையுமாகும். ஆ-௨.

இளமையென்னும்பெயர் :—இளமையிளமைத்-தன்மையுமத்தமும். ஆ-௨.

இறுத்தலென்னும்பெயர் : — இறுத்தறங்கலும் - சொல்லலுமாகும். ஆ-௨.

இறையென்னும்பெயர் :— இறையேகடனும்-இல்லினிறப்பும், சிறுமையுந்தங்கலும் - உயர்ந்தோருஞ் சிறக்கும். ஆ-௫.

உடுவென்னும்பெயர் :—உடுவேநாண்மீன்-பகழியுமாகும். ஆ-௨.

உணர்தலென்னும்பெயர் :— உணர்தல்கருதல்-தெளிவுமாகும். ஆ-௨.

உந்தியென்னும்பெயர் :—உந்திகொப்பூழும் - தேருருளுருய்யாறும், வந்துழியாழக்கண்ணதோர்-உறுப்பும் வரையார். ஆ-௪.

உம்பரென்னும்பெயர் :— உம்பர்மேலிடமும்-அமரர்க்குமுரித்தே. ஆ-௨.

உருத்தலென்னும்பெயர் :—உருத்தறோன்றல்-வெகுட்சியுமாகும். ஆ-௨.

உழையென்னும்பெயர் :—உழையேமானும் - யாழினோர் நரம்பும், அருகியிடனும் - அறைதற்குமுரித்தே. ஆ-௩.

உறழ்வென்னும்பெயர் :— உறழ்வேயிடையீடும் - உணர்வுமொத்தலும், செறிவுமென்றிவை - தெரிதற்குமுரித்தே. ஆ-௪.

ஊறென்னும்பெயர் :—ஊறிடையூறும்- உற்றிடு [கொலையும். ஆ-௨.]

எஃகென்னும்பெயர் :—எஃகேவேலொடு-கூர்மையுமிசைக்கும். ஆ-௨.

எதிரியென்னும்பெயர் :—எதிரியிருபெயர்ப்-படைக்குமெய்தும். ஆ-௧.

எல்லென்னும் பெயர் :—எல்லேயொளியும்-இரவியும்பொழுதும். ஆ-௩.

எல்லையென்னும்பெயர் :—எல்லைபகலவனும்-அளவையுமிசைக்கும். ஆ-௨.

எள்ளலென்னும்பெயர்:—எள்ளனகையும்-இகழ்ச்சியுமாகும். ஆ-உ.

எற்றுதலென்னும் பெயர் : — எற்றுதல்புடைத்தலும் - எறிதலுமாகும். ஆ-உ.

எற்றெனலென்னும்பெயர் : — எற்றெனலெறியெனல் - என்னெனலுமாகும். ஆ-உ.

ஏணியென்னும்பெயர்:—ஏணிமான்கன்றும் - எல்லையுமாகும். ஆ-உ.

ஏணென்னும்பெயர்: — ஏணேவலியும்-நிலையுடைமையுமாகும். ஆ-உ.

ஏவலென்னும்பெயர்:—ஏவல்வியங்கொளும் - ஆணையுமாகும். ஆ-உ.

ஏற்றலென்னும்பெயர்:— ஏற்றல்கோடலும்-எதிர்ந்துபொருதலும். ஆ-உ.

ஏனையென்னும்பெயர் :—ஏனை மீன்விகற்பமும்-ஒழிவுமாகும். ஆ-உ.

கடியென்னும்பெயர்: — கடியென்கிளவி - காப்பேகூர்மை, விரையேவிளக்கம் - அச்சஞ்சிறப்பே, வரைவேமிகுதி - புதுமைதோற்றம், மெய்படத்தோன்றும் - பொருட்டாகும்மே. ஐயமுங்கரிப்பும் - ஆகுலுமுரித்தே. ஆ-மங.

கடிகையென்னும்பெயர் :— கடிகைபேதம்-சமயநாழிகை. ஆ-ங.

கடுவென்னும்பெயர்:—கடுவேகடுமரம் - விடமுமாகும். ஆ-உ.

கணையென்னும்பெயர் :—கணையேதிரட்சியும் - பகழியுமாகும். ஆ-உ.

கண்டமென்னும்பெயர் :—கண்டமெய்புகு - கருவிகழுத்து, துண்டந்திரைவாள் - தேசமாகும். ஆ-சு.

கதலியென்னும்பெயர் :—கதலிவாழையும் - துகிற்கொடியுமாகும். ஆ-உ.

கதழ்வென்னும்பெயர் :— கதழ்வுவேகமும் - சுறித்தலுங்காட்டும். ஆ-உ.

கனமென்னும்பெயர் :—கனமேவட்டமும் - திரட்சியுமாகும். கனமொருசெறிவும்-மேகமுமாகும். ஆ-ரு.

கந்தமென்னும்பெயர் :—கந்தம்புலனே - கிழங்குங்கருணையும். ஆ-ங.

கந்தரமென்னும்பெயர் :— கந்தரமலைமுழை-கழுத்துமாகும், வந்துழிமேகப் - பெயருமவரையார். ஆ-௩.

கயமென்னும்பெயர் :—கயமேயாழமும்-யானைக்கன்றும். ஆ-௨.

கயவென்னும்பெயர் :—கயவேபெருமையும்-மென்மையுங்காட்டும். ஆ-௨.

கரிலென்னும்பெயர்:— கரிலேகொடுமையும்-குற்றமுங்கார்ப்பும். ஆ-௩.

கரைதலென்னும்பெயர்:—கரைதன்மொழிதலும்-கூவலுமாகும். ஆ-௨.

கலித்தலென்றும்பெயர் : — கலித்தலெழுச்சியும் - ஒலித்தலுமாகும். ஆ-௨.

கலுழியென்னும்பெயர் :—கலுழிகலங்கனீர் - முல்லைநிலக்கான்யாறு. ஆ-௨.

கலையென்னும்பெயர்:— கலையேநூல்கல்வி-காஞ்சியாடையும், முசுவுமானேறும்-காலநுட்பமும். ஆ-௭.

கவநமென்னும்பெயர் :—கவநங்கடுப்பும் - காடுமாகும். ஆ-௨.

கவலையென்னும்பெயர்:—கவலைதுன்பமும் - கவர்வழியுமாகும். ஆ-௨.

கழங்கென்னும்பெயர் :—கழங்கோராடலும் - கொடிக்கழலுமாகும். ஆ-௨.

கழிதல் இறத்தல்-என்னும்பெயர்:—கழிதலுமிறத்தலும்-எனவிருகிளவியும், மிகுத்தலுங்கடத்தலும்-சாதலும்விளம்பும். ஆ-௩.

கற்பமென்னும்பெயர் :— கற்பமூழியும் - கமலத்தோனுயுளும். ஆ-௨.

கனலியென்னும்பெயர்:—கனலிதீபமும்-கதிரவனுமாகும். ஆ-௨.

கனவென்னும்பெயர் :—கனவேமயக்கமும்-துயிலுமாகும். ஆ-௨.

காவென்னும்பெயர் :—காவேகாத்தலும் - காவுமாகும். ஆ-௨.

காசென்னும்பெயர் :— காசுமணியும் - குற்றமுமாகும். ஆ-௨.

காசையென்னும்பெயர் :— காசைநாணலும்-காயாமரமும். ஆ-௨.

காதையென்னும்பெயர்.— காதைமொழியும்-கதை யுமாகும். ஆ-உ.

காயமென்னும்பெயர் :—காயம்யாக்கையும்-கார்ப்பு மாகும். ஆ-உ.

காரென்னும்பெயர் :—காரேமேகமும் - மாரிக்கால மும், நீருங்கருமையும் - நிகழ்த்துங்கிளவி. ஆ-ச.

காலமென்னும்பெயர் :— காலநாட்கூறும்-காலமு மாகும். ஆ-உ.

கானலென்னும்பெயர் :—கானல்கதிரொளியும்-கட ற்சார்பின்மலைச்சார்பின், தானெழுதநன்மரச் - சோலை யுந்தழுவும். ஆ-ங.

கானென்னும்பெயர் :—கானேவிரையும்-காடுமா [கும். ஆ-உ.]

குயிறலென்னும்பெயர் :—குயிறல்கூறலும் - செறி தலுங்குடைதலும். ஆ-ங.

குரலென்னும்பெயர் :—குரலேபயிர்க்கதிரும் - யா ழிஞேர்நரம்பும். ஆ-உ.

குரையென்னும்பெயர் :— குரையேயொலியும் - இ டைச்சொல்லுமாகும். ஆ-உ.

குலமென்னும்பெயர் :—குலமேயில்லமும்-குடிமை யுங்கூட்டமும். ஆ-ங.

குழலென்னும்பெயர் :—குழலேமயிரும் - துளையுங் கூறும். ஆ-உ.

குழையென்னும்பெயர் : — குழையே குண்டலம் - தளிர்சேறுமாகும். ஆ-ங.

கூலமென்னும்பெயர் :—கூலப்பெயர்பண்டமும் - பலபண்டத்தெருவும், வார்புனற்கரையும் - வந்துழிக் கொளலே. ஆ-ங.

கேவலமென்னும்பெயர் :—கேவலந்தனிமையும் - முத்தியுமாகும். ஆ-உ.

கேள்வியென்னும்பெயர்:—கேள்விகல்வியும்-செவி யுங்கிளக்கும். ஆ-உ.

கொண்டலென்னும் பெயர் : — கொண்டன்மேக மும்-கூதிர்கீழ்காற்றும். ஆ-உ.

கொற்றமென்னும்பெயர் : — கொற்றமரசியலும் - வெற்றியுமாகும். ஆ-உ.

கோடரமென்னும்பெயர் :—கோடரக்கிளவி-கொம் பொடுமரத்தில், கோடும்பொதும்பும்-கூறுமென்ப.

கோடென்னும்பெயர் :—கோடே சங்கும் - மூதும் கொம்பும், மாவின்மருப்பும் - மரத்தின்பணையும், நீள் புனற்கரையும் - நிகழ்த்துங்கிளவி. ஆ-ரு.

கோளென்னும்பெயர் :— கோளே குணமும்-கோட்பாடுங்கோளும். ஆ-ங.

சிரகமென்னும்பெயர்:—சிரகந்திவலையும் - கரகமுமாகும். ஆ-உ.

சிலம்பென்னும்பெயர் :—சிலம்பேமலையும் - ஒலியுமாகும், பொலஞ்செய்காலணியும்-புணர்தற்குமுரித்தே. ஆ-ங.

சிறையென்னும்பெயர்:—சிறையேகாவலும்-இறகுஞ்செப்பும். ஆ-உ.

சினையென்னும்பெயர் :—சினையேகருவும்-உறுப்புமரக்கோடும். ஆ-ங.

சுடிகையென்னும்பெயர் :—சுடிகைசுட்டி - மயிர்முடியுமாகும். ஆ-உ.

சூரென்னும்பெயர் :— சூர்தெய்வமச்சநோய்-ஆகுமென்ப. ஆ-ங.

சூழியென்னும்பெயர் :—சூழிமுகபடாம்-வாவியுஞ்சொல்லும். ஆ-உ.

செயிரென்னும்பெயர்:—செயிரேகுற்றமும் - சினவலுமாகும். ஆ-உ.

செழுமையென்னும்பெயர்:—செழுமைவளனும் - கொழுப்புமாகும். ஆ-உ.

சேணென்னும்பெயர் :—சேணேயுயர்வு-நீளமுமாகும். ஆ-உ.

சேத்தென்னும்பெயர் :—சேத்தென்கிளவி - கருத்தோடொப்பே. ஆ-உ.

ஞெள்ளலென்னும்பெயர் : — ஞெள்ளறெருவே - மேன்மையுநிகழ்த்தும். ஆ-உ.

தடமென்னும்பெயர் :—தடமேபெருமை-கோட்டமலையாகும். ஆ-ங.

தண்ணடையென்னும்பெயர் :—தண்ணடை நாடும்-ஊருமாகும். ஆ-உ.

தபுதலென்னும்பெயர் :— தபுதல்கெடுதலும்-சாதலுமாகும். ஆ-உ.

தரணியென்னும்பெயர் :—தரணிநிலனும் - மலையுமிரவியும். ஆ-ங.

தவவென்னும்பெயர் :-தவவென்கிளவி-மிகுதலுங் குறைதலும். ஆ-உ.

தளிமமென்னும்பெயர் :—தளிமமழகொடு - மெத்தையுமாகும். ஆ-உ.

தன்மையென்னும்பெயர் :—தன்மையியல்பும்- தன்மையுடைப்பொருளும். ஆ-உ.

தாவென்னும்பெயர் :—தாவேவலியும் - வருத்தமுமாகும். தாவென்கிளவி - இடையீடுமாகும். ஆ-ங.

தாமமென்னும்பெயர் :— தாமமொளியும் - தார்மாலையுமாம். ஆ-உ.

தாயமென்னும்பெயர் :—தாயமுரிமையும்-தங்குடித்தமரும். ஆ-உ.

தாரமென்னும்பெயர் :—தாரமரும்பண்டம்-வெள்ளியதனொளி, சேருமேழ்நரம்பில் - ஓர் நரம்புஞ்செப்பும். ஆ-ச.

தாலமென்னும்பெயர் :—தாலந்தரைபனை - நாவுமுண்கலனும். ஆ-ச.

துணங்கையென்னும் பெயர் : — துணங்கையாடலும் - திருநாளும்விழாவும். ஆ-ங.

துன்னலென்னும்பெயர் : — துன்னல்குறுகலும் - செறிவுஞ்சொல்லும். ஆ-உ.

தூங்கலென்னும்பெயர் :—தூங்கலாடலும் - தாழ்வுஞ்சொல்லும். ஆ-உ.

தேசிகமென்னும்பெயர் :—தேசிகந்திசைச்சொலும் - அழகுஞ்செப்பும். ஆ-உ.

தோடென்னும்பெயர் :-தோடேதொகுதியும்-பனையிதழ்போல்பவும், பூவினிதழும்-புகலுங்கிளவி. ஆ-ங.

தோலென்னும்பெயர் :—தோலேயானையும்-வனப்புந்தோற்பலகையும். ஆ-ங.

நந்தலென்னும்பெயர் :—நந்தல்கேடும் - ஆக்கமுமாகும். ஆ-உ.

நவமென்னும்பெயர் :—நவமேபுதுமையும் - ஒன்பதுமாகும். ஆ-உ.

நளியென்னும்பெயர் :— நளியேபெருமையும்-சிதமுஞ்செறிவும். ஆ-ங.

நனவென்னும்பெயர் :-நனவேயுணர்ச்சியும்-அகலமுமாகும், தெளிவுமதனொடு-செப்பற்குரித்தே. ஆ-ங.

நனையென்னும்பெயர் :—நனைபூமொட்டிற்கும்-கள்ளிற்குநாமம். ஆ-உ.

நியமமென்னும்பெயர் :- நியமமங்காடியும்- நியதியுந் தெருவும். ஆ-ந.

நிழற்றலென்னும்பெயர் :—நிழற்றனுணுக்கமும் - நிழற்செயலுமாகும். ஆ-உ.

நீவலென்னும்பெயர் :—நீவலென்பது-தடவலுந் துடைத்தலும். ஆ-உ.

நீவியென்னும்பெயர் :— நீவியாடையும் - கொய்சகமுமாகும். ஆ-உ.

நூலென்னும்பெயர் :—நூலேயெண்ணும் - பனுவலுமாகும். ஆ-உ.

நூறென்னும்பெயர் :— நூறேபொடியும்-நூறுமாகும். ஆ-உ.

நெய்தலென்னும்பெயர் :—நெய்தலாம்பலும்- கடற்சார்நிலனும். ஆ-உ.

நொறிலென்னும்பெயர் :—நொறிலேயடக்கமும்- விரைவுமாகும். ஆ-உ.

படரென்னும்பெயர் :—படரேகருத்து-நெறியொடுபரிவே. ஆ-ந.

படியென்னும்பெயர் :—படியேபாரும் - பகையுமாகும். ஆ-உ.

படிவமென்னும்பெயர் :—படிவம்விரதமும்-வடிவுமாகும். ஆ-உ.

படுவென்னும்பெயர் :— படுவேபடுதலும்- நன்மையுங்கள்ளும். ஆ-ந.

பட்டிகையென்னும்பெயர் :—பட்டிகைகச்சும்-தெப்பமுமாகும். ஆ-உ.

பணையென்னும்பெயர் : — பணையேபருத்தலும் - பிழைத்தலும் பழனமும், முரசுமரக்கோடும்-புரவியின் பந்தியும். ஆ-சு.

பதங்கமென்னும்பெயர் :—பதங்கம்விட்டிலொடு - பறவையின் பொதுப்பெயர். ஆ-உ.

பதலையென்னும்பெயர் :—பதலைதாழியும் - பரந்தவாய்ப்பறையும். ஆ-உ.

பதியென்னும்பெயர் :—பதியேயுறைவிடம் - தலைவனுமாகும். ஆ-உ.

பரவையென்னும்பெயர்:—பரவைகடலும்-பரப்புமாகும். ஆ-௨.

பரிவென்னும்பெயர்:—பரிவுதுன்பமும்-இன்பமுமாகும். ஆ-௨.

பலியென்னும்பெயர்:—பலியேயையமும் - சோறுமாகும். ஆ-௨.

பள்ளியென்னும்பெயர்:—பள்ளியிடனும்-துயிலுமாகும். ஆ-௨.

பாங்கென்னும்பெயர்:—பாங்கழகுரிமை - பக்கமாகும். ஆ-௩.

பாசமென்னும்பெயர்:— பாசமூசித் - துளையொடு கயிறே, ஆசைபிசாசமோர்-ஆயுதமாகும். ஆ-௫.

பாடலமென்னும்பெயர்:—பாடலஞ்சிவப்பும்-பாதிரியுமாகும். ஆ-௨

பாடியென்னும்பெயர்:— பாடிநகரமும் - நாடும்படைவீடும். ஆ-௩.

பாடென்னும்பெயர்:—பாடேபெருமையும் - ஒலியும்படுத்தலும். ஆ-௩.

பிரசமென்னும்பெயர்:— பிரசந்தேன்கள்ளே-தேனீப்பெயரே. ஆ-௩.

பிறங்கலென்னும்பெயர்:—பிறங்கலுயர்வு-மலையும்பெருமையும். ஆ-௩.

பிறழ்தலென்னும் பெயர்: — பிறழ்தலொளிவிடலும். ஆ-௨.

புணரியென்னும்பெயர்:— புணரிகடலும்-திரையுமாகும். ஆ-௨.

புண்டரீகமென்னும்பெயர்: — புண்டரீகம் - தாமரைபுலியே. ஆ-௨.

புதையென்னும்பெயர்:—புதைகணைக்கட்டே-புதுமையாகும். ஆ-௨.

புரிதலென்னும்பெயர்:—புரிதல்விரும்பலும்-செய்தலுமாகும். ஆ-௨.

புலம்பென்னும்பெயர்: — புலம்பேதனிமையும் - நடுக்கமும்புலம்பலும். ஆ-௩.

பூவென்னும்பெயர்:— பூவேயழகும் - கூர்மையும் பொலிவும். ஆ-௩. [உலகமும்புகலும். ஆ-௨.]

பொழிலென்னும்பெயர்:-பொழிலேசோலையும்-

பொறையென்னும் பெயர் : — பொறையேசுமத்தலும் - பரித்தலும்பொறுத்தலும். ஆ-ங.

போற்றலென்னும்பெயர்:—போற்றல்பாது - காத்தலும்புகழ்தலும். ஆ-உ.

மகரமென்னும்பெயர் :—மகரமீனேறும் - தாதுமாகும். ஆ-உ.

மஞ்செனனும்பெயர் :— மஞ்சுமேகமும்-இளமையும்வனப்பும். ஆ-ங.

மதர்வென்னும்பெயர்:—மதர்வென்கிளவி-மகிழ்வு மிகுதியும். ஆ-உ.

மதலையென்னும்பெயர் :—மதலைக்கிளவி - தூணே மரக்கலம், புதல்வன்கொடுங்கை - பாவைபோல்வன, தகவிற்றுகும்-சார்பினைவையும். ஆ-ரு.

மலர்தலென்னும்பெயர் : — மலர்தரேன்றலும் - எதிர்தலும்விரிதலும். ஆ-ங.

மலைதலென்னும்பெயர் : — மலைதல்பெருதலும் - மலர்சூடுதலும். ஆ-உ.

மறலியென்னும்பெயர் :— மறலிகூற்று - மயக்கமுமாகும். ஆ-உ.

மறையென்னும்பெயர்:—மறையேவேதமும்-மறைத்துமொழிகிளவியும். ஆ-உ.

மற்றென்னும்பெயர் :— மற்றென்கிளவி-வினைமாற்றசைநிலை. ஆ-உ.

மணவென்னும்பெயர் :—மணவேயக்குமணி - சங்குமணிப்பொது. ஆ-ங.

மாவென்னும்பெயர் : — மாவேபெருமையும் - கருமையுஞ்சூதமும், மேவியநாற்கால் - உடையவும்வண்டும், பூவுறை திருவென - ஆறையும் பொருந்தும். ஆ-சா.

மாதரென்னும்பெயர் :—மாதர்காதலும் - மகளிருமாகும். ஆ-உ.

மானுதலென்னும்பெயர் :—மானுதலொப்பு-மயக்கமுமாகும். ஆ-உ.

முடலையென்னும்பெயர் :—முடலைதிரட்சியும்-முருகுமாகும். ஆ-உ.

முரணென்னும்பெயர் :—முரணேவலியும்- பகையுமாகும். ஆ-உ.

முற்றென்னும்பெயர் :—முற்றே முழுவதும்-வளைத்தலுமொழியும். ஆ-உ.

முனையென்னும்பெயர் :—முனையே நுனியும்-பகையுமாகும். ஆ-உ.

மூரலென்னும்பெயர் :—மூரனகையெயிறும் - சோறுமாகும். ஆ-ரு.

மூரியென்னும்பெயர் :— மூரிபெருமையும்-ஆனேறுமாகும். ஆ-உ.

மூலமென்னும்பெயர் :— மூலமோர்நாளும்-வேருமுதலும். ஆ-ரு.

மெய்யென்னும்பெயர் :—மெய்யேயுடம்பும் - உண்மையுமெய்யெழுத்தும். ஆ-ரு.

வசியென்னும்பெயர் :—வசியேவசியமும்-வாளுங்கூர்மையும். ஆ-ரு.

வடிவென்னும்பெயர் :—வடிவேமேனியும் - முருவமல்குலும். ஆ-ரு.

வண்ணமென்னும்பெயர் :— வண்ணமோசையும் - வடிவுடாகும். ஆ-உ.

வதுவையென்னும்பெயர் :—வதுவைமன்றலும் - மணமுமாகும். ஆ-உ.

வநமென்னும்பெயர் :—வநமேகாடும்-நீருமழகும். ஆ-ரு.

வயாவென்னும்பெயர் :—வயாவே வேட்கைப்-பெருக்கமும்வருத்தமும். ஆ-உ.

வரியென்னும்பெயர் :—வரியேபாடலும் - மெழுத்தும்வண்டும். ஆ-ரு.

வரைதலென்னும்பெயர் :—வரைதனீக்கலும்-கொள்ளலுமாகும். ஆ-உ.

வலனென்னும்பெயர் :—வலனேவென்றியும்-வலமுமேலிடமும். ஆ-ரு.

வல்லையென்னும்பெயர் :—வல்லைவிரைவு - மதிலுமாகும். ஆ-உ.

வழங்கலென்னும்பெயர் :—வழங்கல்கொடைசெல்லல்-சொல்லலும்வரையார். ஆ-ரு.

வழியென்னும்பெயர் :— வழியேயிடனொடு - பின்னும்வரையார். ஆ-உ.

வள்ளென்னும்பெயர் :—வள்ளேகூர்மையும் - வாரும்வலியும். ஆ-ரு.

வறிதென்னும்பெயர் :— வறிதுசிறிதாகும் - அருகலுமுரித்தே. ஆ-உ.

வாயிலென்னும்பெயர் :— வாயில்பொறியும்-வாயிலுந்தாதும். ஆ-ங.

வாயென்னும்பெயர் :—வாயேயிடனும் - மெய்யும்வாக்கும். ஆ-ங.

வாரமென்னும்பெயர் :— வாரக்கிளவியேழ் - கிழமையுமலைச்சார்பும். ஆ-உ.

வாழியென்னும்பெயர்:—வாழியிடைச்சொல்லும்-வாழ்கவெனுஞ்சொல்லும். ஆ-உ.

வாளென்னும்பெயர் :—வாளேயொளியும் - வாட்படையுமாகும். ஆ-உ.

விடங்கமென்னும்பெயர் :—விடங்கமுகடும்-அழகுமாகும். ஆ-உ.

விண்டென்னும்பெயர்:—விண்டுமாயோனும்-வெற்பும்வேயும். ஆ-ங.

விம்மலென்னும்பெயர் : — விம்மலொலித்தலும் - விம்முதலுமாகும். ஆ-உ.

விரையென்னும்பெயர்:—விரையென்கிளவி - சாந்தும்விரையும். ஆ-உ.

வில்லென்னும்பெயர் :— வில்லேயொளியும் - விற்படையுமூலமும். ஆ-ங.

விளக்கென்னும்பெயர் :—விளக்கேயொளியும் - விளக்குமாகும். ஆ-உ.

விறப்பென்னும்பெயர்:—விறப்பேசெறிவும் - வெருவலும்பெருக்கமும். ஆ-ங.

வீசுதலென்னும்பெயர் :— வீசுதல்கொடுத்தலும் - எறிதலுமாகும். ஆ-உ.

வெடியென்னும்பெயர் : — வெடியேவெள்ளிடை - வெருவுமாகும். ஆ-உ.

வெம்மையென்னும்பெயர் :—வெம்மைவேட்கை - விரைவெனவிளம்புவர். ஆ-உ.

வெறியென்னும்பெயர் :—வெறியேநாற்றமும்-வேலனுடலும். ஆ-உ.

வெறுக்கையென்னும்பெயர் :— வெறுக்கைசெல்வமும்-விழுப்பொருளுமாகும். ஆ-உ.

வேயென்னும்பெயர்:-வேயேமூங்கிலும்-ஒற்றுமாகும். ஆ-உ.

வேலனென்னும்பெயர் :—வேலன்முருகன்-வெறி யாட்டாளன். ஆ-உ.

வேலியென்னும்பெயர் :—வேலிமதிலும் - காவலு மாகும். ஆ-உ.

வேலையென்னும்பெயர் :—வேலைதானே - கடலுங் கடற்கரையும், காலமுங்கூறும்-கருவியதாகும். ஆ-ரு.

வேளாண்மையென்னும்பெயர் : — வேளாண்மை யுபகாரம்-ஈகையும்விளம்பும். ஆ-உ.

ஆதியிற்பொருள்
முற்றிற்று.

## அந்தத்துப்பொருள்.

அணங்கென்னும்பெயர் :— தெய்வமுந்தெய்வத் - துவமைமாதரும், மையலுநோயும் - வருத்தமுங்கொலை யும், ஐயமென்றுரைக்கும்-அணங்கென்கிளவி. ஆ-எ.

அரியென்னும்பெயர் :—கண்வரிகடல்பொன்-கிண் கிணிப்பெய்பரல், மன்னிறங்குதிரை - தவளைகுரங்கு - பகைவாள்சயநம் - வலிவண்டம்புகை, எனப்பதினைந் தும் - அரியெனப்புகல்ப, சிங்கந்திருமால்-திகிரியிரவி, இந்திரன்காற்றே - யமனேயங்கியென், றங்கண்வடமொ ழிச் - சிதைவினரியாகும். ஆ-உரு.

அளகமென்னும்பெயர் :— மாதர்மயிரையும் - மா வின்முள்ளையும், நீரையுமளகம் - எனநிகழ்த்துவரே. ஆ-ரு.

அளக்கரென்னும்பெயர் :—கடலுநிலனும்-சே றுமளக்கர். ஆ-ரு.

அளியென்னும்பெயர்:—வண்டின்பெயரும் - மது வுங்கொடையும், அன்புங்கூறும் - அளியென்கிளவி. ஆ-ச.

ஆணையென்னும்பெயர் :—ஏவன்மெய்ப்பாட்-டிலா ஞ்சனைசூளே, ஆவயின்விறல்செயலும்-ஆணைக்கிளவி. ஆ-௫.

ஆரமென்னும்பெயர் : —சந்தநமாலைபூண்-ஆத்தி முத்தென, வந்தனவைந்தும்-ஆரமாகும். ஆ-௫.

ஆற்றலென்னும்பெயர் :—வலியுஞ்செயலும் - வல் லாராற்றலும், ஆள்வினையுமுரைக்கும் - ஆற்றற்கிளவி. ஆ-ச.

இடியென்னும்பெயர் :--தகரமுஞ்சுண்ணமும்-தருப்பணப்பிண்டியும், இனையவையிடியென - இசைத்தல் வேண்டும். ஆ-ந.

இதழென்னும்பெயர் :—பூவின்றோடும்-பனையிதழ் போல்பவும், வாயினதரமும் - இதழென வைப்பர். ஆ-ந.

இராகமென்னும்பெயர் :—கீதமுநிறமும் - செந்நிறக்கெழுவும், ஆதரவுமுடிகியலும் - இராகமெனப்படுமே. ஆ-ரு.

இவர்தலென்னும்பெயர் :- சேறலுமெழுச்சியும் -செறிபும்விரும்பலும்,ஏறலுமிவர்தற்-கிளவிகூறும். ஆ ரு.

இறும்பூதென்னும்பெயர் :— வியப்பிராசீவம்-சிறுதூறுமலையென, நயப்புடைநான்கும் - இறும்பூதாகும். ஆ-ச.

உலவையென்னும்பெயர் :--மரத்திற்கோடும்-மருப்புங்காற்றும். உணர்த்துமென்ப-உலவைகிளவி. ஆ-ந.

உறையென்னும்பெயர் : —நீர்முதலாகிய - துளியுமருந்து, முதனோய்நீக்கி - இன்பங்கொடுக்கும், பொருளுங்கூறை - மாசுகழுவுவர்நீரும், பாலுறுபிரையும் - காரமுமொழுகலும், ஓரிடைச்சொல்லும்-உறையெனற்குரிய. ஆ-அ.

ஊக்கமென்னும்பெயர் :—வண்மையுமுயற்சியும் - மநத்தின்மிகுதியும், உண்மையுமுரைக்கும்-ஊக்கக்கிளவி. ஆ-ச.

ஊர்தியென்னும்பெயர் :—தேருமாவும் - சிவிகையுமென்றிவை, ஊர்தியென்னும் - பெயரிற்றோன்றும். ஆ-ந.

எகினமென்னும்பெயர் :—கவரிமாவும் - அன்னமுநாயும், எகினமென்பர்-இயல்புணர்ந்தோரே. ஆ-ந.

ஏமமென்னும்பெயர் :—சேமங்காவல்-இன்பமிரவுபொன், ஏமாப்புமயக்கம்-ஏமமாகும். ஆ-எ,

ஓதியென்னும்பெயர் :—மாதர்மயிரும்-மாலையுமன்னமும், ஓதியென்பர் - உணர்ந்திசினோரே. ஆ-ந.

ஓரியென்னும்பெயர் : — ஆடவர்மயிரும் - முசுவுமோரி. ஆ-உ.

ஓரையென்னும்பெயர் :-கூட்டமுமகளிர்-விளையாட்டுமிராசிக்-கூற்றையுமோரை-கிளவிகூறும். ஆ-ந.

கடியென்னும்பெயர் :— வாசமும்பேயும் - மணம் புணர்வுமென்றிவை, காசின்றுரைக்கும் - கடியென்கிளவி. ஆ-௩.

கட்சியென்னும்பெயர் :—காடுங்கூடும் - கட்சியாகும். ஆ-௨.

கட்டளையென்னும்பெயர் :— நிறையறிகருவியும் - உரையறிகருவியும், பிறவினையொப்பும் - கட்டளைப்பெயரே. ஆ-௩.

கண்டகமென்னும்பெயர் : — கரிகையுடைவாள் முள்ளிவைமூன்றும், கருதிற்கண்டகம் - என்னக்கருதுவர். ஆ-௩.

கம்பலையென்னும்பெயர் :-இன்னாங்கோசை-நடுக்கமச்சம், கன்னித்தமிழோர் - கம்பலையென்ப. ஆ-௩.

காணமென்னும்பெயர் :— சொல்லியமுதற்பொருள்-துணைக்காரணமும், பல்வகையாடலும்-மநத்தின்பகுதியும், கல்வியுமெண்ணும்-கரணமென்றாகும். ஆ-௫.

கருங்கையென்னும்பெயர் :—கொன்றுவாழ்தொழிலினும்-வன்பணித்தொழிலினும்,கன்றியதொழின்மை-கருங்கையெனப்படும்.

கருவியென்னும்பெயர் :—கவசம்பல்லியம்-தொடர்பியாழ்படைக்கலம்,காகமுதற்பூண்-தொகுதிமேகம், கல்லணையுபகரணம் - கழறுங்கருவி. ஆ-௰.

கழலென்னும்பெயர் :—காலினடியும்-காழுறுதோலும், காலினணியும் - கழலெனக்கருதுவர். ஆ-௩.

கழுதென்னும்பெயர் :— வண்டும்பேயும் - இதணமுங்கழுதாம். ஆ-௩.

களமென்னும்பெயர் :— மிடறுபொருநிலம் - கருமையிம்மூன்றும்; களமென்றுரைப்பர் - கருதுங்கலை. ஆ-௩.

களரியென்னும்பெயர் :—கருமஞ்செய்யிடமும்-களமும்பொருநிலனும், களரியென்பர் - கற்றுணர்ந்தோரே. ஆ-௩.

களனென்னும்பெயர் :—பொய்கையுந்தொடர்பும்-மருதநிலனே; டெய்தியகளனொடு - நான்குங்களனே. ஆ-௪.

கறையென்னும்பெயர் :—நிறமுமுதிரமும்-உரலுந்திறையும், கறையென்கிளவி-ஆமெனக்கருதுவர்.ஆ-௪.

கன்னலென்னும்பெயர் :—சருக்கரைகரகம் - நாழிகைவட்டில், உரைக்கிற்குடமும் - நாழிகையுங்கன்னல். ஆ-ரு.

காஞ்சியென்னும்பெயர் :—எதிருன்றுதலும் - நிலையின்மையுமா, மணிமேகலையும் - ஒருமரப்பெயரும், கருதுங்காஞ்சி - என்னுங்கட்டுரை. ஆ-ச.

காரியென்னும்பெயர் :—ஆலநஞ்சேசநிக்-கோண்மாசாத்தனுர், இருணிறத்தனவும் - காரியெனப்படுமே. ஆ-கா.

காரிகையென்னும்பெயர் :—அழகுமழகுடை-மாதருமதனெடு, கட்டளைக்கலித்துறையும்-காரிகையென்ப. ஆ-ங.

காழென்னும்பெயர் :—கொல்பரல்சேகு-மணியின்கோவை, மாலையுமொளியும்-காழென்ருகும். ஆ-ரு.

கிழியென்னும்பெயர் :—எழுதுபடமும்-இருநிதிப்பொதியும், கிழிபடுதுகிலும்-கிழியெனற்குரிய. ஆ-ங.

குயமென்னும்பெயர் :—அரிவையர்முலையும் - கொடுவாளுமிளமையும், கருதியவிம்மூன்றும் - குயமெனக்கருதுவர். ஆ-ங.

குவலயமென்னும்பெயர் : — நெய்தலுநிலனும் - குவலயமென்ப. ஆ-உ.

குளிரென்னும்பெயர் :—கிளிகடிகருவி-இலைமூக்கரிகருவி, குளிரேகுடமுழவு-ரெண்டுமாகும். ஆ-ரு.

குறிஞ்சியென்னும்பெயர் :— மலைச்சார்நிலனும் - செம்மலர்முள்ளியும், குறிஞ்சிநிலப்பாடலும்-குறிஞ்சியென்ருகும். ஆ-ங.

கூழென்னும்பெயர் :—பல்வகையுணவும் - பயிரும்பொன்னும், கொள்பமாதோ-கூழென்கிளவி. ஆ-ங.

கூளியென்னும்பெயர் :—நட்புத்தொகுதி - பேயெனமூன்றும், வைத்தனர்கூளி - ஆகவகுத்தே. ஆ-ங.

கைக்கிளையென்னும்பெயர் :— ஒருதலைக்காமமும் - யாழிலோர்நரம்பும், தெரியிற்கைக்கிளை - எனப்பெயர்சிவணும். ஆ-உ.

கொன்னென்னும்பெயர் :— அச்சம்பயனிலி - காலம்பெருமையோ, டப்பெயர்நான்கும் - கொன்னெனவறைவர். ஆ-ச.

கோவென்னும்பெயர் : —அந்தரங்குலிசம் - பாரி ஞேடத்திரம், வந்தநீர்திசை - மலைவேள்மன்னவன், விழிபசுகோவென - வேண்டினர்புலவர். ஆடூ-மக.

கோதையென்னும்பெயர் :—பூப்புனைமாலையும்-மாலைபுனைமாதரும், தோற்புனைவின்ஞண் - டொடர்கைக் கட்டியும், கோச்சேரன்பெயர் - மயிர்காற்றுங்கோதை. ஆடூ-சா.

கோலென்னும்பெயர் :— நிறையறிதுலாமும்-அஞ்சநமெழுதுகருவியும், இறைவன்முறைநடாத்தலும் - யாழ்நரம்பும்பும், குதிரைமத்திகையும் - கோலென்றாகும். ஆடூ-சா.

கோளென்னும்பெயர் :—அலர்கதிர்முதலாம் - அமராருநாளும், கொலையுமிடையூறும் - கோளென்றாகும். ஆடூ-ச.

சாமமென்னும்பெயர் :—யாமமோர்வேதம் - உபாயஞ்சாமம். ஆடூ-ந.

சாறென்னும்பெயர் :—விழவுங்கள்ளும் - சாறென விளம்புவர். ஆடூ-உ.

சிக்கமென்னும்பெயர் :— உச்சியுமயிர்வார்-சீப்புமுறியும், சிக்கமென்னும்-பெயரொடுசிவணும். ஆடூ-ந.

சித்திரமென்னும்பெயர் :—மெய்யேபோலப்-பொய்யையுரைத்தலும், செய்கோல்வடிவும் - அழகுஞ்சித்திரம். ஆடூ-ந.

சிலையென்னும்பெயர்:—வில்லையுமலையையுஞ்-சிலையெனவிளம்புவர். ஆடூ-உ.

சீரென்னும்பெயர் :—பலவகையியங்களின் - ஓசைபாரம், ஒல்லுதல்காற்றண்டை - ஒண்புகழழகு, செல்வஞ்சீர்மை - சீரென்றாகும். ஆடூ-எ.

சுடரென்னும்பெயர் :—மதியுஞாயிறும்-கனலியுமற்றைறம், பொதுவுறுமொளியும்-சுடரென்றாகும். ஆடூ-ச.

செச்சையென்னும்பெயர் :—வெட்சியும்வெள்ளாட்-டேறுஞ்செச்சை. ஆடூ-உ.

செம்மலென்னும் பெயர் : — இறைவன்பழம்பூ-வீரர்புத்திரர், அறையிற்செம்மையோ-டைந்துஞ்செம்மல். ஆடூ-ரு.

சேயென்னும்பெயர் :-செவ்வாய்முருகன்-இளைமைபுத்திரர், இவ்வாறெல்லாஞ்-சேயெனவிசைப்பர். ஆடூ-ச.

ஞெள்ளலென்னும் பெயர் : — சோர்வுமிகுதல் - உடன்படல்படுகர், நாலிரேடொலியும் - தெருவுஞெள்ளல். ஆ-சு.

தண்டென்னும்பெயர் :—தண்டுமூன்று - தடியுந் தண்டாம். ஆ-௨..

தபநனென்னும்பெயர் :—அனலுமருக்கனும்-தபனனென்றாகும். ஆ-௨.

தாணுவென்னும்பெயர் :--குற்றியையுந்தூணேயும்-தாணுவென்ப. ஆ-௨.

தாரென்னும்பெயர் :--பூவும்பூமாலேயும்-போர்முன்செல்கொடிப்படையும், ஆவினுக்கணியும்-கிண்கிணிமாலேயும், தாவில்பெயர்க்கொடை-தாரென்றாகும். ஆ-ரு.

தாவரமென்னும்பெயர் :— மரமுமலேயும் - போலநிற்பன, தருபெயர்தானே - தாவரமாகும்.

தானேயென்னும் பெயர் : — கைப்படைகாலாட் - படையேயாடை, தப்பிலிம் மூன்றும் - தானேயென்றாகும், ஆ-௩.

திணேயென்னும்பெயர் : — குலமுமொழுக்கமும் - ஒழுக்கநிகழ்ந்த, நிலமுந்திணேயென- நிகழ்த்துங்கிளவி. ஆ-௩.

துஞ்சலென்னும்பெயர் : — சாதலுநிலேத்தலும் - உறங்கலுந்துஞ்சல். ஆ-௩.

துத்தியென்னும்பெயர் :— சுணங்கும்பொறியும் - துய்ப்பனவுந்துத்தி. ஆ-௩.

துப்பென்னும்பெயர் : — வண்ணம்பவளம் - வலியோடரக்கென், றெண்ணியநான்கும்-துப்பெனவிசைப்பர். ஆ-௪.

தூவியென்னும்பெயர் :—பசையுந்தசையும்-பறவையிறகும், தொகுபெயர்தாமே-தூவியென்றாகும்.

தொடியென்னும்பெயர் :—ஒருபலம்வளேயே தொடியென்றாகும். ஆ-௨.

தொய்யிலென்னும்பெயர் :—உழவுநிலத்தில்-எழுவதோர்புதலும், குழையுமகிழ்ச்சியும் - அழகுமென்றிவை, துயருங்கூறும் - தொய்யிற்கிளவி. ஆ-ரு.

நகையென்னும்பெயர் :—மகிழ்ச்சியின் விளேயாட்டின் - வருநகைதானே, இகழ்ச்சியிடத்து - மெய்நற்குறித்தே.

நவமென்னும்பெயர் :—ஒன்பதும்கேண்மையும் - புதுமையு நவமே. ஆ-ங.

நவிரமென்னும் பெயர் :—மலையுமுச்சியும் - மருத யாழ்த்திறனும், நவிரமென்னும் - நடைபெற்றியலும். ஆ-ங.

நாகமென்னும்பெயர்: - அரவுங்காரீயமும்-அமரர் நாட்டொருபெயரும், மலையும்யானையும்-ஒருமரப்பெயரும், தெரியினுகம் - எனப்பெயர்சிவனும். ஆ-சா.

நாகென்னும்பெயர் :—கோடுமெருமையும்-மரையு நத்தும், மீனபெணும்பிளைமையும் - கெழுமையுமிளமரமும், நாகெனும்பெயரின்-நடைபெற்றியலும். ஆ-அ.

நாஞ்சிலென்னும்பெயர்:—எயிலுறுப்புமுபடை - நாஞ்சிலாகும். ஆ-உ.

நாணென்னும்பெயர் :—மாதர்மங்கலமும்-அணியமாநமும், பாசமுநாணெனும் - சொல்லிற்பயிலும். ஆ-ச.

நீலமென்னும்பெயர் :—நீலமலரும்-நீலநிறத்தனவும், நீலமென்னும்-பெயரொடுநிகழும். ஆ-உ.

நூழிலென்னும்பெயர் :—குவவிற்படரோர் - கொடிப்புல்லுநூழில். ஆ-உ.

நேரென்னும்பெயர் :—உடன்படலுவமை-ஒத்தல் நுட்பம், சமன்பாதிமிகுதி - தலைப்பாடுதனிமையென, நிகழ்ந்தவொன்பானும்-நேரென்கிளவி. ஆ-கூ.

பகலென்னும்பெயர் :— நாளுமொளியும் - நடுவும் பிளத்தலும், பாகுபடுத்தலும்-பகலென்கிளவி. ஆ-ரு.

படையென்னும்பெயர் : —சயநம்பல்லணம் - தானையுமுநாஞ்சில், பயனென்றுரைக்கும் - படையென்கிளவி. ஆ-ச.

பண்ணையென்னும்பெயர் :—ஆயமுமகளிர் - விளையாடற்றொழிலும், பாய்புனற்படுகரும் - பண்ணையென்றாகும் ஆ-ங.

பதமென்னும்பெயர் : — சோறும்வழியும் - சொல்லுங்காலும், ஈரமுஞ்சேமமும் - புனலுங்காலையும், பாவலர்பதமெனப் - பகருங்கிளவி. ஆ-அ.

பயிரென்னும்பெயர் :—விதந்துகட்டியவழக்கும் - விலங்கொடுபுட்குரலும், பசும்புல்லும்பைங்கூழும்-பயிரென்றாகும். ஆ-ரு.

பரியென்னும்பெயர் :— வருத்தமுஞ்செல்வமும் - மாவின்மமும், பாதுகாத்தலும்-பரியென்கிளவி-ஆடீ-ச.

பல்லமென்னும்பெயர்:—கரடியின்பெயரும் - கணக்கிலோர்குணிப்பும், பகலின்பெயரும் - பல்லமென்றுகும். ஆடீ-ங.

பற்றலென்னும்பெயர் :—தொடலும்வளைத்தலும்-பிணித்தலும்பற்றல். ஆடீ-ங.

பனியென்னும்பெயர் : — அச்சமுந் துன்பமும் - நடுக்கமுந்துகிநமும், பற்றியசிதமும் - பனியெனப்படுமே. ஆடீ-ரு.

பாணியென்னும்பெயர் :—நெடித்தற்பொழுதும் - நீரொடுகையும், பாடற்பல்லியமும் - பாணியென்றுகும். ஆடீ-ச.

பாலையென்னும்பெயர்:—நீரின்றிவேனிற்-றெறுநிலனுமந்நிலப், பாடலும்பாடற் - சுவையும்பாலை, பொருள்வயிற்பிரிதலும் - புணர்ந்துடன்போதலும், அது பிரிவுணர்த்தலும் - பாலையாகும். ஆடீ-எ.

பாலென்னும்பெயர்:—பகுத்தல்பக்கம்-திசையியல்பென்ன, வகுத்தநான்கும்-பாலென்றுகும். ஆடீ-ச.

பாழியென்னும்பெயர் :—ஊரும்வலியும் - உறையுளுஞ்சயநமும், பாழியென்று - பகரப்படுமே. ஆடீ-ச.

புரையென்னும்பெயர் :—உயர்வுங்குற்றமும் - உவமைச்சொல்லும், புரையென்கிளவிப் - பொருளொடுபுணரும். ஆடீ-ங.

புலவரென்னும் பெயர்: — அமரருங் கவிஞரும் - ஆடுநரும்பாடுநரும், பொருநருமறிஞரும் - புலவரெனப்படுமே. ஆடீ-சு.

பூவையென்னும்பெயர்:—காயாமரமும்-நாகணவாய்ப்புள்ளும், பூவையென்னும்-பொருளொடுபுணரும். ஆடீ-உ.

பொதியென்னும்பெயர் :—நிதியுஞ்சொற்பயனும்-நிகழ்பலபண்டமும், பொதியென்கிளவிப்-பொருளொடுபுணரும். ஆடீ-ங.

பொருநரென்னும்பெயர் : — பொரும்போர்த்தலைவரும்-பெருங்கூத்தின்கொடியரும், பொரும்படைவீரரும் - பொருநரெனப்படுமே. ஆடீ-ங.

பொறியென்னும்பெயர் :— திருவொடைம்பொறியும் - செல்வமிலாஞ்சனேயும், புகழ்ச்சிப்புலவர் - பொறியெனப்புகல்வர். ஆ-௪.

பொறையென்னும்பெயர் :—மலைசுமைபாரம்-அம்பற்சேர்ந்தனே, டுலவியபொறுமைபார் - ஐந்தும்பொறையே. ஆ-௫.

மடங்கலென்னும்பெயர் :— ஊழித்தீச்சிங்கம்-உகமுடிவிடியென, வாழித்தமிழோர்-மடங்கலென்ப, கொடுங்கூற்றின்பெயரும் - நாயுங்கூறும். ஆ-௬.

மடலென்னும்பெயர் :—பூவினிதழும்-பனேயிதழ்போல்பவும், வாய்பாடுரைக்கின்-மடலென் கிளவி. ஆ-௨.

மதுவென்னும்பெயர் :—தேனுந்தேறலும் - மதுவெனச்செப்புவர். ஆ-௨.

மருதமென்னும்பெயர் :-பழனநிலனும்-அந்நிலப்பாடலும், மருதமென்னும்-பெயரின்வழங்கும். ஆ-௨.

மள்ளரென்னும்பெயர் :— அருந்திறல்வீரர்க்கும்-பெருந்திறலுழவர்க்கும், வருந்தகைத்தாகும்-மள்ளரெனும்பெயர். ஆ-௨.

மறமென்னும் பெயர் : — கொலேயுஞ்சேவகமும் - கொடுவினேச்செயலும், வலியுஞ்செற்றலும்-மறமெனப்படுமே. ஆ-௫.

மன்னென்னும்பெயர் :—மன்னலு மிடைச்சொல்லும்-இறையுமன்னே. ஆ-௩.

மாடென்னும்பெயர் :—மணியுஞ்செல்வமும்- நிறையும்பக்கமும், தநமுமாடென்-றுரைக்கத்தகுமே. ஆ-௫.

மாலேயென்னும்பெயர் : — பொன்னின்மணியிற் - பூவிற்சொல்லில், இன்னுறத்தொடுத்தலும்-இறவுமந்தியும், மன்னுமியல்பும் - மாலேயென்றாகும். ஆ-௪.

மாலென்னும்பெயர் :—மாயோன்பெயரே-மயக்கம்வேட்கை, மேகங்காற்று - பெருமைகருநிறம், சோழன்புதனெ - சொற்றிடுமாலே. ஆ-௯.

மாழையென்னும்பெயர் :—ஆயமடமை-பொன்னுலோகக்கட்டி, ஓலேபுளிமா - மாழையென்றுரைக்கும். ஆ-௬.

முருகென்னும்பெயர் :—விழவுங்குமர-வேளுமிளேமையும், நறையுநாற்றமும் - அகிலுமெழுச்சியும், வெறியாட்டாளனும்-முருகெனவிசைப்பர். ஆ-௮.

முல்லையென்னும்பெயர் :—காடுசார்நிலனும்-கான் மல்லிகையும், மோடுபடுவென்றியும்-கற்புமுல்லை. ஆ-ச.

முளரியென்னும்பெயர் :—எரியுந்தாமரையும்-நுட்பமுமுண்மரமும், உரியகாடுமென் - றைந்துமுளரி. ஆ-ரு.

மையென்னும்பெயர் :—குற்றமுமாடும்-கருமையுங் கொண்டலும், மற்றிவைமையெனும் - சொல்லொடு வருமே. ஆ-ச.

வஞ்சியென்னும்பெயர் :— மேற்செலவும்-பாவிகற் பித்தொருபாவும், ஓர்கொடிப்பிறப்பும் - அதனுவமை மாதரும், மற்றரும்பெயர்க்கொடை-வஞ்சியென்றாகும். ஆ-ரு.

வம்பென்னும்பெயர் :—கச்சு நிலையின்மை-புதுமை கந்தம், ஒத்தநான்கும் - வம்பெனவுரைப்பர். ஆ-ச.

வயிரமென்னும் பெயர் :—செற்றமுங்கூர்மையும் - சேருமணியும், வச்சிரமும்வண்மையும் - வயிரக்கிளவி. ஆ-சா.

வயினென்னும்பெயர் :—வயிறேயிடமனை-மூன்றும் வயினும். ஆ-ங.

வளமென்னும்பெயர் :—பண்டமும்வளப்பாடும் - வளமெனப்படுமே. ஆ-உ.

வாகையென்னும் பெயர் :-ஆள்வினைமுதலாம்-செய்கையுநலனும், கைவலமுதலாம் - கல்வியுமாண்மையும், சால்புமுதலாம்-பண்புமிகையும், ஒழுக்கமுதலாம்-தவமுமறத்துறையும், ஒருவரினொருவர் - வென்றிமிகுதியும், வருவனவெல்லாம் - வாகையென்னும்பெயர். ஆ-ம.

வாமமென்னும்பெயர் :—குறளேயழகு - குறங்கேயிடபபால் இவையொருநான்கும்-வாமமென்ப. ஆ-ச.

வாரணமென்னும்பெயர் : —யானையுங்கோழியும் - சங்கும்வாரணம். ஆ-ங.

வாரியென்னும்பெயர் :-கடலுநீர்மிகுதியும்-கதவும் வாயிலும், மடையுமென்றிவை-வாரியென்ப. ஆ-ரு.

விதியென்னும்பெயர் :—இயல்புஞ்செயலும் - விதியென்றாகும். ஆ-உ.

வியங்கோளென்னும் பெயர் : — எண்ணில்கொளலும் - ஏவலும்வியங்கோள். ஆ-உ.

விருத்தியென்னும்பெயர்:—உரியசொல்லும்-உரிய பொருளும், விரியவுரைப்பது-விருத்தியாகும். ஆ-உ.

விழுமமென்னும்பெயர்:—சிறப்புச்சீர்மை - இடும்பையிம்மூன்றும், விரிக்கின்மேலோர் - விழுமமென்ப. ஆ-ங.

விளரியென்னும்பெயர் :— யாழிஞேர் நரம்பும்-திறனில்யாழும், வேட்கைமிகுதியும் - இளமையும்விளரி. ஆ-ச.

வெள்ளையென்னும்பெயர்:—வெள்ளாடுவெண்பா-வெள்ளைவடிவின், வெள்ளையென்னும்-பெயரின்விளம்புவர். ஆ-ங.

வேழமென்னும்பெயர் :— யானையுங்கருப்பும்-கொறுக்கச்சியுடனும், வேயுங்கூறும்-வேழக்கிளவி. ஆ-ச.

வையென்னும்பெயர்:—நெல்லின்ருளும்-புல்லுங்கூர்மையும், சொல்லின் மூன்றும் - வையென்ருகும். ஆ-ங.

வைகலென்னும்பெயர் : —கழியுநாளும்-புலரிக்காலையும், தழுவும்வைகல்-தங்கலுமுரித்தே. ஆ-ங.

வையமென்னும்பெயர் : — சிவிகையுமானேறும் - சகடமுந்தேரும், அவநியும்வையம்-எனப்பெயராகும். ஆ-ரு.

புலவி நீக்கிய கல்விச் செல்விக்
கமிழ்துசுவை யீந்த வரும்பெற லின்பத்
தொருபெருஞ் செல்வ னருவந்தைச் சேந்தன்
பகர்வுற்ற திவாகரத்துப்

பதினென்ருவது

ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதி

முற்றிற்று.

கடவுள்துணை.

## பன்னிரண்டாவது
## பல்பொருட்கூட்டத்
# தொருபெயர்த்தொகுதி.

## மூலபாடம்.

கூறியதுகூறினும் - குற்றமில்லை, வேறொருபொருளை-விளக்குமாயின், முன்னரெய்தபதி - னொருதொகுதியுள்ளும், வந்தனவாலொரு - சொற்பல்பொருட்பெயர்த், தொகுதியின்வந்த - சொற்களென்னெனில், ஆண்டுச்சிறப்பு-வகைக்கெய்தியவை, ஈண்டுப்பொதுவகைக்-கெய்தவும்படுமே.

ஒன்றென்னும்பெயர் :—ஒன்றென்பதுவே-வீடுபேறாகும்.

இருமையென்னும்பெயர் :— இருமையென்ப-திம்மையுமறுமையும்.

இருவினையென்னும்பெயர் :—இருவினை நல்வினை-தீவினையாகும்.

இருவகைத்தோற்றமென்னும்பெயர் :-இருவகைத்தோற்றம் - சராசரமென்ப.

இருவகையறமென்னும்பெயர் :-இருவகையறமே-இல்லறந்துறவறம்.

இருவகைக்கந்தமென்னும் பெயர் : — இருவகைக்கந்தம் - நற்கந்தந்துர்க்கந்தம்.

இருசுடரென்னும்பெயர் :—இருசுடர்சந்திர - சூரியராகும்.

இருமரபென்னும்பெயர் :—இருமரபுதாய்வழிதந்தைவழியே.

இருவகைப்பொருளென்னும்பெயர் :--இருவகைப்பொருள்-கல்விப்பொருள் செல்வப்பொருள்.

இருவகையின்பமென்னும்பெயர் :—இருவகையின்பம் - இல்லதுமுள்ளதும்.

இருவகைவீடென்னும்பெயர் : — இருவகைவீடு - பற்றுவீடுபொருள்வீடு.

மும்மையென்னும்பெயர் : — மும்மையும்மையும் - இம்மையுமறுமையும்.

முப்பொறியென்னும்பெயர் :—மனமும்வாக்கும் - காயமுமுப்பொறி.

முச்செய்கையென்னும்பெயர் : — படைத்தல்காத்தல் - அழித்தனமுச்செய்கை.

முக்குற்றமென்னும்பெயர் : — முக்குற்றங்காமம் - வெகுளிமயக்கம்.

முக்காலமென்னும்பெயர் :— இறந்தகாலமெதிர் - காலநிகழ்காலம், எனமொழிந்தமூன்று-காலமாகும்.

மூவிடமென்னும்பெயர் : — முன்னிலைபடர்க்கை - தன்மைமூவிடம்.

மூவுலகென்னும்பெயர் :— பூமியாகாயம - சுவர்க்கமென்ப, தாமொருமூன்று - நிலமெனுந்தகைய.

மூவகைமொழியென்னும்பெயர் : —பட்டாங்குபேசல் - பழித்தல்புகழ்தலென, முட்டின்றாகும் - மூவகைமொழியே.

முச்சுடரென்னும்பெயர் :—முச்சுடராதித்தன் சந்திரனங்கி.

முத்தீயென்னும் பெயர் : — அந்தணர்முத்தீ - காருகபதியம், தென்றிசையங்கி - ஆகவநீயம்.

முச்சீவவனலென்னும்பெயர் :— உத்தரம்விந்து - பூதவனலென, ஒருமூன்றாகும் - சீவவனலே.

முக்குணமென்னும் பெயர் : — முக்குணஞ்சாத்துவிதம் - இராசதந்தாமதம்.

இவற்றுள்சாத்துவிதகுணம் :—சாத்துவிதஞானம்- தவமுண்மைநல்லருள், ஆர்த்தமோனமோ - டைம்புலனடக்கல்.

இராசதகுணம் :—தானந்தவமே - தருமம்பேணல், ஞானங்கல்வி - நலனிவைதெரிதல், ஈனமில்லா - விராசதகுணமே.

தாமதகுணம் :— தாமதநிறைபே - ருண்டிமடிவஞ்சம், காமநீதிக்கே - டுறக்கஞ்சலமே.

மூவகைத்தானமென்னும்பெயர் :—தலையிடைகடையென - மூவகைத்தானம்.

இவற்றுள் தலைப்படுதானம் : — அறத்திறனாற்றிய - அரும்பெரும்பொருளை, புறத்துறைகுற்றமூன் - றறுத்தநற்றவர்வயின், உள்ளமுவந்தீதல்-தலைப்படுதானம்

இடைப்படுதானம் :— ஆதுலர்குருடர் - மாதர்முதற்பிறர், சிறுமையைப்பற்றி - மனமிரங்கியீவ, திடைப்படுதானம் - என்னப்படுமே.

கடைப்படுதானம் :— ஆர்வம்புகழே - அச்சங்கைமாறு, காரணங்கண்ணோட்டம் - கடப்பாடென்றிவை, எழுங்கடைப்படு - தானவுதவி.

திரிகடுகமென்னும்பெயர் :—திரிகடுகஞ்சுக்கு - மிளகுதிப்பிலி.

திரிபலையென்னும்பெயர் :— திரிபலையாவது - கடுநெல்லித்தான்றி.

திரிபுரமென்னும்பெயர் :—மும்மதில்பொன்னும்-வெள்ளியுமிரும்பும், அன்னசிவன்முன் - னழித்தமுப்புரமே. [டம்-இடபமிதுநம்.]

சூரியன் மூவகைவீதியின்பெயர் :—திருத்தகுமே

நானிலத்தின்பெயர் :—நானிலங்குறிஞ்சி - முல்லைமருதநெய்தல்.

சதுரங்கமென்னும்பெயர் :—சதுரங்கமயானைதேர்-குதிரைகாலாள்.

நாற்கரணமென்னும்பெயர் :—மனம்புத்தியாங்காரம்-சித்தநாற்கரணம்.

நாற்கதியென்னும்பெயர் :—நாற்கதியும்பர்-மக்கள்விலங்குநரகர்.

நால்வகைஇழிச்சொல்லென்னும்பெயர் :—பொய்குறளைகடுஞ்சொல் - பயனிலசொல்லென, இவ்வகைநான்கும் - இழித்தசொல்லே.

நால்வகைவேதத்தின்பெயர் :—நால்வகைவேதம்-இருக்குத்தைத்திரியம்,சாமவேதம்-அதர்வணந்தானே.

நால்வகையரணென்னும்பெயர் :—மலையரண்காட்டரண்-மதிலரணீரரண், அவையதுசிறப்பின் - நால்வகையரணே.

நால்வகைக்கேள்வியென்னும்பெயர் :—அறம்பொருளின்பம்-வீடெனநான்கும், திறந்தெரிந்துகேட்டல்-நால்வகைக்கேள்வி, சொன்னநான்கினும்-ஒத்தேயொழுகுதல், ஐவகைக்கேள்வி - ஆமெனவறைவர்.

நால்வகைப்புலமையென்னும்பெயர் :—கவியேகமகன் - வாதிவாக்கியென, இவையொருநான்கே - புலமைக்கியல்பே.

இவற்றுட்கவியின்வகை :— ஆசுமதுரம் - சித்திரம்வித்தாரமென், பாவகைபாடுவோன் - கவியெனப்படுமே.

கமகன்வகை :— ஞாபகஞ்செம்பொருள் - நடையினெப்பொருளும், காசின்றுரைப்போன்-கமகனுகும்.

வாதிவகை:— ஏதுவுமேற்கோளும் - எடுத்துக்காட்டி, போதினளவும் - செய்துதன்சொன்னிறீஇ, வாதிற்பிறர்சொன் - மறுப்பான்வாதி.

வாக்கிவகை:— அறம்பொருளின்பம் - வீடெனுந்திறங்கள், கேட்கவேட்க-இனியனகூறும், ஆற்றலுடையோன் - வாக்கியாகும்.

அன்றியும் ஆசுகவிவகை :— கொடுத்தபொருளில் - தொடுத்த வின்பத்தில், அடுத்தபொழுதில் - பாடுவதாசுகவி.

மதுரகவிவகை :— பொருளின்பொலிவும் - சொல்லின்செல்வமும், தொடையுந்தொடைக்கண் - விகற்பமுந்துதைந், துருவகமுதலாம்-அலங்காரமுட்கொண், டோசைபொலிவுற் - றுணர்வோருளங்கட்கும், மாகடலமிழ்தம்போற்-பாடுதன்மதுரகவி.

சித்திரகவிவகை :— மாலைமாற்றே - சக்கரஞ்சுழிகுளம், ஏகபாதம்-எழுகூற்றிருக்கை, காதைகரப்பே-கரந்துறைப்பாட்டே, பாதமயக்கே - பாவின்புணர்ப்பே, கூடசதுக்கம் - கோமுத்திரியே, ஓரினத்தெழுத்தால் - உய்ந்தபாட்டே, ஒற்றுப்பெயர்த்தல் - ஒருபொருட்பாட்டே, சித்திரப்பாவே-விசித்திரப்பாவே, விகற்பநடையே-வினவுத்தரமே, சருப்பதோபத்திரம் - சார்ந்தவெழுத்தே, வருக்கமுமற்றும் - வடநூற்கடலுள், ஒருக்குடன்வைத்த-உதாரணநோக்கி, விரித்துமறைத்தும்-பிறைக்கவிப்பாட்டும்,தெரித்துப்பாடுவது-சித்திரகவியே.

வித்தாரகவிவகை:— மும்மணிக்கோவையும் - பன்மணிமாலையும், மறமுங்கலிவெண் - பாட்டுமடலூர்ச்சியும், கிரீடையுங்கூத்தும் - பாசாண்டத்துறையும், விருத்தகவிதையும் - இயலிசைநாடகத்தொடு, விரித்துப்பாடுவது - வித்தாரகவியே.

நால்வகைப்புண்ணியதோற்றமென்னும்பெயர் :— நால்வகைப்புண்ணியத்-தோற்றந்தவத்துடன், மேலாமொழுக்கம் - தானங்கல்வி.

நால்வகை நிலையென்னும்பெயர்:—நிலையோர் நால்வகை - நிலைபைசாசம், ஆலீடமண்டிலம் - பிரத்தியாலீடம்.

இவற்றுள்பைசாச நிலைவகை:—ஒருகாணிலை நின்-றொருகான்முடக்கும், பரியாயமென்பது - பைசாச நிலையே.

ஆலீட நிலைவகை :—வலக்கான்மண்டலித் - திடக்கான்முந்துறும், அதன்பெயராலிட - நிலையதாகும்.

மண்டில நிலவகை:—இருகான்மண்டலித்-திடுதன் மண்டில நிலை.

பிரத்தியாலீட நிலைவகை : — வலக்கான்முந்துற் - றிடக்கான்மண்டலிப்பிற், பிரத்தியாலீடம் - எனப்பெயர்பெறுமே.

நான்குயிர்த்தோற்ற வகைப்பெயர்:—நிலவுறுபையில் - முட்டையில் நிலத்தில், மெய்யகவியர்வையில் - நான்குயிர்த்தோற்றம்.

ஐந்திணைவகைப்பெயர் :—ஐந்திணைகுறிஞ்சி - பாலைமுல்லை, வந்தநெய்தல்-மருதமாகும்.

பஞ்சவாசவகைப்பெயர்:-தக்கோலமேலம்-இலவங்கஞ்சாதிக்காய், கர்ப்பூரமென்றிவை-கமழ்பஞ்சவாசம்.

பஞ்சாங்கவகைப்பெயர்:—திதியேவாரநாள்-யோகம்கரணமெனப், பகருஞ்சோதிடப் - பஞ்சாங்கமாகும்.

பஞ்சமாசத்தவகைப்பெயர் :—பஞ்சமாசத்தம்-தோறுளை நரம்பு, கஞ்சனைபாடல் - எனக்கழறினரே.

மதநன்பஞ்சபாணவகைப்பெயர் :—மதநன்பஞ்ச-பாணமாவன, முல்லையசோகு-முழுநீலஞ்சூதப்பூ, அல்லிமுளரியோ - டைந்தெனமொழிப.

பஞ்சபாணச்செயல்வகை:-மதன்பஞ்சபாணச்-செயலுன்மத்தம், நீரஞ்சந்தாபம்-வசீகரணமோகநம்.

பஞ்சசயநவகைப்பெயர் :—மயிரின்சேணம் - வன்பஞ்சுதூவி, பயிற்றுந்தண்வீப் - பாய்பஞ்சசயனம்.

சயநவகை:—மலர்ச்சயநஞ்சலசயநம் - தோற்சயநமாதி, பழிப்பில்பதினைந் - தாகுஞ்சயனம்.

பஞ்சபாதகவகைப்பெயர் :—பஞ்சபாதகங்கொலை-களவுகள்ளுண்டல், எஞ்சலில் குருநிந்தை - பொய்யுமென்ப.

ஐம்பால்வகைப்பெயர் :—ஒருவனொருத்தி - பலரொன்றுபலவன, அறியக்கூறிய - பாலைந்தாகும்.

ஐம்பான்முடிவகைப் பெயர் :—ஐம்பான்முடியே - கொண்டைசுருள்குழல், வம்பார்பனிச்சை - வார்மயிர் முடியே.

ஐந்துண்டிவகைப்பெயர்:—கடித்துப்பருகி-விழுங்கி நக்கி, எடுத்துச்சுவைத்தல் - இவையைந்துண்டி.

குதிரை நடைவகைப்பெயர் :—மல்லகதிமயூரகதி - வாநரகதியொடு, சொல்லியசசகதி - சரகதியென்னப், பல்லியற்பரிமாவிற் - கைந்தொழினடையே.

ஐவகைவினாப்பெயர் :—அறியான்வினவல் - அறிவொப்புக்காண்டல், ஐயமறுத்தல்-அவனறிவுதான்கோடல், மெய்யவர்க்குக்காட்டலோ - டைவகைவினாவே.

ஈசனைம்முகவகைப்பெயர் :—சத்தியோசாதம்-வாமமகோரம், தற்புருடமீசாநமெண - ஈசர்க்கைம்முகம்.

பஞ்சபூதவகைப்பெயர் :—மண்ணுநீரும்-கனலுங் காற்றும், விண்ணும்பஞ்ச - பூதமென்ப.

ஐம்பொறிவகைப்பெயர் :—மெய்வாய்கண்மூக்கு - செவியைம்பொறியே.

ஐவகைத்தாயர்வகைப்பெயர் :— பாராட்டுந்தாய் - ஊட்டுந்தாய்முலைத்தாய், கைத்தாய்செவிலித்தாய் - ஐந்தெனக்கழறுவர்.

அந்தணரறுதொழில்வகைப்பெயர் :—ஓதலோதுவித்தல்-வேட்டல்வேட்பித்தல், ஈதலேற்றல்-என்றிருமூவகை, ஆதிக்காலத்-தந்தணரறுதொழில்.

அரசரறுதொழில்வகைப்பெயர் : —அரசரறுதொழில் - ஓதல்வேட்டல், புரைதீரப்பெரும்-பார்ப்புரத்தலீதல், கரையறுபடைக்கலம் - கற்றல்விசயம்.

வணிகரறுதொழில்வகைப்பெயர் :—வணிகரறுதொழில்-ஓதல்வேட்டல், ஈதலுழவு-பசுக்காவல்வாணிகம்.

வேளாளரறுதொழில்வகைப்பெயர் : — வேளாளரறுதொழில் - உழவுபசுக்காவல், தெள்ளிதின்வாணிபம் - குயிலுவங்காருகவினை, ஒள்ளியவிருபிறப்-பாளர்க்கேவல்செயல்.

இவற்றுள் குயிலுவத்தொழில்வகை :—குயிலுவம் வாத்தியம் - கொட்டுதலாகும்.

காருகவினைவகை:—பருத்திநூல்பட்டுநூல்-அமைத்தாடையாக்கலும், சுமத்தலும்பிறவும் - காருகவினைத்தொழில்.

ஆறங்கவகைப்பெயர் :— ஆறங்கமந்திரம் - வியா கரணநிகண்டு, சந்தோபிசிதி - நிருத்தஞ்சோதிடம்.

அறுசமயவகைப்பெயர் :— அறுசமயம்வைசே - டிகநையாயிகம், மறுவின்மீமாஞ்-சையாருகதம்,பௌத் தம்பிரதிலோ - காயிதமென்னும்பெற்றிய.

பாடாண்டத்துறைவகைப்பெயர் :—பாடாண்டத் துறையும் - இவற்றுட்பலவாம், பேசிற்றொண்ணூற் - றுவகைப்படுமே.

• ஆறுட்பகைவகைப்பெயர்:—ஆறுட்பகைகாமம் - வெகுளியுலோபம்,மாறுகொண்மோகம்-மதமாற்சரியம்.

அறுவகைத்தானையின்பெயர் :— வேற்றானைவாட் டானை - விற்றானைமேலோர், தேர்த்தானைபரித்தானை - களிற்றுத்தானையென, ஆற்றல்சான்ற - அறுவகைத் தானை.

நன்னாட்டமைதியறுவகைப் பெயர் :—செல்வம்வி ளைவு-பல்வளஞ்செங்கோன்மை, கொல்குறும்பின்மை- கொடும்பிணியின்மை, இவ்வயினாறும்-நன்னாட்டமைதி.

அறுசுவைவகைப்பெயர்:—அறுசுவைதித்தித்தல்- புளித்தல்கைத்தல், மறுவறுதுவர்த்தல் - கூர்த்தல் காழ்த்தல்.

அரசியலறுவகைப்பெயர்:-படையுங்குடியும்-கூழு மமைச்சும், அரணுநட்பும் - அரசியலாறே.

அறுவகையரசியலின்பெயர்:—அறநிலையறமும் - மறநிலையறமும், அறநிலைப்பொருளும்-மறநிலைப்பொ ருளும், அறநிலையின்பமும் - மறநிலையின்பமும், என வறுவகைத்தே - உலகினடையே.

இவற்றுள் அறநிலையறத்தின்வகை :—வருணக்கா பபிற் - பிறழாநெறிநிலை, பெறுவற்பொருளாற்-பேணு ம்பெற்றி, அறநிலையறமென் - றறைந்தனர்புலவர்.

மறநிலையறத்தின்வகை:—ஆநிரைமீட்டல்-அரும் வகைதெறுதல், ஊநமில்செஞ்சோற் - றுதவிப்போர் வயின், ஈநஞ்செய்தலும் - மறநிலையறமே.

அறநிலைப்பொருள்வகை :-நெறிவழிநின்று-நெறி யாலுழந்து, பெறும்பொருளென்ப - அறநிலைப்பொ ருளே.

மறநிலைப்பொருள்வகை :—அமருழந்துகொண்ட வும் - அருந்திறைகொண்டவும், தவறுசெய்தீயோர் -

கண்டப்பொருளும், கவர்சூதுவென்றவும் - மறநிலைப் பொருளே.

அறநிலையின்பவகை:— ஒத்தகுலமும் - ஒத்தவாயுளும், ஒத்தசெல்வமும் - ஒத்துநலனும், அத்தகவுடைய - தறநிலையின்பம்.

மறநிலையின்பவகை:—ஏறுதழுவல் - இலக்கமெய்தல், கூறுபொருள்கொடுத்தல் - வலிதிற்கோடல்,மாறுபடுநிலையும் - மறநிலையின்பம்.

அறுவகைகருமபூமிக் குரிமைவகைப்பெயர் :—உழவுதொழிலே - வரைவுவாணிகம், விச்சைசிற்பம் - என்றித்திறத்தறு, தொழில்கற்பநடையது - கருமபூமி.

போகபூமியின்வகை:—பதினறுரட்டை-குமாரனும் விதிவழி, பன்னீராட்டை - குமரியுமாகி, ஒத்தவன்பினும்-ஒத்தநலத்தினும், கற்பகநன்மர - நற்பயனுதவ, ஆகியசெய்தவத்-தனவுமவ்வழி, போகநுகர்வது - போகபூமி.

போகபூமியறுவகைப்பெயர் : — ஆதியரிவஞ்சம் - நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம் - இரணவஞ்சம், தேவகுருவம் - உத்தரகுருவமென, போகபூமி - அறுவகைப் படுமே.

சக்கரவர்த்திகள்வகைப்பெயர் : — அரிச்சந்திரனென் - முசுகுந்தன்புரூரவன், சகரன்கார்த்த-வீரியனென்ன, அறுவகைச்சக்கர - வர்த்திகளாகும்.

ஏழுதீவின்வகைப்பெயர் :—நாவலந்தீவே-இறலித்தீவே, குசையின்றீவே - கிரவுஞ்சத்தீவே, சான்மலித்தீவே-தெங்கின்றீவே, புட்கரத்தீவே - எனத்தீவேழ், ஏழ்பெருந்தீவிற்கும் - ஏழ்பொழிலெனப்படும்.

ஏழுசமுத்திரவகைப்பெயர் :— உவரோடுகருப்பு - மதுநெய்தயிர்பால்புனல், மாகடலேழெனு-வகுத்தனர் புலவர்.

மேலேழுலகவகைப்பெயர்.—உலகேழ்பூலோகம் - புவலோகஞ்சுவலோகம், மகலோகஞ்சநலோகம் - தவலோகஞ் சத்தியலோகம்.

கீழேழுலகவகைப்பெயர் :—அதலவிதல - சுதலநிதல, தராதலரசாதல - மகாதலமென்ன, பாதலமோ - ரேழுலகெனப்பகர்வர், இருவகையேழ்பதி - னுலகென்ப.

சத்தகுல பருப்பதவகைபெயர் :—இமயமந்தரம் - கைலைவடவிந்தம், நிடதமேமகூடம் - நீலகிரியென, குலவரையேழும் - கூறுமென்ப.

ஏழு மேகவகையின்பெயர் : — புட்கலாவர்த்தம் - சங்காரித்தம், ஆவர்த்தம்சம் - வர்த்தம்துரோணம், காளமுகியொடு - நீலவருணமென, ஏழுமுகிலின் - பெயராகும்மே.

ஏழுமழைவகைப்பெயர் :— பொன்னும்பூவும்-புனலுமணியும், மண்ணொடுகல்தீ - சோரியுமதன்பெயர்.

ஏழுநரகவகைப்பெயர் :—பெருங்களிற்றுவட்டம் - பெருமணல்வட்டம், எரியின்வட்டம் - புகையின்வட்டம், இருளின்வட்டம் - பெருங்கீழ்வட்டம், அரிபடைவட்டமென் - றெழுவகைநரகம்.

சத்தமாதர்கள்வகைப்பெயர் : —அபிராமியிந்திராணி-வைணவிவராகி, கௌமாரிமயேசுரி - மாகாளியெழுவர்.

எழுவகைத்தாதென்னும்பெயர் :—இரதமுதிரம் - என்புதோறசை, மூளைசுக்கிலம் - எழுவகைத்தாதே.

செங்கோல்வேந்த னெழுவகைப்பேற்றின்பெயர்:- அறம்பொருளின்பம் - அன்புபொறுமை, திறம்பாப்புகழ்மதி-என்றிவையேழும், பெருஞ்செங்கோலின்-எழுவகைப்பேறே.

அட்டமாநாகவகைப்பெயர் : — அட்டமாநாகம் - வாசுகியநந்தன், விட்டபற்பன் - மகாபற்பன்சங்க, பாலன்றக்கன் - கார்க்கோடகனே, ஏலுமாகுளிகனென் - றெண்வகைநாகம்.

அட்டதிக்குப்பாலகர்வகைப்பெயர் :—இந்திரனங்கி - யமனிருதிவருணன், வந்தவாயு - குபேரனீசாநன், என்னவெண்டிசை - உலோகபாலகர்.

அட்டதிக்குப்பாலகர் சார்திசைவகைப்பெயர் :— கீழ்த்திசைமுதலாச - சார்ச்சியுடைமையின், அவ்வவர்பெயரொடும் - அத்திசைமொழிப.

சூரியசந்திரர்சார்திசைப்பெயர்:—கீழ்த்திசையருக்கற்கு-வடதிசைசோமற்கு, சார்ச்சியாக-சாற்றினர்புலவர்.

எண்டிசைக்குறிப்பின்வகைப்பெயர் :—கொடியும்பூனையும்-சியமுஞாளியும், இடபமுங்கழுதையும்-யானையுங்காகமும், என்பவெண்டிசை-குறிப்பினதாகும்.

அட்டமங்கலவகைப்பெயர் :— கவரி நிறைகுடம்-கண்ணாடிதோட்டி, முரசுவிளக்கு - பதாகையிணைக்கயல்; அளவில்சிறப்பின் - அட்டமங்கலவகை.

அட்டமூர்த்தவகைப்பெயர்:—பார் நீர்தேயு - வாயு வாகாயம், சூரியனிந்திய - மா நட்டமூர்த்தம்.

அட்டமாசித்திவகைப்பெயர் :— அணிமாமகிமா - கரிமாவிலகிமா, பிரார்த்திபிராகாமியம் - ஈசத்துவம்வசித்துவம், ஆம்பெறற்கரிய - அட்டமாசித்தி.

அட்டாங்கயோகவகைப்பெயர் : — இயம நியமம் - ஆசநம்பிராணாயாமம், பிரத்தியாகாரம் - தாரணைதியானம், சமாதியென்ப - எண்வகையோகம்.

இவற்றுள் இயமத்தின்வகை:—கொல்லாவிரதம் - மெய்ம்மைகூறல், கள்ளாமைபிறர்பொருட் - காதலின்மை, இவ்வயினிந்தியம் - அடக்கலுமியமம்.

நியமத்தின்வகை :—தவமொடுதூய்மை - தத்துவநூலோர்தல், மனமுவந்திருத்தல் - தெய்வம்வழிபடல், நினையுங்காலை - நியமமாகும்.

சிறப்பிலாவெண்பெயரெச்சவகைப்பெயர்:—சிறப்பில்சிதடும் - உறுப்பில்பிண்டமும், கூனுங்குறளும்-ஊமையுஞ்செவிடும், முடமுமுறுப்பு - மருளுமக்கட்கு; திண்சிறப்பில்லா - எண்பெயரெச்சம்.

எண்வகைக் காட்சியென்னும்பெயர்:—ஐயப்படாமை - அவாவொன்றின்மை, அறிவுவர்ப்பின்மை-மூடமறுத்தல்; அறப்பழியழித்தல் - அழிந்தோரைநிறுத்தல்; அறத்தைவிளக்கல் - அறுசமயத்தவர்க்கன்புறல்; ஆகுமென்ப - எண்வகைக்காட்சி.

எண்குணவகைப்பெயர்:-அனந்தஞானம்-அனந்ததரிசனம்; அனந்தவீரியம் - அனந்தசுகியே; நாமமின்மை-கோத்திரமின்மை, ஆயுவின்மை - அழியாவியல்பமென்; றேயுங்காலை - இறைவனெண்குணம்.

எண்வகைக் குற்றத்தின்பெயர்:—ஞாநாவரணியம்-தரிசநாவரணியம், வேதநீயம்-மோகநீயம், ஆயுநாமம்-கோத்திரமந்த, ராயமென்ட - எண்வகைக்குற்றம்.

வணிகரெண்குணவகைப்பெயர் :—தனிமையாதல்-முனிவிலனாதல், இடனறிந்தொழுகல் - பொழுதொடுபுணர்தல், உறுவதுதெரிதல்-இறுவதஞ்சாமை, ஈட்டல்

பகுத்தல் - என்றிவையெட்டும், வாட்டமில்லா - வணி கரதியற்குணம்.

எண்வகைக் கணமென்னும்பெயர் :— நீரின்கணமும்-தீயின்கணமும், அந்தரகணமும்-இயமானன்கணமும், மதியின்கணமும் - எரிகதிர்க்கணமும், மாருதகணமும் - மாநிலக்கணமும், எட்டுமுன்னச் - சீர்க்குவருங் கணம். [தற்சீரிலக்கணம்.]

முதற்சீரிலக்கணவகை :—அசைமூன்றதுவே-மு

இவற்றுள் நீரின்கணவகை:—நேர்முதலாகி- நிரையிணைபின்வரின், நீரின்கணமென - நிகழுஞ்சீரே.

தீயின்கணவகை:—நேர்நடுவாகி-நிரையிருபாலும், சேருஞ்சீரது - செந்தீக்கணமே.

அந்தரகணவகை :—இறுதிநேராய் - இணைநிரை முன்னர், வருஞ்சீரந்தர - கணமெனவழங்கும்.

இயமாநன்கணவகை:—நேர்மூன்றாகிய-சீரியமாநன்.

மதியின்கணவகை :—முந்துநிரையாய்-இணைநேர் பின்வரில், இந்துவின்கணமென்-றியம்பப்படுமே.

எரிகதிர்கணவகை :—நிரைநடுவாகி - நேரிருபால் வரின், எரிகதிர்க்கணமென் - றியம்பல்வேண்டும்.

மாருதகணவகை:—இறுதிநிரையாய் - இணைநேர் முன்னர், வருசீர்மாருத - கணமெனவைப்பர்.

நிலத்தின்கணவகை:—நிரைமூன்றதுசீர் - நிலத்தின்கணமே.

இவ்வெட்டினுணற்கணவகை:— நிலனுநீரும்-மதியியமாநனும், நலமிகுமுதல்வரில்-பிறநாலூநம்.

எண்வகைமெய்ப்பரிசத்தின்பெயர் :—ஒட்டுதல்பிடித்தல்-தீண்டறடவுதல், கட்டுதல்வெட்டல்-குத்தலூன்றலென், றெட்டுந்தக்க-மெய்ப்பரிசமென்ப.

எண்வகைக் கணிதத்தின்பெயர் :—சங்கலிதம் விபகலிதம் - குணநம்பாகாரம், வர்க்கம்வர்க்க - மூலங்கனமொடு, கனமூலமென்னக் - காட்டுமெண்கணிதம்.

எண்வகைமணத்தின்பெயர் :—பிரமம்பிரசா-பத்தியமாரிடம், தெய்வங்காந்தருவம் - ஆசுரமிராக்கதம், பைசாசமென்ன - பகருமெண்மணமே.

எண்வகைவெற்றியின்பெயர் :—(வெண்பா)வெட்சி நிரைகவர்தன் மீட்டல் கரந்தையாம், வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்-உட்கார், எதிரூன்றல் காஞ்சியெயில்

காத்த ஞெச்சி யதுவளைத்தலாகு முழுஞை, (சூத்திரம்) அதிரப்பொருவது தும்பையாகும், போர்க்களத்து மிக் கார்செரு வென்றதுவாகையாம், அத்திணைத்தொழிலு மத்திணைப்பூவும், அப்பெயர்பெறுத லந்நிலத்துரிவே.

எண்டிசையானைப்பெயர் :—ஐராவதமொடு-புண்டரீகம், வாமனமோடு-குமுதமஞ்சனம், புட்பதந்தம்-சார்வபூமம், சுப்பிரதீபம் - என்னச்சொல்லும், எண்டிசை யானைக் - கியலும்பெயரே.

நவகண்டத்தின்பெயர் :—வடபால்விதேகம்-தென் பால்விதேகம், கீழ்பால்விதேகம் - மேல்பால்விதேகம், வடபாலிரேவதம் - தென்பாலிரேவதம், வடபாற்பரதம்-தென்பாற்பரதம், மத்திமகண்டமென் - றித்திற மென்ப, நாவலந்தீவின் - நவகண்டப்பெயரே.

நவபுண்ணியத்தின்பெயர் : — எதிர்கொளல் பணிதல் - இருக்கைகாணீர், புதுமலர்தூபம் - விளக்கேபுகழ்தல், அறுசுவையுண்டி - அருந்தவர்க்காற்றுதல், நவ புண்ணியத்தின் - நாமமாகும்.

நவதாரணைப்பெயர் :—நாமதாரணை - வச்சிரதாரணை, மாயாதாரணை-சித்திரதாரணை,செய்யுட்டாரணை-நிறைவுகுறைவாகிய, எண்பொருட்டாரணை - சத்ததாரணை, வத்துதாரணை - சதுரங்கதாரணை, நவதாரணையின் - நாமமாகும்.

நவதாளப்பெயர் :—அரிதாளமரும-தாளஞ்சமதாளம், சயதாளஞ்சித்திர-தாளந்துருவதாளம், நிவிர்த்த தாளம் - படிமதாளம். விடதாளமிவையே - நவதாள மென்ப.

நவமணிப்பெயர் :—வைரம்வைடூரியம் - முத்துமாணிக்கம், பவளங்கோமேதகம் - இந்திரநீலம். மரகதம் புட்பராகம் - நவமணிப்பெயரே.

நாடகநவரசப்பெயர் :—சிங்காரம்பெருநகை - கருணைவீரியம், அற்புதம்பயம்ரௌத்-திரங்குற்சைசாந்தம், என்ன நாடகத்-தியலுநவரசம்.

பத்துத்திசைப்பெயர் :—கிழக்குந்தெற்கும் - மேற்கும்வடக்குமென, நடக்குமென்ப-நாற்பெருந்திசையும், அந்தராளம்-திசைநாற்கோணம், கீழ்மேற்றிசையொடு-பத்தெனக்கிளப்பர்.

தசாங்கத்தின்பெயர் :—ஆறுமலையும்-யானையுங்குதிரையும், நாடுமூரும் - கொடியுமுரசும், தாருந்தேரும்-தசாங்கமெனப்படும். தேறினதற்குச்-சின்னமுமென்ப.

அருச்சுநன்றசநாமத்தின்பெயர் : — பற்குநன்சுவேத-வாகநன்பார்த்தன், சவ்வியசாசி-கிரீடிதநஞ்சயன், விசயன்வீபற்சு - காண்டிவன்கிருட்டினன், அருச்சுநன்றச-நாமங்களாகும்.

வேளாளர் பத்துவகைத்தொழிற்பெயர் :— ஆணைவழி நிற்றல்-அழிந்தோரை நிறுத்தல், கைக்கடனாற்றல்-கசிவகத்துண்மை, ஒக்கல்போற்றல் - ஓவாமுயற்சி, மன்னிறைதருதல் - ஒற்றுமைகோடல், விருந்துபுறந்தருதல் - திருந்தியவொழுக்கம், வேளாண்மைமைந்தர்க் - கோலீரைந்தே.

அரிதசாவதாரப்பெயர் :—மீனேயாமை-வராகநரசிங்கம், வாமநன்பரசி-ராமனிராமன், பலதேவன்வசு-தேவன்வருகற்கியென், றுகுமீரைந்தும்-அரியவதாரம்.

சிற்பத்தொழிற் பத்துறுப்பின்பெயர் : — கல்லுமுலோகமும்-செங்கலுமரமும், மண்ணுஞ்சுதையும்-தந்தமும்வண்ணமும், கண்டசருக்கரையும் - மெழுகுமென்றிவை, பத்தேசிற்பத் - தொழிற்குறுப்பாவன.

ஏகாதசவுருத்திரர்பெயர் :—மாதேவன்சிவன்-உருத்திரன்சங்கரன், நீலலோகிதன்-ஈசாநன்விசயன், வீமதேவன் - பவோற்பவன்காபாலி, சௌமியனேகாதச - உருத்திராகும்.

துவாதசாதித்தர்பெயர் :— தாத்துருசக்கரன்-அரியமன்மித்திரன், வருணனஞ்சுமான் - இரணியன்பகவான், திவச்சுவான்பூடன் - சவித்துருதுவட்டன், எனச்சூரியற்கு - பன்னிருபெயரே.

உயிர்வேதனை பன்னிரண்டுவகைப்பெயர் :— அனலுஞ்சீதமும்-வாதமும்பனியும், புனலும்வாதமும்-விடமும்விடமருந்தும், பசியுநீர்வேட்கையும் - பிணியுமுன்வெறுமையும், உயிரின்வேதனை - ஓரீராறே.

பதினெண்பாடையின்பெயர் : — அங்கம்வங்கம் - கலிங்கங்கௌசிகம், சிந்துசோனகம் - திராவிடஞ்சிங்களம், மகதங்கோசலம் - மராடங்கொங்கணம், துளுவஞ்சாவகம் - சீநங்காமபோஜம், பருணம்பப்பரமென-பதினென்பாடை.

தேவர்பதினெண்கணவகைப்பெயர் :—அமரர்சித்தர் - அசுரர்தைத்தியர், கருடர்கிந்நரர் - கிம்புருடர்காந்தருவர், இயக்கர்விஞ்சையர் - இராக்கதர்பூதர், பைசாசரந்தரர் - முநிவருரகர், ஆகாயவாசியர் - போகபூமியரென, பதினெண்கணத்தின் - பகுதியாகும்.

அரசர்க்கு மூவகையிற் பதினெண்கிளைவகைப் பெயர்:—அமாத்தியர்புரோகிதர்-சேநாபதியர், தவாத்தொழிற்றூதர் - சாரணரென்றிவை, அரசர்க்காகும் - ஐம்பெருங்குழுவே, காரணக்கிளைஞரும் - கமவிதிகாரரும், கநகச்சுற்றமும் - கடைகாப்பாளரும், நகரமாக்களும் - நனிபடைத்தலைவரும், இவுளிமறவரும்-யானைவீரரும், அரசர்க்கெண்டுணை-ஆகுமென்ப, அடுத்தநட்பாளரும்-அந்தணாளரும், மடைத்தொழிலாளரும் - மருத்துவக்கலைஞரும், நிமித்தகாரரும் - நீணிலவேந்தர்க், குறைத்தவைம்பெயர் - உறுதிச்சுற்றம். இங்ஙனம்: உரைத்தமுப்பாலும்-உயர்குடைவேந்தர்க்கு, பகுத்தபதினெண்-கிளைப்பாலோரே.

யாக்கையிற் பதினெண்குற்றப்பெயர் : — பசியுநீர்வேட்டலும் - பயமும்வெகுளியும், உவகையும்வேண்டலும் - நினைப்புமுறக்கமும், நரையுநோய்படுதலும் - மரணமும்பிறப்பும், மதமுமின்பமும் - அதிசயமும்வியர்த்தலும், கேதமுங்கையறவும் - ஆகுமென்ப, மாயயாக்கைக்கு - பதினெண்குற்றம், இக்குற்றநீக்கியோர் - வச்சிரயாக்கையோர்.

பதினெண்புராணத்தின்பெயர்:—மச்சியம்கூர்மம்-வராகம் வாமநம், பிரமம்வைணவம்-பாகவதஞ்சைவம், இலிங்கம்பௌடிகம்-நாரதீயங்காருடம், பிரமகைவர்த்தம்-மார்க்கண்டேயங்காந்தம், பிரமாண்டமாக்கிநேயம்-பதுமமென்றிவை, பாற்படுபதினெண்-புராணமாகும்.

உபபுராணம் பதினெண்வகைப்பெயர் : — உசநங்கபிலம்-காளிசநற்குமாரம், சாம்பவஞ்சிவதன்மம்-சௌரந்தூருவாசம், நந்திநாரசிங்கம் - நாரதீயம்பராசரம், பார்க்கவமாங்கீரம் - மாரீசமாநவம், வாசிட்டலிங்கம்-வாருணமென்ன, உபபுராணப்பெயர்-அறுமூன்றாகும்.

தருமநூல் பதினெண்வகைப்பெயர் : — மனுவேயத்திரி - ஔரிதம்விண்டு, இயாஞ்ஞவற்கியம் - உசனமாங்கீரசம், இயமமாபத் - தம்பம்சம்வர்த்தம், காத்தி

யாயனம் - பிரகற்பதிபராசரம், வியாசம்சங்கலிதம் - தக்கங்கௌதமம், சாதான்மமோடு-வசிட்டமிவையே, தருமநூல்பதினெட்-டாகுமென்ப.

பதினெண்யாகவகைப்பெயர் : — அக்கினிட்டோமம் - அத்தியக்கினிட்டோமம், உத்தியஞ்சோடசி - வாசபேயம், அதிராத்திரமப் - தோரியாமம் - அக்கினியாதேயம் - அக்கினிகோத்திரம், தரிசபூரணமாசம் - சாதுர்மாசியம், நிரூடபசுபந்தம்-ஆக்கிரயணம், சௌத்திராமணி - அட்டகைபார்வணம், சிராத்தம்சிராவணி - ஆக்கிரகாயணி, சைத்திரியோடு - ஆசுவயுசியெனப், பதினெட்டியாகப் - பலபெயராகும்.

இருபத்தைந்து தத்துவத்தின்பெயர் : — நிலநீர்நெருப்புக்காற்-றுகாயமென்ன, அளவினின்ற - ஐம்பெரும்பூதமும், ஐந்துவாயிலும் - அவற்றின்புலனும்,கைகால்குதம்வாய் - மாநுடக்குறியென, கருமேந்திரியங்கள் - ஐந்துமவற்றொடு, மநம்புத்தியாங்காரம் - சித்தநான்கும், இயமாநனொடிரு - பத்தைந்துதத்துவம்.

இருபத்தெட் டலங்காரப் பெயர் : — உருவகமுவமை - வழிமடக்கு நிலைமடக்கு, விரிசுடர்விளக்கென - விரவிவருனவும், வேற்றுமைநிலையே - வெளிப்படுநிலையே, வார்த்தைதன்மை - பிறபொருள்வைப்பென, பாற்படக்கியந்த-பகுதியின்வருனவும், சிறப்புமொழிசிலேடை - மறுத்துமொழிநிலையே, நோக்கேயுட்டொடர் - தொகைமொழிமிகைமொழி, உடநிலைகூட்டம்-உவமாநமுருவகை, நுவலாநுவர்கி-தலைகட்டியமொழி, நிதரிசனப்பாராட்-டொருங்கியநிலையே, ஐயமுயர்வே-விரவியுல்வாழ்த்தென, எய்தற்குரிய - எழுநான்கலங்காரம்.

முப்பத்திரண்டறத்தின்பெயர் : —ஆதுலர்சாலை - ஓதுவார்க்குணவறு, சமயத்தோர்க்குணவு-பசுவுக்குவாயுறை, சிறைச்சோறையம்-தின்பண்டமகச்சோறு, மகப்பெறுவித்தல் - மகவளர்த்தன்மகப்பால், அறவைப்பிணஞ்சுடுதல் - அறவைத்தூரியம், வண்ணார்நாவிதர் - வதுவைபூணுனோய், மருந்துகண்ணாடிகா-தோலைகண்மருந்து, தலைக்கெண்ணெய்பெண்போகம் - சுண்ணம்பிறர்துயர், காத்தரண்ணி-பந்தர்மடந்தடாகம், காவாவுரிஞ்சு-நடுதறியேறு, விடுத்தல்விலைகொடுத்து-கொலையுயிர்மீட்டல், இச்செயன்முப்பத் - திரண்டறமென்ப.

முப்பத்துமுத்தேவர்வகைப்பெயர் :-ஆதித்தர்பன்னிருவர் - அச்சுவிநிகளிருவர், ஈசர்பதினொருவர்-எண்மர்வசுக்கள், ஆகமுப்பத்து - முத்தேவரென்ப.

ஓரறிவுயிர்வகைப்பெயர்:-ஒன்றேபுலன்-தொன்றேயுடைமையின், மற்றைப்புல்லும் - மரனுமோரறிவே.

ஈரறிவுயிர்வகைப்பெயர் :—உற்றறிபுலனும் - நாவுமுடைமையின்,அட்டையுநந்துவும்-போல்வதீரறிவே.

மூவறிவுயிர்வகைப்பெயர்:—உற்றறிபுலனும் - மூக்குமுடைமையின், முற்பெருசிதலெறும் - பினையமூவறிவே.

நான்கறிவுயிர்வகைப்பெயர் : -உற்றறிபுலனும்-மூக்கொடுகண்ணும், பெற்றவண்டும் - ஞெண்டுநாலறிவே.

ஐந்தறிவுயிர்வகைப்பெயர் :—உற்றறிபுலனும்-மூக்கொடுகண்செவி, மக்களுமாவும் - ஐந்தறிவினவே.

ஆறறிவுயிர்வகைப்பெயர் :—மநத்தோடாரறி-வினரேமக்கள், ஒருசார்விலங்கும் - அதுபெறற்குரிய.

காவியவியற்கைவகைப்பெயர் :—காவியவியற்கை - விரிக்குங்காலே, ஆரியந்தமிழால் - நேரிதினடக்கி, உலகின்றோற்றமும் - ஊழியினிறுதியும், வகைசாறொண்ணூ-று றுவாதியரும், வேதநாவினர்-வேதியரொழுக்கமும். ஆதிக்காலத் - தரசர்செய்தியும், மவ்வளர்நாட்டால் - அறியுமாற்றலும், ஆடியும்பாடியும் - அறிவுவாக்கிளத்தல்.

ஆண்பாற்பிள்ளைப்பாட்டின்வகைப்பெயர்:—திங்களிரண்டில் - தெய்வக்காப்பும், ஐந்தாந்திங்களில்-செங்கீரையும், ஏழாந்திங்களில் - தாலப்பாட்டும், எட்டாந்திங்களில் - இன்னமுதூட்டலும், ஒன்பதாந்திங்களில்-சப்பாணியும், பத்தாந்திங்களில் - முத்தங்கூறலும், ஆண்டுவரையகவயின் - ஈண்டிவருகென்றலும், ஈரெண்டிங்களின் - அம்புலிகாட்டலும், இரண்டாமாண்டில் - சிறுபறைகொட்டலும், மூன்றுமாண்டில்-சிற்றில்சிதைத்தலும், நாலாமாண்டில்-சிறுதேருருட்டலும், வைத்தமுந்நான்காண் - டெல்லைவரையில், கச்சிற்சுரிகை-காமுறப்புனைதலும், பெற்றியாண்பால் - பிள்ளைப்பாட்டே.

பெண்பாற்பிள்ளைப்பாட்டுவகைப்பெயர்:—ஆண்டுவரையகவயின் - முன்னுரைத்தனவும், மூன்றுமாண்டில் - குழமன்மொழிதலும், ஐந்தின்முதலா-ஒன்பதின்

காறும், ஐங்கணைக்கிழவனை - ஆர்வமொடுநோற்றலும், பனிநீர்தோய்தலும் - பாவையாடலும், சிறுசோறடுதலும்-சிற்றிலிழைத்தலும், ஊசலாட்டுமென்-றிவையுள்ளிட்டு, பேசியபெண்பாற் - பிள்ளைப்பாட்டே.

பேடியிலக்கணவகைப்பெயர் :—பேடியிலக்கணம் - பேசுங்காலை, நச்சுப்பேசலும் - நல்லுரையோதலும், அச்சுமாறி-ஆண்பெண்ணாகியும், கைத்தலமொன்றை-கடுகவீசியும், மத்தகத்தொருகை - மாண்புறவைத்தலும், விலங்கிமிதித்தலும் - வழிவேறாகியும், துளங்கித்தூங்கி - சுழன்றுதுணிந்தும், நக்குநாணியும்-நடம்பல பயின்றும், பக்கம்பார்த்தும் - பாங்குதிருத்தியும், காரணமின்றி - கடிபலகொண்டும், வாரணிகொங்கையை - வலியநலிந்தும், இரங்கியுமழுதும் - அயர்ந்தருவருத்தும், குரங்கியும்கோடியும் - கோதுகள்செய்தும், மருங்கிற்பாணியை - வைத்தும்வாங்கியும், இரங்கிப்பேசியும் - எல்லேலென்றும், இன்னவைபலவும்-இயற்றுதலியல்பே.

கரந்துறைகோளின்வகைப்பெயர்:-அராக்கோளிரண்டும்-பருதியுஞ்சூரியனும், பரிவேடமுந்தூமமும்-இந்திரவில்லும், பெருகுவான்மீனும்-கரந்துறைகோளே.

திருப்பொறிவகைப்பெயர்:—முடிகுடைகவரி-தோட்டி-முரசு, சக்கரம்யானை - கொடிமதிள்தோரணம், நீர்க்குடம்பூமாலை - சங்குகடல்மகரம், ஆமையிணைக்கயல் - சிங்கந்தீபம், இடபமாசனம் - இவையே திருப்பொறி, ஆகுமென்பர் - அறிந்திசினோரே.

ஐம்புலத்துயிரிழக்கும்வகைப்பெயர் : — யானையூற்றில் - மீனதுசுவையில், அசுணமிசையில் - அளிநாற்றத்தில், ஏனைப்பதங்கம் - உருவங்கண்டுயிர், இழப்பவாகும் - என்மனார்புலவர்.

அரனார்தியாயுதவகைப்பெயர் : — அரனுடையூர்தி - இடபமாகும். பரசுசூலம் - பிநாகவில்படையே.

அரியூர்தியாயுதவகைப்பெயர்:—அரியுடையூர்தி - கருடனாகும், சக்கரஞ்சங்கு - தண்டுவாள்சாரங்கம், பலமிக்கமாயோன் - பஞ்சாயுதமே.

பலதேவன் படைகொடிவகைப்பெயர் : — பலதேவன்படை - கலப்பையாகும், கொடிபனையாமென-கூறினர்புலவர்.

அயனூர்திபடைகொடிவகைப்பெயர் :— அயனு டையூர்தி-அன்னப்புள்ளு, படைபாசமங்குசம்-கொடி வேதமென்ப.

குமரனூர்திகொடிபடைவகைப்பெயர் :—குமரனூ ர்தி - மயிலும்யானையும், கொடியேகோழி - படைவே லாகும்.

காத்தாவினூர்திகொடிதாரவகைப்பெயர் : —காரி யூர்தி-யானையாகும், கோழியவர்க்கு - கொடியாகுமே, பூரணைபுட்கலையும் - அவர்தாரமாகும்.

காமன்கொடிபடைவகைப்பெயர் :— காமன்கொடி மீன்-கரும்புவில்லு, பூவவன்வாளி-பொருபடையாகும்.

இயமனூர்தியாயுதவகைப்பெயர் : — இயமனுடை யூர்தி-எருமையேறு, படைபாசந்தண்டும்-ஆகுமென்ப.

காலனாயுதவகைப்பெயர்:—கூற்றின்படைகொடும் கணிச்சியாகும்.

குபேரனூர்திவகைப்பெயர் :—குபேரனூர்தி - புட் பகவிமானமும், நரவாகனமும் - ஆமெனநவில்வர்.

சூரியனூர்திவகைப்பெயர் :—தனிக்காற்பொற்றேர் - அருக்கனூர்தி.

சந்திரனூர்திவகைப்பெயர் :—வெண்மதியூர்தி - வி மானமாகும்.

இந்திரனூர்தி படைகொடிவகைப்பெயர் :—இந்தி ரனூர்தி - வெள்ளைவாரணம், படையேவச்சிரம் - இடி கொடியாகும்.

காளியூர்திகொடிவகைப்பெயர் :—காளியூர்தி-யாளி யாகும், பேயதாகும் - அவள்பெருங்கொடியே.

மூதேவியூர்திகொடிவகைப்பெயர் :—கழுதையூர்தி யும் - காக்கைக்கொடியும், மொழியுங்காலை - மூதேவிக் காகும்.

சேரன்கொடி பாண்டியன்,கொடிவகைப்பெயர் :— சேரற்குவிற்கொடி-தென்னறுக்கயற்கொடி.

சோழன்கொடிவகைப்பெயர் : — சோழற்குப்புலிக் கொடி - ஆகுமென்ப.

வேள்புலவரசர் கொடிவகைப்பெயர் :—கேழல்வே ள்புல - அரசர்கொடியே, அவ்வவர்பெயரும் - கொடி யும்படையும், அவ்வவர்தம்மோ - டறிந்துணர்ந்துகொ ளுமே.

அரசுவாவின் குறிவகைப்பெயர் :—காலோர் நான்கும் - தனிக்கையுங்கோசமும், வாலுறுப்பொடேழும் - மாநிலந்தோய்ந்து, பாலுஞ்சங்கும் - போலுங்காலுகிறது. காலினுஞான்ற - ஒருதனிக்கையினும், வாயினும் வாலினும் - மருப்பினுங்கோறல்வல்லது, பதின்மூன்று முழச் - சுற்றுடைத்தாகி, ஏழுமுழமுயர்ந் - தொன்பது முழநீண்டது, தியுமிழ்சிறுகண்ணும்-செம்புகருமுடைத்தாய், முன்புயர்ந்துபின் - பணிந்ததாயின், அவ்வியல் யானையை - அரசுவாவென்ப.

அநுலோமர்வகைப்பெயர் :—பார்ப்பாரரசர்-வணிகர்வேளாளரென, நாற்குலத்துவரூஉம் - தங்குலநடையின், உயர்ந்தவ 'ணினும் - இழிந்தபெண்ணினும், பிறந்தகூட்டத் - தவரனுலோமர்.

பிரதிலோமர்வகைப்பெயர் :—இழிந்தவாணிலும்-உயர்ந்தபெண்ணிலும், பிறந்தகூட்டத் - தவர்பிரதிலோமர்.

அந்தராளர்வகைப்பெயர் · — அநுலோமகுலத் - தாணினுமவ்வழி, பிரதிலோம ,லப்-பெண்ணினுமாகி, அடுத்தகூட்டத்தவர் - அந்தராளர்.

விராத்தியர்வகைப் பெயர் : — பிரதிலோமகுலத் - தாணினுமவ்வழி, அனுலோமகுலப்-பெண்ணினுமாகி, விபுந்தோர்கூட்டத்துப் - பிறந்தோர்விராத்தியர்.

பல்லக்கணக்குவகைப்பெயர் : — இருவிரலகலத் - தறுவிரலாழத், தொருகுருநிறையப் - பள்ளையாட்டுமயிர்த்தொகை, பற்றியதாகும் - பல்லமென்கணக்கே.

பதாதிவகைப்பெயர் : — ஒருபெருங்களிறும் - ஒருபெருந்தேரும், புரவிநான்கும் - படைஞரைம்பதின் மரும், பதாதியென்று - பகரப்படுமே.

சேநாமுகவகைப்பெயர் :—பதாதிமும்மடி - சேநாமுகமே.

குமுதவகைப்பெயர்:—சேநாமுகமும்மடி - தானுங் குமுதம்,

கணவகைப்பெயர் :—குமுதமும்மடி - கொண்டது கணமே. [வாகினியே.

வாகினிவகைப்பெயர் :—கணமும்மடியின் - பெயர்

பிரதனைவகைப்பெயர் :—வாகினிமும்மடி - ஆகும் பிரதனை.

சமூகவகைப்பெயர் :—பிரதனை மும்மடி - ஆகுஞ் சமூகம்.

அநீகவகைப்பெயர் :—சமூகமும்மடி - அநீகமாகும்.

அக்குரோணிவகைப்பெயர் :—அநீகமையிருமடி - அக்குரோணி. [தாகும்.

ஒன்றுபத்தின்பெயர் :—ஏகமொன்றே - தசம்பத்

நூற்றின்பெயர் ஆயிரத்தின்பெயர் :—நூறுதசமே - சகசிரமாயிரம். [தமாகும்.

பதினாயிரத்தின்பெயர் :—பதினாயிரம்பெயர் - ஆயு

நூறாயிரத்தின்பெயர் :—ஆயுதம்பத்தே - நியுதநூறாயிரம்,

பத்துநூறாயிரத்தின்பெயர் :—நியுதம்பத்தே - பிரயுதமாகி, இயலும்பத்து - நூறாயிரமே.

நூறுநூறாயிரத்தின்பெயர் :—பிரயுதம்பத்தே - கோடியென்ப, வரைந்தநூறுநூ - றாயிரமன்னும்.

அற்புதமென்னும்பெயர் :—கோடிபத்தே - அற்புதமாகும். [திரமாகும்.

சமுத்திரவகைப்பெயர் :—அற்புதம்பத்தே - சமுத்

அத்தியவகைப்பெயர் :—சமுத்திரம்பத்தே - அத்தியமாகும்.

மத்தியவகைப்பெயர் :—அத்தியம்பத்தே - மத்தியமாகும்.

பாரதவகைப்பெயர் :—மத்தியம்பத்தே - பாரதமாகும். [மாகும்.

மகாகும்பத்தின்பெயர் :—நூறுகோடி - மகாகும்ப

நிகர்வவகைப் பெயர் :—மகாகும்பம்பத்து - நூறாயிரங்கோடி.

மகாபற்பமென்னும்பெயர் :—நிகர்வநூறாயிரம், கோடிமகாபற்பம்.

பிரமகற்பமென்னும்பெயர் :—சங்கம்பாரதம் - பத்தேபிரமகற்பம்.

செம்பொற்கிடையான் - அம்பற்சேந்தன், அன்னராளன் - நலமிகுநாட்டத்தன், பன்னியசிறப்பிற் - பன்னிரண்டாவது, பல்பொருட்கூட்டத் - தொருபெயர்த்தொகுதியொடு, பன்னிருதொகுதியும் - பண்பொடுமுற்றின.

## மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்தின் புத்தக விளம்பரம்.

| | அ. | ப. | | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| அறப்பளீசுரசதகம் | 2 | 0 | கந்தர்சஷ்டிகவசம் | 0 | 6 |
| சண்முகர்சத்துருசங்காரகவல் | 0 | 6 | ஆத்திசூடி பதவுரை | 0 | 6 |
| புட்பவிதி | 0 | 9 | கொன்றைவேந்தன் பதவுரை | 0 | 6 |
| அகஸ்தியர்தீக்ஷாவிதி 200 | 2 | 0 | வெற்றிவேற்கை பதவுரை | 1 | 0 |
| கற்புநிலைமை | 1 | 0 | நற்கீரஅகவல் | 0 | 6 |
| நால்வர்நான்மணிமாலை | 1 | 0 | அஷ்டோத்திரம் | 1 | 0 |
| வேதாந்த சூடாமணி மூலம் | 2 | 0 | வேழமுகம் உலகநீதி | 0 | 6 |
| சுகர்கைவல்லியம் | 2 | 0 | கந்தரனுபூதி 50 பாடல் | 0 | 6 |
| பட்டினத்துசுவாமிகள்பாடல் | 2 | 0 | கந்தரனுபூதி 100 பாடல் | 1 | 0 |
| உபநிடதம் உரை | 2 | 0 | வாக்குண்டாம் பதவுரை | 1 | 6 |
| கீதாசாரத்தாலாட்டு | 1 | 0 | நல்வழிப்பதவுரை | 1 | 6 |
| சொரூபசாரம் | 1 | 0 | நன்னெறிப் பதவுரை | 1 | 6 |
| பஞ்சாக்ஷரபசுபதிபாசவிளக்க | 1 | 0 | அநுமாரநுபூதி | 0 | 6 |
| சசிவன்னபோதம் | 1 | 0 | திருமுருகாற்றுப்படை | 0 | 6 |
| ஜெகனாதகுருகுலதீபம் | 1 | 0 | திருச்செந்தூர் அகவல் | 0 | 6 |
| பரமானந்ததீபம் | 1 | 0 | கந்தர்கலிவெண்பா | 0 | 6 |
| நானாசீவவாதக்கட்டளை | 1 | 0 | கபிலரகவல் | 0 | 6 |
| ஞானக்கட்டளை | 1 | 0 | நன்னூல்மூலம் பாக்கட்அளவு | 1 | 0 |
| சித்தாந்தக்கட்டளை | 1 | 0 | சைவ அநுட்டானவிதி | 2 | 0 |
| தத்துவாமிர்தகட்டளை | 1 | 0 | சரஸ்வதியந்தாதி | 0 | 6 |
| சிவப்பிரகாசக்கட்டளை | 1 | 0 | முருகரந்தாதி | 0 | 6 |
| திருவாலவாய்க்கட்டளை | 1 | 0 | புசண்டர் உபநிடதம்32 பாடல் | 0 | 6 |
| உபதேசசித்தாந்தக்கட்டளை | 0 | 6 | வேதாந்த தத்துவக்கட்டளை | 0 | 6 |
| திருவருணையந்தாதி | 0 | 9 | மயில்விருத்தம் வேல்விருத்தம் | 0 | 6 |
| திருவருணைக்கலம்பகம் | 1 | 0 | தேவிகாலோத்திரம் | 2 | 6 |
| அற்புதத்தேவாரத்திரட்டு | 3 | 0 | முதல் நிகண்டு | 1 | 0 |
| பரிபூரணானந்தபோதம் | 4 | 0 | சடாக்ஷரமாறல் | 0 | 6 |
| கந்தர்ஒலியலந்தாதி | 1 | 0 | கந்தரலங்காரம் | 1 | 0 |
| குருநமசிவாயர்சரித்திரம் | 1 | 0 | திருக்கண்ண மங்கைமாலை | 1 | 0 |
| தகராலயரகசியம் | 2 | 0 | சோணசைலமாலை | 1 | 0 |
| ஜீவோற்பத்திசிந்தாமணி | 2 | 0 | பரமரகசியமாலை | 1 | 0 |
| மீனாக்ஷியம்மன்பிள்ளைத்தமிழ் | 2 | 0 | பெரிய எழுத்து பெரிய அரிச்சுவடி முதல் பாகம் | 2 | 0 |
| விநாயகர்அகவல் | 0 | 6 | ஷை இரண்டாம் பாகம் | 2 | 0 |
| விநாயககவசம் | 1 | 0 | ஷை மூன்றாம் பாகம் | 2 | 0 |
| இடும்பன் கடம்பன்கவசம் | 0 | 6 | மூன்று பாகம் சேர்ந்தது | 5 | 0 |
| வீராகிமாலை | 0 | 6 | | | |

ஷை புத்தகங்கள் வி. பி. போஸ்டில் அனுப்பப்படும். ஏககாலத்தில் ஒரேதினுசில் 5-புத்தகங்கள் வாங்குகிறவர்களுக்கு ஷை தினுசில் ஒரு புத்தகம் இனாமாகக் கொடுக்கப்படும். அரை ரூபாய் தொகைக்குக்குறைந்த புத்தகங்கள் வி. பி. போஸ்டில் அனுப்ப முடியாது.

**கோ. லோ. பாரியாள் செல்வரங்கம்மாள் அவர்களது**

மனோன்மணி விலாசம் பிரஸ்,

**29**-நெ, வைத்தியநாத முதலியார் வீதி, சென்னை.